வெளியீடு நெ. 1.

உ

ஸ்ரீ சித்ஸபேசாய மங்களம்.

श्री कुञ्चिताङ्घ्रिस्तवः

श्रीमदुमापतिशिवप्रणीतः



உரை ஆசிரியர்

பிர்ம்ஹஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷிதர்.

ஸ்ரீ நடராஜ வித்யாஸபை.

விளம்பி 1958.

கிராஸ்வேடு பிரஸ், சிதம்பரம்.

ரூ. 2—0—0.

உ

விஷய அட்டவணை.

---

* இக் குறிப்பிலுள்ள முதல் சுலோகம் நான்கு கைகள் உள்ள யோகாசாரிய பதஞ்ஜலி முனிவரின் ரூபத்தை உணர்த்துகிறது. அப்பதஞ்ஜலியின் உருவம் ஸ்ரீசித்ஸபை பிராகாரத்திலுள்ள ஸ்ரீபிக்ஷாடனர் ஆலயத்தில் விளங்காநிற்கின்றது. அதை நித்தியம் தரிசித்தல் நன்று.

உ

சிவமயம்.

வெளியீடு நெ. 1.

ஸ்ரீ நடராஜ வித்யாஸபை (வித்யாசாலை) சித்ரபானுவு புரட்டாசிமீ 23உ விஜயதசமி அன்று முதல் துவக்கப்பட்டு சுமார் இருபது மாணவர்கள் வித்யாப்யாஸம் செய்து வருகிறார்கள். இதில் ப்ர்ம்ஹஸ்ரீ மஹாதேவ சாஸ்திரிகள் அவர்கள் வேதம், சாஸ்திரம் இரண்டிற்கும் ஆசிரியராக இருந்துவருகிறார். இதற்கு ஸ்ரீஸபாநாயகர்கோயில் பொது தீக்ஷிதர்கள் சார்பில் மாதம் ரூபாய் பத்தும், ஸ்ரீ-ல-ஸ்ரீ பொன்னம்பலஸ்வாமிகள் மடாதிபதி அவர்கள் மாதம் 1-க்கு ஐந்து ரூபாயும் கொடுத்து உதவி வருகிறார்கள். இந்த ஸபையின் விசேஷ வாய்ப்பாக இது வெளியிடப்படுகிறது.

இதற்கு சென்ற மன்மதவு ஆனிமீ 23உ நடைபெற்ற ஸ்ரீ நடராஜமூர்த்தியின் மஹாகும்பாபிஷேகத்தில் பிரதான ஆசார்யராக இருந்தவர்களும், ஸ்ரீவித்யா உபாஸகர்களும், இன்னும் 1946-ம் வருஷம் முதல் பல கும்பாபிஷேகங்களுக்கு பிரதான ஆசார்யராகவும், அதை நடத்திவைக்கும் ஸகல பொருப்புகளையும் எற்றவர்களும், ஆசாரசீலர்களும் சகல சாஸ்திர பாண்டித்யம் உள்ளவர்களும், ஸ்ரீநடராஜர் கோயிலின் பழம் பெரும் சுவடி முதலிய ஆராய்ச்சியில் ஸதா ஈடுபாடு உள்ளவர்களும், எல்லோரிடமும் அன்பும் அருளும் உடையவர்களும், எனது மந்திரோபதேச குருவாயும், என்னையும் ஒரு பொருளாக்கி இதிலும் இதுபோன்ற பல நற்பணியில் ஆளாக்கிய ப்ரம்ஹஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷிதர் அவர்கள் பொன்னார் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றேன். அவர்கள் இதற்கு அரிய தமிழ் உரை எழுதி உதவியுள்ளார்கள்.

பல நற்பணியில் அன்புடன் ஈடுபட்டுவரும் ஸபாநாயகர் தெரு, நடராஜவிலாஸ் புரோப்ரைட்டர், லால்குடி ஸ்ரீ N. S. சீனுவாஸய்யர் அவர்கள் இதற்கு சுமார் 2000 ரூபாய்வரை

பொருளுதவி புரிந்து இதன் வருவாயில் (புஸ்தக விற்பனை) இதன் உரை ஆசிரியர் அவர்களால் எழுதப்பட்ட ஸ்ரீநடராஜர் ஸஹஸ்ரநாம வியாக்யானமும், (தமிழ் உரையுடன்) மற்றும் முக்கியமாய் சிதம்பர ஸம்பந்தமான புராதன கிரந்தங்கள் வெளிவர வேண்டியதென்று எண்ணம்கொண்டு ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் மஹோத்ஸவத்தின் நன்னாளான ஆருத்திரா தெரிசனமான நாளது விளம்பினு மார்கழிமீ 11உ (26-12-58) தினத்தில் இந்த ஸபையின் பதினொருவது பிராயத்தில் மிகவும் மகிழ்ச்சியுடன் வெளியிடப்படுகிறது.

இதன் உரை ஆசிரியர் அவர்களுக்கும், பொருளுதவிபுரிந்த ஸ்ரீ N. S. சீனுவாசய்யர் அவர்களுக்கும், இதற்கு அணிந்துரை வழங்கிய ப்ரம்ஹஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களுக்கும், ப்ரம்ஹஸ்ரீ டாக்டர் வெங்கடேச்வரன் அவர்களுக்கும் ப்ரம்ஹஸ்ரீ V. G. ராமகிருஷ்ணய்யர் அவர்களுக்கும், ப்ரம்ஹஸ்ரீ நரஸிம்ம சாஸ்திரிகள் அவர்களுக்கும், இந்த புஸ்தகத்தை நல்ல முறையில் அச்சிட்டு வழங்கிய கிராஸ்வேடு பிரஸ் அதிபர் ஸ்ரீ நடராஜ அய்யர் அவர்களுக்கும் ஸ்ரீ அம்பலகூத்தன் திருவருள் உண்டாகப் பிரார்த்திக்கின்றேன்.

ஸபையின் காரியதரிசி என்ற முறையில் பொதுமக்கள் ஆதரவால் இங்கு மிகவும் விரிவான புஸ்தகசாலை, வாசகசாலை ஏற்பட்டு அதனால் ஸனாதனமும், நாடும் செழிக்க என் குல தேவதையான ஸ்ரீ நடராஜமூர்த்தியைப் பிரார்த்திக்கிறேன்.

V. S. வைத்தியநாத தீக்ஷிதர்,
காரியதரிசி,
ஸ்ரீநடராஜ வித்யாஸபை, சிதம்பரம்.

புஸ்தகம் கிடைக்குமிடம் :—

1. ஸ்ரீ நடராஜ வித்யா ஸபை,
காரியதரிசி, சிதம்பரம்.

2. N. S. சீனுவாஸய்யர்,
நடராஜவிலாஸ்,
ஸபாநாயகர்தெரு, சிதம்பரம்.

॥ श्रीगणेशायनमः ॥

॥ श्रीचित्सभेशाय मङ्गलम् ॥

॥ श्रीः ॥

रङ्गंयस्य चिदम्बरं यवनिका माया स्वयं दीपिका
प्रत्यग्ज्योतिरुदारवाद्यकलना प्राचीन वाचां शिखा ।
नान्दीपाशविमोचनी फलमतश्चाद्वैतसिद्धिःपरा
सोयं लोकविलक्षणो विजयते सोमावतंसो नटः ॥

ஸ்ரீ குஞ்சிதாங்கிரிஸ்தவமென்னும் இவ்வரிய வடமொழி நூல், ஸ்ரீசிதம்பரம், திருச்சிற்றம்பலத்தில் விளங்காநிற்கின்ற ஸ்ரீ நடராஜராஜரின் துதியாகும்.

गुणिनिष्ठगुणाभिधानं स्तोत्रं ॥
नमस्कारस्तथाशीश्च सिद्धान्तोक्तिः पराक्रमः ।
विभूतिः प्रार्थनाचेति षड्विधं स्तोत्रलक्षणम् ॥

குணிநிஷ்டகுணாபிதாநம் ஸ்தோத்ரம் ॥
நமஸ்காரஸ்ததாசிச்ச ஸித்தாந்தோக்தி: பராக்ரம: ।
விபூதி: ப்ரார்தநாசேதி ஷட்விதம் ஸ்தோத்ரலக்ஷணம் ॥

(இ-ள்) (குணவானின் குணங்களை கூறுதல் ஸ்தோத்ரமாகும். அதில் வணக்கம், வாழ்த்தல், நிச்சயித்துக் கூறுதல், பராக்ரமம், ஐச்வர்யம், வேண்டிக்கொள்ளல் என்கிற ஆறுவித பேதங்களும் உள.)

என்பனவாதிகளான ஸ்தோத்திரத்துக்குரிய லக்ஷணங்களுடனும் ஆங்காங்கு உவமை முதலிய அலங்காரங்களுடனும் சய்யா, ரஸம், பாகம், ப்ருஸம், ஸ்தாயி முதலிய காவ்யரீதிகளுடனும் விசேஷார்த்தம், த்வங்யர்த்தம் முதலிய பொருள்களுடனும் கூடி இருத்தல் அறிஞர்களுக்கு நன்கு புலனாகும்.

ஸ்ரீபரமேச்வரனுக்கு பல ஸ்தோத்ரங்கள் இருந்தபோதிலும் இந்த ஸ்தோத்ரம் அன்னியாத்ருசமே. ஏனெனில் இதிலுள்ள

313 சுலோகங்களும் ஒரே விருத்தத்தில் அதிலும் பாதம் ஒன்றுக்கு 21 எழுத்துக்கள் உள்ள ஸரக்தரு என்னும் விருத்தத்தில் அமைந்தது மிகவும் பாராட்டத் தகுந்ததே. 300 சுலோகங்களுக்கு மேல் அமைந்து இருத்தலால் இதை லகு ஸஹஸ்ர ஸ்துதி என்றும் சிலர் கூறுகின்றனர்.

முதலில் (ब्रह्म) பிர்ம்ஹ சப்தத்தையும் இறுதியில் (अहम्) அஹம் என்னும் சப்தத்தையும் வைத்துக் கூறினது (ब्रह्माहम्) பிர்ம்ஹாஹம், பிர்ம்ஹம் நான் என்னும் பொருள் தோன்று வதால் அத்வைதத்தைத் தழுவினதே. பின்னும் சில சுலோகங் களில் அத்வைத சாஸ்திரக் கொள்கைகளையும் நன்கு விவரிக் கின்றது.

ஸ்ரீபரமேச்வர விலாஸ விபூதிகளையும், சுருதி, ஸ்மிருதி, இதி ஹாஸம், புராணம் முதலியவைகளில் கூறப்பட்டுள்ள திவ்ய சரித்திரங்களையும் நன்கு சுருக்கியும் பெருக்கியும் கூறுதல் மிகவும் அதிசயிக்கத் தகுந்ததே. ஸ்ரீ பதஞ்ஜலி முனிவரால் இயற்றப்பட்ட மஹோத்ஸவ பூஜாவிதான ஸூத்ரங்களின் முறை களை விளக்குவதோடு ஸ்ரீசிதம்பர ரஹஸ்யதத்துவங்களையும் நன்கு அறிவிக்கிறது.

ஸ்ரீபரமேச்வரனின் ஸ்ருபவர்ணனை, தாண்டவ வர்ணனை, தில்லைவாழ்ந்தணர்களின் வர்ணனை முதலியவை ரொம்பவும் போற்றத் தக்கனவே.

இதிலுள்ள ஒவ்வொரு சுலோகங்களிலும் ஒவ்வொரு மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன என்றும், ஒவ்வொரு சுலோகங் களுக்கும் யந்திர மந்திர பிரயோகங்கள் உள என்று மந்திர சாஸ்திர அறிஞர்கள் கூறுகின்றனர்.

கைலையில் ஸ்ரீபரமேச்வராலயச் சுவற்றில் வரையப்பட்டு இருந்ததை ஸ்ரீசுவேதாசாரியர் மூலம் அறிந்து ஸ்ரீஉமாபதிசிவத் தால் வெளியிடப்பட்டது என்று ஆன்றோர்கள் உணர்த்து கின்றனர். இதற்கு இத்துதியில்

कुञ्चिताङ्घ्रिस्तवं वक्ष्ये ब्रह्मनिष्ठ उमापतिः।

குஞ்சிதாங்கிரிஸ்தவம்வக்ஷ்யே ப்ர்ம்ஹநிஷ்ட உமாபதி:
என்று முதலிலும்,

श्रीकुञ्चिताङ्घ्रि स्तवराजमुक्त्वा साक्षादपश्यं नटन सभापतेः।

ஸ்ரீகுஞ்சிதாங்கிரிஸ்தவராஜமுக்த்வா ஸாக்ஷாதபச்யம்
நடனம் ஸபாபதே: ,

என்று இறுதியிலும் உள்ள வாக்கே கமகமாகும். **वक्ष्ये उक्त्वा** (வக்ஷ்யே உக்த்வா) என்பதற்கு வெளிப்படுத்தலே பொருளாகும்.

இத்துதிக்கு ஸ்ரீமீநாக்ஷிநாதமகிவராளால் (ஸ்ரீசிதம்பர தத்வ நிர்ணயம் முதலிய கிரந்தங்களை இயற்றியவர்) இயற்றப்பட்ட வடமொழி விரிவுரை ஒன்று இருக்கிறதாகவும் தெரியவருகிறது. மற்றும் இதன் விசேஷ குணங்கள் வித்வான்களால் நன்கு அறியத் தகுந்ததே. இத்துதியை வெளிப்படுத்தியவர் ஸ்ரீஉமாபதி சிவம் ஆவர். அவரது சரித்திரம் வடமொழியிலும், தென் மொழியிலும் பற்பல காணப்படுகின்றன. அவைகளில் ஒன்றுக் கொன்று வித்தியாஸங்கள் காணப்படினும் அவரிடம் உள்ள விசேஷ அன்பை பாராட்டினதாகும். இதுபோல் மற்றும் சில மஹான்களின் சரித்திரங்களில் முரண்பாடுகள் காணப்படு கின்றன.

உ

॥श्री गणेशाय नमः॥

॥श्रीउमापतिशिव चरित्र संग्रहः॥

श्रीमत्त्रिसहस्रभूसुरकुलोत्पन्नैः परमहंसपरिव्राजकैः
श्रीमद्भिः श्रीचिदम्बरब्रह्मयतिवर्यैः विरचितः॥

किञ्चित्कुञ्चितवामपाद विलसन्मञ्जीरमञ्जुक्वणत्
चञ्चत्काञ्चनकिङ्किणीझणझणाकारारावबद्धं जगत्।
कालीताण्डव खण्डनं प्रविलसद्गण्डोल्लसत्कुण्डलं
चण्डं रक्षतु चण्डिकापतिभवं संपत्करं ताण्डवम्॥ १

पाषण्डोपहतां स्वकीयसरणिं प्रोद्धर्तु मभ्यर्थनात्
देवानां भुवि पुण्डरीकनगरे देवः शिवः स्वांशतः।
श्रैसाहस्र मखीन्द्रवंशजलधौ शम्भोश्चगौर्यां पुरा
जातस्तत्र महानुमापति समाख्यातोवशी देशिकः॥ २

बाल्ये तावदुमापतिश्च सखिभिः चिक्रीडदेवैर्मुहुः
साश्चर्यं शिवएव एवभवतीत्यालोकितः शम्भुजः।
श्रीबोधायनसूत्रचोदितपथात् पित्रोपनीतः क्रमात्
अन्यान् ऋक्प्रमुखानवाप्तुमवहन्मौञ्जीं च वत्सान्वयः॥ ३

तातादेशिकतोयजूंषि च मपि श्रीशौनकात् जैमिनेः
साम श्रीकुशिकादथर्वणमसौ मध्यन्दिनात् कण्वतः।
शुक्लं वेदमनादिमौक्तिनिकरान् कल्पांश्च गाथास्तथा
सर्वानङ्गवरानुमापतिशिवो लब्ध्वा चकासेतराम्॥ ४

तिल्वारण्यनिवासिभूसुरकुला कूपारशीतांशुमान्
ब्रास्यन् कान्तिविनिर्जितामरवधूं तातासयाद्वोतृजाम्।
गृह्णन् मातुलसंभवाञ्च जनयन् पुत्रान् गणेशाग्रतः
पाताला ध्वबिले नियम्य भुजगं ह्यस्थापयत् श्रीद्रुमम्॥ ५

सर्वज्ञश्च पुरा पतञ्जलिमुनेर्गत्वाऽऽश्रमं तत्रतं
दृष्ट्वा योगपदार्चनौषध विधीनाशीर्भिरव्याहतैः।
लब्ध्वा लोकगुरुः प्रकाशितपराकार प्रवेशादिभिः
कृत्यैस्सर्वनृपान् जनांश्च भुवने स्वाधीनतां प्रानयत्॥ ६

शम्भोर्ग्रन्त्र मखीश्वरादविकलं श्वेतात् गुरोर्व्यासतः
सम्बन्धादपि वेदमूर्धसु गतं तत्वं परं शाम्भवम्।
लब्ध्वा योऽधिमहीतलं प्रकटयन् शैवाध्वसारं तथा
रेजे श्रीमदुमापतिः शिवसमः त्र्यन्त विद्यागुरुः॥ ७

वाञ्छाकल्पलता गणेश्वरमदात् चैदम्बरं भैरवं
यन्त्रं स्फाटिकलिङ्गमप्यतुलितं श्वेतश्च यस्मिन्गुरौ।

भूत्यामान्त्रिक कृत्यनिश्चलघटोद्धारात् तदाकर्षणात्
यन्त्रात् भूपजपुंस्त्वदान विभवात् ख्यातस्सचोमापतिः॥ ८

हस्तेयश्च हवींषि दातुमसहं यं प्रत्युदेत्यादरात्
पश्चाशत्समजीवनं वरमदात् शक्रः शिवस्याज्ञया।
यः स्वान्ते वसदुत्तमं प्रतिवचोभङ्ग्या ररक्षाहिरात्
भीतेः श्रीमदुमापतिः गुरुवरो विभ्राजतेसानिशम्॥ ९

जातु श्रीमदुमापतिः परशिवक्षेत्राटगत्यापुरं
काश्मीरं समुपेत्य योगविभवात् सर्वज्ञपीठं वरम्।
अध्यारुह्य विचक्षणान् विजितवान् सिद्धान्तयुक्त्याचयं
सोयं शङ्करपवसद्गुरुरिहाऽऽयातीति तत्राऽस्तुवन्॥ १०

गृद्ध्राद्रेस्तु चिदम्बरं प्रतिनिशं त्वागत्य संसत्पतिं
दृष्ट्वा दक्षिणगोपुरं च समया वासंमुदा कुर्वतोः।
गृध्राधीश्वरयोः सुसद्मनि नवीभूते तथोदग्दिशि
द्वारे सप्तमुनिः सभावनविधौ येनैव संयोजितः॥ ११

सूतोमापघटश्च कण्टकतरुः तार्ध्योपि यद्वीक्षया
मुक्तास्तेह्यभवन् पुरा ध्वजपटस्त्वारोपितः सूक्तिभिः।
योगात् नागसरोविलान्तरपथात् गत्वाऽचलं राजतं
स्तुत्वा तत्र शिवं पुनर्भुवमगात् योगी सचोमापतिः॥ १२

अन्ते श्रीमदुमापतिः गुरुवरः स्वान्तेवसन्तं पदे
स्वीयेप्यङ्घ्रिजनिं नियोज्य गणराज्यन्त्रौ च लिङ्गं पुनः।
दत्वातं च जगद्धिताय नितरां सम्बोधयन् पश्यतां
सर्वेषां धुरि चित्सदोनटपतिर्ज्योतिर्मयोऽन्तर्दधे॥ १३

शम्भोरं शस्यलेशोभुवि कलिविभवात् लुप्तमप्यात्म तत्वं
प्रोद्धर्तुं ह्याविरासीत् त्रिनयनशिव इत्याह्वयः कालहस्तौ।
तिल्वारण्ये तथोमापतिरिति मखिराडप्पयाख्योथ कांच्याः
पर्यन्तेतान् वरिष्ठान् शिवसमयगुरून् शाम्भवान् नौमिनित्यम्॥

उमापतिं नमस्कुर्वेह्यूर्ध्वस्रोतो विहारिणम्।
ऊर्जितात्माविनाभूत निग्रमप्यूर्ध्वरेतसम्॥ १५

॥ओंतत्सत्॥

[अयं किल श्रीमच्चिदम्बरक्षेत्र विराजमान श्रीमत्त्रिसहस्र मुनीश्वरवंश सम्भव वाराणसीक्षेत्र समालब्ध तुर्याश्रम जगन्मिथ्याध्यवसाय शेमुषीविलास श्रीमद्दहरविद्योपासनोपदेशक पवित्रचरित्र वरविलासाद्वैतविद्याचार्य परमहंसपरिव्राजक श्रीमद्भगवद्बालगुरुतीर्थपूज्यपाद निवासानन्दाश्रमनिलय कोशादुद्धृतः॥]

ஸ்ரீஉமாபதிசிவ சரித்திர சுருக்கம்.

(அவதாரம்) ஸ்ரீஉமாபதிசிவம் சாலிவாஹந சகம் 1200 ஆண்டுக்குமேல் (ஸ்ரீமுகவூ தைமீ சுக்லபக்ஷ திரயோதசி ஸோம வாரம் விருஷப லக்னத்தில்) ஸ்ரீசிதம்பர க்ஷேத்திரத்தில் தில்லை வாழந்தணர்கள் வம்சத்தில் சம்பு தீக்ஷிதர் என்கிற நடராஜ தீக்ஷிதருக்கும் கௌரி என்னும் அன்னைக்கும் புதல்வனை உதித்தவர். இவருடைய கோத்திரம் ஸ்ரீவத்ஸ கோத்திரம். வேதம் யஜுர்வேதம். ஸூத்திரம் போதாயனம். இவருடைய மாதாமஹர் கோத்திரம் விச்வாமித்திர கோத்திரம். வேதம் ரிக்வேதம். ஸூத்ரம் ஆச்வலாயனம். பாஷண்டர்களை அடக்கி சைவத்தை நிலைநாட்டவேண்டி தேவர்களின் வேண்டுகோளால் ஸ்ரீபரமேச்வரனே தனது அம்சத்தால் ஸ்ரீஉமாபதிசிவமாக அவதரித்தார் என்று கூறப்படுகிறது.

இவர் பிறந்த காலத்தில் இவரிடத்தில் ஸ்ரீநடராஜரின் தேஜஸ்ஸு பிரகாசித்ததால் ஸ்ரீநடராஜரே அவதரித்தார் என்று எல்லோரும் மகிழ்ந்தனர். அக்காலத்தில் சுபக்குறிகள் பல உண்டாயின. இவர் பால்யத்தில் செய்த லீலைகள் அளவு கடந்தனவே.

இவர் முறையே நான்கு வேதங்களை கற்கவேண்டி அந்தந்த வேதங்களுக்குரிய முறைப்படி உபநயனமும் செய்விக்கப் பட்டவர் ஆவர். ஸாமவேதம் கற்கவேண்டி த்ருஹ்யாயன

விதிப்படி உபநயனச் சடங்குகள் செய்விக்கப்பட்டபடியால் (छन्दोगः) சந்தோகர் என்று ஒரு சரித்திரம் கூறுகிறது.

இவர் தனது தந்தையிடமும் சௌனகர், ஜைமினி, குசிகர், மத்யந்தினர், கண்வர் வியாஸர் முதலிய மஹரிஷிகளிடமும் வேதம் முதலிய ஸகல கலைகளையும் கற்றவர். ஸ்ரீமந்திரமூர்த்தி தீக்ஷிதர் என்கிற பெரியோரிடம் ஸ்ரீவித்யோபதேசம் பெற்று ஸ்ரீசிவகாம ஸுந்தரியின் ஸன்னதியில் ஸ்ரீவித்யா ஜபயஜ்ஞத்தை அனுஷ்டித்து அம்பிகையின் அருளையும் அணிமாதி ஸித்திகளையும் அடைந்தவர்.

இவருக்கு உரிய காலத்தில் இவரது மாதுலரான ஸபேச தீக்ஷிதர் என்பவரின் புதல்வியான பார்வதீ என்னும் கன்னிகையை மணம் செய்வித்து இவரது தந்தை மறைந்தனர்.

பிறகு இவருக்கு ஸ்ரீமூலநாதர் (சிதம்பரயந்திரோத்தாரத்திற்கு வியாக்யானம் செய்தவர்) விருஷபத்துவஜர் என்கிற இரண்டு புதல்வர்களும் ஸுசிலா என்கிற ஒரு கன்னிகையும் பிறந்தார்கள்.

இவர் ஸப்தபாகஸம்ஸ்தை, ஸப்தஹவிஸ்ஸம்ஸ்தை, ஸப்த ஸோமஸம்ஸ்தை முதலிய ஸகல வைதீக வேள்விகளை முறைப்படி அனுஷ்டித்தவர். ஸ்ரீநடராஜரைத் தனது ஸ்வதந்திர காலங்களில் பூஜித்தும், ஆருத்திரை முதலிய மஹோத்ஸவங்களிலும், ஸம்புரோக்ஷணம் முதலிய பிரதிஷ்டைகளிலும் ஆசார்யராக இருந்தும் நன்கு கொண்டாடப்பட்டவருமாவர்.

இவர் தனது 26 வயதில் மஹாவிருதம் என்னும் ஓர் பெரிய யாகத்தைச் செய்தார். அவ்வமயம் பிரதான தினத்தில் தேவேந்திரன் இவர் முன் தோன்றி பிரதானமான ஹவிஸ்ஸை எனது கையில் கொடு என்று கூறினன். அதுகேட்டு இவர் அத்தேவேந்திரனை நன்கு பூஜித்துப் போற்றி அக்னியில் ஹோமம் செய்யும்படித்தான் விதி உளது என்று அவ்விதியைக் கூறி கையில் கொடுக்க மறுதளித்தார். அதுகேட்டு தேவேந்திரன் மிகவும் ஸந்தோஷித்து அவ்விதம் செய்து உனது வேள்வியைப் பூர்த்தி செய்துகொள்வாயாக. உனது வயது இன்றோடு முடிவு அடைந்தபடியால் ஸ்ரீபரமேச்வராஜ்ஞையால் இவ்விதம்

உன்னைப் பரிக்ஷித்தேன். உனக்கு இது முதல் 50 ஆண்டு ஜீவித்திருக்க அருளினேன். பூமியில் துர்மதங்களை அகற்றி வைதிக தர்மங்களை ஸ்தாபித்து ஸநாதனமான சைவ மதத்தை பிரகாசப்படுத்துவாயாக என்று அருளி மறைந்தனன்.

இவர் ஒரு ஸமயம் சுவேதாசாரியரைத் தரிசித்து அவரிட மிருந்து ஒரு ஸ்படிக லிங்கம், ஸ்ரீசிதம்பர மேருயந்திரம், வாஞ்சா கல்பலதாகணபதியையும் பெற்றும் ஸ்ரீ சிதம்பர ரஹஸ்ய தத்துவத்தை உணர்ந்தார்.

பிறகு ஒருஸமயம் ஸ்ரீபதஞ்ஜலி முனிவரின் ஆச்ரமத்தை (அனந்தேசுவரன்கோயில்) அடைந்து அங்கு ஸ்ரீ பதஞ்ஜலி பகவானைத் தரிசித்து அவரது அனுக்கிரஹத்தால் யோகதத்து வத்தை நன்கு உணர்ந்து அந்த யோகத்தின் வல்லமையால் நாகச்சேரிக்குளத்தில் உள்ள பிலத்துவார வழியாக ஸ்ரீகைலையை அடைந்து அங்கு பரமனை தரிசித்துப் போற்றிப் பரமனது அருளையும் பெற்றார். அங்குள்ள தாழ்வரைகளில் பற்பல சித்தர் களையும் முனிவர்களையும் தரிசித்து வணங்கி அவர்களால் சித்தாந்த மான சைவமதத்தைப் புவியில் நன்குப் பிரகாசப்படுத்தும்படி உணர்த்தப்பட்டார்.

மறைஞ்ஞானஸம்பந்தரிடம் (அப்பய தீக்ஷிதர் மணிவாசக ரிடம் உபதேசம் பெற்றதுபோல்) உபதேசம் பெற்று அவரிட மிருந்து ஸகல ஆகமங்களையும் அடைந்து அதிலுள்ள சைவ ஸித்தாந்த ஸாரங்களைத் தென்மொழியிலும் வடமொழியிலும் தெளிவுபெற வெளிப்படுத்தினர்.

பிறகு இவருடைய அன்னை மறைய தனது குமாரர்களிடம் எல்லாப்பொருள்களையும் ஒப்புவித்து தனது மனைவியான பார்வதி அம்மையோடு வானப்ரஸ்தாச்ரமியாய் சுவேதாசார்யர் ஆச்ரமத்தின் (வெள்ளைகுளம்) வடபுறத்தில் ஓர் ஆச்ரமம் வகுத்து அங்கு தனது ஆத்மார்த்த பூஜையை செய்துகொண்டும், அனேக சிஷ்யர்களுக்கு ஸ்ரீசிவதத்துவத்தை உபதேசித்தும் மிகவும் விளங்கினர். சில நாட்களில் இவர் மனைவியாரும் இவரது அனுக்கிரஹத்தால் முக்தி இன்பம் பெற்றவளானள்.

இவ்விதம் இருக்குங்கால் ஒரு நாள் இவர் சிஷ்யனுன ப்ராம்மணச் சிறுவன் ஒருவன் ஆசாரியரின் பூஜைக்கு வேண்டி பில்வம் எடுத்துக்கொண்டு வரும் தருணம் அவனுடைய தேஜஸ்ஸைக்கண்டு பொருமைகொண்ட ஓர் முனிவர் எதிரில் நின்று தடைசெய்து எனது வினவுக்கு விடை கூறி அப்புறம் கடக்கக்கடவாய். மீறினல் சபிப்பேன் என்ருர். அதை அச் சிறுவன் கேட்டு கொஞ்சம் கூட லக்ஷியம் செய்யாமல் தனது ஆசாரியரின் பூஜைக்குத் தவக்கம் எற்படாமல் இருக்கவேண்டி ஒன்றும் பேசாமல் நடக்கலானன். அது கண்டு அம்முனிவர் சினங்கொண்டு உனது குருவுக்கு முன்பாகவே உன்னை அரவம் தீண்டி இறக்கக்கடவாய் என்று சபித்தனர். அச்சிறுவன் அதைக்கேட்டு அஞ்சாமல் பில்வக்கூடையுடன் ஆசார்யர் ஆச்ரமத்தை அடைந்து குருவை வணங்கி வழியில் நிகழ்ந்த விருத்தாந்தத்தைத் தெரிவித்தான். அதுகேட்டு சுவாமிகள் புன்சிரிப்புடன் உன்னை அரவந்தீண்டி இறக்கக்கடவது என்றும் மறுமொழி கூறினர். அத்தருணமே பேருருக்கொண்ட கருத்த ஓர் அரவம் ஆசாரியருக்கு முன்பாகவே அம்முனிவரின் சாபப் படி அச்சிறுவனைத் தீண்டிற்று. உடன் ஆசாரியர் வாக்குப் படியே உயிர் நீங்கிற்று. இது கண்டு அங்குள்ள மற்ற சீடர்கள் களித்தனர். பிறகு இறந்த அவ்வரவு உடல் நீங்கி ஓர் சந்நியாசி வடிவந்தாங்கிற்று. அச்சந்நியாசியார் ஆச்சாரியரை அணுகித் தண்டம் ஸமர்பித்து விண்ணப்பிக்கலானர். சுவாமி, நான் பூர்வ ஜன்மத்தில் சந்நியாசியாக இருந்தும் சைவமதத்தை நிந்தித்தேன். அவ்வாறே சாஸ்திரங்களையும் தொகுத்தேன். இக்காரணம் பற்றிக் கோபம்கொண்ட சுவேதாசாரியரின் சாபத்தால் இவ் வரவவடிவம் பெற்றேன். இப்பொழுது தங்கள் சீடனைத் தீண்டினதால் அவ்வரவவடிவம் நீங்கப்பெற்றேன். இனி எனக்கு நற்கதி கிடைக்க உபாயம் செய்தருளல் வேண்டு மென்று பலமுறை வணங்கிப் போற்றினர். அதுகேட்டுச் சுவாமிகள் சந்தோஷத்துடன் தனது ஆசார்ய பெருமானுச்ரமத் தின் முன்புறத்திலுள்ள சுவேத தடாகத்தில் ஸ்நானம் செய்வித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உபதேசித்து இனி சிவத்தியானபரனுய் இருக்கக்கடவாய் என்று அனுக்கிரஹித்தனர். அம்முனிவரும் அதுமுதல் ஆசார்யரின் ஆணைப்படி ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஜபித்து சிவத்தியானபரராய் இருந்து நற்கதியை அடைந்தார்.

பிறகு மற்றொரு ஸமயம் ஸ்ரீநடராஜருக்கு கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. அத்தருணம் ஓர் மந்திரவாதி காரப்பெருமாள் என்னும் சாஸ்தாவின் ஆலயத்தின் பின்புறமுள்ள குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று யாகசாலையிலுள்ள பிரதான கடத்தை எடுக்க முடியாமல் ஸ்தம்பனம் செய்து ஜபித்துக்கொண்டு இருந்தான். அதனால் பிறகு குறித்த காலத்தில் பலர் முயன்றும் அக்கடம் எடுக்க இயலாதது கண்டு இவர் அதன் ஸமீபத்தை அணுகி விபூதியைத்தூவி அம்பிகே என்று கையை எந்தினர். உடன் அக்குடம் தானாகவே இவரது கையை அடைந்தது. பிறகு அக்கும்பாபிஷேகமும் ஒரு விக்னமன்றி நிறைவேறிற்று. பின் இரண்டு இளநீர் மூலம் அம்மந்திரவாதியைத் தனது அருகில் வரவழைத்து அவனது மந்திர ஸித்தியையும் அபஹரித்தார்.

அக்கும்பாபிஷேகத்தை நடாத்திய ஓர் அரசனின் மனதிலுள்ள ஸந்தேகத்தை அகற்ற அவனது அபியான குமாரனை அழைத்து ஆசனத்திலமர்த்தி ஓர் கும்பத்தில் அவனது ஜீவகலை தவிர மற்ற கலைகளை ஆகர்ஷித்து யோஜனம் செய்தார். அக்குமாரனும் கீழே சாய்ந்து அசைவற்றவனானான். அதுகண்டு பயந்து அவ்வரசன் இவரை அடிபணிந்து குமாரனை எழுப்பித்தர வேண்டி போற்றினன். மறுபடி இம்முனிவர் முன்போல் அக்கும்பத்திலிருந்து அக்கலைகளை அக்குமாரனிடம் அடைவித்தார். அவனும் அபித்தன்மை நீங்கி தூங்கி விழித்தவன்போல் எழுந்தனன். இவ்விதம் நிகழ்ந்ததைக்கண்டு களித்த அரசன் உள்பட்ட எல்லோரும் இவரை நம்போன்ற மனிதனாகக் கருதுதல் கூடாது. இவர் ஸாக்ஷாத் சிவமே ஆவர் என்று கூறி மகிழ்ந்தனர். அது முதற்கொண்டு இவர் உமாபதிசிவமென்று கூறப்பெற்றார்.

மேற்கு கோபுரம் ஸ்ரீகல்பகவிநாயகராலயத்தின் முன்புறத்திலுள்ள பாதாளலோக பிலத்வாரவாசலை அண்டி இருந்த ஐந்தலை நாகத்தை அடக்கி அங்கு ஒரு பில்வ மரத்தையும் ஸ்தாபித்தார். அம்மரம் இன்றும் விளங்கா நிற்கின்றது. அம்மரத்தைப்போல் வேறு எங்கும் காண்பதரிதே.

திருக்கழுக்குன்றத்திலிருந்து ப்ரதிதினமும் இரவில் ஸ்ரீநடராஜரை தரிசிக்க வருகிற இரு கழுகுகளின் நிலைய மண்டபம்

இரண்டையும் புதுப்பித்தார். அம்மண்டபம் தெற்கு கோபுரத்திற்கு முன்புறம் உளது.

வடக்கு கோபுரத்தில் துஷ்டர்களை அடக்கவேண்டி ஜடாதார் என்னும் ஓர் தேவதையையும் ஸ்தாபித்தார்.

பரமன் தன்னை கௌரவித்துக் கைச்சீட்டு அனுப்பின காரணம் பற்றிப் பெற்றான்சாம்பானென்னும் புலையனுக்கும், சோழமன்னனின் ஸந்தேகத்தை அகற்றவேண்டி முள்ளிச் செடிக்கும், குடஉளுந்து முனிவருக்கும், ஒரு கருடனுக்கும் சிவஸாயுஜ்ய பேரின்பத்தை அடையும்படி செய்தவருமாவர்.

ஒருஸமயம் ஸ்ரீநடராஜர் ஆனிமாஸ மஹோத்ஸவத்தில் முயன்றும் எருமலிருந்த கொடியை நான்கு பாசுரத்தால் தானுகவே எறும்படி செய்தும் மூன்று தடவை பூமண்டலத்தை பிரதக்ஷிணம் பண்ணியும் அதில் ஒரு தடவை காச்மீரத்தில் வான் வழியாக ஸர்வஞ்ஞபீடமயர்ந்து எல்லாவித்தைகளிலும் தனது வல்லமையைக் காட்டிச் சைவ மதத்தை நிலைநாட்டி இரண்டாவது சங்கரரோவென்று அங்குள்ள அனைவரும் அதிசயித்துப் போற்ற ஒருவராலும் அடையமுடியாத பிருதுகளையும் கீர்த்தியையும் அடைந்தார்.

ஸ்ரீதுர்வாஸ முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட அகோர சிவாசாரிய மடத்தில் மூன்ருவது பட்டம் சுவாமிகள் இவருடைய சிஷ்யரென்றும் அவரிடம் தீக்ஷாநிர்ணயம் முதலிய கிரந்தங்களைக் கொடுத்தாரென்றும் சொல்லப்படுகிறது.

நான்காம் வருணத்தார்களை அனுக்ரஹிக்க வேண்டித் தனது பீடத்தில் ஸ்வாமிநாத தேசிகர் என்பவரை ஸ்தாபித்து பட்டாபிஷேகம் செய்து தனது ஆத்மார்த்த பூஜையை அளித்தும் உலகத்துக்குச் செய்யவேண்டிய கடமையைப் போதித்து அருளினர்.

இவ்வாறு 76 ஆண்டு அனேக சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துகொண்டும் அக்காலத்திலுள்ள அனேக துர்மதங்களை வென்றும் வைதீக சைவ தர்மத்தை நன்கு விளக்கியும் ஆங்

காங்கு ஜீர்ணித்துள்ள சிவாலயங்களை ஜீர்ணோத்தாரம் செய்து நித்திய பூசை முதலிய வழிபாடுகளை முறைப்படி செய்வித்தும் பல மன்னர்களால் போற்றப்பட்டும் லோகாசாரியராக விளங்கினர்.

ஒரு ஸமயம் தனது இறுதியை அறிந்து எல்லா மாணக்கர்களையும் மன்னர்களையும் வரவழைத்து ஸ்ரீ பரமேச்வராஞ்ஞைபடி என்னால் செய்யவேண்டியது யாவும் நிறைவேறிற்று. இனி நீங்கள் ஸ்ரீ பரமேச்வரனை எக்காலமும் மறவாமல் வழிபட்டுக் கொண்டு இருக்கக் கடவீர்கள் என்று அனுக்ரஹித்து வருகிற நாளது சித்திரை மாத ஹஸ்த நக்ஷத்திர தினத்தில் ஸ்ரீநடராஜ மூர்த்தியை அடையப் போகிறேன் என்று கூறி அவர்களை நன்கு ஆசிர்வதித்தனர்.

பிறகு சித்திரை மாத ஹஸ்த நக்ஷத்திர தினத்தில் எல்லாச் சிடர்களும் மன்னர்களும் மற்றுமுள்ளவர்களும் போற்றி நிற்க தான் யோக ஸமாதியில் அமர்ந்து திருச்சிற்றம்பலமென்னும் பொற்சிற்சபையில் விளங்கா நிற்கின்ற ஸ்ரீ நடராஜமூர்த்தியின் ஜ்யோதிஸ்ஸில் ஐக்கிய நிலையை அடைந்தார். அவ்வமயம் இவரது உருவதேஜஸ் ஸ்ரீநடராஜரோடு கலந்துகொண்டதாக அங்குள்ள எல்லோருக்கும் தோன்றினது. வானிலிருந்து புஷ்பவர்ஷங்கள் நிகழ்ந்தன. எல்லோரும் பரமனைப் போற்றி மகிழ்ந்தனர்.

இன்னும் இவரது சரித்திரம் பலவாருக ஆன்ருேர்களால் கூறப்படுகிறது. அவைகளை விரிக்கிற் பெருகுமென அஞ்சி விடுத்தனம்.

இம்முனிவரை ஸ்ரீபரமேச்வரனின் அம்சம் என்றும் வித்யேச்வர்களில் ஒருவராகிய ஸ்ரீகண்டரின் அவதாரமென்றும் வர்ணித்திருக்கிருர்கள்.

இம்மஹான் ஸ்ரீ காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் ஸ்ரீகண்ணப்ப நாயனரின் பக்தியின் மஹிமையை நேரில்கண்டு களித்த ஸ்ரீசிவ கோசரரின் புதல்வரான திருலோசனருகவும், கலி 4700 ல் அவதரித்தவரும், உலகிலுள்ள துர்மதங்களை அகற்றினவரும்

உபாஸனையால் ஸாக்ஷாத்கரித்த ஸ்ரீமணிவாசகரிடம் உபதேசம் பெற்றவரும், 104 கிரந்தங்களை இயற்றியவரும், மீமாம்ஸாமூர் தன்னியரும், அத்வைதாசாரியரும், சிவாதிக்கியவாதியுமான ஸ்ரீ அப்பைய தீக்ஷிதராகவும் அவதரித்தவராவர்.

दीक्षितोपि भवेत्कश्चिन्मदंशोभूसुरोऽम्बिके।
भासुराचारनिरतः शै ः छन्दोगवंशजः।
शैवशास्त्रं तदाभूमौ लुप्त विस्तारयिष्यति॥

தீக்ஷிதோபி பவேத்கச்சித்மதம் சோபூஸுரோம்பிகே ।
பாஸுராசாரநிரத: சைவச்சந்தோகவம்சஜ: ।
சைவசாஸ்த்ரம் ததாபூமௌ லுப்தம் விஸ்தாரயிஷ்யதி ॥

(இ-ள்) ஓ அம்பிகே, புவியில் ஸாமவேதிகள் குலத்தில் உதித்தவரும், எனது அம்சம் தாங்கினவரும், தீக்ஷிதரும், சிவ பக்தி நிறைந்தவருமான ஓர் பிராம்மணர் அவதரிப்பார். அக் காலம் அவர் பூமியில் மறைந்துபோன சைவ சாஸ்திரங்களைப் பிரகாசப்படுத்துவார்.

कलौछन्दोगोपि श्रुतिशिखर तात्पर्यवचनैः
ममग्रन्थोद्ग्रन्थैर्जयति मदवादि द्विपहरिः।
भिनत्त्येवं दीक्षाक्षपित सुखवृत्तिश्शिवपदे
शिवेदभ्रस्थाने भवति च ततोऽन्ते ममगणः॥

கலௌசந்தோகோபி சுருதி சிகரதாத்பர்யவசனை:
மமக்ரந்தோத்பந்தை: ஜயதிமதவாதி த்விபஹரி: ।
பிநத்யேவம் தீக்ஷாக்ஷபித ஸுகவ்ருத்தி: சிவபதே
சிவே தப்ரஸ்தாநேபவதி ச ததோऽந்தே மமகண: ॥

(இ-ள்) கலியில் சிவமாயும் சிவஸ்தானமாயுமுள்ள சிதம்பரத்தில் (எனது கணத்தில் ஒருவர்) ஸாமவேதி குலத்தில் அவதரித்து எனது கிரந்தங்களான வேதாந்த தாத்பர்ய வசனங் களால் துர்மதங்களாகிற யானைகளுக்கு சிங்கம்போல் இருந்து பேதித்தும் தீக்ஷை முதலியவைகளால் பாபங்களை அகற்றி நல்ல விருத்தியோடு விளங்குவார். கடையில் நமது கணநாதராகவும்

ஆருவார் என்றும் சிவரஹஸ்யம், நவமாம்சம், அஷ்டமாத்யாயத்திலும் மற்றவை கூறுதலும் இம்மஹானை குறித்ததே.

சிற்றம்பலமன்னும் சின்மயராந் தில்லை நகர்க்
கொற்றங்குடி முதலைக்கூறு நாளெந்நாளோ.
குறைவிலருண் ஞானமுதல் கொற்றங்குடியடிக
ளரைமலர்த்தாட்கன்பு பெற்றுநாமிருப்ப தெந்நாளோ.

என்று தாயுமான ஸ்வாமிகளும் போற்றுகிறார். (குருமரபின் விளக்கம் 6, 7.)

இம்மஹானைச் சைவஸித்தாந்த ஸந்தானாசார்யர்களில் ஒருவராகச் சைவ உலகம் போற்றுகிறது உலகறிந்ததே.

இவருடைய ஆச்ரமம் சிதம்பரம் ரயில்வேஸ்டேஷன் கீழ்புறத்தில் விளங்கா நிற்கின்றது. அங்குள்ள இவரது உருவ விக்ரஹம் பார்க்க மிகவும் ஆனந்தத்தை அளிக்கிறது. பின்னும் அவ்வாச்ரமம் விசேஷ கௌரவத்தை அடையத் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

இவருடைய சிஷ்ய ஸந்தானம் திருவாவடுதுறை ஆதீனமாகும். அவ்விடம் இவருடைய ஆத்மார்த்த பூஜையும் நித்தியம் பூஜிக்கப்படுகிறது.

இவ்விதம் பெருமைவாய்ந்த ஸ்ரீஉமாபதிசிவத்தால் இயற்றப்பட்ட வடமொழி தென்மொழி நூல்கள் பல உள. அவைகளில் இத்துதியும் ஒன்று ஆகும். இதிலுள்ள இரண்டு சுலோகங்கள் மட்டும் சென்ற மன்மத ஆண்டு ஆனி மாதம் 23-ந் தேதியில் நடந்த ஸ்ரீநடராஜர் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஸ்ரீமான் ஆடூர் தர்மபூஷணம் M. ரத்னஸபாபதி பிள்ளை, ஸ்ரீமான் தர்மபூஷணம் S. ரத்னஸாமி செட்டியார் (ஸ்ரீநடராஜா ஜுவல்லரி) இவர்களால் நடாத்திய திருப்பணியில் ஸ்ரீநடராஜரின் ஸபையின் முன்புறத்தில் வரையப்பட்டுள்ளன.

மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான் லால்குடி ஸ்ரீநிவாஸய்யர் அவர்கள் வியாகரண வேதாந்த சாஸ்த்ர பாரங்கதரும் சாஸ்தராசாரியருமான பிர்ம்மஸ்ரீ சி. த. ந. தாண்டவ தீக்ஷிதர் அவர்களிடம்

இதன் பொருளை உணர்ந்து மிகவும் பிரீதியுடன் இத்துதியை தென்மொழி தாத்பர்யத்தோடு அச்சிற் பதிப்பித்து வெளிப் படுத்த வேண்டி இத்துதிக்கு தாத்பர்யம் எழுதும் பணியில் என்னை ஈடுபடுத்தினார்கள்.

நானும் அவர்கள் அபிப்ராயத்திற்கு இணங்கி எனது புத்திக் கேற்றவாறு சில இடங்களில் குறிப்புகளுடன் தாத்பர்யத்தையும் ஒருவாறு எழுதி முடித்தனன். இதிலுள்ள சுலோகங்களுக்கு ஒவ்வொரு ஸமயங்களில் ஒவ்வொருவிதமான தாத்பர்யங்கள் ஸ்புரிக்கின்றன. அவைகளை எழுதப் பெருகுமென அஞ்சி சுருக்கினம்.

இதை எழுதும் பணியில் மிகவும் ஸஹாயமாக இருந்தவர் மகா-ள-ள-ஸ்ரீ V. S. வைத்தியநாத தீக்ஷிதர் அவர்கள்.

நல்லமுறையில் இதைப் பதிப்பிக்க இசைந்து எழுத்துக்களை புதிதாகவும் வரவழைத்து அவ்வாறு பதிப்பித்துக் கொடுத்தவர் சிதம்பரம் கிராஸ்வேடு பிரஸ், ஸ்ரீ நடராஜய்யர் அவர்கள்.

உதவிய மூலப்பிரதிகள்.

1. பிர்ம்ஹஸ்ரீ பூயங்கதாளாகிய ஸ்ரீ ஆனந்தபரமேச்வர தீக்ஷிதர் கோசத்தில் கிடைத்தது ஒன்று.

2. ஷை ஸ்ரீ ஆனந்தபரமேச்வர தீக்ஷிதர் அவர்களின் சிஷ்யர் களில் ஒருவரும் அத்வைதசாஸ்திர பாரங்கதாளும் சிதம்பர ரஹஸ்யாபிக்ஞாளும் எனது ஸாஹித்யாசார்யாளும் பிர்ம்ஹ பூயங்கதாளுமான ஸ்ரீ ஸுந்தரராஜரத்ன தீக்ஷிதர் அவர்கள் கோசத்தில் கிடைத்தது ஒன்று.

3. ஸ்ரீ ராஜரத்ன தீக்ஷிதர் அவர்கள் முன்பாக அப்பிரதி களை நன்கு பரிசீலனை செய்து அவர்கள் சிஷ்யர்களில் ஒருவரான பிர்ம்ஹஸ்ரீ வேததர்ம சாஸ்திரபூஷணம் திருஸஹஸ்ரகுல ரத்தினம் ஞானமூர்த்தி தீக்ஷிதர் அவர்களால் எழுதின பிரதி ஒன்று.

ஆக மூன்று பிரதிகளை வைத்துக்கொண்டு கூடுமானவரையில் மஹானுடைய வாக்கை அன்னியதாகாணம் செய்யப் பயத்துடன் பரிசோதித்து இது அச்சிற் பதிபிக்கப்பட்டது. ஸ்ரீமதுமாபதிசிவத்தால் இயற்றப்பட்ட கல்பக கணேச பஞ்சரத்னஸ்துதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதில் மனுஷ்ய வசத்தால் குற்றங்குறைகள் இருக்கக்கூடும். வித்வான்கள் அவைகளை அகற்றி குணங்களையே கைக்கொள்ளுவார்கள் என நம்புகிறேன்.

இப்பணியில் பேரவாக்கொண்டு ஈடுபட்டு பூர்ணமாக பொருளுதவிபுரிந்த மகா-ள-ள-ஸ்ரீ லால்குடி N. S. ஸ்ரீநிவாஸய்யர் அவர்களுக்கும் ஸ்ரீநடராஜரிடத்தில் அன்புநிறைந்த புண்ணியசிலர்களுக்கும் திருவருள் பிரகாசம் உண்டாகும்படி பரமனைப் போற்றுகின்றனம்.

க. மீ. ராஜகணேச தீக்ஷிதர்,
15, கீழவீதி, சிதம்பரம்.

உ

॥ श्रीचित्सभेशाय नमः ॥

यस्मात्सर्वं समुत्पन्नं चराचरमिदं जगत्।
इदं नमो नटेशाय तस्मै कारुण्यमूर्तये ॥

இவ்வுலக வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களைக் கூர்ந்து நோக்கும் எந்த மனிதனும் ஓர் உண்மையை உணராமலிருக்க முடியாது. அது யாதெனில் எவ்வளவு திறமை வாய்ந்தவனும் சில, ஸமயங்களில் தன் திறமை பயனற்றது, இதற்கும் மேலானதும், தன்னால் உணர்ந்தும் விவரித்துக் கூறமுடியாதது மான ஒரு சக்தியே, சில காரியங்களைத் தடை செய்வதுடன், வேறு சில, எதிர்பாராத செயல்களையும் நடத்துகின்றது என்பதே.

இந்த சக்தி, மானிடப் பிறவிகளுக்குமட்டுமின்றி தைவங்களாக, மானிடர்கள் வழிபடும், இந்திரன் முதலியவர்களுக்கும் எட்டாத நிலையிலிருக்கிறது என்பதைக் கேனோபநிஷத் முதலிய நூல்கள் கூறும்.

இந்த சக்தி எங்கு முடிவடைகிறதோ, எந்த எல்லையை, தைவப்பிறவியோ, மானிடப்பிறவியோ, கடந்து செல்லும் திறமையற்றதாகிறதோ அந்த எல்லையே, அந்த சக்தியே எல்லாம் வல்ல இறைவன், கடவுள், என்ற உண்மையை நம்முன்னோர்கள் உணர்ந்து உலக மக்களுக்கு உணர்த்த எண்ணற்ற நூல்களை இயற்றி உள்ளனர்.

எந்தப் பிறவியும் கடவுள் அருள் இல்லாமல் தன் விருப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ள இயலாது. அவன் அருளைப்பெற அவனை வழிபடுவது இன்றியமையாதது. எனவே கடவுளை வழிபடும் முறைகளை உபநிஷத்துகளாகிய வேதங்கள் புராணங்கள் முதலிய, பல நூல்கள் குறிக்கோளாகக்கொண்டு விளங்குகின்றன.

அந்த முறைகளில் உபாஸனம் என்பது சிறந்த முறை. அவைகளிலும் தஹரோபாஸனம் என்பது மிகச்சிறந்ததாக சாந்தோக்கியோபநிஷத் முதலிய நூல்களின் தெளிந்த உண்மை.

உடலில் ஹிருதயம் என்ற முக்கியமான உறுப்பு இருப்பது யாவரும் அறிந்தது. இந்த ஹிருதயத்தின் உதவி எந்த நிமிஷத்தில் நின்றுவிடுமோ அந்த நிமிஷமே வாழ்க்கையின் இறுதியாகும். ஆகவே வாழ்க்கைக்கு ஆதாரம் ஹிருதயம். இதிலிருந்து இதன் சிறப்பு நன்கு உணரத்தக்கது. இதைக் கருத்தில் கொண்டு நம்முன்னோர்கள் கடவுளுக்கு இதை உறைவிடமாகக் கூறினர். இதன் மையத்தில் ஒரு சிறிய மிகச் சிறிய இடைவெளி அல்லது ஆகாசம் இருக்கிறது. இதுவே கடவுள் உறைவிடம். அவர் கூத்து எல்லாம் இந்த இடத்தில் நடப்பதாக யோகிகளும் வேதாந்திகளும் உணர்ந்த உண்மை. இந்த வெளியில் எல்லாம்வல்ல இறைவனை வழிபடுவதே தஹரோபாஸனம் என்று கொள்ளலாம்.

நம் தத்துவ சாஸ்திரங்கள் அண்டம் எனவும், பிண்டம் எனவும் இருபிரிவாக உலகைப் பிரித்துக் கூறும். இதில் பிண்டம் என்பது சரீரம் ஆகும். இதில் செய்யப்படும் உபாஸனம் ஒரு வகை. அவ்வாறே அண்டம் என்ற வெளியுலகிலும் தஹரோபாஸனம் உண்டு. அதுவருமாறு, வெளியுலகெலாம் ஓர் உடலாக அமைந்தது எனக்கொண்டால் அதில் ஒரு ஹிருதயம் இருக்க வேண்டுமல்லவா? அந்த ஹிருதயமே சிதம்பர க்ஷேத்திரம். அதில் உள்ள வெளியாவது சிற்றம்பலம் என்கிற சிற்சபை. இதில் நர்தனம் செய்யும் ஸ்ரீநடராஜப் பெருமானே ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல இறைவன். உலகம் என்ற உடலுக்கு ஹிருதயமாகும் சிதம்பரத்தின் மஹிமையை விரித்துக் கூற வேண்டுமா?

இந்த க்ஷேத்திரத்தில் இறைவனை வழிபடுவதே அண்டத்தில் செய்யும் தஹரோபாஸனம். இதன் பயனே எல்லாவற்றிலும் சிறந்த மோக்ஷம் என்ற நிலையேயாகும்.

இந்த உபாஸனத்தைச் செய்து முக்தி என்ற பெரும்பேறு பெற்றவர்கள் பதஞ்ஜலி, வியாக்ரபாதர் முதலிய சிறந்த முனிவர்களும் மற்றும் எண்ணற்ற மஹான்களும் ஆவர்.

मूला धारादिषट्केऽप्यनवरतनटं यं विराजोहृदब्जे
सर्पेन्द्रव्याघ्रपाद प्रमुखमुनिनुतं षट्सुकालेषु वेदैः।

आराध्याभीष्टसिद्धिं द्विजकुलतिलकाः प्राप्नुवन्ति प्रभुं तं
चिच्छक्त्या युक्तमाद्यं कनकगिरिकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ६५

என்ற செய்யுள் இதை விளக்கும்.

சைவசித்தாந்த ப்ரவர்தகர்களில் சிறந்து விளங்கினவரும், வடமொழி, தென்மொழி இருதுறையிலும் பேறறிவு படைத்தவரும், ஸ்ரீநடராஜபெருமானை ஆராதித்து அவன் அருளால் மந்திர சித்திகளையும், யோக சித்திகளையும் பெற்று பல சைவ நூல்களையும் இயற்றி இறுதியில் ஸ்ரீநடராஜப் பெருமாளுடு இரண்டறக் கலந்தவருமான தில்லைவாழந்தணர் ஸ்ரீஉமாபதிசிவம் இவ்வாறு முக்திபெற்ற மஹான்களில் ஒருவராவர்.

यस्मै शम्भुर्नृत्तराण्मे प्रवलतरमहामन्त्रसिद्धिं प्रदत्वा
गुर्वीं योगस्य सिद्धिं जननमृतिहरं चात्मबोधं महान्तम् ।
सूतादीनां विमुक्ति प्रदमपि महितं गौरवं पत्रमूलं
स्वंनृत्तंदर्शयित्वा सुखयतिनितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ३०५

இவர் இயற்றிய நூல்களில் ஒன்றுன குஞ்சிதாங்கிரிஸ்தவம் என்பது தில்லையம்பதியின் மஹிமையையும், அதில் ஆனந்த நடனம் செய்யும் ஸ்ரீ நடராஜப்பெருமானின் பெருமையையும், சிற்ஸபை, கனகஸபை முதலியவைகளின் தத்துவங்களையும் விளக்கும் ஒரு சிறந்த ஸ்தோத்திர பாடலாகும்.

இத்தோத்திரத்தின் வாயிலாக அனேக புராண வரலாறுகளும், ஆதிசங்கரர் சிதம்பரத்தில் பிறந்தவர் என்பன போன்ற சில புதிய கருத்துக்களும் வெளியாகின்றன.

இது வடமொழிச் செய்யுளாக அமைந்திருப்பதால் இதுவரை ஒரு சிலருக்கே பயன்படுவதாக இருந்து வந்ததை உணர்ந்து தமிழ் நாட்டில் உள்ள எல்லோருக்கும் இது பயன் படுமாறு இதை தமிழ் விளக்கத்துடன் வெளியிட முன்வந்த தில்லைமூவாயிரவந்தணரும், வைதீக நெறியில் தன் வாழ்க்கையை நடத்துபவரும், நல்ல பண்டிதருமான, பிர்ம்ஹஸ்ரீ க. மீ. ராஜ கணேச தீக்ஷிதர் அவர்களின் தொண்டு பாராட்டுக்குரியதாகும்.

அன்னார் மொழிபெயர்ப்பு மட்டும் போதுமென்று கருதாமல் தேவாரம் முதலிய தமிழ் வேதங்களையும், மற்றும் வடமொழிப் புராணங்களையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார். தவிரவும் சிதம்பரம் கோயிலில் ஆறுகாலமும் அபிஷேகம், ஆராதனம் முதலியன செய்து வழிபட்டுவரும் ஸ்ரீசந்திரமௌளீச்வரர் என்ற ஸ்படிகலிங்கத்தின் வரலாறு சம்பந்தமாக இவர்கள் செய்துள்ள ஆராய்வு சிறப்பாக அமைந்துள்ளது. ஆதிசங்கரர் சந்திரமௌளீச்வர லிங்கத்தை கொணர்ந்தார் என்றும், அப்பய்ய தீக்ஷிதர் கொணர்ந்தார் என்றும், உமாபதிசிவாசாரியர் அளித்தார் என்றும் பரவி இருக்கும் கொள்கைகளைத் தக்க சான்றுகளுடன் கண்டித்து, இவர்களுக்கெல்லாம் முன்னமே சிதம்பர க்ஷேத்திரத்தில் சந்திரமௌளீச்வரர் ஆராதிக்கப்பட்டு வந்திருக்கிறார் என்ற கருத்தை விளக்கி இருப்பது போற்றத் தக்கதே.

இவ்வாறு பொதுமக்கள் நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டு பெருமுயற்சியுடன் இந்த நூலை வெளியிட்ட பிரம்ஹஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷிதர் அவர்களுக்குச் செய்யும் கைமாறு யாதெனில் சைவர்களும், ஸ்ரீநடராஜ பக்தர்களும் இந்த தோத்திரங்களை நன்கு பயன்படுத்தி ஸ்ரீநடராஜர் அருளைப்பெற்று இன்புறுவதேயாகும்.

இந்தத் தோத்திரம் முதல் வெளியீடு சீக்கிரமே செலவாகி இதைவிட இன்னும் சிறந்த முறையில் இதன் இரண்டாவது வெளியீட்டை அவர்களே செய்யுமாறு அவர் வழிபடு கடவுள் ஸ்ரீநடராஜப் பெருமான் அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

K. A. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள்.
(முன்னம்) அண்ணாமலை சர்வகலாசாலை,
வடமொழி ஆசிரியர்,
(தற்பொழுது) உதவிப் பதிப்பாளர்,
வடமொழி அகராதித்துறை,
டெக்கான் காலேஜ், புனா 6.

FOREWORD.

Indian literature is rich in hymns or 'stotras' in praise of gods or goddesses worshipped by the poet-philosophers. Among such devotional hymns sung in praise of Lord Siva, Kunchitangri Stava of Sri Umapathi Sivam occupies a highly honoured position. Saint Umapathi Sivam was one of the most learned scholars of the 13th century and belonged to the community of the Thillai Moovayiravar.

Kunchitangri Stava contains 313 slokas and all the slokas are in SVAGDARA style. Every line in each sloka contains 21 letters. As this Stava contains more than 300 slokas, this may be named as LAGUSAHASRASTUTI (लघुसहस्र स्तुति). Moreover, this Stava also embodies the tenets of Advaitic philosophy, namely 'I am the Bramham (ब्रह्माहम्), as this stava begins with the word 'Bramha and ends with the word 'Aham' (I am) in the last sloka. People who know mantra sastra even consider that every sloka of this Stava contains a mantra. In this work the author has sung the mighty deeds of Parameswara as depicted in the Hindu Ithihasas, Puranas, Srutis, Smrtis, etc., and has also explained the significance of the Chidambara Rahasya and the Vaidika Puja performed in this temple.

The glory of the Chidambaram temple lies in the fact that it exemplifies one of the most important dancing postures of Siva – the dance of bliss (Ananda Thandava). There are many dances of Siva. *The fundamental idea underlying all these dances is more or less the same, viz., the outward expression of primal rhythmic energy.* Some of the wellknown dances of Siva are the evening dance, the Tandava and Nadanta Dance of Nataraja. The most important dance for us is the dance of Bliss, Ananda Thandava of Sri Nataraja in the Golden Hall of Thillai and this dance was performed by Siva to gods and Rishis—Vyagrapada and Patanjali—who were performing penance in Thillai in order to enjoy the beautiful sight of Siva's dance. Siva is also known as the Dancer. *His dance is*

Evolution, Continuance, and Involution. Nataraja is a form of Siva and the word means 'Lord of the Dance'. Siva as Nataraja has four arms; he has braided locks and these locks whirl in the dance. On the head are the cobra in a twisted form, a mermaid figure of the Ganges and the Crescent moon. He has a man's ear-ring in the right ear and a woman's in the left. One hand holds a drum sounding the call to all the people who are immersed in Samsara to go to him for protection, another hand holds fire to give assurance of help to his devotees; of the other two hands, one is raised (abayamudra 'do not fear') and other points to the lifted foot, Kunchitapada, which confers Moksha or eternal bliss on all worshippers and in praise of which Umapathi has sung this Stava.

The Chidambaram temple is also famous for its unique pujas, the Spadika Lingam and the 'Rahasyam'. The location of the Chit Saba of this temple corresponds to the heart in the human body with the head towards the South. The Chit Saba is the sanctum sanctorum of this temple. In the Chit Saba, Siva is said to have danced while blessing the two great devotees. The steps leading to the hall are five in number and represent the five sacred letters of the holy Panchakshara Mantra and every portion of the Saba including nails, tiles, pillars, etc., is said to have a holy significance. A number of slokas of this Stava relate at great length to the significance of the main idols in the Saba, the Vaidika puja, the important annual festivals, and the significance of Chidambara YANTRA and MANTRA. The origin of the Spadika Lingam described in this book runs contrary to the common belief that it was given by Sri Adi Sankaracharya and the note added by the commentator regarding the origin of the Spadika Linga makes interesting reading Umapathi concludes this Stava with the description of his personal expereince of the worship of Lord Nataraja by saying that those who read these verses with devotion would certainly have a true vision of Sri Nataraja's Ananda Thandava.

A special feature of this edition is the excellent commentary in Tamil written by Sri Rajaganesa Dikshithar

who has done it as a labour of love. An intimate knowledge of our religious literature and of Sri Umapathi's works in particular, clarity of understanding and lucidity of expression combined with a thorough grasp of the spirit and the modes of thought of many religious writers are essential for success in this field. That Sri Rajaganesa Dikshithar possesses them in abundant measure is evident from almost every page of this volume. A learned commentary in sanskrit is said to have been written by Sri Meenakshinatha. But to the general reader whose knowledge of Sanskrit is not adequate to enable him to know the meaning, he who makes it speak the language of the common man does indeed a great service to the ardent seeker of knowledge. It is this service which Sri Rajaganesa Dikshithar has rendered with eminent success and, as such, he has placed us under a deep debt of gratitude. He has written his commentary in simple and easy Tamil which anyone can comprehend. He has carefully eschewed the show of erudition to which lesser minds of often fall easy prey. He has laboured hard to make the meaning of the text as plain as possible with his explanatory notes at several points. It is hoped that this edition of the Kunchitangri Stava will be much appreciated by all those who are interested in the religious literature of the Hindus.

V. G. RAMAKRISHNA AIYAR,
Professor of Economics, (Retd.)
Annamalai University, (S. India).

ॐ

जयत्यत्र मखिकुलावतंसैः श्रीमदुमापतिशिवाचार्यैः प्रणीतः कुञ्चिताङ्घ्रिस्तवः, यः सुरभिकुसुमैः बद्धा स्रगिव भक्तिरसमसृणैः त्रिशताधिकैः श्लोकैः स्रग्धरायां निबद्धः आनन्दयति चित्तं सहृदयानाम्। श्री चित्सभेशस्य कुञ्चिताङ्घ्रेः नटराजराजस्य सर्वतोमुख माहात्म्यमत्र ३१३ श्लोकैः गीयते भक्तकविना। यथाक्रमं यथावसरं च चित्सभायाः रहस्यस्य प्रकाशनं, तत्र चित्सभेशमभितो विराजमानानां विघ्ने (?)दे मूर्तिविशेषाणां वर्णनं, पतञ्जलिव्याघ्रपादोपमन्युजैमिनिप्रभृतीनां मुनिधौरेयाणां महत्वस्य प्रतिपादनं, त्रिसहस्रद्विजेन्द्रैः प्रतिदिनं सभक्तिश्रद्धं क्रियमाणस्य सपर्याविधेः वर्णनं च क्रियते कविना। एवमत्र तत्तन्मासविशेषेषु प्रचाल्यमानाः प्रधानोत्सवाः क्रियाकलापसहिताः प्रस्तूयन्ते। विविधाद्भुतशिवलीलावर्णनद्वारा परमकारुणिकेन शिवेन स्वभक्तेभ्यो वितीर्णा अनुग्रहविशेषाश्च सदृष्टान्तमुल्लिखिताः। तथाहि, भक्तमणये माणिक्यवाचकाय तथैव अन्त्यजायापि नन्दितेश्वराय नन्दाय वितीर्णा मुक्तिः, व्याघ्रपादपतञ्जलिजैमिनिमुनिभ्यो दत्तं नित्यत्वं, भक्तार्जुनाय सानुग्रहं कृतं पाशुपतास्त्रदानं, मानसिकपूजावशीकृतशिवाय भीमाय कृतः अनुग्रहः, भक्त मार्कण्डेयाय दत्तमभूतप्रदमभयं चात्र, वर्ण्यते। वर्ण्यते च द्रविडदेशतिलकानाम् अप्पर्सुन्दरज्ञानसम्बन्धप्रभृतीनां शैवावतंसानां पावनं चरित्रम्।

अथात्र, विजयते योगक्षेमावहं भुक्तिमुक्तिप्रदम् अपूर्वं स्फाटिकं लिङ्गं चन्द्रमौलीश्वराख्यम्। इदं च चिराद् ईश्वरेणैव स्वसपर्यार्थं स्वभक्तेभ्यः दीक्षितवर्येभ्यः दत्तम्। अस्य च सपर्यां यथाविधि अद्यापि प्रयता मखीन्द्राः प्रत्यहं षट्सु समयेषु कुर्वन्ति॥

अस्य स्तोत्रतल्लजस्य प्रणेता शमादिसम्पन्नः मन्त्रसिद्धिं योगसिद्धिं च शिवानुग्रहात् प्राप्तः, आत्मज्ञानी च आसीदित्यत्र अस्य

कृतिरेव प्रमाणम्। अधोनिर्दिष्टा [श्लोकात् स्तवस्यास्य महिमा स्फुटीभवति।

सद्वृत्तां स्रग्धराङ्गां विपुलगुणवरालङ्कृतिं मञ्जुपाक-
स्थायीशय्यारसाढ्यैर्विबुधपरिबृढाह्लादिरीतिं सुयुक्तिम्।
वेदान्तार्थप्रबोद्ध्रीं सुगुणपदगतिं योऽस्मदीयां स्तुतिं ताम्
अङ्गीकुर्वन्सुखं मे प्रदिशति गुरु तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०४

विशीष्य अस्य स्तवस्य अन्ते मुकुटायमानाः अष्ट श्लोकाः 'णमुल्' प्रयोगघटिताः शब्दसौन्दर्येण अर्थगरिम्णा च हृदयमावर्जयन्ति भावुकानाम्।

अन्तिमश्लोके फलश्रुतौ, अस्य कुञ्चिताङ्घ्रिस्तवस्य पाठकाः भुक्तिं मुक्तिं च लभन्तात् इति कविः प्रार्थयते।

अस्य च गम्भीरार्थस्य कुञ्चिताङ्घ्रिस्तवस्य, मन्त्रशास्त्ररहस्यविद्भिः शिवशक्त्युपासकैः भक्ताग्रेसरैः श्रीराजगणेशदीक्षितेन्द्रैः द्रविड भाषायां विरचितः दुरूहार्थप्रकाशकः अनुवादः हेम्नः परमामोदः विभाति। तैरेव कृतेन द्रविडभाषानुवादेन सहितः कविना निबद्धः कल्पकगणेशपञ्चरत्नस्तवोऽपि साम्प्रतं प्रकाशीकृतः सुमनसां प्रमोदाय श्रेयसे च कल्पताम् इति शिवम्॥

एवम्,

डाक्टर् सि. एस्. वेङ्कटेश्वरशर्मा,
संस्कृतविभागाध्यक्षः,
अण्णामलै विश्वविद्यालयः.

Vidhya Bhushana, Sahitya Sudhakara,
Sahitya- Vyakarana Vedantha Vidwan
Siromani

K. S. NARASIMHA SASTRI,

PRINCIPAL,
M. S. SANSKRIT VIDYASALA,
CHIDAMBARAM.

श्रीः

॥ श्रीशिवाभ्यां नमः ॥

अयि भोः। सहृदयाः। आस्तिकशिखामणयः। श्रीशिवभक्तिसुधारससमास्वादनसमसमयसमुन्मिषच्छ्रीशिवज्ञानपरिणतिविलाससमुदञ्चितश्रीशिवाद्वैताखण्डब्रह्मानन्दानुभवसफलीकृतनिजजन्मानः भक्तोत्तमाः ॥

श्रीकुञ्चिताङ्घ्रिस्तवगीततत्वं श्रीकुञ्चिताङ्घ्रिं शरणं व्रजेम।
यच्चित्कलालेशविलासयोगात् जीवात्मनां चेतनतात्मलाभः॥

श्रीमत्पौष्करभाष्यकृन्मुनिवरोमापत्यभिख्यैः शिवाऽऽ
चार्यैः दीक्षितवंशजैर्नटपतेरंशावतारैः पुरा।
सर्वांशेन महत्तरोविरचितः श्रीकुञ्चिताङ्घ्रिस्तवः
भक्त्या सर्वपुमर्थसाधनचणो भक्तोत्तमानांकृते॥ १

सन्त्येवावनिमण्डले परशतग्रन्था नटेशस्तुतौ
प्रत्नैर्वाप्यथनूतनैः कविवरैः सृष्टाःस्वभाषास्वपि।
तान्सर्वानतिशेतएव विषयप्रौढिम्न एषस्तवः
क्षेत्रस्यास्य चिदम्बरस्य महिमादर्शायमानःस्वयम्॥ २

क्षेत्रं पावन आलयोनटपतिर्नृत्तं सभा मण्डपाः
स्तम्भाभित्तय उत्तमा यवनिका कुम्भा गवाक्षा इति।
सर्वं वेदपुराणगीतमहिमप्रद्योतनाय स्थितं
इत्यावेदयते सयुक्तिकमयं श्रीकुञ्चिताङ्घ्रिस्तवः॥ ३

रम्यं लास्यमुमाकृतं भगवतः श्रीयन्त्रराजं शुभं
श्रीमत्स्फाटिक चन्द्रमौलि भगवल्लिङ्गस्यवृत्तं महत्।
तद्भक्ता मखिपुङ्गवाः श्रुतिपथाचारैकदीक्षाः श्रुताः
श्रीमज्जैमिनिपाणिनिप्रभृतयः सद्दर्शनाकाङ्क्षिणः ॥ ४

एतेषामपिसूक्ष्मतत्वकलनादज्ञातपूर्वा नवा
वृत्तान्ता बहवः स्फुरन्ति विदुषामेतं स्तवंपश्यताम्।
तत्रोदाहरणायवच्मि विषयान्द्वित्रान्मुदे धीमतां
व्याख्यात्रा विवृतेपुनैकविषयेष्वस्मत्सुहृत्सूरिणा॥ ५

देशेऽस्मिन्बहवोवदन्ति भगवच्छ्रीशङ्करार्योगुरुः
कालस्यां जनिमापकेरलभुविख्याते द्विजानांकुले।
श्रीमन्नार्मदतीरवासियमिनो गोविन्दपादाद्गुरोः
सन्यासं विधिवत्प्रपद्ययतिराड्भाष्याद्यभाषिष्टसः॥ ६

श्रीमच्छङ्करदेशिको यतिवरः कैलासशैलेशिवं
स्तुत्वाऽतो विनिवर्तनावसरतोलब्धेषु लिङ्गेषुच।
एकंस्फाटिकलिङ्गमत्र निदधौ श्रीचित्सभायांपुरा
तद्धस्थचापि निषेव्यतेमखिवरैः पूजाभिषेकादिभिः॥ ७

इत्यादीनि बहूनिमूलशिथिलानीतिस्फुरेद्धीमतां
एतद्ग्रन्थविमर्शनोद्यतवतां ताटस्थ्यदृष्ट्या यदि।
श्रीमच्छङ्करदेशिको गुरुवरोह्यद्वैतसिद्धान्तकृत्
श्रीमद्दिव्यचिदम्बरे जनिमगात् श्रीदीक्षितानांकुले ॥ ८

तस्याचार्यवरो महान्स भगवान्गोविन्दपादोयमी
क्षेत्रेऽत्रैवगुहां स्थितामधिवसन्नन्वग्रहीच्छङ्करम्।
एवं दीक्षितसत्तमैः प्रतिदिनं संपूज्यमानं चिरात्
लिङ्गंस्फाटिकचान्द्रमौलिमपियच्छ्रीचित्सभायांस्थितम् ॥ ९

देवेनैव नटेश्वरेण मकुटात्स्वसाङ्घ्रिमांशोः प्रभां
संपिण्ड्य प्रददेपुराऽर्चितुमिदं लिङ्गमखिभ्यः परम्।
श्रीमच्छङ्करदेशिकादपिपुरा कालोद्भवाः सूरयः
जैमिन्यादि महर्षयोयमिवराः श्रीज्ञानसंबन्धकाः ॥ १०

लिङ्ग स्फाटिकमालयेऽत्रविनुतं श्रीचित्सभायांस्थितं
भक्त्याऽस्तोषत दिव्यपद्यवचसेति ख्यातमेवाऽवनौ।
एतत्सर्वमपिन्यरूपि विदुषा सम्यक्प्रमाणैः शतैः
व्याख्यात्रा मखिपुङ्गवेनसुगिरा द्राविड्यभाषांजुषा ॥ ११

वृत्तैः श्रीस्रग्धराभिः श्रुतिपथमधुरैरुग्रपद्यैर्महद्भिः
रीत्यागौडीययाच स्फुरदधिकगुणैरोजसाभूयसाच।
द्राक्षापाकेन शय्याश्रितपदघटनैरुज्वलन्त्यासुलक्ष्यः
नानाऽलङ्कारयोगात्स्फुरदमृतरसोव्यङ्ग्यगर्भः स्तवोऽयम् ॥ १२

श्रीमद्राजगणेशदीक्षितवरैरस्मत्सुहृत्तल्लजैः
मीमांसादिमशास्त्रविद्भिरतुलप्रज्ञाविलासाश्रितैः।
श्रीमद्द्राविडभाषयासुविवृतः सम्मुद्र्यनीतोद्यां
भक्तानां मुदमादधातुविदुषां श्रीकुञ्चिताङ्घ्रिस्तवः ॥ १३

इत्थं दृष्ट्वा कुञ्चिताङ्घ्रिस्तवंतं भक्त्युद्रेकान्मोदमानान्तरात्मा।
कश्चिद्विद्वान्श्रीनृसिंहाभिधानः श्लोकैरेतैः स्वाशयंवक्ति तत्र ॥

॥ श्रीः शुभं भूयात् ॥

विद्याभूषण साहित्यसुधाकर साहित्य व्याकरण
वेदान्त विद्वान् शिरोमणि,

के. एस. नरसिंहशास्त्रिणः

प्रथमेऽध्यापकाः

एस्. एस्. संस्कृतविद्याशाला, चिदम्बरम्.

२६—७—१९५८.



॥ श्री गणेशाय नमः ॥

॥ श्री कल्पक गणेश पञ्चरत्नस्तवः ॥

॥ श्रीमदुमापतिशिवप्रणीतः ॥

श्रीमत्तिल्ववने सभेशसदन प्रत्यक्ककुब्गोपुरा
धोभागस्थित चारुसद्मवसतिः भक्तेष्ट कल्पद्रुमः।
नृत्तानन्द मदोत्कटो गणपतिः संरक्षताद्वोऽनिशं
दूर्वासः प्रमुखाखिलर्षिविनुतस्सर्वेश्वरोग्र्योऽव्ययः॥ १

ஸ்ரீமத்தில்வவனே ஸபேசஸதந ப்ரத்யக்ககுப் கோபுரா
தோபாகஸ்தித சாருஸத்மவஸதி: பக்தேஷ்ட கல்பத்ரும:।
ந்ருத்தாநந்த மதோத்கடோ கணபதி: ஸம்ரக்ஷதாத்வோநிசம்
தூர்வாஸ:ப்ரமுகா கிலர்ஷிவிநுத: ஸர்வேச்வரோக் ரியோவ்ய:॥1

1. ஸர்வமங்களங்கள் நிறைந்த தில்லை வனத்தில் (சிதம்பரத்தில்) நடராஜருடைய ஆலயத்தில் மேற்கு திக்கில் உள்ள கோபுரத்தின் கீழ் அழகுவாய்ந்த கோஷ்டத்தில் பிரகாசிப்பவரும் பக்தர்களுக்கு இஷ்டங்களை கொடுப்பதில் கற்பகவிருக்ஷம் போன்றவரும் நிருத்தனத்தில் அதிக ஆனந்தத்தோடு கூடினவரும், தூர்வாஸர் முதலிய எல்லா முனிவர்களால் விசேஷமாக துதிக்கப்பட்டவரும், எல்லாவற்றிற்கும் ஈச்வரரும் முதலில் உண்டானவரும், நாசமற்றவருமான விநாயகர் மிகவும் நம்மை ரக்ஷிக்கட்டும்.

श्रीमत्तिल्लवनाभिधं पुरवरं क्षुल्लावुकं प्राणिनां
इत्याहुर्मुनयः किलेतिनितरांज्ञातुश्च तत्सत्यताम्।
आयान्तं निशिमस्करीन्द्रमपियो दूर्वाससं प्रीणयन्
नृत्तंदर्शयतिस्सनोगणपतिः कल्पद्रु कल्पोऽवतात्॥ २

ஸ்ரீமத்தில்ல வநாபிதம் புரவரம் க்ஷுல்லாவுகம் ப்ராணிநாம்
இத்யாஹுர் முநய:கிலேதி நிதராம் ஜ்ஞாதும் ச தத்ஸத்யதாம் ।
ஆயாந்தம் நிசி மஸ்கரீந்த்ரமபியோ தூர்வாஸஸம் ப்ரீணயந்
ந்ருத்தம் தர்சயதிஸ்மஸோ கணபதி: கல்பத்ரு கல்போவதாத் ‖ 2

2. அழகுவாய்ந்த தில்லைவனம் என்று பெயர் உள்ள இப்பட்டணம் பிராணிகளுக்கு பசியை போக்கடிக்கிறது என்று முனிவர்கள் கூறுகின்றனர் அல்லவா! அதன் உண்மையை மிகவும் அறியவேண்டி இரவில் வந்தவரும் ஸன்யாசிகளுக்குள் சிறந்தவருமான தூர்வாஸ முனிவரை யாதொரு விநாயகர் ஸந்தோஷிக்கும்படி செய்து தனது நடனத்தைக் காண்பித்தாரோ அப்படிப்பட்ட கற்பக விருக்ஷத்திற்கு ஒப்பான கணபதியானவர் நம்மவர்களை ரக்ஷிக்கட்டும்.

குறிப்பு: முன்னொரு காலம் தூர்வாஸர் (தனது சிஷ்யர்களோடுகூட) அன்னம்பாலிக்கும் தில்லை சிற்றம்பலம் என்னும் ஆன்றோர் மொழியை பரீக்ஷிக்க எண்ணி இரவில் நடராஜரின் அர்த்தஜாமம் ஆனபிறகு பிக்ஷை பிக்ஷை என்று உறக்க கூவி வீதியில் உலாவினர். அவ்வமயம் ஒருவரும் இவர் முன்பாக வந்து பிக்ஷை அளிக்கவில்லை. அக்காரணத்தால் கோபித்து இருக்கும் தருணம் அம்பிகை இவர் முன் தோன்றி பிக்ஷையை அளிக்க அதை ஏற்றும் பரமனுடைய நடன தரிசனமன்றி பிக்ஷையை புசியேன் என்று மறுக்க அத்தருணம் அம்பிகை தனது புதல்வனான ஐங்கரனை அழைப்பித்து அந்நடனத்தை காண்பித்து அவருக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணினாள் என்று சிதம்பர ரஹஸ்யத்தில் கூறப்படுகிறது.

देवान्नृत्तदिदृक्षया पशुपते रभ्यागतान् कामिनः
शक्रादीन् स्वयमुद्धृतं निजपदं वामेतरं दर्शयन्।
दत्वा तत्तदभीष्टवर्गमनिशं स्वर्गादिलोकान् विभुः
निश्रेयश्शिवकामिनाथतनयः कुर्यात् शिवं वोऽन्वहम्॥ ३

தேவாந்ந்ருத்த திதிருக்ஷயா பசுபதே ரப்யாகதாந் காமிந:
சக்ராதீந் ஸ்வயமுத்த்ருதம் நிஜபதம் வாமேதரம் தர்சயந் ।
தத்வா தத்ததபீஷ்ட வர்கமநிசம் ஸ்வர்காதி லோகாந்விபு:
நிச்ரேய: சிவகாமிநாத தநய: குர்யாத்சிவம் வோந்வஹம் ‖ 3

3. யாதொருபிரபுவான நடராஜரின் குமாரரான விநாயகர் நடராஜரின் நடனத்தைப் பார்க்கவேண்டி வந்தவர்களும் பலன்களை விரும்பினவர்களுமான இந்திரனை முன்னிட்ட தேவர்களுக்கு ஆக்கப்பட்ட தனது வலது திருவடியை காண்பிவித்து இஷ்டங்களையும் அளித்து ஸ்வர்க்கம் முதலிய லோகங்களை அடையும்படி செய்தாரோ அப்படிப்பட்ட விநாயகர் எப்பொழுதும் நமக்கு மங்களத்தை செய்யட்டும்.

अस्माकं पुरतश्चकास्तुभगवान् श्रीकल्पकाख्योऽग्रणीः
गोविन्दादिसुरार्चितोऽमृतरस प्राप्त्यै गजेन्द्राननः।
वाचं यच्छतुनिश्चलां श्रियमपि स्वात्मावबोधंपरं
दारान् पुत्रवरांश्च सर्वविभवं कात्यायनीशात्मजः॥ ४

அஸ்மாகம் புரத:சகாஸ்து பகவாந் ஸ்ரீகல்பகாக்யோ க்ரணீ:
கோவிந்தாதிஸுரார்ச்சிதோ ம்ருதரஸ ப்ராப்த்யை கஜேந்த்ராநந:
வாசம் யச்சது நிச்சலாம் ச்ரியமபி ஸ்வாத்மாவ போதம் பரம்
தாராந்புத்ர வராம்ச்ச ஸர்வவிபவம் காத்யாயநீ சாத்மஜ:॥ 4

4. காத்தியாயனீசரின் குமாரரும், பகவானும், கற்பகர் என்று பெயர் உள்ளவரும், முதன்மைவாய்ந்தவரும், அமிர்தத்தை அடையவேண்டி விஷ்ணு முதலிய தேவர்களால் பூஜிக்கப்பட்டவரும் யானையின் முகம் உள்ளவருமான விநாயகர் நமக்கு முன்பாக விளங்கட்டும். வாக்கையும், சலிக்காததான ஸம்பத்தையும், நல்ல பத்தினியையும், புத்திரர்களையும் ஸர்வ விபவங்களையும் ஆத்ம ஞானத்தையும் கொடுக்கட்டும்.

वन्देकल्पक कुञ्जरेन्द्रवदनं वेदोक्तिभिः तिल्वभू
देवैःपूजित पादपद्मयुगलं पाशच्छिदं प्राणिनाम्।
दन्तादीनपि षड्भुजेषु दधतंवाञ्छाप्रदत्वाप्तये
स्वाभ्यर्णाश्रयिकामधेनु मनिशं श्रीमुख्यसर्वार्थदम्॥ ५

வந்தேகல்பக குஞ்ஜரேந்த்ரவதநம் வேதோக்திபி: தில்வபூ
தேவை:பூஜித பாதபத்மயுகளம் பாசச்சிதம் ப்ராணிநாம்।
தந்தாதீநபி ஷட்புஜேஷு தததம்வாஞ்சாப் ரதத்வாப்தயே
ஸ்வாப்யர்ணாச்ரயி காமதேநு மநிசம்ஸ்ரீமுக்ய ஸர்வார்த்தம்॥ 5

5. கற்பகர் என்று பெயர் உள்ளவரும், யானை முகம் உள்ளவரும், வேதத்தில் சொல்லப்பட்ட விதிப்படி தில்லைவாழ் அந்தணர்களால் பூஜிக்கப்பட்ட இரண்டு பாதத் தாமரைகளை உடையவரும், பிராணிகளின் பாசத்தை அகற்றுகிறவரும், தந்தம் முதலிய ஆறு ஆயுதங்களை கைகளில் தரித்தவரும், பிராணிகளுக்கு இஷ்டங்களை அளிக்கிற ஸாமர்த்தியத்தை அடைய வேண்டி தனது ஸமீபத்தை அணுகி போற்றுகிற காமதேனுவை உடையவரும் ஸ்ரீ முதலிய இஷ்டங்களை அளிப்பவருமான விநாயகரை மிகவும் நமஸ்கரிக்கிறேன்.

औमापत्यमिमं स्तवं प्रतिदिनं प्रातर्निशं यःपठेत्
श्रीमत्कल्पक कुञ्जराननकृपापाङ्गावलोकान्नरः।
यंयंकामयते च तं तमखिलं प्राप्नोति निर्विघ्नतः
कैवल्यञ्च तथान्तिमेवयसितत्सर्वार्थसिद्धिप्रदम् ॥

ஔமாபத்யமிமம் ஸ்தவம்ப்ரதி திநம்ப்ராதர் நிசம்ய:படேத்
ஸ்ரீமத்கல்பக குஞ்ஜராநநக்ருபா பாங்காவலோகாந் நர: ।
யம்யம் காமயதேச தம் தமகிலம் ப்ராப்நோதி நிர்விக்நத:
கைவல்யஞ்ச ததாந்திமே வயஸிதத் ஸர்வார்த ஸித்திப்ரதம் ‖ 6

6. உமாபதியினால் செய்யப்பட்ட இந்த ஸர்வார்த்த ஸித்தியை கொடுக்கிற ஸ்துதியை ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் எவன் படிக்கிறானோ அவன் கற்பகவிநாயகரின் கிருபாவீக்ஷணத்தினால் எந்த எந்த பலத்தை விரும்புகிறானோ அவைகளை விக்கினம் அன்றி அடைகிறான். இறுதியில் மோக்ஷத்தையும் அடைகிறான்.

॥ इति श्रीमदुमापतिशिवप्रणीतः
श्रीकल्पकगणेश पञ्चरत्नस्तवः समाप्तः॥

ॐ

श्री गणेशाय नमः

श्री चित्सभेशाय मङ्गलम् ॥

श्री कुञ्चिताङ्घ्रिस्तवः

श्रीमदुमापतिशिवप्रणीतः

कुञ्चिताङ्घ्रिं नमस्कृत्य कुण्डलीकृतगायकम्।
कुञ्चिताङ्घ्रिस्तवं वक्ष्ये ब्रह्मनिष्ठ उमापतिः॥

எப்பொழுதும் சிவாபின்ன பிர்ம்மத்தை தியானம் பண்ணிக் கொண்டிருக்கிற உமாபதி (சிவாசார்யர்) என்று பெயருள்ள நான் கம்பளாச்வதரர் என்னும் நாககாயகர்களை குண்டலமாக அணிந்திருக்கிற (குஞ்சிதாங்கிரியை) வளைந்து தூக்கப்பட்ட வாமபாதத்தை உடைய நடராஜனை நமஸ்கரித்து இந்த குஞ்சிதாங்கிரிஸ்தவம் என்று பெயருள்ள நூலை செய்கிறேன்.

ब्रह्माण्डं यस्य देहं रविजदिशिपदो वक्त्रवृन्दान्युदीच्यां
तद्विराजान्तरङ्गे विलसति हृदयाम्भोरुहे दक्षिणाग्रे।
मध्ये सम्मेलनाख्ये मुनिवरमनसा भाविते यन्त्रराजे
यश्शक्त्या नृत्यतीशस्तमपिनटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १

1. எவனுக்கு இவ்வுலகமே தேகமோ, எவனுடைய கால்கள் தெற்கு திக்கில் நீட்டப்பட்டதுகளோ, எவனுடைய சிரசுகள் வடக்கு திக்கில் வைக்கப்பட்டதுகளோ, அப்படிப்பட்ட விராட் என்கிற புருஷனுடைய நடுவில் விளங்குகிற தெற்கு முகமான ஹிருதய தாமரைப்பூவின் நடுவில் ஸம்மேளனம் என்று பெயருள்ளதும் (அதாவது ஸ்ரீசக்கரம், சிதம்பர சக்கரம் இவ்விரு சக்கரங்களின் சேர்க்கை) முனிச்ரேஷ்டர்களால் (அதாவது பதஞ்சலி, வியாக்ரபாதர், ஜைமினி, திருஸகஸ்ர முனீச்வராள், திருமூலவர் முதலிய பெரியோர்களால்) கருதப்பட்டதுமான யந்திர ச்ரேஷ்டத்தில் எந்த நடராஜரானவர் தனக்கு அபின்னையான சிவகாமசுந்தரியோடு நடனம் செய்கிறாரோ அப்படிப்பட்ட நடபதியும், குஞ்சிதாங்கிரிம்* தூக்கி வளைக்கப்பட்ட சரணங்களை உடையவருமான நடராஜ மூர்த்தியை வணங்குகிறேன்.

---

* இதற்கு மேல் உள்ள அர்த்தத்தை எல்லா சுலோகங்களிலேயும் சேர்த்துக் கொள்ளவும்.

पञ्चाशत्कोटिसंख्या परिमितधरणि श्रीविराडाख्यधात्रो
रेकस्वान्ताब्जभित्तिस्थित कनकमहायन्त्रराट्कर्णिकायां।
नृत्यन्तं चित्सभेशं त्रिसृभिरपि सदाशक्तिभिस्सेविताङ्घ्रिं
नादान्ते भासमानं नवविधनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २

2. ஐம்பதுகோடி யோஜனை தூரமுள்ள (1 யோஜனை 10 மைல்) பூமி என்ன, விராட் புருஷனென்ன, இவ்விருவர்களுக்கும் ஒன்றான இருதய கமலத்தில் உள்ள ஸ்வர்ணமயமான யந்திரத்தின் நடுவில் நடனம் செய்பவரும், சித்ஸபைக்கு பதியும், இச்சா, ஞான, கிரியா என்கிற மூன்று சக்திகளால் எப்பொழுதும் ஸேவிக்கப்படுகிறவரும், நாதாந்தத்தில் விளங்குபவரும், ஒன்பது விதமான நடனத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

यस्मिन्नामूलपीठावधिकनकशिलामातृकावर्णक्लृप्ते
ब्रह्मश्रीनाथरुद्रेश्वर शरमुखभाक्साम्बसादाख्यमूर्ध्नि।
भूतैश्शास्त्रैश्च वेदैः स्तुतबहुचरितं स्तम्भरूपैश्च कुड्ये
नृत्यन्तं चित्सभेशं निरवधिसुखदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३

(இது முதல் 4 ச்லோகம் சபை வர்ணனை.)

3. யாதொரு ஸபையின் கீழ் முதல் மேல் வரையில் உள்ள கற்கள் மாத்ருகாக்ஷர மயங்களோ, அவ்விதமான ஸபையில் பீடரூபர்களான பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேச்வரன் ஐந்துமுகமும், மனோன்மணி என்னும் சக்தியோடும் கூடின ஸதாசிவன், இவர்களுக்குமேல் விளங்குகிற சுவற்றில் (அதாவது ரஹஸ்ய மென்று சொல்லுகிற இடத்தில்) நர்த்தனம் செய்கிறவரும், ஸ்தம்ப உருவங்கொண்டதுகளான, 5 பூதங்கள், 6 சாஸ்திரங்கள், 4 வேதங்கள், இவைகளால் துதிக்கப்பட்ட அனேகவிதங்களான சரித்திரங்களை உடையவரும், சித்ஸபைக்கு ஈசனும், (ஸ்ரீநடராஜர் இருக்கும் ஸபை சித்ஸபை) அதிக சுகத்தை கொடுக்கக் கூடியவருமான குஞ்சிதாங்கிரிம்.

यत्संसत्पूर्वभागे दिशिदिशि विलसत्पूर्वभागानितान्तं
स्वान्तगूडोत्तरांशादिशवमुख भवनाश्चागमाः कामिकाद्याः।
अष्टाविंशानुसंख्याधृतकनकमयस्तम्भरूपास्तुवन्ति
स्तुत्यं तं नृत्तमूर्तिं श्रुतिशतविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४

4. எந்த ஸபையின் நான்கு பாகங்களிலும் பரமசிவத்தின் முகத்தினின்றும் வெளிவந்ததுகளான காமிகம் முதலான 28 ஆகமங்கள், தங்கமயமான ஸ்தம்ப ரூபத்தை வகித்துக் கொண்டு, எந்த நடராஜரை ஸ்தோத்திரம் செய்கிறதுகளோ அவ்விதமான குஞ்சிதாங்கிரிம்.

यद्गोपुर्यां द्वारबाह्ये रजतगिरिनिभं पञ्चवर्णस्वरूपं
सोपानं द्वारभागं जयविजयमुखै रक्षितं द्वारपालैः।
तत्वानां षण्णवत्या सह विधिमुखराः पञ्चदेवाश्च नित्यम्
यस्यान्तर्भान्ति तस्मिन्नचिरतनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ५

5. எந்த ஸபையின் தென்புறத்தின் வெளியில் கயிலையங் கிரிக்கு ஒப்பான பஞ்சாக்ஷரப் படியும், ஜயன், விஜயன் முதலிய துவாரபாலகர்களால் ரக்ஷிக்கப்பட்ட தெற்கு வாசல் படியும், 96 தத்துவங்களோடுகூட பிர்மா முதலிய ஐந்து தேவர்களும் ஸேவிக்கிறார்களோ அவ்விதமுள்ள ஸபையின் நடுவில் நடனம் செய்யும் குஞ்சிதாங்கிரிம்.

यत्स्तूप्यश्शक्तिरूपाः तदधरविलसद्रोमरूपाश्च कीला
उछ्वासाः स्वर्णपट्टाः तदुरनिहितादण्डरूपाश्च नाड्यः।
नाड्यन्तस्सर्वलोकाः फलकतनुगताहस्तरूपाः कलाश्च
तस्यां यो नृत्यतीशः तमनुपमतनुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ६

6. எந்த ஸபையினுடைய ஸ்தூபிகள் ஒன்பதும், ஒன்பது சக்தி ஸ்வரூபங்களோ, அதில் அடிக்கப்பட்ட ஆணிகள் ரோம ரூபங்களோ, அதில் உள்ள தங்கமயமான ஓடுகள் இருபத்தி ஓராயிரத்து அறுநூறு உச்வாச, நிச்வாசங்களோ, அதன் கீழ் உள்ள சட்டங்கள் எழுபத்தீராயிரம் நாடிஸ்வரூபங்களோ, அதன்கீழ் உள்ள பலகைகள் இருநூற்றுபதினாறு புவனங்களோ, அதன்கீழ் உள்ள சாத்து மரங்கள் அறுபத்துநான்கு கலாரூபங் களோ, அவ்விதமான ஸபையில் எவர் நடனம் செய்கிறாரோ அந்த குஞ்சிதாங்கிரிம்.

विघ्नेशस्कन्दलक्ष्मी विधिमुखशरराट्पादुकावज्रलिङ्ग
ज्योतिनृत्तस्वरूपै वरुणमुखजुषा हाटकाकर्षमूर्त्या।
स्वाग्रे दक्षेच वामे परिवृत सदसि श्रीशिवानायको यो
मध्ये नृत्तं करोति प्रभुवरमनघं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ७

7. இதில் உள்ளே பூஜிக்கப்படுகிற தேவர்களை விளக்குகிறார்.

கணபதி, சுப்ரமண்யர், லக்ஷ்மி, பிர்ம்மாவின் ஐந்தாவது தலை, (முகலிங்கம்) அஸ்தரதேவர், பாதுகை, (திருவடி) சந்திரமௌளீச்வரர், இரத்தின சபாபதி, ஸ்வர்ணாகர்ஷணபைரவர் இவர்களாலும், நிர்த்த ஸேவர்களான அன்ய தேவர்களினாலும் சூழப்பட்டுள்ள ஸபையின் நடுவே எந்த பிரபுவானவர் நடனம் செய்கிறாரோ அந்த குஞ்சிதாங்கிரிம்.

आदौ मासे मृगाख्ये सुरगुरुदिवसे तस्य भे पूर्णिमायां
भित्तौ श्रीचित्सभायां मुनिवरतपसा दत्तवाक्पूर्तये यः ।
नृत्तं कृत्वावसाने फणधरवपुषं व्याघ्रपादं महर्षिं
बाहुयाभ्यां अदात् यो नियतनिवसतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८

8. யாதொரு பரமேச்வரர் தைமாதம் குரு புஷ்யம் கூடிய பௌர்ணமையில் பதஞ்சலி, வியாக்ரபாதர்களுக்கு கொடுத்த வரத்தை பூர்த்தி செய்ய வேண்டியதற்காகச் சித்சபையில் உள்ள சுவற்றில் நடன ஸ்வரூபத்தை காண்பித்து அதன் முடிவில் அவ்விருவர்களின் இஷ்டப்படி தனது முன்பாக இருக்குப்படி அனுக்கிரகம் செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यस्मिन्नृत्यत्यनादौ निकटतटगतौ भानुकम्पाख्यबाणौ
शङ्खध्वानैः मृदङ्गध्वनिभिरपि महाम्भोधि घोषं जयन्तौ ।
यस्योङ्कारप्रभायां ध्वनिमनुसहितारश्मयश्चैकविंशा
विद्यन्ते तं सभेशं नतसुरनिकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९

9. எந்த ஆதி அந்தமில்லாத ஈச்வரனானவர் நடனம் செய்யும்பொழுது, பானுகம்பன், பாணன் என்கிற இவர்கள் சங்கத்வனியினாலேயும், மிருதங்கத்வனியினாலேயும் சமுத்திரத்தின் சப்தத்தை அடக்கினார்களோ, எந்த ஈச்வரனுடைய பிரபையில் (திருவாசியில்) த்வனி மந்திர எழுத்துக்களால் அமைக்கப்பட்ட இருபத்தோரு ஜ்வாலைகள் விளங்குகிறதுகளோ (த்வனி மந்திரம் என்பது சிதம்பர மந்திரத்தில் ஒரு பேதம்) அப்படிப்பட்ட ஸபைக்கு ஈச்வரனும் வணங்குகின்ற தேவக்கூட்டங்களை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

पूर्वं माध्यन्दिनिर्यश्छिवजनिप्रवरं पूजयन्यत्प्रसादात्
लब्ध्वा व्याघ्राङ्घ्रिभावं तनयमपि शिवानुग्रहाद्दुग्धसिन्धुम्।
आनीयास्मै प्रदत्वासदसि च परम द्रष्टवान्यस्यनृत्तम्
तं देवं चित्सभेशं निगमनुतगुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०

10. முன்னொரு காலத்தில் மாத்தியந்தின என்று பெயருள்ள ஒரு முனிவர் (மத்யந்தின முனிவரின் புதல்வர்). எந்த ஈச்வரனை (ஸ்ரீமூலநாதரை) பூஜைசெய்து அவருடைய அனுக்கிரஹத்தினால் புலிக்கால் கைகளோடு கூடி இருப்பதையும் உபமன்யு என்னும் புத்திரனையும் அடைந்தும் புத்திரனுக்காக க்ஷீர ஸமுத்திரத்தை அழைப்பித்தும் சித்ஸபையில் எந்த ஈச்வரனின் நடனத்தை தரிசித்தாரோ அப்படிப்பட்ட வேதங்களினால் போற்றப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यन्नृत्तध्यानयोगद्विगुणिततनुभृत् श्रीशसंवाहभुग्न
स्वांगश्शेषः कदाचिद्धरिमुख कमलोत्तनयद्भृत्तमाध्वीम्।
पीत्वा तप्त्वातिघोरं रजतगिरिविलद्वारमार्गेण यस्य
क्षेत्रं प्राप्यान्व पश्यन्नटनमधिसभं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११

11. எந்த ஈச்வரனின் தாண்டவத்தை கருதின காரணத்தினால் இரட்டிப்பாக செய்யப்பட்ட சரீர பாரத்தை உடைய விஷ்ணுவை வகித்ததினால் சிரமத்தை அடைந்த ஆதிசேஷன் (பதஞ்ஜலி) ஓர் சமயம் அவ்விஷ்ணுவினால் சொல்லப்பட்ட நடனத்தின விர்தாந்தமாகிற மதுவை பானம் செய்து அதைப் பார்க்க விரும்பி வெகு காலம் வெகு கோரமான தபஸ அனுஷ்டானம் செய்து சிவபெருமானின் உத்திரவின் பேரில் கைலாஸத்தில் உள்ள பிலத்துவாரத்தின் வழியாக சிதப்பர க்ஷேத்திரத்தை அடைந்து எந்த சிவபெருமானின் நடனத்தை தரிசனம் செய்தாரோ. அந்த குஞ்சிதாங்கிரிம்.

आदौ यः कर्मकाण्ड प्रवचनमहिमा जैमिनिनाम योगी
व्यासोक्त्या चित्सभेशं प्रभुवरमुपासाऽऽनस्यगत्वा सभान्तः।
पादान्ते वेदयुक्तं स्तवचरमकरोत्सव सौभाग्यदं यम्
पश्यन्नद्यापि देवं सदसि वसति त कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२

12. முன் ஒரு காலத்தில் கர்மகாண்டத்தை பிரவசனம் செய்துகொண்டிருக்கும் ஜைமினி என்கிற முனிவர் தனது குருவான வியாஸரின் வாக்கியத்தினால் ஞானத்தை அடைய வேண்டி, சிதம்பர ஸ்தலத்தை அடைந்து, பிரபுவான நடராஜரை நமஸ்கரித்து, ஸபையின் உள் புகுந்து சிவபெருமானின் நடனத்தை, தரிசித்து வேதபாதஸ்தவம் என்னும் ஸ்துதியினால் ஸ்துதித்து எப்பொழுதும் ஸ்வாமியை தரிசித்துக்கொண்டே வஸிக்கிறாரோ, அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

गौडेशस्सिंहवर्मा स्वतनुगतरुजा व्याकुलस्स्वीय देशात्
आगत्य स्वर्णरम्भाकरवरसलिलस्नान निर्मुक्तरोगः।
भूत्वा श्रीहेमवर्मा मुनिवरसहितश्शम्भुनृत्तं च दृष्ट्वा
यत्प्रासादं विचित्रं मणिमयमकरोत् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३

13. கௌடதேசத்திற்கு அரசனான ஸிம்மவர்மன் என்பவன், தனது சரீரத்திலுள்ள ரோகத்தினால் மனவருத்தம் உள்ளவனாய் இருந்துகொண்டு தனது தேசத்தை விட்டு, ஏதோ பூர்வ புண்யவசத்தால், சிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்து, சிவகங்கையில் ஸ்நானம் செய்த உடனே ரோகத்தில் இருந்து விடுபட்டவனாய் ஏமவர்மா என்னும் பெயர் தாங்கி, வியாக்கிரபாதர் முதலிய முனிவர்களுடன் கூட சம்புவின் நடனத்தையும் தரிசித்து எந்த நடராஜர் ஆலயத்தை, விசித்திரமாக திருப்பணிகள் செய்தானோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

आम्नायेष्वप्यनन्तेष्वनितरसुलभान्भिन्नसंस्थान्विधी
नप्याहृत्य श्रीफणीन्द्रो नटयजन महप्रोक्षणार्थञ्च सूत्रम्।
कृत्वादौ दत्तवान् यत्तदुदित विधिनायं सदाऽऽराधयन्ति
त्रैसाहस्रं द्विजेन्द्राः तमपिनटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४

14. பதஞ்சலி பகவானானவர், வேதசாகைகளில் இதரர்களால் அறியமுடியாமல் இருக்கும்படி, ஆங்காங்கு ஓதப்பட்டு உள்ள, விதிகளை திரட்டி, நடராஜமூர்த்தியின் நித்தியபூஜை, மஹோத்ஸவம், ஸம்ப்ரோக்ஷணம் முதலியவைகளுக்கு, சூத்திர ரூபமான ஓர் கிரந்தத்தை, இயற்றி, திரிஸஹஸ்ரமுனீச்வர்கள்

என்கிற தீக்ஷிதர்களிடம் கொடுத்தார், அத்தீக்ஷிதர்கள், அம் முறைவழுவாமல், எந்த நடராஜமூர்த்தியை வமசபாரம்பர்யமாக பூஜைசெய்துகொண்டு வருகிறார்களோ, அந்த குஞ்சிதங்கிரிம்.

नित्यं षट्कालपूजां नटनपतिमुदे कुर्वतां भूसुराणाम्
तत्भक्तानां द्विजादि प्रमुखतनुभृतां सौख्यदाताभ्रकुंतः।
स्वस्थाने लिङ्गमेकं स्फटिकमणिमयं मज्जनादीनि कर्तुम्
यज्वभ्यो दत्तवान्यस्तमतिसुखकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५

15. ஸகல பக்தர்களுக்கும் சவுக்கியத்தை செய்கிறவரான, நடராஜமூர்த்தியானவர், ஆறுகாலங்களிலேயும், தன்னை பூஜை செய்யவேண்டிய நிமித்தம் தீக்ஷிதர்களிடம் ஸ்படிகமணிமய மான ஓர் லிங்கத்தை (சந்திரமௌளிச்வரர்) ஸ்ருஷ்டித்து கொடுத்தாரோ அந்த குஞ்சிதாங்கிரிம்.

अन्तर्वेद्यां महत्यां शतधृतिरकरो दब्दसाहस्र साध्यं
यज्ञं तस्मिन्मुनीन्द्रास्सदसि समभवन्व्याघ्रपादोक्तिभिर्ये।
तत्पूजार्थं शिखीन्द्र प्रभवमणिनटः प्रेषितोयेनमोदात्
तन्मूर्तेर्मूलभूतं नवमणिमकुटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६

16. ஒரு ஸமயம, பிர்மாவானவர், அந்தர்வேதி என்னும், பெரிய க்ஷேத்திரத்தில், ஆயிரம் வருஷங்களால் ஸாதிக்க தகுந்த, ஓர் யாகத்தை நடத்தினர். அக்காலம், வியாக்கிரபாதருடைய வாக்கியத்தினால், தீக்ஷிதர்கள், அங்கு ஸதஸ்யர்களாக, வரிக்கப் பட்டார்கள். அக்காலம் பூஜை செய்யவேண்டிய நிமித்தம், அங்குள்ள, ஆஹவகநீயகுண்டத்திலிருந்து, எந்த பரபசிவத்தின் அருளால் இரத்தின ஸபாபதி என்கிற ஓர் திருவுருவமானது, உண்டுபண்ணி, அவர்களிடம் கொடுக்கப்பட்டதோ, அந்த மூர்த்திக்கு மூலமாயும் ஒன்பது இரத்தினங்களால் இழைக்கப் பட்ட மகுடத்தை உடையவருமான குஞ்சிதாம்கிரிம்).

नित्यं पुण्याहमादौ गुरुवरनमनं शोषणादि त्रयं च
भौतिं शुद्धि कराङ्ग प्रणवखुर मुखन्य.स जातं च कृत्वा।
जप्त्वा मन्त्रान् समस्तान् शिवमयतनवश्चान्तराराध्ययंप्राक्
विप्राव.ह्ये यजन्ति प्रभुवरमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७

17. (இது முதல் ஐந்து ச்லோகங்களில் பூஜை விதானத்தை விளக்குகிறார்).

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு காலந்தோறும் முதல் புண்யாகவாஜனம் என்ன? குருச்ரேஷ்டர்களின் அபிவாதனம் என்ன? பூதசுத்தி என்ன? கான்யாஸம், அங்கன்யாஸம், பிரணவன்யாஸம், தேவதான்யாஸம். இதுகளை 'ஆதியாக உடைய ஸகல ந்யாஸங்களையும் செய்து பிறகு மூலமந்திரங்களை ஜபித்து சிவமயமான சரீரத்தை பாவித்து ஹிருதயத்தில், நடராஜரை பூஜைசெய்து, பிறகு, பாஹ்ய பூஜையை பாஹ்யத்தில், எந்த பரமேச்வரனை (தீக்ஷிதர்கள்) பூஜை செய்கிறார்களோ பிரபுச்ரேஷ்டரான அந்த குஞ்சிதாங்கிரிம்.

स्थानादि प्रोक्ष्यपाद्याचमनमपि सुमैरर्चयित्वाथशंखम्
गव्यार्चा कुम्भपूजां जलयजन वृषाभ्यर्चनेद्वारपूजाम्।
कृत्वा विघ्नादिपूजां स्फटिकजनिमरलेशयोर्मज्जनाद्यै
र्यन्मूर्तिं पूजयन्ति प्रतिदिनमनघाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८

18. ஸ்தானங்களை ப்ரோக்ஷணைப் செய்து பாத்தியம், ஆசமனம், சங்கம், பஞ்சகவ்யப், ஸ்னபனம், இவைகளை அர்சித்து, விருஷபத்தையும், த்வாரத்தில் உள்ள தேவர்களையும், ஸபையின் உள்புறமுள்ள விக்னேச்வரர் முதலிய தேவர்களையும் அர்சித்து பிறகு ஸ்படிகலிங்கத்தையும், இரத்தினஸபாபதியையும், எந்த நடராஜமூர்த்தியை பாவனை செய்து அபிஷேகம் முதலியவைகளால் ஒவ்வொரு நாளும், பரிசுத்தர்களான தீக்ஷிதர்கள் பூஜை செய்கிறார்களோ, அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

गव्यैस्तैलैः पयोभिर्दधिघृत मधुभिश्शर्करामिश्र शुद्धैः
पञ्चात्पञ्चामृताद्यैः लिकुचफलरसैः कर्पाथोभिरन्नैः।
गन्धैः गङ्गाद्भिरन्यै रनुदिनमनघायस्यलिङ्गं मुनीन्द्राः
पट्कालं पूजयन्ति प्रभुमपितमजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९

19. பஞ்சகவ்யம், எண்ணை, பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, பஞ்சாமிருதம், எலுமிச்சம்பழம் முதலிய பல ரஸங்கள், இளநீர், அன்னம், சந்தனம், கங்காஜலம் முதலியவை

களால், ஒவ்வொருநாளும், பரிசுத்தர்களான தீக்ஷிதர்கள் ஆறு காலங்களிலேயும் யாதொரு பரமேச்வர ஸ்வரூபமான, சந்திர மௌளீச்வர லிங்கத்தை பூஜை செய்கிறார்களோ, அப்படிப் பட்ட பிரபுவாயும், உற்பத்தி இல்லாதவராயும் உள்ள குஞ்சிதாங்கிரிம்.

भित्तौ श्रीचक्रसंस्थां तदनुनटपतिं शैवचक्रान्तरस्थं
तद्वामे युग्महस्तामपि च शुककरां ज्ञानशक्तिश्च यष्ट्वा।
गोव्रह्मादीनथेष्ट्वा सकलविधचरूनर्पयित्वा बलींस्तान्
होमं कृत्वा यजन्ति प्रतिदिनमपि यं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०

20. சிற்ஸபையில் ரகஸ்ய சுவற்றில் உள்ள ஸ்ரீசக்ரத்தில், விளங்குகிறவளான, அம்பிகையையும் பிறகு, அதை வியாபித்து பிரகாசிக்கிற, சிதம்பர சக்கிரத்தின் மத்தியில் உள்ள நடராஜரை யும், அதன் வாம பாகத்தில் உள்ள, இரண்டு கைகளோடு கூடிய, அம்பிகையையும் பூஜை செய்து, விருஷபம் முதலான, திருத்த ஸேவகர்களை, அர்ச்சித்து, ஸகலவிதமான, நிவேதனங்களை யும் செய்து பிறகு, வெளி பிராகாரத்தில். இந்திரன் முதலிய தேவர்களுக்கு பலிப்பிரதானம் செய்து யாகசாலையின், நித்திய ஹோமம் செய்து எந்த பரமேச்வரனை, ஒவ்வொருநாளும் தீக்ஷிதர் கள் பூஜை செய்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

धूपैर्दीपैरथाख्यैः फणिपुरुषवृषैः कुम्भपञ्चाग्निहोत्रैः
ऋक्षैः कर्पूरभस्मव्यजनवरसितच्छत्रकैश्चामरैश्च।
आदर्शैः मन्त्रपुष्पैरुपरितलसुकर्पूरकैः प्राच्य यन्द्राक्
त्यक्त्वाऽविद्यां प्रपश्यन्त्यनुदिनमनघाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१

21. தூபம் தீபம், ரததீபம், (அடுக்கு தீபம்) நாக தீபம், புருஷமிருக தீபம், விருஷப தீபம், இரண்யபாத்திர தீபம், பஞ்சபிரம தீபம், அக்கினிஹோத்திர தீபம், நக்ஷத்ர தீபம், கர்பூர தீபம், பஸ்ம, விசிறி, குடை, சாமரம், கண்ணாடி, மந்திரபுஷ்பம், மேல் கர்பூர தீபம் இவைகளால், எந்த நடராஜருக்கு உபசாரம் செய்து பிறகு, அவித்யாரூபமான, திரஸ்கரிணியை (திரை) விலக்கி யாதொரு நடராஜரை, ரகஸ்ய ஸ்தானத்தில், பிரதிதினம்

தீக்ஷிதர்கள், தரிசனம் செய்கிறார்களோ, பக்தர்களுக்கும், செய்விக்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यद्गेह प्रान्तवाह्ये दशवृषसहितान्यब्जपीठानि नित्यं
शक्रादीनां त्रिकालेष्वपि बलिहरणे पीठमुत्तुङ्गमन्यत्।
यद्गेहे दिक्षु चाग्रे नवशिखरि समाभान्तिदण्डाध्वजानां
तद्गेहान्तस्सभायां अनवरतनटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२

22. யாதொரு சித்ஸபைக்கு வெளியில் நான்கு பக்கங்களிலும் 10 விருஷபங்களோடு கூடின பலிபீடங்கள், பிரதிதினம் மூன்று காலங்களிலேயும், இந்திரன் முதலான திக்தேவர்களுக்கு பலிப்பிரதானம் செய்வதற்காக, பிரகாசிக்கின்றதுகளோ, அவ்விதமே, பர்வதங்களுக்கு ஒப்பான ஒன்பது துவஜஸ்தம்பங்கள் பிரகாசிக்கின்றதுகளோ, அப்படிப்பட்ட ஸபையில், எப்பொழுதும் நடனம் செய்கின்றவரான, குஞ்சிதாங்கிரிம்.

प्रत्यब्दं ज्येष्ठमासे नववृषसहिताः केतवो भान्तिमाघे
मासे पञ्चध्वजास्स्युः मृगशिरसि तथा केतुरेकः प्रधानः।
यस्य ब्रह्मोत्सवानां नवशरशिखिन श्चैकवह्निः प्रधानः
तं देवं चित्सभेशं नवनिधिनिलयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २३

23. எந்த நடராஜமூர்த்திக்கு பிரதி வருஷம் செய்கிற ஆனி, மாசி, மார்கழி இந்த மாதங்களில் உள்ள மஹோத்ஸவங்களில் ஒன்பது, ஐந்து ஒன்று துவஜாரோகணங்களும் அவ்விதமே அக்கினிகளில் ஹோமங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றனவோ அப்படிப்பட்ட, சித்ஸபைக்கு பதியாயும், பிரஸன்னராயும், நவநிதிக்கும் ஆஸ்தான பூதராயும் இருக்கிற குஞ்சிதாங்கிரிம்.

यस्याद्ये सप्तविंशत्यमलदिनमहे ऋत्विगग्र्यानवस्युः
माघे पञ्चर्त्विगग्र्यामृगशिरसि शिवर्क्षोत्सवे चैक एव।
नित्यार्चास्वेकएको यजनकृतइमे यज्ववर्येषु शुद्धाः
तं देव चित्सभेशं निरुपमिततनुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २४

24. எந்த நடராஜமூர்த்தியின் மஹோத்ஸவங்களில் ஆனி, மாசி, மார்கழி மூன்று மாதங்களில் இருபத்தேழு, பதினெட்டு, ஒன்பது தினங்களும் அவ்விதமே ஒன்பது, ஐந்து ஒன்று ஆசார்யர்களும் நித்திய பூஜையில் ஒவ்வொருவராகவும் வகுக்கப் பட்டிருக்கின்றார்களோ, அப்படிப்பட்ட உபமானம் இல்லாத ஸ்வரூபத்தை உள்ள குஞ்சிதாங்கிரிம் பஜேஹம்.

आदौ कृत्वाग्निहोत्रं वपनपवनमन्त्राचमानानि पश्चात्
कूश्माण्डैर्देहशुद्धि पदयजनमुखं वास्तुपर्यग्निकर्म।
नान्दीमृत्स्वंकुराणि प्रतिसरमृषभ प्रोक्षणं यन्महेष्व
प्यारादारोहयन्ति ध्वजपटमनघाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५

25. எந்த நடராஜமூர்த்தியின் உத்ஸவங்களிலே முதலில் அக்னிஹோத்திரத்தை அனுஷ்டித்து வபனம், பவனமந்திராசமனம், கூச்மாண்டஹோமம், வாஸ்துசாந்தி; நாந்தி, மிருத் ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், விருஷப ப்ரோக்ஷணம் இவைகளை அனுஷ்டித்து, பிறகு துவஜாரோஹணத்தை பரிசுத்தர்களான தீக்ஷிதர்கள் நடத்துகிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

मंचे चन्द्रार्कभूतेष्वपिवृषगजराड्राजताद्रिष्वथाश्वे
सोमास्कन्दस्वरूपस्स्वप्रमुहनयनेगोरथेमागणो यः।
स्थित्वा ब्रह्मोत्सवेषु त्रिषु च नटपतिः प्रत्यहं वीथियात्रां
कृत्वा स्नात्वा सदस्स्वं प्रविशतिशिवया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६

26. அவ்விதம் அந்த பிரமோத்ஸவங்களில் எந்த நடராஜ மூர்த்தியானவர் ஸோமாஸ்கந்த ஸ்வரூபராக இருந்துகொண்டு மஞ்சம், சந்திரன், சூரியன், பூதம், விருஷபம், ஆனை, கைலாஸ பர்வதம், குதிரை இவ்விதமான வாஹனங்களிலும், தானே பெரியதேரிலும், சித்திர ரதத்தில் பிக்ஷாடனரூபியாகவும் இருந்து பிரதிவருஷம் உள்ள மூன்று உத்ஸவங்களிலும், ஒவ்வொரு நாளும் வீதியாத்திரை செய்து, சிவகங்கையில் தீர்த்த மாடியும் (ஆயிரக்கால் மண்டபத்தில் அபிஷேகம் முதலியவைகளை நடத்திக்கொண்டும்,) அம்பிகையோடுகூட தனது சித்ஸபையை அடைகிறாரோ அந்த குஞ்சிதாங்கிரிம்.

क्रोडेनश्रीशनाम्ना चरणसरसिजं यस्यशम्भोर्नदृष्टं
हंसेन ब्रह्मनाम्ना नमकुटशिखरं यस्यदृष्टं किलासीत्।
ओंकारे नित्यवासं त्रिदलसुमवरैरर्च्यमानाङ्घ्रियुग्मं
हंसं हंसरूपास्यं हरिहरवपुषं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७

27. எவருடைய கால்கள் இரண்டும் ஆதிவராகமூர்த்தியினாலே காணப்படவில்லையோ எந்த ஈச்வரனுடைய மகுடாக்ரமானது ஹம்ஸரூபியான பிர்மாவினாலே காணப்படாததாக ஆனதோ ஓங்காரத்தில் வசிப்பவராயும், பில்வம், புஷ்பம் முதலியவைகளினாலே பூஜிக்கப்படுகிற இரண்டு பாதங்களை உடையவராயும், பரமாத்ம ஸ்வரூபராயும், ஸந்யாஸிகளால் உபாஸிக்கப்படுபவரும், சங்கரநாராயணமூர்த்தியாயுமுள்ள குஞ்சிதாங்கிரிம்.

पूर्वं ज्ञानोपदेशं मणिमयवचसे कुन्दवृक्षस्यमूले
कृत्वासादित्व माप्त्वानृपतिकरलसत्स्वर्णवेत्रप्रहारम्।
लब्ध्वा तेनोक्तगानैर्मधुरसभरितै स्तृप्तिमाप्त्वाथतस्मै
मुक्तिं प्रादाय ईशस्तमखिलसुहृदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २८

28. எந்த ஈச்வரானவர் முன்னொருகாலப் குந்த விருக்ஷத்தின் அடியில் இருந்துகொண்டு (ஆவுடையார்கோயில்) மணிவாசகருக்கு ஞானோபதேசத்தை செய்து அவரை அனுக்கிரஹிக்க வேண்டி குதிரைப்பாகனின் உருவத்தை எடுத்துக் கொண்டும் பிறகு பிட்டுக்கு மண் சுமந்த காலத்தில் பாண்டியனுடைய கையில் உள்ள தங்கமயமான பிரம்பின் அடியையும் அடைந்தும் அந்த மணிவாசகரினாலே சொல்லப்பட்ட ரொம்பவும் இனிமையான (திருவாசகம், திருக்கோவையார்) கானங்களினாலே திருப்தியை அடைந்து பிறகு மணிவாசகருக்கு முக்தியை அருளிச்செய்தாரோ அப்படிப்பட்ட ஸமஸ்தர்களுக்கும் ஸுஹ்ருத்தான குஞ்சிதாங்கிரிம்.

देवो यः पुल्कसायद्विजकुलजनुषे वल्कलस्यात्मजाय
नन्दाभिख्यायमुक्तिं कणतृणसुधये दत्तवान्भक्तिवश्यः।
नित्यत्वं व्याघ्रपादप्रथितफणिपतिस्तोत्रकृज्जैमिनिभ्यः
तांस्तान्कामांश्चसर्वान्तमजरममरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९.

29. எந்த பரமேச்வரரானவர் பிராம்மணனை புல்கஸன் பொருட்டும் வால்கலி என்பவனுக்கும் நந்தன் என்கிற திருநாளைப்போவார் நாயனருக்கும் கணம்புல்லநாயனருக்கும் முக்தியைக்கொடுத்தாரோ அவ்விதமே பக்தியினலே வச்யராய் இருந்துகொண்டு வியாக்ரபாதர் என்ன, பிரஸித்தரான பதஞ்சலி என்ன, வேதபாதஸ்தவம் செய்த ஜைமினி என்ன இவர்களின் பொருட்டு நித்தியமாய் இருக்குகையையும், மற்ற இஷ்டங்களையும் அருளினரோ அப்படிப்பட்ட ஜரையில்லாதவரும், மரணமில்லாதவருமான குஞ்சிதாங்கிரிம்.

आहृत्यब्रह्मशीर्षं सकलजनिमतां दर्शनाय स्वदक्षे
पार्श्वे संस्थाप्य पूर्वं श्रुतिवदनविधिं वामतोऽस्थापयद्यः।
अद्यारभ्यात्मयोने मदुपहृतहविश्शेषभुक्त्वं भवेति
स्वाज्ञाप्याकाशरूपस्तमपि नटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०

30. எந்த பரமேச்வரரானவர் முன் ஒருகால் ஐந்து தலை இருந்த காரணம்பற்றி அகங்கொண்ட பிர்மதேவரின் ஐந்தாவது தலையை கொய்து ஸகல ஜனங்களும் அறியவேண்டி அத்தலையை வலதுபக்கத்தில் (முகலிங்கம்) வைத்தும் மறுபடி ஆலயம் இல்லாததினல் வருந்தி தன்னைத்தொழும் நான்கு முகமுள்ள பிர்மதேவரை ஓ பிர்மதேவரே இதுமுதல் எனது நிர்மால்ய ஹவிஸ்ஸை புசிக்கக்கடவாய் என்று கட்டளை இட்டு, தனது வாமபாகத்தில் (கீழ்புறம்) ஆலயத்தோடு இருக்கச்செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

पार्थायस्वास्त्रदाने पशुपतिरकरोद्यः पुरा राजताद्रौ
युद्धं तेनैव कृत्वा वनचरतनुभाग्भिन्नशीर्षस्तथासीत्।
भीमस्वान्तार्चनाढ्यैः स्त्रिदलसुमवरैश्छन्नगात्रो नितान्तं
जातस्तं चित्सभेशं निखिलतनुगतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३१

31. யாதொரு பசுபதியானவர் வேடஉருவம் தாங்கி கைலாஸமலையின் சாரலில் தபஸ்வியான அர்ஜுனனேடு யுத்தம் செய்து அவனுடைய காண்டீபம் என்னும் வில்லின் அடியால் பேதிக்கப்பட்ட தலையை உடையவராகஆனரோ அந்த

பார்த்தனின் பொருட்டு தனது பாசுபதாஸ்திரத்தையும் கொடுத்தாரோ, பீமஸேனனுடைய மானஸ பூஜையில் அர்ப்பணம் செய்யப்பட்ட பில்வ புஷ்பங்களினலே மறைக்கப் பட்ட சரீரத்தை உடையவராக ஆனரோ அப்படிப்பட்ட ஸகல சரீரங்களிலும் வியாபித்திருக்கிற குஞ்சிதாங்கிரிம்.

आसीन्मेरुश्शरासो धरणिरपि रथो ज्याऽभवत्सर्पराजो
यास्तां चक्रे ऽर्कसोमौ सरसिजनिलयस्सारथिः यस्य शम्भोः।
आसन्नाश्वाश्च वेदा जलनिधिशरधेस्त्रैपुरं हन्तुमिच्छोः
हेतुं तं लोकसृष्टिस्थितिलयकरणे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३२

32. திரிபுர ஸம்ஹாரம் செய்ய விருப்பமுள்ள வரும் ஸமுத்திரத்தை அம்புறாத்தூணியாக உள்ளவருமான யாதொரு சம்புவுக்கு மேரு வில்லாகவும், பூமி ரதமாகவும், ஆதிசேஷன் வில்லின் நாணாகவும், சூரியன், சந்திரன் இவ்விருவர்கள் தேரின் இரண்டு சக்கரங்களாகவும், பிர்மா தேர்ப்பாகனாகவும், வேதங்கள் குதிரைகளாகவும் ஆனதுகளோ அப்படிப்பட்ட லோகங்களின் படைத்தல், காத்தல், அழித்தல் இவைகளுக்கு காரணபூதரான குஞ்சிதாங்கிரிம்.

क्षीराब्धेर्मन्दराद्रिप्रमथनसमये ऽभ्युत्थिते कालकूटे
गच्छत्सु प्राप्यभीतिं निखिलसुरकुलेष्वप्यनादिः पुरस्तात्।
आविर्भूय प्रभुर्यस्सकलसुरगणान् प्राश्यतं कालकूटं
सद्योऽरक्षत्तमीशं तुहिनगिरिनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३३

33. பால்கடலை மந்திர பர்வதத்தினல் கடைகிற ஸமயத்தில் காலகூடம் என்கிற விஷமானது உண்டாகி இருக்கும் தருணம் மிகவும் பயத்தை அடைந்த ஸகல தேவர்களும் நாலா பக்கங்களிலும் ஓடி இருக்கும்பொழுது ஆதிஇல்லாதவரான யாதொரு பிரபுவானவர் அத்தேவர்களுக்கு முன்பாக தோன்றி அக் காலகூடத்தை உண்டு உடன் ரக்ஷித்தாரோ, ஹிமாசலத்தினல் துதிக்கப்பட்ட அந்த குஞ்சிதாங்கிரிம்.

कृत्वा जम्बूफलाभं विषमखिलजगद्रक्षणे जागरूकं
स्वास्ये प्रक्षेपमात्रान्निजजठरवसत्प्राणिसौख्याय देवी।

कण्ठं संगृह्य हस्तात्प्रियमुखकमलं वीक्षमाणा किलासीत्
तां दृष्ट्वाऽन्वग्रहीद्यस्तमखिलवरदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३४

34. உலகங்களை விழுங்குகிற விஷயத்தில் முழித்துக் கொண்டிருக்கிற விஷத்தை நாகப்பழம்போல் செய்து தனது வாயில் போட்டுக்கொண்ட மாத்திரத்தில் தனது உதரத்தில் வஸிக்கிற ஸகலப்பிராணிகளுடைய ஸவுக்கியத்தின் பொருட்டு அம்பிகையானவள் கையினால் கண்டத்தை தொட்டு நாயகனை தனது கமலம் போன்ற முகத்தை பார்த்தாளோ அந்த தேவியை பார்த்து எந்த பரமேச்வரரானவர் அனுக்கிரஹம் செய்தாரோ அகிலவரத்தையும் கொடுக்கிறவரான அந்த குஞ்சிதாங்கிரிம்.

मार्कण्डेये पुरा श्रीरजतगिरिपतेर्लिङ्गपूजाप्रवृत्ते
पाशैः कर्षत्यथाकौ भयकरवदने लिङ्गमध्यान्महेशः।
आगत्यारक्षदेतं मुनिमथशमनं मारयामासदेवः
यस्तं नित्यं नटेशं निखिलनृपनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३५

35. முன்னொருகாலம் மார்க்கண்டேயர் என்கிற முனி குமாரன் கைலாஸநாதரின் லிங்கபூஜையை செய்யும் தருணம் பயங்கர முகம்உள்ள யமன் பாசங்களினால் அம்முனிகுமாரனை கட்டி இழுக்க அத்தருணம் யாதொரு மஹேச்வரன் லிங்க மத்தியில் இருந்து வெளிவந்து முனிகுமாரனை ரக்ஷித்தாரோ யமனையும் சங்கரித்தாரோ அப்படிப்பட்ட நித்யரும் அகில அரசர்களால் துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

सृष्ट्वा ब्रह्माणमादौ श्रुतिगणमखिलं दत्तवान्यो महेशः
तस्मै निर्माल्यभुक्त्वं स्वसदसि विलसत्पञ्चपीठाधरत्वम्।
सूतत्वं स्वस्यमूर्धस्थितमकुटवरप्रेक्षणेहंसभावं
तं देवं चित्सभायां स्थितजुषममलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३६

36. உலகம் தோன்றுவதற்கு முன் யாதொரு மஹேச்வரன் பிர்மாவை முதலில் உண்டுபண்ணி வேதபாகங்கள் எல்லாவற்றையும் அவரின் பொருட்டு உபதேசித்து அருளினாரோ பின்னும் பிர்மதேவரின் பொருட்டு தனது நிர்மால்யத்தை புசித்தலையும், தனது ஸபையில் விளங்குகிற ஐந்து பீடங்களில்

அடிப்பீடமாய் இருத்தலையும், தேர்ப்பாகனாய் இருத்தலையும், தனது மகுடத்தை தேடும் தருணம் அன்னபக்ஷி உருவத்தோடு இருத்தலையும் அருளினாரோ அப்படிப்பட்ட சித்ஸபையில் எப்பொழுதும விளங்குபவரும். ஆணவம் முதலிய மூன்று மலமற்ற வருமான குஞ்சிதாங்கிரிம்.

योमारः प्रेषितोऽभूत्स्वसविधमसुरोत्सारितैस्स्वर्गिभिः स्वं
योगारूढात्समाधेश्चलयितु मचले राजतेऽनन्यदृष्टम्।
तं मारं फालनेत्रज्वलनहृततनुं योऽकरो दक्षिणास्यः
सेवाहेवाकलक्ष्मीरतिमुखनिविडं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३७

37. முன்னொருகாலம் அம்பிகையைவிட்டு அகன்று கைலாச பர்வதத்தில் யோக ஸமாதியில் உள்ள தன்னை சலிக்கும்படி செய்வதற்காக அசுரர்களினாலே துரத்தப்பட்ட தேவர்களினால் யாதொரு மன்மதனானவன் தனது ஸமீபத்தில் அனுப்பப்பட்டானோ அந்த மன்மதனை யாதொரு தெற்கு நோக்கிய முகம் உள்ளவரான ஈச்வரன் தனது நெற்றிக் கண்ணில் உள்ள அக்னியினால் பொசுக்கப்பட்ட சரீரத்தை உள்ளவனாக செய்தாரோ அப்படிப்பட்டவரும் ஸேவைசெய்கிற காலத்தில் தீனமான சொற்கள் உள்ள விஷ்ணு முதலிய தேவர்களால் சூழப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

विष्णुर्ब्रह्मा रमेन्द्रो दहनपितृपतीराक्षसानामधीशः
पाशी वायुः कुबेरः ईशारुणमुखा देवताश्चन्द्रसूर्यौ ।
नित्य यत्क्षेत्रराजे पशुपति नटनं दृष्टवन्तः स्वनाम्ना
लिङ्गान् संस्थाप्य नत्वा सुखवरमभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३८

38. விஷ்ணு, பிர்மா, லக்ஷ்மீ, இந்திரன், அக்கினி, யமன் நிருரிதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், அருணன் இவர்களை ஆகியாக உள்ள இதர தேவர்கள், சந்திரன், சூரியன் இவர்கள் ஒவ்வொருநாளும் யாதொரு சிதம்பர க்ஷேத்திரத்தில் பசுபதியான நடராஜரின் நடனத்தை தரிசனம் பண்ணிக் கொண்டு தங்கள் பெயரினாலே சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து வணங்கி சுகங்களை அடைந்தார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सीताजानिः पुरस्ताद्विधिकुलजनुषं रावणं साङ्गमेको
हत्वा तद्दोषशान्त्यै नलमुखकपिभिः निर्मिते रामसेतौ।
लिङ्गं संस्थाप्य यस्यानवरतयजनात्प्राप्तवानिष्टसिद्धिं
तं शम्भुं वेदवेद्यं प्रणतभवहरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३९

39. ராமரானவர் முதலில் பிர்மவம்சத்தில் தோன்றின ராவணனை தான் ஒருவனாக இருந்துகொண்டு ஸம்ஹரித்து அதனால் உண்டான தோஷத்தைப் போக்கடிக்கவேண்டி நளன் முதலிய குரங்குகளால் நிர்மாணம் செய்யப்பட்ட ராமஸேது வில் யாதொரு பரமேச்வரனுடைய லிங்கத்தை ஸ்தாபித்து அதன் நித்திய பூஜையினால் இஷ்டஸித்தியை அடைந்தாரோ அப்படிப்பட்டவரும், சம்புவும், வேதங்களினால் அறியத் தகுந்த வரும் நமஸ்கரித்தவர்களின் பவபந்தத்தைபோக்கடிப்பவருமான குஞ்சிதாங்கிரிம்.

मोहिन्या शम्भुरादावति निविड वने दारुकाख्ये चरन्यः
सौन्दर्याद्विप्रदारान्मुनिगणमपि तं मायया मोहयित्वा।
व्यर्थी कृत्याभिचारं द्विजकुलविहितं संप्रदर्श्यात्मनृत्तं
विप्रांश्चान्वग्रहीद्यस्तमपिगिरिशयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४०

40. யாதொரு சம்புவானவர் விஷ்ணு மோஹினியோடு மிகவும் நெருங்கினதான தாருகாவனத்தில் ஸஞ்சரித்தும் அழகினாலே முனிபத்தினிகளையும், விஷ்ணு மோஹினி உருவத்தினாலே முனிவர் கூட்டத்தையும் மோகிக்கும்படி செய்து அம்முனிவர்களால் செய்யப்பட்ட ஆபிசாரகர்மாவை வியர்த்தமாகச்செய்து தனது நடனத்தை அவர்களுக்கு காண்பிவித்து அம்முனிவர்களுக்கு அனுக்கிரஹம் செய்தாரோ அப்படிப்பட்டவரும் பர்வதத்தில் வஸிப்பவருமான குஞ்சிதாங்கிரிம்.

पूर्वं वाल्कल्यभिख्यान्निहततनुवरो देवराड्विष्णुमाप्त्वा
चोक्त्वा स्वोदन्तमस्मै सहसुररिपुणा प्राप्ययत्क्षेत्रमीशम्।
आराध्याप्त्वा सुवीर्यं यदनघकृपया मारयामासशत्रुं
तं देवं चित्सभेशं वररुचिविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४१

41. முன்னொருகாலம் வாஸ்கலி என்கிற அஸுரனால் அடிக்கப்பட்ட சரீரத்தை உடைய இந்திரன், விஷ்ணுவை அடைந்து விர்த்தாந்தத்தை அவரிடம் தெரிவித்து அவ்விஷ்ணு வோடுகூட யாதொரு நடராஜரின் (சிதம்பரத்தை) க்ஷேத்திரத்தை அடைந்து அங்கு ஈசனை ஆராதித்து யாதொரு நடராஜரின் கிருபையினாலே பலததை அடைந்து அவ்வாஸ்கலி என்கிற சத்துருவைவிஷ்ணுவினால் ஸம்ஹரித்தானோ அப்படிப்பட்டவரும் வாருசி என்கிற முனிவரால் (வியாகரணத்திற்கு வார்த்திகம் செய்தவர்) துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

यद्‌क्षेऽद्यापि विष्णुर्मणिमयसदने दक्षिणेस्वाङ्घ्रियुग्मं
कृत्वास्यं चोत्तरस्यां शरमुखफणिराड्भोगतल्पेशयानः।
नित्यं निद्रां प्रकुर्वन्नपि हृदिसततं यत्पदं ध्यायतीड्यं
देव्या तं चित्सभेशं सुतगजवदनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४२

42. யாதொரு நடராஜமூர்த்திக்கு தென்புறத்தில் இப்பொழுதும் விஷ்ணுவானவர் மணிகளால் அலங்கரிக்கப் பட்ட ஆலயத்தில் தென்புறம் கால் இரண்டும், வடபுறம் தலை யும் வைத்து ஐந்தலை நாகப்படுக்கையில் சயனித்தும், எப்பொழுதும் நித்திரையை செய்கிறவராக இருந்தபொழுதிலும் தனது ஹிருதயத்தில் தேவியோடுகூட யாதொரு நடராஜ மூர்த்தியின் பாதத்தை தியானம் பண்ணுகிறாரோ அப்படிப்பட்ட வரும், விநாயகரை புத்திரராக உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:— தற்காலம் இதில் உள்ளபடிக்கு இல்லாமல் விஷ்ணுவின் தலை தெற்கும், கால் வடக்குமாகக்காணப் படுகிறது.

सम्बन्धस्सुन्दरः श्रीमणिमयवचनो जिह्विकाराजनामा
चत्वारोप्यात्मगानैर्विविधरसभरैस्स्तोत्ररूपैर्यमीशम्।
स्तुत्वातत्तत्स्थलान्तः स्थितिजुष मपि यं चक्रमद्वैतमूर्तिं
प्रापुर्मुक्तिं तमाद्यं कृतविधुमकुटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४३

43. ஸம்பந்தர், சுந்தரர், மணிவாசகர், அப்பர் இந்த நால்வரும் ரஸங்களோடுகூடினதாயும் ஸ்தோத்திரரூபங்களாயும்

உள்ள தங்களுடைய கானங்களினாலே அந்த அந்த ஸ்தலங்களில் விளங்குகிறவராக இருந்தபொழுதிலும் ஒன்றாயும், இரண்டாவது மூர்த்தி இல்லாதவராயும் உள்ள யாதொரு நடராஜரை ஸ்தோத்திரம் பண்ணி முக்தியை அடைந்தார்களோ அப்படிப்பட்டவரும், முதன்மை வாய்ந்தவரும், சந்திரனை மகுடத்தில் உள்ளவரும் ஆன குஞ்சிதாங்கிரிம்.

कैलासाद्रौ वटद्रोर्निकटमधिगतो दक्षिणामूर्तिरूपः
तर्जन्यङ्गुष्ठयोगात्सनकमुखमहायोगिनां ज्ञानदाता।
मौनेन श्रीकुमारं निटिलनयनतो दग्धदेहश्चकृत्वा
यश्चाप्त्वाद्रीन्द्रकन्यां सुतवरमसृजत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४४

44. எந்த பரமேச்வரானவர் கைலாஸ பர்வதத்தில் ஆலமரத்தின் அடியில் இருந்துகொண்டு மௌனமாய் தக்ஷிணமூர்த்திருபராய் சின்முத்திரையினால் ஸனகர் முதலான பெரிய யோகிகளுக்கு ஞானத்தை அளித்தும், நெற்றிக்கண்ணினால் மன்மதனை எரியும்படி செய்தும் பிறகு பர்வதராஜகுமாரியான பார்வதியை விவாஹம் செய்துகொண்டு புத்திரனை (சுப்பிரமணியரை) உண்டுபண்ணினாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

शूरादिध्वंसनार्थं सुतकरकमले दत्तवाञ्शक्तिमादौ
सर्वास्त्रश्चोपदिश्य प्रबलसुररिपून्कालसमीप्यभाजः।
कृत्वोद्वाह्येन्द्रकन्यां वनचरतनुजां गेहमायाहिताते
त्युक्त्वाचान्वग्रहीद्यो गुहमपिमुदितः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४५

45. எந்த பரமேச்வரானவர் சூரபத்மன் முதலான அஸுரர்களை ஸம்ஹரிக்க வேண்டி புத்திரனை சுப்பிரமணியருடைய தாமரைப்பூ போன்ற கையில் முதலில் சக்தி ஆயுதத்தை கொடுத்தாரோ பிறகு சர்வாஸ்திரங்களையும் உபதேசம் செய்து பலிஷ்டர்களான தேவசத்துருக்களை எமனுடைய சமீபத்தை அடைந்தவர்களாகச்செய்து இந்திரன், வேடன் இவர்களுடைய குமாரிகளான தேவஸேனா, வள்ளி இருவர்களையும் கல்யாணம் செய்துகொண்டு குழந்தாய் இவ்விடம் வா என்று சொல்லி

சுப்பிரமணியருக்கு ஸந்தோஷத்தோடு அனுக்கிரஹம் செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

काल्या साकं पुरा यस्सुरमुनिसदसि स्वाङ्घ्रिमुद्यम्य चोर्ध्वं
नृत्तं कृत्वाथ कालीं पशुपतिरजयत्तद्धिक्कारपूर्वम् ।
सर्वे देवा मुनीन्द्राः प्रभुरिति च वदन्त्यूर्ध्वनृत्तेशमूर्तिं
यं देवं पूजयन्ति प्रतिदिनमनघाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ४६

46. முன்னொரு காலம் பசுபதியான எந்த பரமேச்வரர் தேவர்கள் முனிவர்கள் (திருஸஹஸ்ர முனீச்வரர்கள்) இவர்களோடு கூடிய (மனோமயம் என்று கூறப்பட்டுள்ள மூன்றாவதாக சொல்லப்பட்ட நிருத்தன ஸபையில்) காளியோடு கூட ஒருகாலை உயரத்தூக்கி நடனம் செய்து அக்காளியை திரஸ்காரத்தோடுகூட ஜெயித்தாரோ எல்லா தேவர்களும் மஹரிஷிகளும் யாதொரு ஊர்த்துவதாண்டவமூர்த்தியான பரமேச்வரனை பிரபுவென்றும் சொல்லுகிறார்களோ ஒவ்வொரு நாளும் பரிசுத்தர்களான திருஸஹஸ்ரமுனீச்வரர்கள் பூஜை செய்கின்றார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம.

अन्तर्वेद्यां स्वयज्ञे दिविषदधिपतौ सामगानैस्तथेद्धैः
आहूतेऽनागतेऽस्मिन्यदमलनटनं दृष्टवन्तं सुरेन्द्रम् ।
सद्योबुध्वात्मभूस्तं स्वयमतितरसाऽऽनीय यस्यातिदेशात्
विप्रैस्साकं स्वयज्ञं सुरनुतमकरोत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ४७

47. முன்னொருகாலம் அந்தர்வேதியில் பிர்மாவானவர் தனதுயஞ்ஞத்தில் ஸாமகானத்தினாலே தேவேந்திரனை ஆஹ்வானம் செய்ய அந்தேவேந்திரன் வாராமல் இருக்கும்பொழுது தனது ஞானதிருஷ்டியால் சிதம்பரத்தில் பரமேச்வரனுடைய நடனத்தை பார்த்துக்கொண்டிருக்கிறான் என்று உடன் அறிந்து பிறகு தானே சிதம்பரம் வந்து நடராஜமூர்த்தியின் ஆக்ஞையால் திருஸஹஸ்ரமுனீச்வரர்களோடுகூட அந்தேவேந்திரனை தனது யாகசாலையை அடையும்படி செய்து தனது யாகத்தை தேவர்களால் கொண்டாடத்தக்கதாக செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यश्शम्भुः कालहन्ता जलधरमसुरं स्वाङ्घ्रि चक्रेण हत्वा
तद्दुष्कृत्यास्त्रशस्त्रैः विनिहतवपुषस्सर्वलोकानरक्षत्।
यं स्वक्रोधस्वरूपं जलधरमसुरं नाशयन्तं वरेण्यं
सर्वे लोका वदन्ति प्रमथपतिनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४८

48. யாதொரு காலனை ஸம்ஹாரம் செய்தவரான சம்பு வானவர் ஜலதரன் என்கிற அஸுரனை தனது காலால் உண்டு பண்ணப்பட்ட சக்கராயுதத்தினால் ஸம்ஹரித்து அந்த அஸுரனுடைய துஷ்டமான கிருத்தியங்களினாலேயும், அஸ்திர, சஸ்திரங்களினாலேயும் அடிக்கப்பட்ட சரீரங்களை உடைய ஸர்வ லோகங்களில் உள்ள பிராணிகளை, ரக்ஷித்தாரோ, எந்த பரமேச்வரனை தனது கோபஸ்வரூபியான ஜலதரன் என்கிற அஸுரனை நாசம் பண்ணினவர் என்றும், சிரேஷ்டர் என்றும் எல்லா பிராணிகளும் சொல்லுகிறதுகளோ, நந்திகேச்வரராலே துதிக்கப்பட்ட, அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कैलासाद्रौ कदाचित्पशुपतिनयनान्यद्रिजातापिधाय
क्रीडां चक्रेऽन्धकारात्सुररिपुरुदभूदन्धकाख्योऽतिदुष्टः।
तद् दुष्कृत्यं जगत्यां प्रसृमरमसहैस्सर्वलोकैस्स्तुतो यः
तं हत्वाऽरक्षदेतांस्तमजहरिनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ४९

49. ஒரு ஸமயம் கைலாஸ பர்வதத்தில் பார்வதியானவள் பரமேச்வரனுடைய நேத்திரங்களை கையினால் மறைத்து விளையாடினாள். அவ்வபயம் உலகம் எங்கும் இருண்டபடியால் அந்தகன் என்று பெயருள்ளவனும், ரொம்பவும் துஷ்டனும், தேவர்களுக்கு சத்துருவுமான ஓர் அஸுரன் உண்டானான் உலகத்தில் பரவுகிற அவனது துஷ்கிருத்தியத்தை ஸகிக்காதவர்களான எல்லாப் பிராணிகளினாலேயும் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட யாதொரு பரமேச்வரன் அவ்வஸுரனை ஸம்ஹரித்து உலகத்திலுள்ள பிராணிகளை ரக்ஷித்தாரோ அப்படிப்பட்டவரும் பிர்மவிஷ்ணுக்களால் துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

हालास्ये मीननेत्रापरिणयसमये दर्शनायागताभ्यां
सर्पेन्द्रव्याघ्रपद्भ्यां रजतसदसि यस्स्वाङ्घ्रिमुद्यम्य वामम्।

नृत्तं कृत्वा मुनीन्द्रावितरमुनिसुरांस्तोषपाथोधिमग्नान्
चक्रे तं सुन्दराङ्गं मधुरिपुविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ५०

50. மதுராபுரியில் மீனாக்ஷியின் கல்யாண ஸமயத்தில் பார்க்கவேண்டி வந்தவர்களான பதஞ்சலி, வியாக்ரபாதர் என்கிற முனிவர்களின் பொருட்டு அவ்விடமுள்ள வெள்ளியம்பலத்தில் யாதொரு பரமேச்வரரானவர் தனது இடது காலைத் தூக்கி தாண்டவமாடி அம்முனிவர்களையும், தேவர்களையும் ஸந்தோஷ ஸமுத்திரத்தில் மூழ்கினவர்களாக செய்தாரோ அப்படிப்பட்டவரும் அழகுவாய்ந்த திருமேனியுடையவரும் விஷ்ணுவினால் துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

माघेमासे मखर्क्षे वरुणविरचित ब्रह्महत्याविमुक्त्यै
प्रीत्यायस्सन्निधाय स्वयमुरुमकरैः पूरितेऽब्धौ जलेशम्।
स्नानान्मुक्तस्वपापं निखिलमपिजनं कारयामासपूर्वं
तं देवं चित्सभायां अनवरतनटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ५१

51. முன்னொருகாலம் மாசிமாதத்தில் மக நக்ஷத்திரத்தில் வருணனுக்குண்டான பிர்மஹத்தியை போக்கவேண்டி அவனுடைய பிரார்த்தனையால் யாதொரு பரமேச்வரன் பெரிய மீன்களால் நிறைந்த ஸமுத்திரத்தை அடைந்து தனது நீராடலால் அவ்வருணனை அப்பாபத்திலிருந்து விடுவித்து பின்னும் எல்லா ஜனங்களையும் அத்தீர்த்த நீராடலால் பாபமற்றவர்களாக செய்தாரோ, அப்படிப்பட்டவரும் பிரகாசிக்கிறவரும், சித்ஸபையில் ஸதா தாண்டவம் செய்கிறவருமான குஞ்சிதாங்கிரிம்.

दक्षे यज्ञं प्रवृत्ते परमशिवमनादृत्यतत्कन्यकायां
गत्वा तत्र स्वतातं नतवदनमुपेक्ष्यैन्द्रमग्निं विशान्त्याम्।
गौर्यां कोपाद्यईशो दशशतवदनं वीरमुत्पाद्यकालीं
ताभ्यां दक्षादिनाशं व्यरचयदतुलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ५२

52. தக்ஷப்ரஜாபதியானவன் பரமசிவனை அனாதரவுசெய்து யாகம் செய்யும் தருணம் அவனது குமாரியான தாக்ஷாயணியானவள் அவ்விடம் சென்று அங்கு தலைகுனிந்து தன்னிடம் பேசாத தனது தகப்பனான தக்ஷனை அனாதரவு செய்து

ஆவஹனீயம் என்னும் அக்னியில் பிரவேசித்திருக்கும் பொழுது இவ்விஷயமறிந்த யாதொரு பரமேச்வரனானவர் கோபத்தினாலே 1000 முகங்கள் உள்ள வீரபத்திரரையும் காளியையும் உண்டு பண்ணி அவ்விருவர்களால் அத்தக்ஷன், அச்சபையில் உள்ள இதர தேவர்கள் முதலியவர்களுக்கும் நாசத்தை செய்வித்தாரோ அப்படிப்பட்ட உபமானம் இல்லாதவரான குஞ்சிதாங்கிரிம்.

पार्थो यल्लिङ्गबुध्या यदुकुलतिलकं पूजयामासपूर्वं
तन्निर्माल्यं समस्तं रजतगिरिनिषच्छङ्कराङ्घ्रौ प्रदृष्ट्वा ।
भीमस्वान्तार्चितं च स्वसखमपिगुरुं पृष्टवान्तच्चरित्रं
तं देवं चित्सभायां कृतनटनवरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ५३

53. முன் ஒருகாலம் அர்ஜுனன் யாதொரு பரமேச்வரனுடைய லிங்கம் என்கிற பாவத்தினாலே கிருஷ்ணனை பூஜை செய்தானோ, அந்த நிர்மால்யம் எல்லாவற்றையும் பீமனுடைய மானஸ பூஜையில் உள்ள நிர்மால்யம் எல்லாவற்றையும் கைலயங்கிரியில் விளங்குகிற சங்கரனுடைய பாதங்களில் நன்கு பார்த்து அதன் காரணத்தை தனது தோழனும், குருவுமான கிருஷ்ணனிடம் கேட்டானோ அப்படிப்பட்ட சித்ஸபையில் நடனம்பண்ணுகிறவரான குஞ்சிதாங்கிரிம்.

कृष्णोयल्लिङ्गपूजामनुदिनमकरोद्य मुनेवामतीरे
तन्निर्माल्यं गृहीत्वायजतिपरशिवं चोपमन्यौ मुनीन्द्रे ।
ज्ञात्वैतद्वृत्तमारात्तदमलकरवाग्दृष्टिभिर्दीक्षितोऽभूत्
तत्पूजालिङ्गमूलं तमनघनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ५४

54. கிருஷ்ணன் யமுனா நதியின் வடகரையில் எந்த பரமேச்வரனை சிவலிங்கத்தில் ஒவ்வொருநாளும் பூஜை செய்தாரோ யமுனையில் மிதந்து வருகிற அந்த கிருஷ்ணனுடைய பூஜா நிர்மால்யங்களை எடுத்துக்கொண்டு உபமன்யு என்கிற முனிச்ரேஷ்டர் தீக்ஷை இல்லாதவனுடைய பூஜா நிர்மால்யமானது நிர்மால்யமாக ஆகாது என்ற கருத்துடன் அந் நிர்மால்யங்களால் பரமசிவனை பூஜை செய்தார். அக்கிருஷ்ணன் இவ் விருத்தாந்தத்தை அறிந்து சீக்கிரமாக அம்முனிவரை அணுகி

அம்முனிவரால் தீக்ஷை செய்விக்கப்பட்டாரோ அப்படிப்பட்டவரும், அக்கிருஷ்ணனுடைய பூஜா லிங்கத்திற்கு மூலஸ்தானராயும், பரிசுத்தமான நடனத்தை செய்கிறவராயும் உள்ள குஞ்சிதாங்கிரிம்.

ओङ्कारार्थं षडास्ये रजतगिरिवरे पृच्छति ब्रह्मदेवं
चोङ्कारार्थोऽहमस्मीत्यनुवदति विधौ शिक्षयामास तं यः।
तद्वक्त्रादर्थमेनं स्वयमपि कुतुकाच्छ्रोतु मत्यादरेण
स्वाङ्के संस्थाप्य सूनुं प्रमुदितमकरोत् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ५५

(அஷ்டாஷ்ட மூர்த்திகளில் சிஷ்யபாவ மூர்த்தியை குறிக்கிறது)

55. ஒரு ஸமயம் கைலயங்கிரியில் சுப்பிரமணியர் பரமசிவனை தரிசனம் செய்யவேண்டி வந்தவரான பிர்மதேவரை அழைப்பித்து ஓங்காரத்தின் பொருளை சொல்லும்படி வினவ, அப்பிர்மதேவர் ஓங்காரத்தின்பொருள் நானே என்று சொல்ல பிறகு அப்பிர்மதேவரை சிக்ஷை செய்தார். இதை அறிந்து தானும் ஸந்தோஷத்தினால் அந்த சுப்பிரமணியர் முகத்திலிருந்து ஓங்காரத்தின் பொருளை அறிய விரும்பி மிகவும் ஆதரவோடு யாதொரு பரமேச்வரன் தனது மடியில் புத்திரனை சுப்பிரமணியரை இருத்தி ஸந்தோஷத்தோடு கூடியவராக செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

वैकुण्ठो नित्यमादौ पशुपतिमनघैः पुण्डरीकैस्सहस्रै
णार्चां कुर्वन् कदाचित्त्वचरमकमलं दृष्टमासीत्तदेव।
उत्पाट्य स्वाक्षि पद्मं यदमलपदयोरर्पयित्वाथ यस्मात्
चक्रं संप्राप्य रेजेतमपि नटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ५६

56. விஷ்ணுவானவர் ஒவ்வொரு நாளும் பசுபதியான யாதொரு பரமேச்வரனை பரிசுத்தமான 1000 தாமரைப் புஷ்பங்களினாலே அர்ச்சனை செய்து வந்தார். ஒரு ஸமயம் அவ்விதம் பூஜை செய்யும் தருணம் ஒரு தாமரைபுஷ்பம் காணப்படாமல் ஆனது. அச்சமயம் தனது கண்ணை பிடுங்கி பரமேச்வரனுடைய பாதங்களில் அர்ப்பணம் செய்து பிறகு யாதொரு பரமேச்வரனிடமிருந்து சக்கராயுதத்தை அடைந்து விளங்கினாரோ அப்படிப்பட்ட நடபதியான குஞ்சிதாங்கிரிம்.

कैलासोद्यानदेशं सहगिरिसुतयाऽऽप्यैकदा चन्द्रचूडः
सद्यस्तत्रेन्दिरागाधरभुवि निवसन्यः कपीशार्चितोऽभूत्।
यस्तस्मै सार्वभौमत्वपदमपि ददावस्त्रशस्त्रावलिश्च
तं देवं पारिजाताद्यखिलसुमधरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ५७

57. ஒரு ஸமயம் அம்பிகையோடுகூட சந்திரசூடரான யாதொரு பரமேச்வரன் கைலாஸத்தில் உள்ள உத்யான வனத்தை அடைந்து அங்குள்ள வில்வ மரத்தின் கீழ்பாகத்தில் வஸிக்கிறவராக இருந்துகொண்டு ச்ரேஷ்டமான ஒரு குரங்கினல் பூஜிக்கப்பட்டாரோ அந்த குரங்குக்கு அரசனாக இருக்குகையை யும் அஸ்திர சஸ்திரங்களையும் கொடுத்தாரோ அப்படிப்பட்ட தேவராயும், பாரிஜாதம் முதலிய புஷ்பங்களை தரித்தவராயும் உள்ள குஞ்சிதாங்கிரிம்.

स्वर्गाधीशः कदाचित्कपिवदननृपान्नाशयित्वास्वशत्रून्
दत्वास्मै त्यागराजं षडपि तदितरान्प्रेषयामासराज्ञे।
सोऽप्याधारादिसप्तस्थलवरसदनेष्वग्रजैरर्चितेस्म
तन्मूर्तीनां च मूलं मुनिगणविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ५८

58. ஒரு ஸமயம் தேவேந்திரன் குரங்குமுகம் உள்ள அரசனால் (முசுகுந்த சக்கரவர்த்தியினல்) தனது சத்துருக்களான அஸுரர்களை ஸம்ஹரித்து அவ்வரசனிடம் தியாகராஜமூர்த்தி யையும் மற்றும் ஆறு தியாகராஜமூர்த்திகளையும் கொடுத்து பூலோகத்திற்கு அனுப்பினன். அந்த அரசனும் மூலாதார க்ஷேத்திரம் என்று சொல்லுகிற திருவாரூரிலும், திருநள்ளார், திருநாகைக்காரோணம், திருக்குவளை, திருவாய்மூர், திருக்கார வாசல், திருமறைகாடு என்கிற 6 சிவஸ்தலங்களிலும் அம்மூர்த்தி களை ஸ்தாபித்து பிராம்மணர்களைக்கொண்டு பூஜை செய்து வந்தான். அம்மூர்த்திகளுக்கு மூலஸ்தானரும், மஹரிஷிக் கூட்டத்தினல் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

वासिष्ठाद्या मुनीन्द्राः प्रतिदिनमयुतं पञ्चवर्णं जपन्तो
यत्क्षेत्रे वत्सरान्ते हवनमपि तथा तर्पणं ब्रह्मभुक्तिम्

कृत्वा स्वाभीष्टमापुर्नटपतिपुरतस्तत्सपर्यां विधाय
प्रेम्णा त चित्सभेशं विधिमुखविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ५९

59. வஸிஷ்டரை ஆகியாகவுள்ள மஹரிஷிகள் யாதொரு சிதம்பரக்ஷேத்திரத்தில் யாதொரு நடபதிக்கு முன்பாக ஒவ்வொரு நாளும் பஞ்சாக்ஷரத்தை பதினாயிரம் உரு ஜபித்தும் ஒரு வருஷம் முடிவில் ஹோமம், தர்பணம், பிராம்ஹண போஜனம் (இதை புரச்சரணை என்று கூறப்படுகிறது மந்திரசாஸ்திரங்களில்) இவைகளை அனுஷ்டித்தும் ரொம்பவும் பிரியத்தோடு நடராஜ மூர்த்திக்கு விசேஷமான ஆராதனையை செய்தும் தங்கள் தங்கள் அபீஷ்டங்களை அடைந்தார்களோ அப்படிப்பட்ட பிர்மாவை ஆதியாகவுள்ள தேவர்களால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कश्चिद्देवं सभायां सकलमुनिवरैरर्च्यमानांघ्रियुग्मं
इच्छादेव्यास्वशक्त्या मिलितमनुपमं सच्चिदानन्दनृत्तम् ।
वामेभित्यर्धवामे स्थितयुगभुजयाज्ञानशक्त्या च दृष्टं
सर्वेषां भक्तिभाजां निखिलसुखकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ६०

60. இவ்விதம் என்று சொல்ல முடியாதவரும் ஸபையில் பிரஸன்னராக இருப்பவரும், ஸகலமுனிவர்களினாலே பூஜை செய்யப்படுகிற இரண்டு கால்களையுடையவரும், தனது தேவியான இச்சாசக்தியோடு கூடினவரும் உபமானம் அற்றவரும், ஸச்சிதானந்தஸ்வரூபமான நிர்த்தனத்தை உடையவரும், தனது இடது பக்கத்திலேயும், பித்தியின் அர்த்தபாகத்திலேயும், (ரகஸ்ய சுவற்றின் கீழ்ப்பாதி பங்கிலேயும்) இருக்கிற இரண்டு கைகள் உள்ள தேவியினாலேயும், நான்கு கைகள் உள்ள ஞான சக்தி தேவியினாலேயும், பார்க்கப்பட்டவராயும், பக்தர்கள் எல்லோர்களுக்கும் வேண்டிய ஸுகங்களை கொடுப்பவருமான குஞ்சிதாங்கிரிம்.

लक्ष्मीपुष्पं तथार्कं बकगरुतमधः कृष्णधुत्तूर पुष्पं
गङ्गा चन्द्रौ जटाश्च स्वशिरसि सततं कर्णयोर्गायकौ द्वौ ।
हस्तेष्वद्यादिकाः पदकमलयुगे रत्नमञ्जीरभूषा
धृत्वा यस्साम्स्वरूपस्सदसि जयति तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ६१

61. தும்பை, எருக்கு, கொக்கெருகு, கருஊமத்தை இவ்வித புஷ்பங்கள், கங்கை, சந்திரன், ஜடைகள் இவைகளை சிரஸிலும் கம்பளாச்வதராள் என்னும் ஸர்ப்ப ரூபிகளான இரண்டு பாடகர்களை காதுகள் இரண்டிலும், ஸர்ப்பம், அக்னி, டமருகம் இவைகளை கைகளிலும், இரண்டு கால்களில் இரத்தினசிலம்புகளை யும் எப்பொழுதும் தரித்துக்கொண்டு ஸாம்பரூபரான யாதொரு பரமேச்வரன் சித்ஸபையில் விளங்குகிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

भूषारूपैः फणीन्द्रैर्द्विगुणितमहसं पुष्पहासं पुरारिं
भस्मालिप्ताङ्गमीशं भवभयजलधेस्तारकं भक्तिभाजाम्।
धर्मादींस्त्वन्नुपुमर्थान्ददतमनुदिनं दक्षिणास्यं स्वभक्तैः
भाषारूपैश्च गानैः कृतनुतिममितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ६२

62. ஆபரண ரூபங்களான ஸர்ப்பங்களினலே இரட்டிப் பாக செய்யப்பட்ட காந்தியை உடையவரும், வெண்மையான மந்தஹாஸத்தை உடையவரும், திரிபுர ஸம்ஹாரம் செய்தவரும் விபூதியை அணிந்தவரும், பக்திமான்களை ஸம்ஸாரபந்தத்தில் இருந்து விடுவிக்கிறவரும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்குவித புருஷார்த்தங்களை கொடுப்பவரும், தெற்கு நோக்கிய முகத்தை உடையவரும், தனது பக்தர்களினல் அவரவர்களுக்குரிய பாஷைகளிலுள்ள கானங்களினலே துதிக்கப்படுகிறவராயும் உள்ள குஞ்சிதாங்கிரிம்.

यस्योर्ध्वे दक्षपाणौ विनिहितडमरोर्मातृकावर्णरूपं
त्रैचत्वारिंशदर्णं चतुरधिकदशालङ्कृतं सूत्रजालम्।
जातं यत्त्वद्गृहीत्वा पणनसुतमुखाः शब्दशास्त्रादिगर्भं
तत्त्वज्ञास्त्राद्यकुर्वन्दरहसितमुखं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ६३

63. யாதொரு நடராஜமூர்த்தியின் உயர தூக்கப்பட்ட வலதுகையிலுள்ள டமருகத்திலிருந்து மாத்ருகாவர்ணரூபங்களா யும் நாற்பத்திமூன்று எழுத்துக்களோடு கூடினதுகளாயும் अइउण् என்கிற ஸூத்திரத்தை ஆகியானதுகளும் உள்ள பதினுன்கு ஸூத்திரங்கள் உண்டானதுகள். அச்சூத்திரங்களை பணினர்

என்கிற ரிஷியின் புதல்வரான பாணினி என்கிற முனிவரை ஆதியாக உள்ள பெரியோர்கள் வியாகரண சாஸ்திரம் முதலியவைகளுக்கு காரணபூதங்களாக பின்பற்றி அந்த அந்த சாஸ்திரங்களை செய்தார்களோ (नृत्तावसाने नटराजराजः ननाद ढक्कां नवपञ्चवारम्। उद्धर्तुकामः सनकादिसिद्धानेतद्विमर्शे शिवसूत्रजालम्॥ सजयति दिव्यनटेशो नृत्यतियोसौ चिदम्बरसभायाम्। पाणिन्याद्या-मुनयः यस्यच दययामनोरथानभजन्॥ இவ்விதமான சாஸ்திரா சார்யர்களின் மொழிகளால் இது நன்கு விளக்கப்பட்டது) அப்படிப்பட்ட மந்தஹாஸத்தோடு கூடிய முகத்தை உள்ள குஞ்சிதாங்கிரிம்.

वामे कृत्वा शिखीन्द्रं डमरुमपि करे दक्षिणेऽभीतिमुद्रां
योऽन्यस्मिन्वामपादं सरसिजसदृशं कुञ्चितं डोलहस्तात्।
भुक्तेमुक्तेश्चदाने निपुणमिदमिति प्राणिनां दर्शयित्वा
नृत्यन्तं चित्सभायां श्रुतिशिखरनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ६४

64. இடது கையில் அக்கினியையும் வலது கையில் டமருகத்தையும் அபீதி முத்திரையையும் நீட்டிய இடது கை ஒன்றால் கொஞ்சம் ஆக்கி வளைக்கப்பட்ட தாமரைப்பூவுக்கு ஒப்பான இடது பாதத்தை போகத்தையும், மோக்ஷத்தையும் கொடுக்கிற விஷயத்தில் இந்த சரணமானது ஸமர்த்தம் வாய்ந்தது என்று பிராணிகளுக்கு காண்பிவித்துக்கொண்டு சித்ஸபையில் நடனம் செய்கிறவரும் உபநிஷத்துக்களினாலே ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

मूलाधारादिषट्केप्यनवरतनटं यं विराजोहृदब्जे
सर्पेन्द्रव्याघ्रपादप्रमुखमुनिनुतं षट्सुकालेषुवेदैः।
आराध्याभीष्टसिद्धिं द्विजकुलतिलकाः प्राप्नुवन्ति प्रभुं तं
चिच्छक्त्यायुक्तमाद्यं कनकगिरिकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ६५

65. மூலாதாரம் முதலிய ஆறு இடங்களிலும் (மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆஜ்ஞா என்கிற ஆறு ஸ்தானங்களில் பரமனுடைய நடனத்தைப்பற்றி யும் அதன் உபாஸனக்ரமங்களையும் சிதம்பர கல்பம் தஹர

விக்யாகண்டம் முதலிய நூல்களில் கண்டுகொள்க) எப்பொழுதும் நடனம் பண்ணுகிறவரும், விராட்புருஷனுடைய ஹ்ருதயத்தில் நடனம் செய்கிறவரும், (விராட் ஹ்ருதயமென்று அதிபூதத்தில் சிதம்பரத்தை குறிப்பிடுகிறது.) பதஞ்ஜலி, வியாக்கிரபாதர் முதலிய முனிவர்களினாலே துதிக்கப்பட்டவருமான யாதொரு பரமேச்வரனை த்விஜச்ரேஷ்டர்கள் வேதங்களினாலே ஆறு காலங்களிலேயும் பூஜை செய்து அபீஷ்ட ஸித்திகளை அடைகிறார்களோ அப்படிப்பட்ட பிரபுவும், சித்சக்தியோடு கூடியவரும், முதலில் உள்ளவரும் மஹாமேருவை கையில் உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

वेदान्तोक्तात्मरूपं विधिहरितनुजं विश्वनाथं सदस्थं
स्वध्यानान्नाशयन्तं सकलभुवनगं मोहमप्यन्धकारम् ।
चन्द्रोत्तंसंस्मितास्यं सितभसितलसत्फालदेशं त्रिनेत्रं
विश्वैर्देवैर्नताङ्घ्रिं विविधतनुगतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ६६

66. வேதாந்த சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஆத்மஸ்வரூபரும், பிர்ம விஷ்ணுக்களை புத்திரனாக உடையவரும் உலகத்திற்கு நாதரும், ஸபையில் இருப்பவரும், தன்னை தியானம் செய்த மாத்திரத்தில் உலகத்தில் உள்ள மோகாந்தகாரத்தை போக்கடிப்பவரும், சந்திரனை தரித்தவரும், சிரித்தமுகம் உள்ளவரும், வெளுத்த விபூதியினால் விளங்குகிற நெத்தியை உடையவரும், மூன்று கண்களோடு கூடியவரும், விச்வேதேவர்களினாலே (சிராத்தத்தில் பூஜை செய்யப்படுகிறவர்கள்) நமஸ்கரிக்கப்பட்ட சரணத்தை உடையவரும், எல்லாப்பிராணிகளின் சரீரத்தை அடைந்தவருமான குஞ்சிதாங்கிரிம்.

चक्षूंष्यर्काग्निचन्द्राश्चरणमहिभुविव्योम्नि केशाश्च यस्या
प्यष्टावाशाश्च वस्त्रं निखिलभुवनसंलग्नहस्तोऽद्वितीयः ।
कुक्षिर्वाराशिजालं नटनशुभतलं रुद्रमूर्तिश्च नित्यं
तं देवं चित्सभेशं श्रुतिगणविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ६७

67. யாதொரு பரமேச்வரனுக்கு கண்கள், சூரியன், அக்கினி, சந்திரன் இவர்களோ, கால் பாதாளத்தில் உள்ளதோ, சிகைகள் ஆகாசத்தில், எட்டு திக்குகள் வஸ்திரமோ, ஸகல

புவனங்களிலேயும் ஸர்பந்திக்கப்பட்ட கைகளோ, தனிமையாய் இருப்பவரோ ஸப்த ஸமுத்திரங்களும் வயரோ, நடனம் பண்ணத் தகுந்த இடம் ருத்திர பூமியோ அப்படிப்பட்டவரும், நித்தியரும் தேவரும், சித்ஸபேசரும், வேதக்கூட்டங்களினலே துதிக்கப் பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

दीर्घायुः पुत्रपौत्रान्धनगृहवसुधावस्त्रभूषागजाश्वान्
विद्यारोग्येशभक्तीर्जलजसममुखीस्सुन्दरीः भृत्यवर्गान्।
मुक्तिं यन्नृत्तमूर्तेश्चरणसरसिजं पूजयन्तो लभन्ते
तं देवं चित्सभेशं सकरुणहृदयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ६८

68. நீண்ட ஆயுள், புத்திரன், பேரன், பொருள், வீடு, பூமி, வஸ்திரம், ஆபரணம், ஆனை, குதிரை, வித்தை, நோய் இல்லாமை, ஈச்வரபக்தி, தாமரைப் பூவுக்கு ஒப்பான முகம் உள்ள அழகுவாய்ந்த பத்தினிகள், ஏவலாட்கள், முக்தி, இவைகளை யாதொரு நடராஜமூர்த்தியினுடைய சரணத்தை பூஜை செய்கிறவர்கள் அடைகிறார்களோ அப்படிப்பட்டவரும், தேவரும், சித்ஸபேசரும், கருணையோடுகூடிய ஹிருதயம் உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

नित्यार्चास्वन्वहं यः प्रदिशति नितरां मुक्तये काञ्चनादीन्
विप्राणां सप्तपाकान्हविरपि सकलं सौमिकास्सप्तसंस्थाः।
कृत्वा नृत्तेशपूजां श्रुतिविहितपथा कुर्वतां श्रीसभेशः
तं देवं नृत्तमूर्तिं मणिमयपदकं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ६९

69. யாதொரு நடராஜமூர்த்தியானவர் பாகஸம்ஸ்தை ஏழையும், ஹவிஸ் ஸம்ஸ்தை ஏழையும், ஸோமஸம்ஸ்தை ஏழையும் அனுஷ்டிக்கும்,

(अष्टका पार्वणः श्राद्धं श्रावणी आग्रहायणी चैत्री आश्वयुजी
(इति सप्तपाक यज्ञसंस्थाः)
अग्न्याधेयं अग्निहोत्रं दर्शपूर्णमासौ चातुर्मास्यानि
आग्रयणेष्टिः निरूढपशुबन्धः सौत्रामणी (इति सप्तहविर्यज्ञसंस्थाः)
अग्निष्टोमः अत्यग्निष्टोमः उक्थ्यः षोडशी वाजपेयः अतिरात्रः अप्तोर्यामः
(इति सप्तसोमसंस्थाः) इति गौतमः)

வேதத்தில் சொல்லப்பட்ட வழியினால் நடராஜருடைய பூஜையையும் செய்கிறவர்களான தீக்ஷிதர்களுக்கு ஒவ்வொரு நாளும் நித்திய பூஜைகளில் தங்கம் முதலிய பொருள்களை கொடுக்கிறாரோ அப்படிப்பட்ட மணிமயமான பதக்கங்களை அணிந்துள்ள குஞ்சிதாங்கிரிம்.

भूतेसंस्थाप्य चैकं चरणसरसिज दक्षिणं वामपादं
शिञ्जन्मञ्जीरशोभं विधिमुखदिविषत्पूजितं भक्तिभाजाम्।
धर्मादीष्टान्प्रदातुं धनलिपिसहितं किञ्चिदुद्धृत्यतिर्यक्त्वा
कुर्व्यानन्दनृत्तं कलयति वरदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ௭௦

70. அபஸ்மாரன் என்னும் பூதத்தின்மேல் வலது கால் ஒன்றை ஊன்றி அழகுவாய்ந்த சிலம்புகளினால் சோபிக்கப்பட்டதும், பிர்மாவை ஆதியாய் உள்ள தேவர்களினால் பூஜிக்கப்பட்டதும், தனலிபியோடு (நியாஸக்ரமத்தில் அவ்விரண்டு அக்ஷரங்களை அக்காலில் தியானித்து பூஜிக்கும்படி மந்திர சாஸ்திரம் கூறுகிறது) கூடினதுமான இடதுகாலை பக்தி உள்ளவர்களுக்கு இஷ்டத்தைக் கொடுக்கவேண்டி கொஞ்சம் உயரத்தூக்கி குறுக்காக வளைத்து ஆனந்த நிர்த்தத்தை எந்த பரமேச்வரன் செய்கிறாரோ அப்படிப்பட்ட வரதரான குஞ்சிதாங்கிரிம்.

यास्ये श्रीनूपुराख्याजनिभृदघहरानिम्नगाभातियस्यो
दीच्यांश्वेताभिधाना वरुणदिशि महावीरभद्राख्यवापी।
प्राच्यामब्धिस्समीपे तदुदरविलसत्तिल्वकान्तारनाम्नि
क्षेत्रे यश्चित्सभायां नटतिसकलगं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ௭௧

71. தென்புறத்தில் பிராணிகளின் பாபத்தை போக்கடிக்கிறதான ஸ்ரீநூபுரா (கொள்ளிடம்) என்னும் நதியும், வடபுறத்தில் ச்வேத நதியும், (வெள்ளாறுப்) மேற்கு திக்கில் வீரபத்திர ஸரஸும், (வீராண ஏரியும்) கிழக்கு திக்கில் ஸமுத்திரமும் விளங்குகிறதோ அதன் மத்தியில் பிரகாசிக்கிற தில்லைவனம் என்று பெயருள்ள க்ஷேத்திரத்தில் யாதொரு பரமேச்வரானவர் சித்ஸபையில் நடனம் செய்கிறாரோ அப்படிப்பட்ட ஸகலத்தை (மூர்த்திகரித்தவர்) அடைந்தவரான குஞ்சிதாங்கிரிம்.

पञ्चप्राकारयुक्ते प्रविलसति पुरे पंक्तितीर्थप्रवीते
सर्वाशाव्याप्तकीर्तिद्विजवरनिचये व्योमनाम्न्यात्मरूपे ।
मध्ये श्रीचित्सभायां कलयति नटनं सर्वदा साम्बिकोयः
तं देवं वेदमूर्धस्थितिजुषमनघं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ७२

72. ஐந்து பிராகாரங்களோடுகூடியதும் பத்து தீர்த்தங்களால் சூழப்பட்டதும், (சிவகங்கை, ஸமுத்திரம், புலிமடு, யளவ்வனேச்வரம், அனந்தேச்வரம், நாகேச்வரம், பிரம தீர்த்தம், சாமுண்டி தீர்த்தம், திருப்பாற்கடல், பரமானந்தகூபம் ஆகிய 10 தீர்த்தங்கள்) கீர்த்திவாய்ந்த பிராம்மணர்களால் நிறைந்ததும், ஆகாசம் என்று பெயருள்ளதும், ஆத்மரூபமுமான (சிதம்பர க்ஷேத்திரத்தின்) புரத்தின் நடுவில் உள்ள சித்ஸபையில் எப்பொழுதும் அம்பிகையோடுகூட யாதொரு பரமேச்வரன் நடனம் செய்கிறாரோ அப்படிப்பட்டவரும் வேதத்தின் சிரஸில் இருப்பவரும் பரிசுத்தருமான குஞ்சிதாங்கிரிம்.

भासन्ते नैव यस्मिन्रविशशिहुतभुक्तारकाश्चापि विद्युत्
यस्माद्भीत्येन्द्रवायूमिहिरकिरणजो दूरतो यान्ति नित्यम् ।
यद्रूपं योगिवर्या हृदयसरसिजे चिन्तयन्त्यन्वहं तं
श्रीमन्तं चित्ररूपं वसुकरकमलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ७३

73. யாதொரு பரமேச்வரனிடத்தில் சூர்யன், சந்திரன், அக்கினி, நக்ஷத்திரங்கள், மின்னல் இவைகள் பிரகாசம் அற்றதுகளோ, யாதொரு பரமேச்வரனிடத்தில் பயத்தினாலே இந்திரன் வாயு, யமன் இவர்கள் வெகுதூரத்தில் செல்லுகிறார்களோ, யாதொரு பரமேச்வரனுடைய ரூபத்தை யோகிச்ரேஷ்டர்கள் ஹிருதயத்தில் எப்பொழுதும் தியானம் பண்ணுகிறார்களோ அப்படிப்பட்ட ஸ்ரீமானும், ஆச்சர்யஸ்வரூபராயும், எட்டு கைகளோடுகூடியவராயும் (மந்திர சாஸ்திரத்தில் 8 கைகளோடு கூடிய ஸ்ரீநடராஜர் உருவம் கூறப்படுகிறது) இருக்கும் குஞ்சிதாங்கிரிம்.

षट्कालार्चासु नित्यं स्फटिकमणिमये लिङ्गनृत्तेशमूर्ती
शुद्धैस्तीर्थैः कदाचित्स्वमपि नटपतिं चाभिषेक्तुं समन्त्रम् ।

मूर्धलङ्कारभूता प्रवहति परमानन्दकूपे यदुक्त्या
गङ्गा तं चित्सभेशं सुरवरविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ௭௪

74. ஒவ்வொருநாளும் ஆறுகால பூஜைகளில் ஸ்படிக் லிங்கம், இரத்தினஸபாபதிமூர்த்தி, மற்றுமுள்ள தேவர்கள் ஒரு ஸமயம் நடபதியான தன்னையும் மந்திரங்களோடுகூட சுத்தமான தீர்த்தங்களினுல் அபிஷேகம் செய்வதற்காக சிரஸில் விளங்குகிறவளான கங்கையானவள் பரமானந்தகூபத்தில் (சித்ஸபைக்கு கீழ்புறம் உள்ள கிணர்) யாதொரு பரமேச்வர னுடைய ஆக்ஞையினுலே பெருகுகிறுளோ அப்படிப்பட்ட தேவச்ரேஷ்டர்களாலே ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

स्तम्भाकारैः पुराणैर्धृतकनकसभा भाति यस्याग्रभागे
यस्यां धर्मस्वरूपो वृषभपतिरुदग्वक्त्रपद्मो विभाति।
यस्यामीशस्य देव्याः स्फटिकवटुकयो रत्नसूते मुनीन्द्राः
कुर्वन्त्यद्भिः प्रपूजां तमपि नटवरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ௭௫

75. ஸ்தம்ப உருவம் தாங்கினதுகளான பதினெட்டு புராணங்களினுலே (பிராம்மம், பத்மம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், பவிஷ்யம், நாரதீயம், மார்கண்டேயம், ஆக்னேயம், பிர்மகைவர்த்தம், லிங்கம், வராஹம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மாத்ஸ்யம், காருடம், பிர்மாண்டம் मद्वयं भद्वयं चैव ब्रत्रयं वचतुष्टयम्। अनापलिङ्गकूस्कानि पुराणानि पृथक्पृथक्॥ इति देवी भागवतवचनम्॥ சிவபுராணத்தில் கடை எழுத்தைப் பின்பற்றி वचतुष्टयं என்று கூறிற்று. இதில் சிவபுராணம் 10, விஷ்ணு புராணம் 4, பிரம புராணம் 2, ஸூர்ய புராணம் 1, அக்னி புராணம் 1, ஸ்ரீபாகவதத்தை விலக்கி தேவீ பாகவதத்தை சேர்த்தும் கூறுவார்கள் சிலர்.) தரிக்கப்பட்ட கனகஸபை யானது (விக்ஞானமயகோசம்) யாதொரு நடராஜமூர்த்திக்கு முன்பாக விளங்குகிறதோ அந்த கனகஸபையில் வடக்குமுகம் நோக்கிய தர்மஸ்வரூபரான நந்திகேச்வரர் விளங்குகிருரே, யாதொரு கனகஸபையில் ஈச்வரனுக்கும், அம்பிகைக்கும், ஸ்படிகலிங்கத்திற்கும், ஸ்வர்ணுகர்ஷண பைரவருக்கும்,

இரத்தினஸபாபதிக்கும் முனீந்திரர்கள் அபிஷேகத்தைச் செய்கிறார்களோ அப்படிப்பட்ட நடச்ரேஷ்டரான குஞ்சிதாங்கிரிம்.

यद्गेहं पञ्चसालैर्दिशि दिशि विलसद्गोपुरैर्वेदसङ्ख्यैः
अन्नादि ब्रह्मकोशत्वमुरगतसभा पञ्चकैर्भातितीर्थैः।
श्रीमूलस्थानदेवी हरिगजवदनस्कन्दगेहैश्च नित्यं
तत्रत्यानन्दकोशे विरचितनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ௭௬

76. யாதொரு நடராஜமூர்த்தியினுடைய ஆலயமானது ஐந்து வீதிகளினாலேயும், நான்கு திக்குகளில் விளங்குகிற நான்கு கோபுரங்களினாலேயும், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்று சொல்லப்படுகிற ஐந்து ஸபைகளினாலேயும், (ராஜஸபை, தேவஸபை, நர்த்தனஸபை, கனகஸபை, சித்ஸபை) சிவகங்கை முதலிய புண்ய தீர்த்தங்களினாலேயும், ஸ்ரீ மூலநாதர், அம்பிகை, விஷ்ணு, விநாயகர், சுப்ரமண்யர் முதலிய தேவர்களுடைய ஆலயங்களினாலேயும் பிரகாசிக்கிறதோ, அப்படிப்பட்ட ஆலயத்தில் ஆனந்தமயகோசம் என்று சொல்லப்படுகிற சித்ஸபையில் எப்பொழுதும் செய்யப்பட்ட தாண்டவத்தை உடைய குஞ்சிதாங்கிரிம்.

गङ्गातीरस्य पश्चाद्विलसतिसदने सच्चिदानन्दरूपा
देवी यासर्वविद्यालयमुखकमला भासते वेदहस्ता।
या यस्य ज्ञानशक्तिश्शिवपदसहिता कामसुन्दर्यभिख्या
तद्देव्या दृष्टनृत्तं श्रुतिनिहितपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ௭௭

77. * சிவகங்கைக்கு மேல்புறத்தில் விளங்குகிற ஆலயத்தில் ஸச்சிதானந்தரூபிணியாயும், பிரஸன்னையாயும், ஸர்வ வித்தைக்கும் இருப்பிடமான முககமலத்தை உடையவளாயும், நான்கு கைகளோடு கூடியவளாயும், சிவகாமஸுந்தரி என்று பெயர் உள்ள அம்பிகையானவள் எந்த நடராஜருக்கு ஞானசக்தியோ அப்படிப்பட்ட அம்பிகையினாலே பார்க்கப்பட்ட நடனத்தை உடையவராயும், வேதமூர்த்தாவில் வைக்கப்பட்ட பதத்தை உடையவராயும் உள்ள குஞ்சிதாங்கிரிம்.

---

* இத்தேவியின் ஆலயம் சிவகங்கைக்கு மேற்கு திசையில் உள்ளது. சிவகாமகோஷ்டமென்றும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீதேவிக்கு புவியில் கூறப்பட்டுள்ள பீடங்களில் இதுவும் ஒரு பீடமாகவும் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீவித்யா க்ரந்தங்களில் கூறப் பட்டிருந்தபோதிலும் தனிமையாக தஹராவித்யாகண்டம், சிதம்பரகல்பம் முதலிய க்ரந்தங்களில் இத்தேவியின் யந்தர மந்தர உபாஸனுக்ரமங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீசக்கரமேரு யந்திர மத்தியிலுள்ள பிந்து பீடத்தில் நின்ற திருக்கோலமாயும், வலதுபுறம் இரண்டு கைகளில் செங்கழுநீர் புஷ்பமும், ஜபமாலையும், இடதுபுறம் ஒருகையில் கிளியும், மற்றொரு கையை கடிப்பிரதேசத்தில் வைத்துக்கொண்டும் இத் தேவி விளங்குகிருள். पद्मस्थां कनकप्रभां परिलसत्पद्माक्षियुग्मो-ज्वलामक्षस्त्रकशुकरारिकाकटिलसत्कल्हारहस्ताब्जिनीम्। रक्तस्रक्-सुविलेपनाम्बरधरां राजीवनेत्रार्चितां ध्यायेच्छ्रीशिवकामकोष्ठनिलयां नृत्तेश्वरस्यप्रियाम्॥ इति चिदम्बरकल्पे॥ இத்தேவியின் அருளால் தான் பதஞ்ஜலி முனிவர் வியாகரண மஹாபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை இயற்றினர். ஹயக்ரீவர், அகஸ்தியர், லோபா முத்ரை, தூர்வாஸர், பரசுராமர் முதலிய ஸ்ரீவித்யாசார்யர்களும், ஆதிசங்கரர் முதலிய மஹான்களும் இவ்விடத்தில் இத்தேவியை உபாஸித்து தங்கள் இஷ்டங்களையும் அத்வைதப் பிர்ம்ஹ ஞானத்தையும் அடைந்தார்கள்.

இக்கிரந்தாசாரியாளான ஸ்ரீஉமாபதிசிவம் இவ்வாலயத் தின் வடபுறம் பிரகாரத்திலுள்ள ஓர் கோஷ்டத்தின் சுவற்றில் ஸ்ரீசக்கரம் வரைந்து அதில் அம்பிகையை பூஜித்து உபாஸித்துக் கொண்டுவரும் ஸ்ரீ மந்தரமூர்த்தி தீக்ஷிதர் என்கிற பெரியோர் இடத்தில் ஸ்ரீவித்யோபதேசம் பெற்று அம்பிகையின் ஸன்னதி யில் ஸ்ரீவித்யா ஜபயஞ்ஞத்தை நீண்டகாலம் அனுஷ்டித்து இத் தேவியின் அருளால் ஸகல வித்தைகளையும் அடைந்தார்கள் என்று பெரியோர்களால் கூறப்படுகிறது. இப்பவும் அவ்விதம் ஸ்ரீசக்கரம் வரைந்த கோஷ்டமும் அக்கோயிலில் விளங்குகிறது. ஆனல் இப்போது அந்த இடம் கொஞ்சம் சிலமாக இருக்கிறது. அதுவும் முன்போல் ஜீர்ணோத்தாரணம் செய்யத் திருவருள் கூடு மென்று நம்புகிறேன்.

18 ஸித்தர்களில் நந்திதேவர் என்பவர் தனது கலைஞானம் என்னும் நூலில் இவ்வம்பிகையின் மந்திரோபாஸனையின் முறையை நன்கு கூறி இருக்கிறார். திருமூலவர் திருமந்திரத்தில் கூறினதும் இவ்வம்பிகையைச் சார்ந்ததே.

ஆதிசங்கரர் கேநோபநிஷத்துக்கு பாஷ்யம் எழுதும் தருணம் सतस्मिन्नेवाकाशे स्त्रियमाजगाम बहुशोभमानामुमां हैमवतीं तां होवाच என்கிற இடத்தில் மனநிலை அம்பிகையை த்யானம் செய்தார். அத்தருணம் அம்பிகை மிகுந்த தயவோடு முன் சொல்லிய உருவத்துடன் அவர் முன் தோன்றி பகுசோபை உள்ளவளும் ஹைமவதியுமான உமை நானே. இவ்வாகாச க்ஷேத்திரத்தில் ஸ்வதந்திரையாய் விளங்குகிறேன். உனது இஷ்டம் பூர்த்தி அடையட்டும் என்று அருள் புரிந்து மறைந்தனள். அவ்வாதி சங்கரரும் அவ்வுபநிஷத் பாஷ்யத்தை அம்பிகையின் ஸன்னதியிலேயே எழுதி முடித்தார் என்றும் பெரியோர்கள் கூறுகின்றனர்.

பின்னும் இவ்வாலயத்தை ஒற்று நோக்குங்கால் காஞ்சீ காமாக்ஷி ஆலயம்போல் சக்திக்குப் பிரதான ஆலயமாகவே தோன்றுகிறது. திருபுருண்ட மென்னும் க்ரந்தத்தில் சொன்னபடி விமானத்தில் ஸ்தூபிகள் மூன்று அமைக்கப்பட்டிருப்பதாலும் ஸமீபத்தில் வேறு சிவாலயமில்லாமல் இருப்பதாலும் தெற்கு நோக்கிய ஸ்ரீநடராஜமூர்த்தியின் ஸபைக்கு வடபுறமான போதிலும் ஒற்றுநோக்கில் வலபுறமாக அமைந்து இருப்பதாலும் ஞானசக்தி என்று கூறுவதாலும், ஸ்வதந்திரமான ஆலயம் என்றே சில்ப அறிஞர்களின் கொள்கை. பின்னும் அனேகவித இதிஹாஸங்கள் விசேஷமாகக் காணப்படுகின்றன. விருவஞ்ஜி விடுத்தனம். தேவீபாகவதத்தில் உள்ள தேவீ கீதையிலும் मीनाक्ष्याः परमंस्थानं यच्चप्रोक्तं चिदम्बरे। என்று ஸ்ரீதேவிக்கு உத்தமஸ்தானமாகவும் புகழப்பட்டுள்ளதே. नन्दिविद्या नटेश्वरी என்கிற லலிதா நாமாவும் இத்தேவியைக் குறித்ததே. அப்படியே பட்ட நாராயணர் பாஸ்கரராயர் முதலிய ஸ்ரீவித்யோபாஸகர்களின் அபிப்பிராயம்.

ब्रह्मैवाऽखण्डमेतन्नटनपति तनुं प्राप्यवक्त्रात् द्विजेन्द्रान्
बाहुभ्यः क्षत्रवर्गान् सकलपशुततेः पालनायोरुयुग्मात्।
वैश्यान्पद्भ्यांश्च शूद्रानविकलमसृजल्लीलयादेवराड्यः
तं देवं चित्सभेशं श्रुतिविनुतकथं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ७८

78. அகண்டாகாரமான பிர்மமானது இந்த நடராஜ மூர்த்தியின் ஸ்வரூபத்தை ஸ்வீகரித்து முகத்தில் இருந்து பிராமணர்களையும், கைகளிலிருந்து க்ஷத்திரியர்களையும், ஸகல பசுக்கூட்டங்களை ரக்ஷிக்கவேண்டி இரண்டு துடைகளிலிருந்து வைச்யர்களையும், இரண்டு கால்களிலிருந்து சூத்திரர்களையும் விளையாட்டாக ஸ்ருஷ்டித்ததோ அப்படிப்பட்ட சித்ஸபேசரும், வேதங்களினால் சொல்லப்பட்ட கதைகளை உடையவருமான குஞ்சிதாங்கிரிப.

स्वस्यां श्रीचित्सभायां नटनमतिमुदा कर्तुमुद्युक्तवान्यो
देवेन्द्रे वेणुहस्ते मुरजकरयुगे श्रीपतौ तालहस्ते।
ब्रह्मण्यानन्दभाजो जिमिनसुतफणिव्याघ्रपादास्तदानीं
जातास्तं ब्रह्मरूपं सगुणमतिगुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ७९

79. யாதொரு நடராஜமூர்த்தியானவர் தனது சித்ஸபையில் நடனத்தை செய்வதற்கு ரொம்பவும் ஸந்தோஷத்தோடு இசைந்தாரோ, தேவேந்திரன் வேணுவையும், விஷ்ணு முரசு வாத்தியத்தையும், பிர்மா தாளத்தையும் தரித்திருக்கும் தருணம் ஜிமினர் என்னும் முனியின் குமாரரான ஜைமினி, பதஞ்ஜலி, வியாக்ரபாதர் இம்முனிவர்கள் ஆனந்தத்தை அடைந்தவர்களாக ஆனார்கள் அப்படிப்பட்ட நிர்குணஸகுண பிர்மரூபமான குஞ்சிதாங்கிரிம்.

विष्णोर्मञ्चः कदाचिच्छरवदनयुगश्रीपदद्वन्द्वभिक्ष्य
श्चात्रेः पुत्रत्वमाप्त्वा शिवपणनजयोस्सूत्रभङ्गींसमीक्ष्य।
शम्भोर्यस्य प्रसादादरचयदतुलं श्रीमहाभाष्यसंज्ञं
ग्रन्थं यत्क्षेत्रराजेतमलिकनयनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८०

80. யாதொரு நடராஜமூர்த்தியின் க்ஷேத்திர ராஜத்தில் (சிதம்பரத்தில்) விஷ்ணுவுக்கு மஞ்சரூபியான (படுக்கை) சேஷ

னவர் ஒரு ஸமயம் ஐந்து முகத்தோடு பதஞ்சலி என்னும் பெயர்தாங்கி அத்திரி மஹரிஷியின் புதல்வராகி சிவனுடையதும் பாணினியினுடையதும் ஆன வியாகரண ஸூத்திரத்தின் பொருளை ஆலோசனை செய்து யாதொரு நடராஜமூர்த்தியின் பிரஸாதத்தினாலே ஒப்பற்றதான மஹாபாஷ்யம் என்று பெயருள்ள ஓர் வடமொழிநூலை இயற்றினரோ அப்படிப்பட்ட நெற்றியில் கண் உள்ளவரான குஞ்சிதாங்கிரியை.

पञ्चाशद्वर्णयुक्तैर्मनुभिरभिमतं काङ्क्षिणां देहभाजां
स्वक्षेत्राभिख्यमन्त्रैरपि विततमहापञ्च पञ्चप्रयोगैः।
युक्तैर्गायत्रिसंख्यध्वनिमनुभिरथाभीष्टसिद्धिप्रदो यः
तं तत्त्वातीतमाद्यं कनककवचिनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८१

81. யாதொரு நடராஜமூர்த்தியானவர் இஷ்டத்தை விரும்புகிறவர்களான பிராணிகளுக்கு ஐம்பது எழுத்துக்களோடு கூடினதுகளாயும், தனது க்ஷேத்திர நாமாவினால் விளங்குகிறதுகளாயும் உள்ள மந்திரங்களினாலேயும் (சிதம்பர மந்திரங்களினாலேயும்) விஸ்தாரங்களான இருபத்தைந்து பிரயோகங்களோடு கூடினதுகளாயும், இருபத்திநாலு எழுத்துக்கள் உள்ளதுகளாயும் உள்ள த்வனி என்ற மந்திரங்களினாலேயும், (ஜபம் பண்ணுகிறவர்களுக்கு) இஷ்டஸித்திகளை அளிக்கிறாரோ அப்படிப்பட்ட தத்துவாதீதரும், முதன்மை வாய்ந்தவரும், தங்ககவசம் அணிந்தவருமான குஞ்சிதாங்கிரியை.

यस्य स्वान्ताम्बुजातादुडुपतिरुदभूच्चक्षुषश्चण्डरश्मिः
वक्त्राम्भोजाच्च वह्निर्दिविषदधिपतिः प्राणतो गन्धवाहः।
यन्नाभेरन्तरिक्षं चरणसरसिजात्कुम्भिनी द्यौश्च शीर्ष्णः
काष्ठाश्च श्रोत्रयुग्मात्तमपि परशिवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ८२

82. யாதொரு நடராஜமூர்த்தியினுடைய மனதில் இருந்து சந்திரனும், கண்ணில் இருந்து ஸூர்யனும், முகத்தில் இருந்து அக்கினியும், இந்திரனும், பிராணனில் இருந்து வாயுவும், தொப்புளிலிருந்து அந்தரிக்ஷமும், (பூமிக்கும், ஆகாசத்திற்கும் மத்தியப் பிரதேசம்) காலில் இருந்து பூமியும், தலையில் இருந்து ஸ்வர்க்கலோகமும், காது இரண்டிலுமிருந்து திக்குகளும்,

உண்டானதுகளோ அப்படிப்பட்ட பரசிவமான குஞ்சிதாங்கிரிம்.

विद्यां वामेक्षणेन्दोश्श्रियमपि कलयन्दक्षनेत्राब्जबन्धोः
फालेक्षाच्चित्रभानोः सकलजनिमतां पापतूलं च दग्ध्वा ।
स्वस्याङ्घ्र्यालोकमात्रादुपनिषदुदितब्रह्मबोधं प्रयच्छन्
यस्सर्वान्रक्षतीशस्तमुडुपतिधरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८३

83. யாதொரு நடராஜமூர்த்தியானவர் இடது கண்ணான சந்திரனிடமிருந்து வித்தையையும், வலது கண்ணான ஸூரியனிடமிருந்து ஸம்பத்தையும் அளித்தும், நெற்றிக்கண்ணாகிற அக்கினியினால் ஸகல பிராணிகளுடைய பாபமாகிற பஞ்சை பொசுக்கியும், தனது திருவடியை தரிசித்த மாத்திரத்தில் வேதாந்தத்தில் சொல்லப்பட்ட பிரமக்ஞானத்தை கொடுத்தும், ஸர்வ உலகத்தை ரக்ஷிக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कैलासे भोगपुर्यां सकलजनिमतां हेतुरास्ते शिवो यः
सर्वक्षेत्रेषु गूढो विलसति सततं स्वांशसादाख्यरूपः ।
सोऽप्येवांशी धरण्या हृदयसरसिजे चित्सभान्तस्थभित्तौ
कुर्वन्नृत्तं मुदाऽण्डानवति तमनघं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८४

84. கைலாஸ பர்வதத்தில் ஸகலப்பிராணிகளுக்கும் காரணபூதரான யாதொரு பரமசிவனானவர் பிரதானமான ஆலயத்தில் விளங்குகிறாரோ, யாதொரு பரமசிவனானவர் ஸர்வ க்ஷேத்திரங்களிலேயும் மறைந்தவராய் இருந்துகொண்டு தனது அம்சத்தினால் சதாசிவ உருவத்தோடு எப்பொழுதும் விளங்குகிறாரோ அப்படிப்பட்ட பரமேச்வரனே பூமிக்கு ஹிருதயஸ்தானமான சித்ஸபையினுடைய உள்புறமுள்ள சுவற்றில் பூர்ணாம்சத்தோடு நிர்தனத்தை செய்துகொண்டு ஸந்தோஷத்தினால் அண்டங்களை ரக்ஷிக்கிறார் அப்படிப்பட்ட பரிசுத்தமான குஞ்சிதாங்கிரிம்.

यद्भासा भातिनित्यं सकलमपिजगत्तत्परंज्योतिरेव
वैराजे हृत्सरोजे कनकसदसि वै साम्बनृत्तेशमूर्तिः ।
भूत्वा नृत्तं करोतिप्रभुरपि जगतां रक्षणे जागरूकः
तं देवं चित्सभेशं विधृतसुमसृणिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८५

85. யாதொரு நடராஜமூர்த்தியின் காந்தியினாலே எப்பொழுதும் எல்லா உலகமும் பிரகாசிக்கின்றதோ அப்படிப்பட்ட பரஞ்சோதி ஸ்வரூபரான நடராஜரே விராட்புருஷனுடைய ஹிருதயகமலமான கனகஸபையில் அம்பிகையோடு கூடின நடராஜ உருவத்தை எடுத்துக்கொண்டு நிர்த்தனத்தை செய்கிறார். உலகத்திற்கு பிரபுவாய் இருந்தபொழுதிலுங்கூட ரக்ஷிக்கிற விஷயத்தில் முழித்துக்கொண்டிருக்கிறார். அப்படிப பட்ட தேவராயும், சித்ஸபேசராயும், கையில் தரிக்கப்பட்ட புஷ்பபாணம், அங்குசம் இவைகளை உடையவருமான (இவ்வித மான உருவம் மந்த்ர சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது) குஞ்சிதாங்கிரிம்.

आत्मैव श्रीनटेशो धरणिरविजलान्यग्निवायूविहाय
श्चन्द्रोयज्वाच भूत्वाऽवति जगदखिलं पञ्चविशेशभिन्नः।
तत्वातीतोमहेशोप्युरुरणुरखिलाभ्यन्तरे राजते यः
तं सोमं सोममित्रं सुमुखगुहसुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८६

86. ஆத்ம ஸ்வரூபியான யாதொரு ஸ்ரீநடராஜர் பூமி, ஸூர்யன், ஜலம், அக்கினி, வாயு, ஆகாசம், சந்திரன், யஜமானன் (யாகம் செய்கிறவன்) இவர்களின் உருவத்தை எடுத்துக் கொண்டு ஸமஸ்த உலகத்தையும் ரக்ஷிக்கிறார். யாதொரு நடராஜரானவர் பஞ்சவிம்சதி மூர்த்திகளில் வேறானவரோ, தத்துவாதீதரோ, (தத்துவங்களுக்குப் புறம்பானவரோ) மஹேசரோ, பெரியதோ, சிறியதோ, ஸமஸ்த பிராணிகளின் ஹிருதயத்தில் விளங்குகிறவரோ அப்படிப்பட்ட உமையோடு கூடியவரும், குபேரனுக்குத் தோழனும், விநாயகர் சுப்பிரமணியர் இவ்விருவர்களை புத்திரர்களாக உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

यद्ब्रह्मोच्छ्वासरूपा श्रुतिरपि सकलातत्समानास्स्मृतिश्च
कल्पागाथाः पुराणं विविधमनुवरास्सेतिहासाश्च विद्याः।
सर्वत्राऽद्यापि भान्ति स्वयमपि कृपया यत्सभायां नटेशो
भूत्वा लोकान्समस्तानवति तमसमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८७

87. யாதொரு பிர்மத்தின் மூச்சுக்காற்றுருபங்களான வேதங்கள் அதற்கு ஒப்பான ஸ்மிருதி, கல்பங்கள், காதைகள், புராணம், அனேக விதமான மந்திரங்கள், இதிஹாஸங்கள் இவைகளான ஸகல வித்தைகளும் எல்லா இடங்களிலேயும் இப்பொழுதும் விளங்குகிறதுகளோ, தானே அதிகமான கிருபையோடு ஸபையில் நடேச ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு யாதொரு பிர்ம்ஹமான பரமேச்வரன் ஸமஸ்த லோகங்களையும் ரக்ஷிக்கின்றாரோ அப்படிப்பட்ட ஒப்பற்றவரான குஞ்சிதாங்கிரிம்.

वेदान्तेवाक्यरूपा उपनिषदइमा ब्रह्मसामीप्यभाजः
तासां मुख्यादशस्युर्यतिविरचितमहाभाष्ययुक्तामहत्यः।
स्तम्भाकारास्तुवन्ति स्वविदितनटनं सर्वदा ब्रह्मरूपं
तं देवं चित्सभेशं परमतिमहसं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८८

88. வேதாந்தத்தில் வாக்கியரூபங்களும், பிர்மத்தின் ஸமீபத்தை அடைந்ததுகளுமான, (பிர்ம்ஹப்ரதிபாதகங்களான) உபநிஷத்துக்களில் யதியினால் (சங்கரபகவத்பூஜ்யபாதாசார்யாளால்) செய்யப்பட்ட மஹாபாஷ்யங்களோடு (விரிவான வடமொழி பொழிப்புரையோடு) கூடின 10 உபநிஷத்துக்கள் (ईशकेनकठप्रश्नमुण्डमाण्डूक्यतित्तिरिः। ऐतरेयंचछान्दोग्यं बृहदारण्यकंदश॥ என்பவைகள்) முக்கியங்களாகிறதுகள். (முதன்மை வாய்ந்ததுகள்) அவ்வுபநிஷத்துக்கள் தண்டாகாரஸ்வரத்துடன் (மேல்கீழ் இல்லாமல் நடுநிலைமையாக உச்சரித்தல் தண்டாகார ஸ்வரமாகும்) தன்னால் அறியப்பட்ட நடன விலாஸத்தை உடைய யாதொரு பிர்மஹரூபத்தை (பரமேச்வரனை) எப்பொழுதும் துதிக்கிறதுகளோ அப்படிப்பட்ட தேவரும், சித்ஸபேசரும், ச்ரேஷ்டரும், அதிக காந்தி உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

शाब्दे शास्त्रे फणीन्द्रैः प्रमिति फणितिषु श्रीकणादाक्षपादैः
वेदान्तेव्यासरूपैर्जिमिनसुतकृतौ भट्टकौमारतुल्यैः।
कल्पे बोधायनै स्तैश्श्रुतिषु विधिसमैः पूज्यते यो मुनीन्द्रैः
त्रैसाहस्रैस्सभायां तमपि गुरुवरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८९

89. வியாகரண சாஸ்திரத்தில் பதஞ்ஜலிகளும், தர்க்க சாஸ்திரத்தில் கணதர், அக்ஷபாதர் இவர்களும், வேதாந்தத்தில் வியாஸரூபர்களும், மீமாம்ஸையில் குமாரிலபட்டருக்கு ஒப்பானவர்களும், கல்பத்தில் போதாயன மஹரிஷிகளும், வேதங்களில் பிர்மாவுக்கு ஸமானர்களும், பிரஸித்தர்களும், மூவாயிரம் ஸங்கியை உள்ளவர்களுமான முனிவர்களினலே (தீக்ஷிதர்களினலே) யாதொரு பரமேச்வரரானவர் ஸபையில் பூஜிக்கப்படுகிறரோ அப்படிப்பட்ட குருச்ரேஷ்டரான குஞ்சிதாங்கிரிம்.

फआक्ष्या स्वस्यशक्त्या सहकृतनटनं फस्यशीर्षच्छिदन्तं
फालं फामं पुराणि स्वपदसरसिजात्फालनेत्रात्स्मिताच्च।
हत्वा ब्रह्मर्षि सूनुं सकलदिविषदश्चापि रक्षन्तमीशं
देवेड्यं चित्सभेशं दशशतवदनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९०

90. தாமரைமலர்போன்ற கண்ணை உடையவளும் தனக்கு சக்தியுமான அம்பிகையோடுகூட செய்யப்பட்ட தாண்டவத்தை உடையவரும், பிர்மாவினுடைய தலையை கொய்தவரும், பிரஸித்தமானவரும், யமன், மன்மதன், திரிபுரர்கள் இவர்களை தனது காலினலேயும், கண்ணினலேயும், சிரிப்பினலேயும் ஸம்ஹரித்து மார்கண்டேயரையும், ஸகல தேவர்களையும் ரக்ஷித்தவரும், ஈச்வரனும், தேவர்களினலே துதிக்கப்படுகிறவரும், சித்ஸபேசரும், 1000 முகங்களோடு கூடியவருமான குஞ்சிதாங்கிரிம். (மந்திர சாஸ்திரம் சிதம்பர கல்பத்தில் த்வனி மந்திர பிரகரணத்தில் 1000 முகங்களோடு கூடின உருவம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

यल्लिङ्गे ब्रह्मविष्णुप्रमुखसुरवरा भस्मरुद्राक्षभाजः
सस्त्रीकास्साम्बमूर्तिं सकलतनुभृतां सर्वदं सर्वरूपम्।
अभ्यर्च्याऽऽप्त्वेष्टसिद्धिं दिवि भुवि सकलैः सेव्यमाना बभूवुः
तं देवं चित्सभेशं विधिहुतहविषं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९१

91. யாதொரு பரமேச்வரஸ்வரூபமான லிங்கத்தில் பஸ்மருத்திராக்ஷதாரிகளும், தங்கள் ஸ்த்ரீகளோடு கூடியவர்களும், பிர்மா, விஷ்ணு இவர்களை முன்னிட்டவர்களுமான எல்லா தேவர்கள் அம்பிகையோடு கூடியவரும், ஸகல பிராணிகளுக்கு

ஸர்வத்தையும் அளிப்பவரும், எல்லா உருவமும் உள்ளவருமான யாதொரு பரமேச்வரனை பூஜைசெய்து தாங்கள் விரும்பின ஸித்தியை அடைந்து ஸ்வர்க்கத்திலும், பூமியிலும் எல்லோர்களாலேயும் ஸேவிக்கப்படுகிறவர்களாக ஆனார்களோ அப்படிப்பட்ட தேவரும், ஸித்ஸபேசரும், சாஸ்திரப் பிரகாரம் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸுகளை உடையவரும் (அக்கினிஸ்வரூபர்) ஆன குஞ்சிதாங்கிரிம்.

श्रद्धावन्तः श्रुतिज्ञाः परशिवकृपयाऽधीतशास्त्रादिविद्याः
व्यर्थां वाचं त्यजन्तः प्रतिदिनमसकृत्पूजयन्तः प्रभुं यम्।
कुर्वन्तः श्रौतकर्माण्यनितरसुलभान्यात्मबोधं लभन्ते
विप्रेन्द्राः स्वांशभूताः परशुमृगधरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९२

92. சிரத்தையோடு கூடினவர்களும், வேதங்களை அறிந்தவர்களும், பரமேச்வரனுடைய கிருபையால் கற்கப்பட்ட சாஸ்திரம் முதலிய வித்தைகளை உடையவர்களும், வியர்த்தமான வாக்கை விட்டவர்களும், வேள்விகளை செய்கிறவர்களும், தனது அம்சத்திலிருந்து உண்டானவர்களுமான யாதொரு பிராம்மணோத்தமர்கள் பிரபுவான யாதொரு பரமேச்வரனை ஒவ்வொரு நாளும் அடிக்கடி பூஜை செய்கிறவர்களாக இருந்துகொண்டு இதரர்களால் அடைய முடியாத ஆத்மஞானத்தை அடைகிறார்களோ அப்படிப்பட்ட பாசு, மான் இவைகளை தரித்தவருான குஞ்சிதாங்கிரிம்.

फाले भस्मत्रिपुण्ड्रं फणिनमपि गले पादपीठे च भूतं
बाह्वोर्वह्निञ्च ढक्कां वदनसरसिजे सूर्यचन्द्रौ शिखीन्द्रम्।
ओङ्काराख्यप्रभायां सुरभुवनगणं पार्श्वयोर्वाद्यकारौ
यः कृत्वाऽऽनन्दनृत्तं स्वसदसि कुरुते कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९३

93. யாதொரு பரமேச்வரானவர் நெற்றியில் விபூதி திருபுண்டரமும், கழுத்தில் ஸர்ப்பத்தையும், பாதபீடத்தில் முயலகனையும், இரண்டு கைகளில் அக்கினி, டமருகம் இவைகளையும் தாமரைப்பூப்போன்ற முகத்தில் சூர்யன், சந்திரன், அக்கினி இவர்களையும் ஓங்கார ரூபமான திருவாசியில் தேவ

லோகங்களையும் இரண்டு பக்கங்களிலும் வாத்தியம் வாசிக்கிறவர்களான பானுகோபன், பானுஸூரன் என்கிற இருவர்களையும் வைத்துக்கொண்டு தனது ஸபையில் ஆனந்த நடனத்தை செய்கிறரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सर्वेषां प्राणिनां यस्स्वपदसरसिजं पूजितुं पाणियुग्मं
स्वं द्रष्टुं लोचने द्वे स्वचरितमखिलं वक्तुमीशस्सुवाचम्।
स्वस्य प्रादक्षिणार्थं चरणयुगमपि ध्यानयोगाय चित्तं
दत्वा रक्षत्यजस्रं तमुदकमकुटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९४

94. யாதொரு பரமேச்வரனானவர் எல்லா பிராணிகளுக்கும் தனது திருவடியை பூஜை செய்வதற்கு இரண்டு கைகளையும் தன்னை பார்ப்பதற்கு இரண்டு கண்களையும், தனது சரித்திரங்கள் எல்லாவற்றையும் சொல்வதற்கு நல்ல வாக்கையும், தன்னை பிரதக்ஷணம் செய்வதற்கு இரண்டு கால்களையும், தியானம் செய்யவேண்டியதற்கு சித்தத்தையும் கொடுத்து எப்பொழுதும் ரக்ஷிக்கிறரோ அப்படிப்பட்ட ஜலத்தை மகுடமாக உள்ள (கங்கையை தரித்தவர்) குஞ்சிதாங்கிரிம்.

नाहं कर्ता च भोक्ता न च मम सुकरं दुष्करं कर्म किञ्चित्
धर्माधर्मौ च दुःखं सुखमपि करणं नैवमत्तः परोऽन्यः।
सोऽहं ब्रह्मास्मि नित्यो नहि जनिमरणे निर्वृतोऽहं सदेति
स्वान्ते पश्यन्ति बोधाद्यमपि यतिवराः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९५

95. நான் ஒன்றையும் செய்கிறவனல்ல. அனுபவிக்கிறவனும் அல்ல. எனக்கு ஸுலபமானதும் கொடூரமானதுமான கர்மாவானது கொஞ்சம்கூட இல்லை. தர்மமும் இல்லை. அதர்மமும் இல்லை. சுகம் துக்கம் இவைகளுக்கு காரணமும் இல்லை. என்னைக்காட்டிலும் வேறு ஒருவனும் இல்லை. அப்படிப்பட்ட நான் பிர்மமாக இருக்கிறேன். (இரண்டற கலந்திருத்தல்) நித்தியன். பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. எப்பொழுதும் நான் ஒழிவடைந்தவன். இவ்விதம் அறிவினல் ஸன்யாஸிச்ரேஷ்டர்கள் தனது ஹிருதயத்தில் யாதொரு பரமேச்வரனை பார்க்கிறர்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

गङ्गापाथोवहन्तं गजवदननुतं गन्धवाहस्वरूपं
गायत्रीवल्लभाख्यं नगपतितनुजास्वीकृतार्धाङ्गमीशम्।
गोविन्दान्वेषिताङ्घ्रिं गुरुवरवपुषं गोपतेः पृष्ठवासं
गौरीनाथं गुणीड्यं गिरिवरवसतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९६

96. கங்கையை தரித்தவரும், யானைமுகம் உள்ள விநாயகராலே (அவ்வாறுள்ள பிரமத கணங்களால்) துதிக்கப்படுகிறவரும், வாயு ஸ்வரூபரும், திரைவர்ணியர்களால் மூன்று காலங்களிலும் உபாஸிக்கப்படுகிற காயத்திரி என்னும் தேவிக்கு நாயகரும், பார்வதியினால் அங்கீகரிக்கப்பட்ட பாதி சரீர பாகத்தை உள்ளவரும், ஈசனும், மஹாவிஷ்ணுவினால் தேடப்பட்ட காலை உடையவரும், தெக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபரும், விருஷபத்தின் முதுகில் வஸிப்பவரும், கௌரிக்கு நாதரும், குணவான்களினாலே துதிக்கப்பட்டவரும், உயர்ந்த மலைகளில் வஸிப்பவரும் உள்ள குஞ்சிதாங்கிரிம்.

पद्माकारासनस्थं परमसुररिपुं पञ्चवक्त्रारविन्दं
पाण्डोः पुत्रार्चिताङ्घ्रिं पविधरविनुतं पार्वतीप्रेमपात्रम्।
पश्वीशं पीतरूपं परशुमुखधरं पञ्चवक्त्रारिमाद्यं
नृत्यन्तं चित्सभायां निटिलवरदृशं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९७

97. தாமரைபோன்ற ஆஸனத்தில் இருப்பவரும், ச்ரேஷ்டரும், அஸுரர்களுக்கு சத்துருவும், ஐந்து முகங்கள் உள்ளவரும், பாண்டுவின் புத்திரர்களால் அர்ச்சிக்கப்பட்ட பாதத்தை உடையவரும், வச்ராயுதம் தரித்த இந்திரனால் துதிக்கப்பட்டவரும், பார்வதியின் ஆசைக்குப் பாத்திரமானவரும், பசுக்களுக்கு ஈசரும், வெண்மைநிறம் உள்ளவரும், பரசு முதலிய (கோடாலி) ஆயுதங்களை தரிப்பவரும், நரஸிம்மரை சங்கரித்தவரும், (சரபரூபர்) ஆத்யரும், சித்ஸபையில் நடிப்பவரும், நெத்தியில் கண் உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

भीमस्वान्तार्चिताङ्घ्रिं भुजगवरधरं भोगमोक्षैकहेतुं
भक्तानां रक्षितारं भवभयजलधेस्तारकं भासमानम्।

भूषाभिर्भर्गमीशं भिषजमुपनिषद्वेदिनं भूतनाथं
ब्रह्मानन्दस्वरूपं भवमखिलतनुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९८

98. பீமஸேனனாலே மனதில் பூஜிக்கப்பட்ட சரணத்தை உடையவரும், உயர்ந்த சர்ப்பங்களை தரிப்பவரும், போக மோக்ஷங்களுக்கு முக்கிய காரணரும், பக்தர்களை ரக்ஷிப்பவரும், ஸம்ஸார ஸமுத்திரத்தில் இருந்து தாரணம் செய்துவைப்பவரும், ஆபரணங்களினாலே விளங்குபவரும், பர்கரும், ஈசனும், வைத்தியரும், உபநிஷத்துக்களினாலே அறியத்தகுந்தவரும், பூதங்களுக்கு நாதரும், பிரமானந்த ஸ்வரூபரும், பவரும், நாச மற்ற சரீரத்தை உடையவரும் (எல்லா சரீர ஸ்வரூபரும்) ஆன குஞ்சிதாங்கிரிம்.

शाटीपालाखिलाशापतिमुखविनुतं शङ्खपाण्यर्चिताङ्घ्रिं
शम्भुं शर्वं शिवेशं शशधरमकुटं शाकरेन्द्रे वसन्तम् ।
शोणाद्रीशं शुभाङ्गं शुककरशिवयाऽऽलिङ्गितं श्रौतगम्यं
नृत्यन्तं स्वर्णसंसद्यखिलनतपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९९

99. தனது வஸ்திரத்தை ஸம்ரக்ஷணை செய்கிற ஸமஸ்த திக்பதிகளை ஆதியாக உள்ள தேவர்களினாலே துதிக்கப்பட்டவரும், சங்கத்தை கையில் தரித்த விஷ்ணுவினால் பூஜிக்கப்பட்ட காலை உடையவரும், மங்களத்தை உண்டுபண்ணிவைப்பவரும், சர்வரும், அம்பிகைக்கு ஈசரும், சந்திரனை மகுடத்தில் உள்ளவரும், விருஷப பதியின்பேரில் வஸிப்பவரும், அருணாசலத்திற்கு ஈசரும், மங்களமான அங்கத்தை உடையவரும், கையில் கிளியை தரித்த அம்பிகையினால் ஆலிங்கனம் செய்யப்பட்டவரும், ச்ரௌதமார்க்கத்தினால் அடையத் தகுந்தவரும், (வேள்வி செய்யும் முறையை போதிக்கும் நூல்) தங்க ஸபையில் நடனம் பண்ணுபவரும், ஸகல பிராணிகளினாலேயும் நமஸ்கரிக்கப்பட்ட பாதத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

काञ्च्यां पृथ्वीशलिङ्गं जनिमजलमयं जम्बुकेशोऽस्तिनित्यं
शोणाद्रौ वह्निलिङ्गं वनचरपतिना पूजितं कालहस्तौ ।
वाय्वीशं तिल्ववन्यां त्रिशिखरमकुटे संस्थमाकाशलिङ्गं
यल्लिङ्गं सर्वमेतत्त्वमपि नटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १००

100. காஞ்சிபுரத்தில் மண்மயமான லிங்கமும், திருவானைக் காவலில் ஜலமயமான லிங்கமும், திருவண்ணாமலையில் அக்கினி மயமான லிங்கமும், காளஹஸ்தியில் கண்ணப்பனால் பூஜிக்கப் பட்ட வாயு லிங்கமும், தில்லைவனத்தில் திரிசிகாமகுடத்தில் விளங்குகிற ஆகாச லிங்கமும்; இந்த எல்லா லிங்கங்களும் யாதொரு பரமேச்வரனுககு அம்சபூதமான லிங்கங்களோ அப்படிப்பட்ட நடபதியான குஞ்சிதாங்கிரிய.

यस्मात्सर्वं चरं चाचरमपि समुत्पन्नमादौजगत्तत्
येनेदं रक्षितञ्चप्रविलयसमये लीयते यत्र सर्वम्।
तं देवं चित्सभायां अनवरतनटं ब्रह्मविष्णवादिगर्भं
तेजोरूपं त्रिकूटस्थितिजुषममलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०१

101. யாதொரு பரமேச்வரனிடம் இருந்து அசைகிறதும் அசையாததுமான எல்லாம் முதலில் உண்டானதோ அப்படிப் பட்ட இந்த உலகமானது யாதொரு பரமேச்வரனாலே ரக்ஷிக்கப் பட்டதோ, யாதொரு பரமேச்வரனிடத்தில் உலகமானது ஸம்ஹார காலத்தில் லயத்தை அடைகிறதோ அப்படிப்பட்ட வரும், தேவரும், சித்ஸபையில் எப்பொழுதும் நடனம் செய்ப வரும், பிர்மா விஷ்ணு முதலிய தேவர்களால் சூழப்பட்டவரும், காந்திரூபரும், திரிகூடத்தில் வஸிப்பவரும், (திரிகூடம் என்பது மந்திரம். அதில் அக்ஷரரூபமாக இருப்பவர். இது ஸ்ரீவித்யா உபாஸகர்களால் அறியத்தக்கது.) பரிசுத்தருமான குஞ்சிதாங்கிரிம்,

सृष्ट्यै ब्रह्माणमादौ हरिमथजगतां रक्षणायात्मरूपः
संहृत्यै रुद्रमूर्तिं त्वथनिखिलतिरोधानहेतोर्महेशम्।
तल्लोकानुग्रहार्थं हिमगिरितनयासक्तसादाख्यमूर्तिं
यस्सृष्ट्वाऽऽनन्द नृत्तं सदसिवितनुते कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०२

102. யாதொரு ஆத்மஸ்வரூபியான பரமேச்வரன் கல்பா ரம்ப காலத்தில் உலகங்களின் படைத்தலை முன்னிட்டு பிர்மாவையும், ரக்ஷணத்தின்பொருட்டு விஷ்ணுவையும்,

ஸம்ஹாரத்தின்பொருட்டு ருத்திரமூர்த்தியையும், திரோதானத்தின்பொருட்டு (மறைத்தல்) மஹேச்வரனையும், அனுக்கிரஹத்தின்பொருட்டு அம்பிகையோடுகூடிய ஸதாசிவமூர்த்தியையும் ஸ்ருஷ்டித்து (அவர்களிடம் அந்தந்த தொழிலை ஒப்புவித்து தான் அதில் ஸம்பந்தப்படாமல்) ஸபையில் ஆனந்தத் தாண்டவத்தை செய்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

त्र्यक्षं त्रैलोक्यवासं त्रिपुरविजयिनं त्रैगुणातीतरूपं
त्रेताग्निष्वग्निमूर्तिं त्रिशिखरिशिखरे राजमानं त्रिशक्तिम् ।
त्रैसाहस्रद्विजार्च्यं त्रिसृभिरपि सदा मूर्तिभिर्दृष्टनृत्तं
त्रैविद्यं चित्सभेशं निगममयतनुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०३

103. மூன்று கண்களை உடையவரும், மூன்று லோகங்களில் வஸிப்பவரும், திரிபுரனை ஜயித்தவரும், முக்குணம் கடந்த ரூப முள்ளவரும், எக்ஞவாடத்தில் உள்ள அக்கினி ஸ்வரூபரும், மூன்று சிகரங்களையுள்ள மலையின் உச்சியில் விளங்குபவரும், மூன்று சக்திகளோடு கூடியவரும், திருஸஹஸ்ர முனிச்வரர்களால் பூஜைசெய்யப்படுகிறவரும், மூன்று மூர்த்திகளால் எப்பொழுதும் பார்க்கப்பட்ட ஆனந்ததாண்டவத்தை உடையவரும், மூன்று வேதங்களை உள்ளவரும், சித்ஸபைக்கு ஈசனும், வேதஸ்வரூபனும் ஆன குஞ்சிதாங்கிரிம்.

धर्मं दत्वा जनानां डमरुकनिनदैरर्थमप्यग्निना यः
कामं दत्वाऽभयेन स्वपदसरसिजान्मोक्षरूपं पुमर्थम् ।
दत्वा लोकान् समस्तानवति नटपतिः नायकश्चित्सभायाः
तं देवं नृत्तमूर्तिं विसदृशचरितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०४

104. யாதொரு சித்ஸபாநாயகரான பரமேச்வரன் தமது டமருகத்தின் சப்தத்தினாலே உலகங்களுக்கு தர்மத்தையும், அக்னியினாலே அர்த்தத்தையும், அபயத்தினாலே காமத்தையும், தனது காலினால் மோக்ஷத்தையும் அளித்து ரக்ஷிக்கிறாரோ அப்படிப்பட்டவரும், நிர்த்தமூர்த்தியும், ஒப்பற்ற சரித்திரங்களை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

अन्धः कोशे विधाता गरुडवररथः प्राणकोशे च रुद्रः
चेतःकोशे महेशस्तदनुचवरविज्ञानकोशे सदाख्यः।
आनन्दाभिख्य कोशे लसति च सततं यस्यशम्भोः निदेशात्
तं देवं राजराजेश्वरवरसुहृदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०५

105. யாதொரு சம்புவான பரமேச்வரனின் ஆணையால் அன்னமயகோசத்தில் பிர்மாவும், பிராணமயகோசத்தில் விஷ்ணுவும், மனோமயகோசத்தில் ருத்திரனும், விக்ஞானமயகோசத்தில் மஹேச்வரனும், ஆனந்தமயகோசத்தில் ஸதாசிவனும் விளங்குகின்றார்களோ அப்படிப்பட்ட தேவரும், குபேரனை தோழனாக உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

धृत्वा यः सर्वदेशः पदजलजमुखे श्रेष्ठमुक्तालिमङ्गे
सौवर्णं कञ्चुकञ्च प्रथितमणिचितं भूषणं दिव्यवस्त्रम्।
नृत्तं कृत्वाऽऽगतानां सकलतनुभृतां धर्ममुख्यान्पुमार्थान्
दत्वा रक्षत्यनादिमुनिकृतयजनः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०६

106. யாதொரு பரமேச்வரனானவர் எப்பொழுதும் காலிலும், கழுத்திலும், முகத்திலும், அங்கங்களிலும், உயர்ந்த முத்துக்களையும், ஸ்வர்ண கவசத்தையும், நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட ஆபரணங்களையும், அழகுவாய்ந்த வஸ்திரங்களையும் தரித்துக்கொண்டு நடனத்தை செய்து தன்னை சரணமாக அடைந்தவர்களான பிராணிகளுக்கு தர்மத்தை ஆதியாக உள்ள புருஷார்த்தங்களை அளித்து ரக்ஷிக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

शिष्याणां वेदबाह्यस्थितिमधिजुषतां बोधनार्थं पठन्तः
चर्यायोगाङ्घ्रिभेदप्रकटितविभवान्कामिकाद्यागमांस्तान्।
भूदेवा वाजपेयक्रतुगतनृपतिप्रोद्धृतोद्दामशुक्ल
छत्रायं पूजयन्ति श्रुतिपथविधिना कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०७

107. வேதமார்க்கத்திற்கு புறம்பினர்களான சிஷ்யர்களுக்கு போதித்தலின்பொருட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நான்கு பாதங்களோடு கூடின காமிகம் முதல்

வாதுளம் இறுதியான 28 ஆகமங்களை படிப்பவர்களும், வாஜபேயம் என்கிற யக்ஞத்தை செய்யும் தருணம் அரசர்களால் பிடிப்பிடிக்கப்பட்ட வெண்குடைகளை உடையவர்களுமான பூதேவர்கள் (திருஸஹஸ்ரமுனீச்வரர்கள்) சுருதியில் சொல்லப்பட்ட விதியினாலே யாதொரு பரமேச்வரனை பூஜை செய்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

वेदान्तोद्गीतरूपं ज्वलनडमरुकौधारयन्तं कराभ्यां
अन्याभ्यां डोलमुद्रामभयमपि सदापस्मृतौ दक्षपादम्।
विन्यस्याकुञ्चितेन प्रणमदखिलदं वामपादेननित्यं
देव्यासाकं सभायां रचयति नटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०८

108. வேதாந்தத்தில் சொல்லப்பட்ட ரூபத்தை உடையவரும் இரண்டு கைகளினால் அக்கினியையும், டமருகத்தையும் தரிப்பவரும், மற்ற இரண்டு கைகளினால் டோளமுத்திரையையும், அபய முத்திரையையும் தரிப்பவரும் வலது காலை முயலகன் மேல் ஊன்றி, வணங்கினவர்களுக்கு கொஞ்சம் தூக்கி வளைக்கப்பட்ட இடதுகாலினால் இஷ்டத்தை அளிப்பவரும், தேவியோடு கூட ஸபையில் நடனம் பண்ணுகிறவருமான குஞ்சிதாங்கிரிம்.

आमन्वश्रं सुदीप्तां निजतनुमभितस्सत्यरूपप्रभान्तः
वामे युक्तंस्वशक्त्या वसुदलकमलस्वार्णकिञ्जल्कशोभम्।
व्याप्तं साहस्रकोष्ठस्थितशिवमनुभिर्मोहनाद्यैः यदीयं
चक्रं संपूजयन्ति प्रतिदिनमनघाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०९

இந்த சிலோகத்தினால் சிதம்பர யந்திரத்தின் பிரஸ்தாரத்தை விளக்குகிறார்.

109. பதினான்குகோணம் வரையில் (அதாவது ஸ்ரீசக்கரத்தின் மன்வச்ரம் வரையில்) வியாபித்து விளங்குகிற தனது உருவத்திற்கு நான்கு பக்கங்களிலேயும் சூழப்பட்ட ஓங்கார வட்டரூபமான பிரபாவளியின் இடதுபாகத்தில் அம்பிகையின் உருவம் உள்ளதும், எட்டு தாமரை இதழில் அமைக்கப்பட்ட தனது (சிதம்பர) மந்திரத்தின் அக்ஷரங்களோடுகூடின கிஞ்சல்கங்களினால் விளங்குகிறதும், மோஹனம் முதலிய பேதங்களோடு 1000 வீடுகளில் வரையப்பட்ட பஞ்சாக்ஷரங்களினால்

வியாபித்தருமான யாதொரு பரமேச்வரனுடைய யந்திரத்தை ஒவ்வொருநாளும் பரிசுத்தர்களான முனிவர்கள் பூஜை செய்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:- ஆரம்பத்தில் 1, 2 சுலோகங்களில் ஸ்ரீசிதம்பர யந்திரத்தை பரவஞ யந்திரமென்றும், அது தங்க தகட்டில் உள்ளது என்றும், இந்த சுலோகத்தில் அச்சிதம்பர யந்திரத்தின் பிரஸ்தார கிரமத்தையும் விளக்கினபடியால் அந்த யந்திரம் தங்க தகட்டில் இவ்விதப் பிரஸ்தாரத்தால் வரையப்பட்டதாக முனிவர்களால் கருதப்பட்டது என்று தாத்பர்யம். அதனால் அங்கு தங்கம் முதலிய தகட்டிலோ அல்லது அச்சுவற்றிலோ வரையப்பட்ட யந்திரம் இல்லை என்பது தெளிவு. இந்த யந்திரத்தின் பிரஸ்தாரங்கள் அனேகப் பிரகாரங்களாக வடமொழி மந்திர சாஸ்திரங்களிலும், தென்மொழி ஸித்தர்களின் நூல்களிலும் கூறப்பட்டிருந்தபோதிலும் இக்கிரந்தாசாரியர் பூஜா பாதஞ்ஜலத்தில் உரைத்த யந்திரத்தையே இங்கு விளக்கியுள்ளார். யந்திர பூஜையால் பரமனைக்காண்பது ஸுலபமாகும்.

அஞ்செழுத் தாலே யமர்ந்தன னந்தியு
மஞ்செழுத் தாலே யமர்ந்தபஞ் சாக்கர
மஞ்செழுத் தாகிய வக்கர சக்கர
மஞ்செழுத் துள்ளே யமர்ந்திருந் தானே.

கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற்
கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினர்
கூத்தனொ டொன்றிய கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணுங் குறியது வாமே. 4-2—21, 22.

என்று திருமூலர் வாக்கும் வலியுறுத்துகிறது.

त्रैचत्वारिंशदस्रे वसुनृपकमले वृत्तभूचक्रमध्ये
बिन्दौ सन्तानकल्पद्रुमनिकरयुते रत्नसौधेमनोज्ञे।
ब्रह्माद्याकारपादे शिवमयफलकेस्वर्णमञ्चे निषण्णो
देव्यायः पूज्यते तं हरिमुखविबुधैः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११०

இந்த சுலோகத்தினால் ஸ்ரீ சக்ரத்திலும், ஸ்ரீ வித்யோபாஸகர்களால் பூஜிக்கப்படுபவர் ஸ்ரீ நடராஜமூர்த்தியே என்பதை விளக்குகிறார்.

110. நாற்பத்திமூன்று கோணங்களோடு கூடினதும், எட்டு, பதினாறு இதழ்களோடு கூடினதும் 3 விருத்தம், 3 பூ ரேகை இவைகளோடு கூடினதுமான ஸ்ரீசக்ரத்தின் நடுவிலுள்ள பிந்துவில், (ஸ்தானவிசேஷம்) ஸந்தானகல்பத்ருமங்களோடு கூடினதும் மனோஹரமான ரத்தினங்களினால் இழைக்கப் பட்டதுமான ஒப்பரிகையில் பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேச்வரன் இவர்களின் ஸ்வரூபமான நான்கு கால்கள் உள்ள தும், ஸதாசிவமயமான மேல் விரிப்பு பலகையோடு கூடினது மான, தங்கமயமான மஞ்சத்தில் தேவியோடுகூட விளங்குப வரான யாதொரு பரமேச்வரன் ஹரியை ஆதியாய் உள்ள தேவர்களினாலே பூஜிக்கப்படுகிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यल्लीलारब्धनृत्त प्रसृतवरजटाजूटसम्मर्दवेग
प्रोद्यत्स्वर्गापगाम्भोजनितकणगणा यत्र यत्र प्रपेतुः।
तेष्वासंस्तत्र तत्र स्वजनिसमुखरामूर्तयः क्षेत्रराजे
तं देवं नन्दिमुख्यप्रमथगणवृतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १११

84வது சுலோகத்தில் சொன்ன அம்சி என்பதைத் தழுவி இச்சுலோகத்தால் மற்ற க்ஷேத்திரங்களில் உள்ள மூர்த்திகள் அம்சங்கள் என்று விளக்குகிறார்.

111. யாதொரு பரமேச்வரனுடைய விளையாட்டினால் ஆரம்பிக்கப்பட்ட நடனத்தில் அவிழ்ந்துபோன ச்ரேஷ்டமான ஜடையின் கட்டுனுடைய உரச்சலின் வேகத்தினால் வெளிக் கிளம்பின கங்கையின் ஜலத்திலிருந்து உண்டான திவலைகளின் கூட்டங்கள் எந்தந்த ஸ்தலங்களில் விழுந்தனவோ அந்தந்த ஸ்தலங்களில் அவைகள் லிங்கங்களும், மூர்த்திகளாகவும் ஆனது களோ அப்படிப்பட்ட தேவரும், நந்தியை ஆதியாக உள்ள பிரமதகணங்களினாலே சூழப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:- இதர க்ஷேத்திரங்களில் உள்ள எல்லா உருவங் களுக்கு ஸ்ரீ நடராஜமூர்த்தியே அம்சியாக ஆனார் என்பதே இச் சுலோகத்தின் முக்கிய கருத்து. இதை ஸ்ரீ நடராஜரின் ஸஹஸ்ர

நாமத்திலுள்ள स्वानन्यः स्वांशिताखिलः। என்கிற நாமாவும் வலி உறுத்துகிறது. அந்நாமாவின் வடமொழி சிந்தாமணி என்கிற வியாக்யானத்தில் இவ்விஷயத்தை நான் நன்கு உபந்யஸித்தும் இருக்கிறேன்.

श्रीविद्याषोडशार्णैर्मिलितमपि तथापञ्चवर्णैः कुमारी
बीजैर्यन्मन्त्रराजं मुहुरजकमलानाथरुद्रेशशर्वाः।
जप्त्वा संसृष्टिरक्षालयसकलतिरोधानकानुग्रहाद्याः
सिद्धीरापुस्तमीशं शुभकरनयनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११२

இந்த சுலோகத்தில் சிதம்பர மந்திரத்தை விளக்குகிறார்.

112. ஸ்ரீவித்யா, மஹாஷோடசாக்ஷரி, பஞ்சாக்ஷரம், பாலா மந்திரம் இவைகளோடு சேர்ந்ததான யாதொரு நடராஜமூர்த்தியின் மந்திரத்தை (श्रीमच्चिदम्बरसम्मेलन सभानटमहाविद्या என்கிற சிதம்பர மந்திரத்தை) அடிக்கடி பிர்மா, விஷ்ணு ருத்திரன், மஹேச்வரன், ஸதாசிவன் இவர்கள் ஜபித்து (ஜப்த்வா என்பது ஜபித்வா என்பதே மஹாகவி பிரயோகம்) ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் இவைகளை ஆதியாக உள்ள ஸித்திகளை அடைந்தார்களோ அப்படிப்பட்ட ஈசனும், மங்களத்தை செய்கிற நேத்திரங்களை உடையவருமான குஞ்சிதாங்கிரிம். (இம்மந்திரோத்தாரக் கிரமம் தஹரவித்யா கண்டத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது. குரு முகத்தால் அறியத்தகுந்தது. இம்மந்திரத்தைத்தான் ஆதியில் ஆவுடையார் கோயிலில் பகவான் மணிவாசகருக்கு உபதேசித்தருளினர் என்று கூறுகிறார்கள்.)

यस्याहुर्नृत्तमूर्तेः श्रुतिहृदयविदश्शक्तिमेकामपीज्यां
कालीं कोपे च दुर्गां युधि जगदवनेविष्णुरूपां भवानीम्।
भोगे ज्ञानक्रियेच्छामयविविधतनुं सर्वसंहारकाले
स्वान्तर्लीनां प्रसन्नां तमभिमुखस्तुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११३

113. வேதங்களின் ரஹஸ்யத்தை அறிந்த பெரியோர்கள் யாதொரு நடராஜமூர்த்திக்கு பூஜ்யையான சக்தியானவள் ஒருவளாக இருந்தபொழுதிலும் கோபமுள்ள ஸமயத்தில் காளி

என்றும், யுத்தகாலத்தில் துர்க்கை என்றும், உலகத்தை ரக்ஷிக்கிற ஸமயத்தில் விஷ்ணுவென்றும், க்ரீடைசெய்கிற காலத்தில் பவானி என்றும், பின்னும் ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சா சக்தி என்கிற அனேக பேதங்கள் உள்ளவளாகவும், உலகத்தை ஸம்ஹரிக்கும் காலத்தில் பரமேச்வரனிடத்தில் மறைந்தவளாகவும் சொல்லுகிறார்களோ அப்படிப்பட்ட பிரஸன்னரும், வினாயகரை புத்திரராக உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

श्रीहीराल्लब्धचिन्तामणि मनुमनुसन्धाय निर्जीवदेहे
मातुर्मामल्लदेव्या निशि विगतभयो हर्षनामोपविश्य।
विप्रः श्रीरुद्रभूमौ यदधिककृपया मातरं सर्वविद्यां
सिद्धीरन्याश्च लेभे करधृतडमरुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११४

114. ஹர்ஷர் என்று பெயருள்ள ஓர் பிராம்மணர் (தனது தந்தையான) ஸ்ரீஹீரர் என்பவரிடமிருந்து அடையப்பட்ட (உபதேசம் பெறப்பெற்ற) சிந்தாமணி என்று பெயருள்ள ஏகாக்ஷர சிதம்பர மந்திரத்தை ருத்திர பூமியில் இரவில் பயமற்றவராய் இறந்துபோன தனது தாயாரான மாமல்லதேவி என்பவளின் சரீரத்தின்மேல் உட்கார்ந்து கொண்டு ஜபம் செய்தார். அதனால் ஸந்துஷ்டரான யாதொரு பரமேச்வரரின் கிருபையால் தனது இறந்துபோன தாயாரையும் ஸகலவித்தைகளையும் மற்றும் பல ஸித்திகளையும் அடைந்தாரோ அப்படிபட்ட கையில் தரிக்கப்பட்ட டமருகத்தை உடையவரான குஞ்சிதாங்கிரிம்.

गङ्गामाहर्तुकामे कपिलमुनितपोवह्निसंदग्धदेहान्
स्वर्गं नेतुं पितॄन्स्वान्यजति रघुपतौ यः पुरस्तादुदेत्य।
गां व्योम्नः पतन्तीं स्वशिरसि कणिकासन्निभां तां निरुध्य
स्तुत्याराद्धः पृथिव्यां व्यसृजदनुपमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११५

115. பகீரதன் என்பவன் கபிலமுனியின் தபோக்கினியில் பொசுக்கப்பட்ட சரீரங்களையுடைய தனது பிதுர்களான ஸகரர்களை ஸ்வர்க்கத்தை அடைவிக்கவேண்டி ஸ்வர்க்க லோகத்தில் உள்ள கங்கையை பூமியில் வீழ்த்த இச்சை உள்ளவனாய் தபசு செய்யும்பொழுது யாதொரு பரமேச்வரன் அவன் முன்பாக

தோன்றி ஆகாசத்தில் இருந்து கர்வத்தோடு கீழே விழ்கிற வளான கங்கையை தனது சிரஸில் திவிலைக்கு ஒப்பாக தரித்து பிறகு அப் பகீரதனின் ஸ்தோத்திரத்தினுல் பூமியில் விட்டாரோ அப்படிப்பட்ட ஒப்பற்றவரான குஞ்சிதாங்கிரிம்.

वंश्यः काकुत्स्थराज्ञः दशरथनृपतिः यस्यपुत्रप्रदेष्टिं
क्षेत्रे कृत्वा वसिष्ठप्रमुखवचनतः सश्रियं पञ्चवर्णम् ।
जप्त्वा वर्षं वसित्वा सदसि नटपतेः दर्शनाद्रामपूर्वान्
विष्णोरंशान्सुपुत्रानभजदघहरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ११६

116. யாதொரு பரமேச்வரனின் க்ஷேத்திரமான சிதம்பரத்தில் காகுஸ்தன் என்கிற அரசனுடைய வம்சத்தில் உண்டான தசரதன் என்கிற ஓர் அரசன் புத்திரப்பேரை அளிக்கிற வேள்வியை வஸிஷ்டர் முதலிய முனிவர்களின் வாக்கியத்தால் அனுஷ்டித்து ஸ்ரீ பீஜத்தோடு கூடின பஞ்சாக்ஷரத்தை ஜபித்து ஒரு வருஷகாலம் அங்கு வஸித்து ஸபையில் நடராஜமூர்த்தியை தரிசித்து நடராஜமூர்த்தியின் அனுகிரஹத்தால் விஷ்ணுவின் அம்சம் தாங்கின ராமன் முதலான குமாரர்களை அடைந்தானே அப்படிப்பட்ட பாபத்தை போக்கடிப்பவரான குஞ்சிதாங்கிரிம். (இவ்விதம் தில்லைவன மாஹாத்மியம் என்னும் புராணத்தில் கூறப்படுகிறது.)

कुम्भोद्भूतोपदेशाद्वनभुवि विरजाहोमसम्भूतभूत्यां
आसीनं सोढसीताविरहमपिसदावेदसारं सहस्रम् ।
नाम्नामावर्तयन्तं दशरथतनयं वीतशोकंव्यतानीत्
गीतावाक्यैर्य ईशः स्वशरमपि ददौ कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ११७

117. அகஸ்தியருடைய உபதேசத்தால் தண்டகாரண்யம் என்ற வனத்தில் விரஜா ஹோமத்தினுல் உண்டான விபூதியில் உட்கார்ந்துகொண்டவரும், ஸீதா விரஹத்தோடு கூடியவரும், வேதஸார சிவஸஹஸ்ரநாமஸ்தோத்திரத்தை பாராயணம் செய்பவரும் தசரதரின் புத்திரருமான ராமரை யாதொரு பரமேச்வரானவர் சிவகீதோபதேசத்தினுல் சோகமற்றவராக செய்தாரோ, தனது பாசுபதாஸ்திரத்தையும் கொடுத்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

गन्धर्व श्चित्रसेनस्सुरपतिवचनात्तिल्वकान्तारमध्ये
नृत्यन्तं चित्सभायां गिरिवरतनयापाङ्गदुग्धाब्धिचन्द्रम्।
शम्भुं नत्वा मुहुर्यत्करडमरुरवाधीतसङ्गीतविद्या
सिद्धान्तोऽभूत्तमीशं सुरगणविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११८

118. சித்திரஸேனன் என்கிற கந்தருவன் தேவேந்திரனுடைய வார்த்தையால் தில்லைவன மத்தியில் சித்ஸபையில் நடனம் பண்ணுபவரும், அம்பிகையின் கடைக்கண் பார்வையாகிற பால் கடலுக்கு சந்திரன் போன்றவருமான சம்புவான பரமேச்வரனை அடிக்கடி நமஸ்கரித்து யாதொரு பரமேச்வரனுடைய கையில் உள்ள டமருகத்தின் ஒலியில் இருந்து அறியப் பட்ட ஸங்கீத சாஸ்திரத்தை உடையவனாக ஆனானோ அப்படிப் பட்ட ஈசனும், தேவகூட்டங்களினால் துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

यन्नृत्तं द्रष्टुकामा रविशशिमुखरास्स्वाभिधानैर्गृहेशाः
लिङ्गान्संस्थाप्य गङ्गातटवरनिकटे पूजयित्वासभायाम्।
तेजोरूपं च लास्यं बहिरिव हृदये संततं चिन्तयन्तः
वासं चक्रुस्तमीशं निखिलतनुमयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११९

119. யாதொரு பரமேச்வரனுடைய நடனத்தை தெரிசிக்க வேண்டி சூரியனை ஆதியாக உள்ள கிரஹங்கள் ஒன்பதுபேர்களும் தங்கள் பெயர்களினாலே லிங்கங்கள் ஒன்பதை சிவகங்கையின் கரைக்கு சமீபத்தில் ஸ்தாபித்து பூஜை செய்து ஸபையில் தேஜோரூபமான தாண்டவத்தை வெளியில் போல ஹிருதயத்திலும் எப்பொழுதும் தியானம் பண்ணுகிறவர்களாக இருந்து கொண்டு க்ஷேத்திரவாஸத்தை செய்தார்களோ அப்படிப்பட்ட ஈசனும், எல்லா சரீர ஸ்வரூபருமான குஞ்சிதாங்கிரிம்.

श्रीविद्यां संजपन्तो बहुदिनमसकृद्धेहयग्रीवकुम्भो
द्भूतप्रष्ठ.मुनीन्द्राः पराशक्ममोहपीं पाशकोदण्ड हस्ताम्।
साक्षात्कृत्याथ तद्वागमृतजनिमयद्देवमन्त्रप्रभावात्
नृत्तंदृष्ट्वाऽऽत्मबोधं सुखकरमभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२०

120. வெகுகாலம் அடிக்கடி ஸ்ரீவித்யா மந்திரத்தை ஜபிக்கிறவர்களான ஹயக்ரீவர், அகஸ்தியர் முதலிய முனிவர்கள் பாச, கோதண்டத்தை கையில் உள்ள பரமேச்வர பத்னியான திருபுரஸுந்தரியை நேரில் தெரிசித்து பிறகு அத்தேவியின் அமிருதம்போன்ற வாக்கில் இருந்து வெளிவந்த யாதொரு பரமேச்வரனுடைய மந்திரத்தின் உபாஸனை பிரபாவத்தினால் நடனத்தை தரிசித்து ஸுகத்தை செய்கிறதான ஆத்மஞானத்தை அடைந்தார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

गीत्यां संदिह्यमानः कलहरसिकहृन्नारदाख्यस्सुरर्षिः
धातुर्वाक्येन गत्वा यदमलनिलयं मन्त्रयोगान्महेशम्।
प्रत्यक्षीकृत्य ढक्कोद्भवसरिगमपाधानिवर्णान्द्विषट्कान्
बुध्वागायन्सवीणः सदसिवसतितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२१

இச்சுலோகத்தில் ஸங்கீத ஸ்வரங்கள் நிர்ணயம் செய்யப்படுகிறதுகள்.

121. கலஹப்பிரியருன நாரதர் என்கிற தேவமுனிவர் ஸங்கீத வித்யா தந்திரத்திலுள்ள ஸ்வரங்களின் பேதங்களில் ஸந்தேகத்துடன் (தனது தந்தையான பிர்மதேவரை அணுகி வணங்கி ஸங்கீத ஸ்வரங்களின் பேதங்களை நிர்ணயம் செய்து உபதேசித்தருள வேண்டுமென்று விண்ணப்பம் செய்ய அது கேட்டு அப்பிர்மதேவர் पशुर्वेत्ति शिशुर्वेत्ति वेत्ति गानरसंफणी। सङ्गीतरसचातुर्यं शङ्करोवेत्ति नापरः॥ என்று கூறப்பட்டிருக்கிற படியால் பரமேச்வரனால் தான் அது நிர்ணயிக்கக்கூடும் ஆகையால் நீ புலியிலுள்ள ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்ரீ நடராஜரை உபாஸிப்பாயானல் அவரருளால் அவை நன்கு உனக்கு புலன்படும். ஆகையால் சிதம்பரம் அடைவாயாக என்று கட்டளையிட்டருள) அக்கட்டளையால் யாதொரு பரமேச்வரனுடைய பரிசுத்தமான நிலயத்தை (ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தை) அடைந்து அங்கு மந்திரயோகத்தினால் (மந்திரயோகமாவது மூலாதாரம் முதலிய ஸ்தானங்களில் ஸ்ரீ நடராஜரை தியானித்து அந்தந்த மந்திரங்களை ஆவர்த்தி செய்தல். இது தஹரவித்யா கண்டத்தில் விஸ்தாரமாக கூறப்பட்டுள்ளது) நீண்டகாலம் உபாஸித்து ஸ்ரீ நடராஜரை நேரில் தரிசித்து அவரது உடுக்கையிலிருந்து உண்டான स रि ग म प ध नि என்கிற ஸ்வரங்களை

பனிரண்டு பேதம் உள்ளவைகளாக அறிந்து தனது வீணையில் அவ்விதம் இசைத்து பாடிக்கொண்டு (யாதொரு நடராஜருக்கு முன்பாக) ஸபையில் வஸிக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு :- चिदम्बररहस्ये

आदौ श्रीनटराजमूर्तिमसकृन्नत्वा मुनिर्नारदः तद्धस्ताम्बुजचञ्चलड्डमरुकाज्जातौ स्वरौयौसपौ। ताभ्यां युग्मगपञ्चकस्वरवरान्जातान् रिगामाधनीन् ज्ञात्वा द्वादशसुस्वरैः परिमितं सङ्गीतशास्त्रं दधौ॥ इति॥ முன்னொரு காலத்தில் நாரதர் ஸ்ரீநடராஜரை மிகவும் வணங்கி அவர் கையிலுள்ள உடுக்கையிலிருந்து முதலில் உண்டான ஸப என்கிற இரண்டு ஸ்வரங்களையும், பிறகு அவ்விரண்டு ஸ்வரங்களிலிருந்து இரட்டிப்பாக இருக்கும் தன்மையை அடைந்ததுகளான ரி க ம த நீ என்கிற ஸ்வரங்களையும் அறிந்து, ஸங்கீத சாஸ்திரத்தை பனிரெண்டு ஸ்வரங்களால் பூரணம் செய்யப் பட்டதாக நிச்சயம் செய்தார்.

समेशढक्कोद्भविनौषनान्तौ सङ्गीतविद्याप्रकृतिस्वरौद्वौ। रिगौमधौनिः प्रभवाश्चताभ्यां द्वौद्वौस्वरौ प्राप्यदशत्वमापुः॥ इति॥ सरिगमपधनीनां सप्तगीतस्वराणां प्रकृतिरदमवाप्तौ षान्तनान्तौ स्वरौद्वौ। रिगमधनिरदशत्वं प्राप ते सप्तवर्णाः प्रकृतिविकृतियुक्ता द्वादशाऽऽद्याः स्वरास्स्युः॥ इतिच॥ இவ்விரண்டு சுலோகங்களினுலேயும் ஸங்கீத ஸ்வரங்கள் ஸ்ரீநடராஜரின் உடுக்கையிலிருந்து உண்டானவைகள் என்றும் கூறப்பட்டதுகளே. ஸப என்கிற இரண்டு பிரகிருதி ஸ்வரங்கள் முந்தி உண்டாகி பிறகு அந்த இரண்டு ஸ்வரங்களில் இருந்து ரி க ம த நீ என்கிற விகிருதி ஸ்வரங்கள் உண்டானதுகள் என்று கூறப்பட்டு இருந்தபோதிலும் பரம்பரு ஸம்பந்தத்தால் எல்லா ஸ்வரங்களும் உடுக்கையில் இருந்து உண்டானவைகளே.

यड्ढकानिनदोद्भवान् सरिरिगागासामपाधाधनी नीन्शुद्धान् विकृतींश्च रूपगणितान्गीतिस्वरान्नायकान्। रेफाङ्काश्श्रुतयः कलारय खुटीगोराङ्गखेटाखमित्युद्धृतात्मविभागशश्च सुतरां प्रापुः क्रमात्सोऽवतात्॥ इति शिवशङ्कर दीक्षितः॥ (இ-ள்) யாதொரு நடராஜரின்

உடுக்கை ஒலியில் உண்டானதுகளும் பிரகிருதிகளும், விகிருதிகளும் பனிரண்டு பேதங்களை அடைந்ததுகளும் (அதாவது ஸப என்கிற ஷட்ஜம், பஞ்சமம் இவ்விரண்டும் பேதமற்றதுகள். மற்ற ரி க ம த நீ என்கிற ரிஷப, காந்தார, மத்யம, தைவத, நிஷாதங்கள் தனித்தனி இரண்டுவிதம் உள்ளவைகள்). நாயகர் களுமான ஸ்வரங்களை 22 சுருதிகள் 1 3 2 1 2 1 3 1 3 2 1 2 இவ்வித விபாகங்களோடு மிகவும் வரிசையாக அடைந்ததுகளோ அப்படிப்பட்ட நடராஜர் ரக்ஷிக்கட்டும்.) இவ்விதம் தில்லை வாழ்ந்தணரும் ஸங்கீதத்தில் பல இசைகளை இயற்றியவருமான சிவசங்கர தீக்ஷிதர் என்கிற பெரியோரின் வாக்கினாலும் ஸ்வரங்கள் 12 என்றும் அவைகள் ஸ்ரீநடராஜரின் உடுக்கையில் இருந்து உண்டானவைகள் என்றும் வலியுருத்தப்பட்டதுகளே. (இந்த ஸ்ரீசிவசங்கர தீக்ஷிதர் நந்தனர் சரித்திர கீர்த்தனாசாரியருன ஸ்ரீகோபாலகிருஷ்ணபாரதியின் ஸமகாலத்தில் விளங்கினவர் என்றும் தெரியப்படுகிறது.)

(सङ्गीतरत्नाकरे षष्ठे वाद्याध्याये) स्निग्धता घनतारक्तिः व्यक्तिः प्रचुरता ध्वनेः। लालित्यं कोमलत्वं च नादानुरणनं तथा। त्रिस्थानत्वं श्रावकत्वं माधुर्यं सावधानता। द्वादशैतगुणाः प्रोक्ताः फूत्कारे सूरिशार्ङ्गिणा॥ इति फूत्काराङ्कितानां द्वादशस्वराणां क्रमाद्द्वादश गुणा उक्ताः॥ (பூத்காரம் என்று பெயருள்ள பனிரெண்டு ஸ்வரங்களுக்கு வரிசையாக பனிரண்டு குணங்கள் சொல்லப் பட்டதுகள்). यड्ढक्कोद्भवसूत्रजालमनघं स्मृत्वा पुरापाणिनिः काणादश्च पतञ्जलिश्च भगवाञ्श्रीजैमिनिर्नारदः। व्याघ्राङ्घ्रिस्सनकादयो धीषणयाऽकुर्वन्सुशब्दावलिं तर्कं योगवितानगीतियजनान्यद्वैतभावं परम्॥ इति॥ இச்சுலோகத்தில் ஸங்கீத சாஸ்திரம் ஒன்று நாரத முனிவரால் இயற்றப்பட்டது என்றும் அதற்கு மூலம் ஸ்ரீநடராஜரின் உடுக்கையின் ஒலி என்றும் கூறப்பட்டுள்ளது. அதிகம் விளக்கில் விரியும்.

पाठीनाकारभाजं फणिभुवनसमानीतवेदासुरघ्नं
पुच्छाघातप्रशान्ताम्बुनिधिशिखिशिखं पर्वतेन्द्रानुकल्पम्।
विष्णुं दृष्ट्वातिभीत्या विबुधपरिवृढैस्स्तूयमानः कपाली
यस्तं निघ्नञ्जहारद्विनयनमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२२

இது முதல் 5 சுலோகங்களால் விஷ்ணுவின் ஐந்து அவதார நிக்ரஹத்தை வர்ணிக்கிறார்.

122. பெரிய மச்ச உருக்கொண்டவரும் பாதாளலோகத்திற்கு கொண்டுபோன வேதங்களை உடைய அஸுரனை (ஸோமகன் என்பவனை) ஸம்ஹரித்தவரும் வால் அடித்தலால் அணைக்கப்பட்ட ஸமுத்திர மத்தியில் உள்ள வடவாமுகாக்னியை உடையவரும், மலைக்கு ஒப்பானவருமான விஷ்ணுவைபார்த்து மிகவும் பயமடைந்த தேவச்ரேஷ்டர்களினாலே துதிக்கப்பட்ட யாதொரு கபாலியான பரமேச்வரன் அவ்விஷ்ணுவை நிக்ரஹம் செய்து அவருடைய இரண்டு கண்களையும் அபகரித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

भीमं पीताम्बुराशिं कमठवरतनुं कालकूठोपमाग्नि
ज्वालासन्दिग्धवक्त्रं जगदपिनिखिलं क्षोभयन्तं स्वकृत्यैः।
ब्रह्माद्यैरप्यजय्यं हरिमधिवसुधं कर्षयन्यस्तदीयान्
अङ्गान् कण्ठेदधौ तं निखिलसुरनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२३

123. பயங்கரரும் ஸமுத்திரத்தை பானம் பண்ணினவரும், ஆமையின் ரூபத்தை தாங்கினவரும், காளகூடத்திற்கு ஒப்பான அக்கினி ஜ்வாலைகளோடுகூடின முகம் உள்ளவரும் தனது துஷ்கிருத்தியத்தினால் எல்லா உலகத்தையும் ஹிம்ஸிக்கிறவரும் பிர்மன் முதலிய தேவர்களாலும்கூட ஜயிக்கக்கூடாதவரும் ஆன ஹரியை யாதொரு பரமேச்வரன் பூமியில் இழுத்து அவருடைய அங்கங்களை கண்டத்தில் ஆபரணமாக தரித்தாரோ அப்படிப்பட்ட தேவர்களால் துதிக்கப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

पोत्रीरूपं महान्तं जलधिगतधरां दंष्ट्रयोद्धृत्यवेगात्
युद्धे हत्वाहिरण्यं सुररिपुमखिलाऽनिष्टकृत्यैश्चरन्तम्।
वैकुण्ठं भैरवोयश्शितशिखविगलद्वह्निकीलासशूल
प्रोतं कृत्वा तदीयं रदमुरसि दधौ कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२४

124. பெரிய பன்றி உருக்கொண்டவரும், ஸமுத்திரத்தை அடைவிக்கப்பட்ட பூமியை தனது தெத்துப்பல்லால் தூக்கினவரும் ஹிரண்யன் என்கிற தேவசத்துருவான அஸுரனை

யுத்தத்தில் ஸம்ஹரித்து எல்லோருக்கும் ஸகிக்கமுடியாததான கிருத்தியத்தோடு ஸஞ்சரிக்கிறவருமான விஷ்ணுவை பைரவரூபம் தாங்கிய யாதொரு பரமேச்வரன் கூர்மையான நுனியிலிருந்து வெளிவருகிற அக்கினி ஜ்வாலையோடுகூடின சூலத்தில் கோர்த்து அவருடைய தெத்துப்பல்லை பிடுங்கி தனது மார்பில் ஆபரணமாக அணிந்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

भीत्यासन्त्रासमाने नरहरिवपुषो देवतानां समूहे
धात्रा संस्तूयमानश्शरभवरतनुस्सालुवः पक्षिराजः।
वेगात्तं छेदयित्वा स्वपदनखमुखैस्तत्त्वचालङ्कृतोऽभूत्
दंष्ट्रासंदीप्तलोकस्तमखिलवरदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२५

125. தேவக்கூட்டங்கள் துஷ்கிருத்தியத்தோடு கூடின நரஸிம்ஹரின் உருவத்தைக்கண்டு ஓடியிருந்த ஸமயம் பிர்மாவினாலே துதிக்கப்பட்டவரும் சரபம் என்கிற பக்ஷியின் உருக்கொண்டவருமான யாதொரு பரமேச்வரன் வேகத்தினாலே அந்த நரஸிம்ஹரை தனது கால் நக நுனிகளால் கிழித்து அத்தோலினால் அலங்கரிக்கப்பட்டவரும் தனது தெத்துப் பல்லினால் பிரகாசிக்கும்படி செய்யப்பட்ட உலகை உடையவருமாக ஆனாரோ அப்படிப்பட்ட எல்லா வரங்களையும் அளிக்கிற குஞ்சிதாங்கிரிம்.

युद्धेभग्नोरुकायं नरहरिवपुषं गण्डभेरण्डरूपी
भूत्वा गर्जन्तमग्रे शरभखगपतिर्यस्स्वफालाक्षिकुण्डात्।
उग्रप्रत्यङ्गिराख्यां शतशतवदनां कालिकामाशु सृष्ट्वा
तस्याजिह्वाग्रवह्निं सुचरुवदनयत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२६

126. யுத்தத்தில் ஒடிந்துபோன பெரிய சரீரத்தை உடையவரும் கண்டபேரண்டம் என்கிற பக்ஷியின் உருக்கொண்டு தனது முன்பாக கர்ஜிக்கிறவருமான நரஸிம்மரை யாதொரு சரபரூபியான பரமேச்வரன் தனது நெற்றிக்கண்ணாகிற குண்டத்திலிருந்து உக்கிரபிரத்தியங்கிரா என்று பெயருள்ளவளும் 10000 முகங்களோடு கூடியவளுமான காளியை சீக்கிரமாக உண்டுபண்ணி அவளுடைய நாக்கின் நுனியிலுள்ள

அக்கினியை நல்ல அன்னமானதுபோல, அடைவித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:- இக்கதை பிரத்தியங்கிராமந்திர கல்பத்தில் கூறப்பட்டுள்ளது. புலிப்பாணி என்ற ஸித்தர் பலதிரட்டு என்கிற தென்மொழி வைத்திய நூலிலும் கூறியுள்ளார். இப்பிரத்தியங்கிரியை சரபசக்தி என்றும், அதர்வண பத்திரகாளி என்றும், இத்தேவி உபாஸகரிடம்பகைகூடாது (प्रत्यङ्गिराध्यानशीले नकुर्याद्वैरमात्मनः) என்றும் கூறுவார்கள். இத்தேவியின் உபாஸனுக்கிரமங்கள் அதர்வண வேதத்திலும் காணப்படுகின்றன. ராமாயணத்தில் சொல்லப்பட்ட இந்த்ரஜித்தின் நிகும்பலை யாகமென்பது இத்தேவியைக்குறித்ததே.

याच्नाखर्वीकृताङ्गं बलिमखसदसि स्वां तनूं वर्धयित्वा
द्यावाभूमिसुरारेर्मकुटमपि पदामानयित्वा त्रिलोकीम् ।
हुङ्काराद्भीषयन्तं सुरगणविनुतो वामनं यो विनिघ्नन्
कङ्कालं तस्य देहत्वचमपि हृतवान्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १२७

127. யாசனையின்பொருட்டு சிறியவடிவம் தாங்கினவரும் பலிசக்கரவர்த்தியின் யாகசாலையில் தனது சரீரத்தை பெரிதாகச் செய்து ஆகாசம், பூமி, பலி சக்கரவர்த்தியின் தலையையும் காலால் அளந்தும் மூன்று உலகங்களையும் கர்ஜனையினால் பயத்தை அடையும்படி செய்கிறவருமான வாமனரை தேவக் கூட்டங்களினால் துதிக்கப்பட்ட யாதொரு பரமேச்வரன் சங்கரித்து அவருடைய கங்காளம் என்கிற முதுகின் நடு எலும்பையும் தேஹத்தின் தோலையும் அபஹரித்தாரோ அப்படிப் பட்ட குஞ்சிதாங்கிரிம்.

நங்காயிதென்ன தவம் நரம்போடெலும் பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்தரத் திருவர்
தங்காலஞ்செய்யத் தரித்தனன்காண் சாழலோ. (திருவாசகம்)

திருச்சாழல் (10) கூறுதலும் காண்க). இக்கதைகள் 5-ம் சங்கர ஸம்ஹிதை முதலிய புராணங்களில் கூறப்பட்டுள்ளதுகள்.

श्रीचक्रस्यन्दनस्थां गजतुरगसमारूढशक्त्यग्रभागां
नित्यावाराहिमन्त्रिण्यनुचरसहितां दृष्टबालास्त्रविद्याम्।
सर्वास्त्राश्लिष्टहस्तां रणभुविविलसद्युद्धवेषां भवानीं
दृष्ट्वातुष्टोऽभवत्तं धनपतिसुहृदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२८

128. ஸ்ரீசக்கர ஸ்வரூபமான தேரில் அமர்ந்தவளும் யானை, குதிரை இவைகளில் ஏறிக்கொண்ட சக்தி கணங்களை முன் புறத்தில் உள்ளவளும், நித்தியைகள் வாராஹி, மந்திரிணி முதலிய சக்திகளோடு கூடியவளும், பாலையின் அஸ்திரவித்தையைக் கண்டு சந்தோஷிக்கிறவளும் ஸர்வ அஸ்திரங்களை தரித்தவளும் யுத்த வேஷத்தோடு கூடினவளுமான பவானியை யாதொரு பரமேச்வரன் யுத்தரங்கத்தில் (பண்டாஸுரனோடு நடத்திய போர்க்களத்தில்) பார்த்து ஸந்தோஷத்தோடு கூடியவராக ஆனாரோ அப்படிப்பட்ட குபேரனுக்குத் தோழரான குஞ்சிதாங்கிரிம்.

विष्णोरंशावतारान्दशकरनखरैः युद्धरङ्गे सृजन्ती
कामेशालोकनोद्यद्गजवदनकरध्वस्तविघ्नेशयन्त्रा।
यस्यास्त्रेणाशुभण्डं ससुतगणपुरं नाशयामास दैत्यम्
देवी श्रीचक्रसंस्थातमपि शिवकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२९

129. போர்களத்தில் மத்ஸ்யம் முதலான விஷ்ணுவின் 10 அவதாரங்களை தனது கைநகங்களில் இருந்து உண்டுபண்ணுகிறவளும் காமேச்வரனுடைய முகத்தைப் பார்த்தமாத்திரத்தில் உண்டான விநாயகரின் கையினால் தொப்ஸம் செய்யப்பட்ட விஷங்கனின் மஹாவிக்ன யந்திரத்தை உடையவளும், ஸ்ரீசக்கரத்தில் இருப்பவளுமான தேவி யாதொரு பரமேச்வரனுடைய காமேச்வராஸ்திரத்தினாலே (कामेश्वरास्त्रं श्रीमच्चिदम्बर दशाक्षरीमन्त्राधिष्ठानकं) பண்டன் என்கிற அஸுரனை அவனது பரிவாரங்களோடுகூட சங்கரித்தாளோ அப்படிப்பட்ட மங்களத்தை செய்கிற குஞ்சிதாங்கிரிம். இக்கதையை லலிதோபாக்யானத்தில் கண்டுகொள்க.

द्वात्रिंशद्रागबोधच्युतमकुटशशिस्वच्छपियूषधारा
संगावाप्तस्वजीवाम्बुजभववदनोद्दामगीताभिरामम्।

स्तब्धीभूतर्षिनारीगणमधिविपिनं सर्वशृङ्गाररूपं
यं दृष्ट्वा विष्णुमायापतिमतिमतनोत् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १३०

130. முப்பத்திரண்டு ஸங்கீத கர்த்ரு ராகங்களை அறிவிக்கிறதும், மகுடத்தில் உள்ள சந்திரனுடைய சுத்தமான அமிர்த தாரையின் ஸம்பந்தத்தால் அடையப்பட்ட பிராணதாரையோடும் கூடினதுகளுமான பிரம்ஹதேவரின் முகங்களின் நீண்ட கானத்தினால் மனோஹரரும் அசைவற்ற முனிபத்னிகளை உடையவரும், எல்லா அழகுகளும் தாங்கிய உருவம் உள்ளவருமான யாதொரு பரமேச்வரனை (பிக்ஷாடனரை) தாருகாவனத்தில் பார்த்து விஷ்ணுமோகினி தனக்கு நாயகனாக இருக்கவேணும் என்கிற புத்தியை செய்தாளோ (நினைத்தாள்) அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:- சிதம்பரரஹஸ்யத்திலும் ஸங்கீத ராகங்கள் 32 என்று கூறப்படுகிறதுகள். शम्भौ दारुककानने मधुरया गीत्या प्रगीते शिरोभूषाचन्द्रकलाच्युतामृतझरीस्रावात् सजीवंविधेः। मूर्धा कल्पितमण्डनं खगमितैरागैरगायद्धरिः दृष्ट्वा वेणुमपास्य मोहमभजत्साकं मुनीन्द्रैर्भृशम् ॥ (இ-ள்.) (பரமேச்வரன் தாருகா வனத்தில் பாடியிருக்கும் தருணம் சிரஸிலுள்ள சந்திரகலையிலிருந்து ஒழுகின அமிர்தப்பெருக்கின் ஸம்பந்தத்தால் உயிர்ப்பித்த பிரமதேவரின் தலைகளால் தொடுக்கப்பட்ட தனது கண்டாபரண மாலை முப்பத்திரண்டு பேதமுள்ள ராகங்களோடு பாடினது. இதைக் கண்ணுற்ற விஷ்ணு தனது புல்லாங்குழலை எறிந்து அங்குள்ள முனிவர்களோடு மிகவும் மோஹத்தை அடைந்தார்.) இதை காளிதாஸரும் पुरातनीं ब्रह्मकपालमालां कण्ठेवहन्तं मुहुराश्वसन्तीम्। उद्गीतवेदां मकुटेन्दुवर्षत्सुधाभरौघाप्लुत लब्धसञ्ज्ञाम् ॥ इति कुमारसम्भव काव्ये १२-१७ ॥ என்று அம்மாலை கானம் செய்ததாகவும கூறி உள்ளார். ஸங்கீத ரத்னாகரத்தின் வியாக்யானத்தில் கல்லிநாதர் என்பவராலும் அங்கீகரிக்கப்பட்டதே. (ஸ்ரீநடராஜமூர்த்தியின் கண்டத்தில் இப்பொழுதும் விளங்குகிற ஸுவர்ண பிரமகபாலமாலையில் உள்ள பிரமதேவரின் முகங்கள் முப்பத்திரண்டு ஆனதால் கர்த்ரு ராகங்கள் முப்பத்திரண்டு என்பதும் அறியப்படுகிறது. सङ्गीतरत्नाकरे तृतीये

प्रकीर्णाध्याये गायनप्रकरणेच॥ हृद्यशब्दः सुशारीरो ग्रहमोक्ष विचक्षणः। रागरागाङ्ग भाषाङ्ग क्रियाङ्गोपाङ्ग कोविदः॥ इति॥ अत्र रागरागाङ्ग इति शब्दस्य द्वात्रिंशद्भेदविशिष्टरागाङ्ग इत्यर्थ स्फुरणात् कतृरागाणां द्वात्रिंशदेवभेद इति प्रतिभाति॥ கர்த்ரு ராகங்கள் முப்பத்திரண்டு ஆனபோதிலும் ஜன்ய ராகங்கள் பற்பல உள.

मातृद्रोहाघशान्ति स्वपितृनिधनकृत्क्षत्रशैलेन्द्रपक्ष
द्वंद्वच्छेदातितीक्ष्णप्रबलपरशुमप्याप्तुकामो मुनीन्द्रः।
नृत्तं यस्येदमात्मन्यनुगतमसकृत्भावयन्जामदग्न्यो
रामो लेभे चिरायुःप्रमुखवरवरान्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३१

131. மாதாவின் துரோகத்தினால் உண்டான பாவத்தை பரிகரிக்கவேண்டியும், தனது பிதாவை சங்கரித்த அரசனென்கிற பர்வதச்ரேஷ்டத்தின் இரண்டு இறக்கைகளை வெட்டுவதற்கு ரொம்பவும் கூர்மைவாய்ந்த பலமான பரசு என்கிற ஆயுதத்தையும் அடைவதற்காக முனிச்ரேஷ்டரும், ஜமதக்கினியின் குமாரருமான பரசுராமர் யாதொரு பரமேச்வரனுடைய நடனத்தை அடிக்கடி தியானம் செய்து வெகுகாலம் ஜீவித்து இருத்தல் முதலான வரன்களை அடைந்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यत्पूजालब्ध भूतिप्रभवित युवती भाववृद्धस्वजायो
यत्क्षेत्रानेकसेवाशमितमुनिवरध्वंसनागोविकारः।
तालाङ्को रौहिणेयः प्रबलहलवराकृष्टदुष्टप्रलम्बो
जातोयस्य प्रसादादमृतकरधरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३२

132. பலராமர் யாதொரு பரமேச்வரனுடைய பூஜாப் பிரபாவத்தால் ஜரையை அகற்றி இளமை வாய்ந்த பத்தினியை உடையவரும் அனேக க்ஷேத்திரங்களின் ஸேவையால் ஸூத முனிவரின் ஹத்தி தோஷத்தை அகற்றினவரும், தாலக்கொடி உள்ளவரும், கலப்பையினால் துஷ்டனை பிரலம்பன் என்கிற அரக்கனை சங்கரித்தவருமாக ஆனரோ அப்படிப்பட்ட சந்திரனை தரித்தவரான குஞ்சிதாங்கிரிம்.

आरुह्याश्वं मुकुन्दः प्रतिकलिविगमं कल्किरूपीपृथिव्यां
गच्छन्पाषण्डवर्गं कुमतिमघयुतं तत्रतत्रैव संस्थम्।
अङ्गुष्ठाकारभाजं यदमलकरुणावाप्तखड्गेननिघ्नन्
सर्वां भूमिं यथावत्कलयतितमजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३३

133. ஒவ்வொரு கலியுகத்தின் முடிவில் கல்கி உருவம் தாங்கிய முகுந்தன் குதிரையில் ஏறிக்கொண்டு பூமியில் ஸஞ்சரித்தும் ஆங்காங்கு உள்ளதும் பாபத்தோடு கூடினதும், கட்டைவிரல் பெருமன்களுமான பாஷண்ட கூட்டத்தை (பிராணிவர்க்கத்தை) யாதொரு பரமேச்வரனுடைய கருணை யால் அடையப்பட்ட கத்தியால் ஸம்ஹரித்து பூமி எல்லாவற்றை யும் முன்பு இருந்ததுபோல் சீர்திருத்துகிறாரோ அப்படிப்பட்ட உற்பத்தி இல்லாதவரான குஞ்சிதாங்கிரிம்.

मध्ये मार्गं स्वभक्तं द्विजवरजनुषं गण्डभेरुण्डसिंह
व्याघ्राश्वेभर्क्षतार्क्ष्यप्लवगनरमुखे माधवे भक्षयित्वा।
क्रोधाद्ब्रह्माण्डवर्गं मुहुरपि च मुधातर्जयत्याशुतं यः
हत्वाऽरक्षत्स्वभक्तं जगदपि सकलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३४

134. யாதொரு பரமேச்வரரானவர் பிராம்மணனை தனது பக்தனை சிவக்ஷேத்திரங்களுக்கு போய்க்கொண்டிருக்கும் பொழுது நடுவழியில் கண்ட பேருண்டமென்னும் இருதலைபக்ஷி ஸிம்மம், புலி, குதிரை, ஆனை, கரடி, கருடன், குரங்கு, மனிதன் இவைகளின் முகங்களை உடைய ஓர் உருவம் தாங்கிய விஷ்ணுவானவர் கொன்று விழுங்கி அதனால் உண்டான கர்வத்தால் இவ்வுலகை பயமுறுத்திக்கொண்டிருக்கும் தருணம் அடியார்க்கு அடியவனான பரமன் கருணையால் உலகத்தை காக்கவேண்டி அவ்வுருத்தாங்கிய மாதவனை சங்கரித்தும் தனது பக்தனான அப் பிராம்மணனையும் ரக்ஷித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். இந்த வரலாறு திருவையாற்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

येनोक्तं राजताद्रौ चरितमनितर ज्ञातपूर्वं मृडान्यै
श्रुत्वा तद्योगलब्धभ्रमरवरतनुः पुष्पदन्तस्स्वसख्या।

प्राकाश्यं नीयमानः कुपितनगसुताशापतोमर्त्ययोना
वुत्पन्नस्संस्तुवन्यं स्वपदमधिगतः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् १३५

135. பரமேச்வரன் கைலாஸபர்வதத்தில் முன் ஒருஸமயம் அம்பிகையின் பொருட்டு ஒருவரும் அரியாததான ஓர் சரித்திரத்தைச் சொன்னர். புஷ்பதந்தன் என்கிற கந்தருவன் தனது யோகபலத்தினல் வண்டு உருக்கொண்டு அப்பரமேச்வரனுடைய ஸமீபத்தில் இருந்து அச்சரித்திரத்தைக்கேட்டு அதை தனது மனைவிக்கும் சொல்லி அவள் மூலமாக வெளிப்படுத்தினன். இவ்விபரமறிந்து கோபத்தை அடைந்த அம்பிகையின் சாபத்தினல் மனுஷ்யனுகப் பிறந்தும் பிறகு யாதொரு பரமேச்வரனை (சிவமஹிமன ஸ்துதியால்) துதித்து தனது பழய பதவியை அடைந்தானே அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

दैत्यानां ध्वंसनार्थं सकलमपिजगद्रक्षणार्थं मुरारिः
लक्ष्म्या क्षीराम्बुराशौ कृतकठिनतपास्साम्बमूर्तिं प्रभुंयम्।
भक्त्या संपूज्यचित्ते मनुवरमपि यन्नामसाहस्रसंज्ञं
स्तोत्रं लब्ध्वा जपन्स्तत्प्रभुरभवदजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३६

136. அஸுரர்களை ஸம்ஹரிக்கவேண்டியும், ஸகல உலகை ரக்ஷிக்கவேண்டியும் முராரியானவர் லக்ஷ்மியோடுகூட பாற்கடலில் கடினமான தபஸ்ஸை செய்கிறவராய் இருந்து கொண்டு அம்பிகையோடுகூடின (ஸோமாஸ்கந்தமூர்த்தியை) பரமேச்வரனை தனது ஹ்ருதயத்தில் பக்தியோடு பூஜை செய்து அதனல் பிரஸன்னரான பரமேச்வரனல் உபதேசிக்கப் பட்ட மந்திரச்ரேஷ்டமான யாதொரு நடராஜமூர்த்தியின் ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தை ஜபித்து அதன் பிரபாவத்தால் ஜகத்பதியாக ஆனரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:— இதை ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகளும்

ஒருநாம மோருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ

என்றும் அத்திருநாமம் யாதெனில்

வாரா ரிளங்கிளியே யெங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பார்கடலான்
செப்புவபோல் எமபெருமான் தேவர் பிரானென்று.

ஆரூரனல் ஸோமாஸ்கந்தமூர்த்தியால் (ஸாம்பமூர்த்தியால்) உபதேசித்தருளியதும், பார்கடலான் (விஷ்ணுவால்) ஜபித்ததுமான சீரார்திருநாமந்தேர்ந்துரையாய் ஸ்ரீநடராஜநாம ஸாஹஸ்ரத்தை உரைப்பாயாக என்கிற பொருளையும் உணர்த்துகிறார். ब्रह्मादयोपियन्नाम पाठस्यैवप्रसादतः। सृष्टिस्थित्यन्तकर्तारोजगतांचिरजीविनः॥ (பிரம்மன் முதலிய தேவர்கள் யாதொரு ஸ்ரீநடராஜ ஸஹஸ்ரநாம ஜபத்தின் வைபவத்தால் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களுக்கு கர்த்தாக்களாக ஆனார்கள்) என்ற உத்தரபீடிகை கூறுதலாலும், விஷ்ணுவுக்கு உபதேசிக்கும் தருணம் அவ்விஷ்ணுவின் உந்திகமலத்திலமர்ந்த பிர்ம்மனும் அந்நாம ஸாஹஸ்ரத்தை உணர்ந்தனன் என்பது பற்றியும், செம்பெருமான் வெண்மலரான் என்றும் விசேஷித்து விளக்கியுள்ளார்.

அந்நாமஸாஹஸ்ர பூர்வபீடிகையில் பகவான் ஸாம்பமூர்த்திரூபராக இருந்துகொண்டு விஷ்ணுவுக்கு உபதேசித்தார் என்று கூறப்படுகிறது. விஷ்ணு அம்மூர்த்தியை வெகுகாலம் பூஜை செய்தும், வால்கலி என்கிற அரக்கனை சங்கரிக்கவேண்டி ஸ்ரீசிதம்பரக்ஷேத்திரத்தில் அம்மூர்த்தியை தேவேந்திரனிடம் அளித்தார் என்றும், அத்தேவேந்திரன் சுவர்க்கத்தில் வெகுகாலம் ஆராதித்து பிறகு ஒரு ஸமயம் முசுகுந்தசக்கரவர்த்தியினிடம் கொடுத்தனன் என்றும் பிறகு அச்சக்கரவர்த்தி திருவாரூரில் அம்மூர்த்தியை எழுந்தருளச் செய்தான் என்றும் கமலாலய மாஹாத்மியம் கூறுகிறது.

आज्ञायस्याखिलानां न भवति हि सदा लङ्घनीया यदीयं
तत्वातीतस्वरूपं विधिमुखविबुधावर्णितुं नैवशक्ताः।
यं द्रष्टुं वेदवाचोऽप्यगणितविभवं नूनमद्यापि यत्नं
कुर्वन्त्यस्यासहायं सनकमुखगुरुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३७

137. எந்த பரமேச்வரனுடைய ஆக்ஞையானது எப்பொழுதும் ஒருவனாலேயும் தாண்ட முடியாததோ, யாதொரு பரமேச்வரனுடைய தத்துவாதீதமான ஸ்வரூபத்தை பிர்ம்மனை ஆதியாகவுள்ள தேவர்கள் வர்ணிப்பதற்கு சக்திவாய்ந்தவர்கள் இல்லையோ, எண்ண முடியாத வைபவத்தை உடைய யாதொரு பரமேச்வரனை பார்ப்பதற்கு வேதங்கள் இப்பொழுதும் நிச்சயமாக எத்தனத்தை செய்கிறதுகளோ அப்படிப்பட்ட அம்பிகையை ஸஹாயமாக உள்ளவரும் ஸனகர் முதலியவர்களுக்கு குருவுமான குஞ்சிதாங்கிரிம்.

युद्धे संजातकम्पः पितृपतितनयो भीष्ममुख्यप्रवीरान्
चक्राब्जाकारसेनागतरथगजराडश्वपादातिवर्गान्।
जेतुं कृष्णोपदिष्टो मधुमयनुतिभिस्तोषयन्यस्यशक्तिं
दुर्गां तस्याः प्रसादादजयदरिवलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३८

138. பாண்டுவின் குமாரருன தர்மபுத்திரர் பாரதயத்தத்தில் பீதி உள்ளவராயும், சக்ரவியூகம், பத்மவியூகம் இவைகளோடு கூடின ஸேனைமத்தியில் உள்ள ரதம், கஜம், துரகம், பதாதி இந்த வர்க்கங்களோடு கூடின பீஷ்மரை ஆதியாக உள்ள வீரச்ரேஷ்டர்களை ஜெயிப்பதற்கு கிருஷ்ணனாலே உபதேசம் செய்யப்பட்டவராக இருந்துகொண்டு மதுமயமான ஸ்துதிகளினாலே யாதொரு பரமேச்வரனுடைய சக்தியான துர்க்கையை ஸந்தோஷிக்கும்படி செய்து அவ்வம்பிகையின் பிரஸாதத்தால் அச்சத்துருவின் பலத்தை ஜெயித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यस्याघोरास्त्ररूपं वसुकरविधृतोद्दण्डभेताल घंटा
ढक्का खेटासिपात्रत्रिशिखशिखिशिखं भीमदंष्ट्राधरोग्रम्।
सौवर्णश्मश्रुवक्त्रं रथमुखनिहितस्वाङ्घ्रिमारक्तवस्त्रं
ध्यायेच्चेत्कालमृत्युं तरति विधुजटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३९

139. எட்டு கைகளில் தரிக்கப்பட்ட பயங்கரமான பேதாளம், மணி, டமருகம், கேடயம், கத்தி, பாத்திரம், திரிசூலம், அக்கினி இவைகளை உடையதும், பயங்கரமான தெத்துப்

பல்லோடுகூடின உதடுனலே உக்ரமாயும், பொற்கொன்றை வர்ணமான மீசைகளோடு கூடின முகத்தோடு கூடினதும், ரதத்தின் முன்பக்கத்தில் வைக்கப்பட்ட தனது காலை உடையதும், சிவந்த வஸ்திரத்தை தரித்ததுமான யாதொரு பரமேச்வரனின் அகோராஸ்திர ரூபத்தை எவன் தியானம் செய்கிறானோ அவன் காலமிருத்யுவையும் தாண்டுகிறான். அப்படிப்பட்ட சக்தியை தரித்தவரான குஞ்சிதாங்கிரிம்.

आरोग्यं लब्धुकामो दिवसकरमहामण्डलान्तर्यमम्बा
युक्तं रुक्माभमाद्यं कलयति नितरां यो जपन्रौद्रमन्त्रान्।
तस्यत्वङ्मांसरक्तावयवगतमहारोगवर्गाः प्रणाशं
यान्ति श्रीसुन्दराङ्गस्स च भवति शिवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४०

140. வியாதி இல்லாமல் இருக்குகையை அடைய விரும்புகிறவன் சூர்ய மண்டல மத்தியில் அம்பிகையோடு கூடினவனும் பொன்னார்மேனியனுமானயாதொருபரமேச்வரனை ருத்திரிய மந்திரத்தை ஜபம் செய்துகொண்டு தியானம் செய்வானேயானால் அவனுடைய தோல், மாம்ஸம், ரத்தம், இவைகளோடு கூடின அங்கங்களை அடைந்த மஹாரோகவர்க்கங்கள் மிகவும் நாசத்தை அடைகிறதுகள். அவனும் அழகுவாய்ந்த அங்கங்களை உடையவனாகவும் ஆகிறான். அப்படிப்பட்ட மங்கள ஸ்வரூபியான குஞ்சிதாங்கிரிம்.

पुत्राकाङ्क्षी पुमान्यः परशुमृगवराभीतिहस्तं त्रिनेत्रं
गौर्यास्कन्देन साकं वृषभमधिजुषं सानुकम्पं स्मितास्यम्।
सर्वालङ्कारभाजं सकलनिगमसंवित्स्तूयमानापदानं
ध्यायत्याप्नोति पुत्रं गुहमिव सच तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४१

141. புத்திரனை விரும்புகிற யாதொரு புருஷன் பரசு, மான், வரதம், அபயம் இவைகளோடுகூடிய ஹஸ்தம் உள்ளவரும், மூன்று கண்கள் உள்ளவரும், கௌரி, ஸுப்பிரமண்யர் இவர்களோடு விருஷபத்தில் விளங்குபவரும் தயவோடுகூடியவரும், புன்சிரிப்புடைய முகமும், ஸர்வ ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட திருமேனியும் ஸகல

வேதவித்துக்களால் துதிக்கப்பட்ட பூர்வசரித்திரங்களையும் உடையவருமான யாதொரு பரமேச்வரனை தியானம் செய்கிறானோ அவன் சீக்கிரத்தில் ஸுப்பிரமண்யரைப் போன்ற குமாரனை அடைகிறான். அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

योविद्यार्थी वटद्रोर्निकटतटगतं पुस्तकज्ञानमुद्रा
वीणारुद्राक्षमाला कृतकरकमलं योगपट्टाभिरामम्।
तत्वार्थं बोधयन्तं सकलमुनिततेश्चन्द्रगङ्गाहिभूषं
यं ध्यायत्याशुवाग्मी स च भवति गुरुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४२

142. வித்தையை விரும்பினவன் ஆலமரத்தின் கீழ் இருப்பவரும், புஸ்தகம், ஞானமுத்திரை, வீணை, ருத்திராக்ஷமாலை இவைகளைத் தாங்கிய கைகள் உள்ளவரும், யோகபட்டத்தினால் விளங்குபவரும், ஸகல முனிக்கூட்டங்களுக்கு ஆத்ம தத்துவார்த்தத்தை உபதேசிப்பவரும், சந்திரன், கங்கை, ஸர்ப்பம் இவைகளை அணிந்தவருமான யாதொரு பரமேச்வரனை தியானம் பண்ணுகிறானோ அவன் சீக்கிரமாக வாக்விலாஸம் உள்ளவனாக ஆகிறான். அப்படிப்பட்ட குருவான குஞ்சிதாங்கிரிம்.

भिक्षां देहीति चक्षन्मुनिसुतसहितः क्रोधभट्टारकाख्यः
दूर्वासायन्नगर्यामनधिगतचरुः क्षुन्निवृत्यै निशीथे।
शक्तिं यस्यान्नपूर्णां हृदिपरिकलयन्सत्वरं यत्प्रसादा
वाप्तक्षीरान्नभुक्त्या सुखमभजदजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४३

143. கோபப்பண்டாரம் என்று பெயருள்ள தூர்வாஸர் தனது சிஷ்யர்களோடு இரவில் ஓர் ஸமயம் யாதொரு பரமேச்வரனுடைய நகரமான சிதம்பரத்தில் தனது பசியை நிவர்த்திக்கவேண்டி பிக்ஷைபோடு என்று உரக்க கூவியும் பிக்ஷை கிடைக்காததினால் யாதொரு பரமேச்வரனுடைய சக்தியான அன்னபூர்ணையை ஹ்ருதயத்தில் தியானம் செய்து அத்தேவியின் பிரஸாதத்தால் சீக்கிரம் அடையப்பட்ட க்ஷீரான்ன போஜனத்தினால் சுகத்தை அடைந்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कश्चिल्लुब्धोगिरीन्द्रे मृगनिबिडवने लिङ्गमैशं यदीयं
दृष्ट्वा गण्डूषतोयैः स्वकचधृतसुमैर्भुक्तशेषैश्च मांसैः।
पूजां कुर्वन्कदाचिन्निजनयनवरं चार्पयित्वाऽति भक्त्या
नेत्रे यस्यानुरूपं पदवरमभजत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४४

144. மிருகங்களினால் சூழப்பட்ட மலையில் (காளஹஸ்தி க்ஷேத்திரத்தில்) ஒரு வேடன் (கண்ணப்பன்) யாதொரு பரமேச்வரனுடைய லிங்கத்தை (காளஹஸ்தீச்வரரை) தான் வேட்டையாடி சஞ்சரிக்கும் தருணம் பார்த்து மிகுந்த பக்தியோடு உமிழ்நீரினாலேயும், தன் தலையில் தரிக்கப்பட்ட புஷ்பங்களினாலேயும், புசித்து மிச்சமான மாம்ஸங்களினாலேயும் பூஜை செய்துகொண்டும் ஒரு ஸமயம் தனது கண்ணை அந்த லிங்கத்தினுடைய நேத்திரத்தில் மிகவும் பக்தியோடு அர்ப்பணம் செய்தும் யாதொரு பரமேச்வரனுடைய ஸாரூப்ய பதவியை அடைந்தானோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

बालो विप्रस्यगोष्ठस्थितपशुनिकरं दोहयित्वापयोभिः
नद्यास्तीरे यदीयं जनिमसुखकरं पार्थिवञ्चाभिषिञ्चन्।
ध्यायन्क्रोधात्स्वपूजाविकृतिकरपितुश्छेदयित्वापदं यं
स्तुत्वा यत्पार्षदानामधिपतिरभवत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४५

145. ஒரு பிராம்மண குமாரன் கோசாலைகளில் உள்ள பசுக்கூட்டங்களை நதியின் தீரத்துக்கு கொண்டுபோய் அவைகளின் க்ஷீரத்தால் யாதொரு பரமேச்வரனுடைய பார்த்திவ லிங்கத்தை அபிஷேகம் செய்து பரமசிவனை தியானம் செய்துகொண்டு இருக்கும் தருணம் தனது பூஜைக்கு விக்னத்தை செய்தவனை தனது பிதாவின் காலை கோபத்தினால் வெட்டி யாதொரு பரமேச்வரனை துதித்து (சிவானுக்கிரஹத்தால்) யாதொரு பரமேச்வரனுடைய கணங்களுக்கு அதிபதியாக ஆனானோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது சண்டேச்வர நாயனார் வரலாறு.)

येषां वेदोक्तकर्मस्वनधिकृतिरभूद्द्विजातापृथिव्यां
तेषां धर्मादिमाप्त्ये परशिवरचितं कामिकादिप्रभेदम्।

साङ्गं सिद्धान्ततन्त्र प्रकरमपिचतुष्षष्टिसंख्याःकलाश्च
यस्यादेशात्प्रकाशं त्वनयदगनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १४६

146. புவியில், யாதொரு பிராணிகளுக்கு வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களை அனுஷ்டானம் செய்கிற விஷயத்தில் அதிகாரம் இல்லையோ அப்படிப்பட்ட பிராணிகளுக்கு தர்மாதி புருஷார்த்தங்களை அடையவேண்டி அம்பிகையானவள் பரமேச்வரரால் செய்யப்பட்ட காமிகம் முதலிய பேதங்களோடு கூடியதும் அங்கங்களோடு கூடியதுமான சித்தாந்ததந்திர ஸமூகத்தையும், 64 கலைகளையும் யாதொரு பரமேச்வரனுடைய கட்டளையால் பிரகாசத்தை அடையும்படி செய்தாளோ அப்படிப்பட்ட ஹிமவானால் துதிக்கப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कुर्वन्तः क्षेत्रवासं हृदयसरसिजे चिन्तयन्तोजपन्तो
विद्यां सौवर्णरङ्गे यमजहरिनुतं स्वेच्छयावाप्तनृत्तम् ।
पश्यन्तस्सार्वकालं विबुधपरिवृढालब्धकामास्सुखित्वा
ब्राह्मे सौधे रमन्ते चरमवयसि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १४७

147. ஞானவான்கள் சிதம்பர க்ஷேத்திரத்தில் வஸிக்கிறவர்களாயும், தனது ஹிருதயத்தில் தியானம் பண்ணுகிறவர்களாயும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபிக்கிறவர்களாயும், சித்ஸபையில் பிர்ம்ம விஷ்ணுக்களால் துதிக்கப்பட்டவரும், தனது இச்சையால் அடையப்பட்ட நடன விலாஸத்தை உடையவருமான யாதொரு பரமேச்வரனை எப்பொழுதும் தரிசனம் செய்துகொண்டும், இகத்தில் ஸகல காமனைகளை அடைந்தும் இறுதியில் பிர்மஸம்மந்தியான வீட்டில் ஸுகிக்கிறார்கள் அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सर्वस्वाराभिधाने दिविषदभिमते सप्ततन्तौ द्विजेन्द्रः
कश्चिद्यज्वाहुताशे निजमपि वपुस्त्यक्तुमत्यन्तभीरुः ।
यं ध्यात्वा यत्प्रसादादगमदनितरप्राप्यमौपाधिहीनं
धामस्वर्गं सदेहस्तमतुलविभवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १४८

148. ஓர் பிராம்மணன் ஸர்வஸ்வாரம் என்று பெயருள்ள தேவர்களுக்குப் பிரியமான யாகத்தில் உள்ள அக்கினியில்

தனது சரீரத்தை தியாகம் செய்வதற்கு மிகவும் பயந்தவனாய் யாதொரு பரமேச்வரனை தியானம் செய்து அப்பரமேச்வர பிரஸாதத்தால் இதரர்களால் அடையமுடியாததும், உபாதி இல்லாததுமான ஸ்வர்க்கலோகத்தை இக்கர்ம சரீரத்தோடு கூடவே அடைந்தான் அப்படிப்பட்ட ஒப்பற்ற வைபவத்தை உடைய குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு :- ஸர்வஸ்வாரம் என்று பெயர் உள்ள ஒரு யாகம். அதை அனுஷ்டித்தால் இந்த கர்ம சரீரத்தோடுகூட ஸ்வர்க்க லோகத்தை அடையலாம் என்று சுருதியில் கூறப்பட்டுள்ளது. இதன் பிரயோகத்தில் மாத்யந்தின ஸவனத்தில் உத்காதாவால் ஆர்பவ பவமானம் என்கிற ஸ்தோத்திரத்தை கானம் பண்ணும் தருணம் யஜமானன் இனிமேலுள்ள யக்ஞ பாகங்களை நீங்களே பூர்த்திசெய்புங்கள் என்று ருத்விஜர்களுக்கு அனுமதிகொடுத்து பிறகு தனது சரீரத்தை ஆகவனீயம் என்னும் அக்கினியில் தியாகம் செய்யவேண்டும். (ஆகவனீயத்தில் குதித்துவிட வேண்டும்). பிறகு உள்ள பாகங்கள் ரித்விஜர்களால் பூர்த்தி செய்யப்படவேண்டுமென்று காணப்படுகின்றன. மற்றும் இதிலுள்ள விசேஷ தர்மங்கள் மீமாம்ஸா சாஸ்திரத்தில் விசாரிக்கப்பட்டவைகளே. இவ்வித யக்ஞத்தை அனுஷ்டித்தும் சரீர தியாகத்தில் பயந்தவனுமான தனது பக்தனுக்கு பகவான் வேதத்தில் சொன்னபடி ஸசரீர ஸ்வர்க்க பலத்தையே அளித்தார் என்று தாத்பர்யம்.

क्रीडासंसक्तगौरी कनकघटनिभोत्तुङ्गवक्षोजशैल
प्रोद्यत्श्रृङ्गारसाध्वी मधुररसधुनी लोलभृङ्गायताक्षम्।
भूषानागोक्तसौख्य प्रवचनघटजस्तब्धगर्वाब्धितार्क्ष्यं
क्रीडाकृत्श्वासवक्त्रप्रमथपतिसुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४९

149. லீலையில் ஆசையோடுகூடின கௌரியின் கனக கலசம்போன்ற பெருத்த வக்ஷோஜமாகிற பர்வதத்திலிருந்து வெளிவருகிற சிருங்காரஸ பிரவாஹத்தில் சலிக்கிற வண்டு போன்ற கண்ணை உடையவரும், ஆபரணமான ஸர்ப்பத்தினால் பிரச்னம் செய்யப்பட்ட குசலவார்த்தையாகிற அகஸ்தியரால் அடங்கின கர்வமாகிற ஸமுத்திரத்தை உடைய கருடனுக்கு

(விஷ்ணுவின் வாகனமாகிற கருடனுக்கு) வெட்கத்தை செய்கிற மூச்சுக்காத்தோடுகூடின முகத்தை உடைய நந்திகேச்வரனால் துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

नृत्तेशं बाणदैत्यप्रमुखगणवरोद्दण्डदोर्बृन्दवर्य
क्रूरोद्वेगाहतोद्यद्दिमिधिमिधिमितक्शब्दभावानुकल्पम्।
तानातानातनेति कणितदशशती तन्त्रिवीणानुगानो
न्मोदोद्ग्रीवाहिभूषावलयमभयदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५०

150. நிருத்தனத்தை செய்கிறவரும், பாணன் முதலிய கணச்ரேஷ்டர்களுடைய நீண்டதான கைகளால் வேகமாய் அடிக்கப்பட்ட கடவாத்தியங்களில் இருந்து உண்டான திமி திமி என்கிற சப்தங்களுடைய பாவங்களை அனுஸரித்தவரும், தானுதானுதன என்று சப்திக்கிற ஆயிரம் கம்பிகளை உடைய வீணைகளின் அனுகானத்தை கேழ்க்கவேண்டி ஆசையினால் விரிக்கப்பட்ட முகங்களை உடைய ஸர்ப்பங்களை கங்கணமாக உடையவரும், அபயத்தை செய்கிறவருமான குஞ்சிதாங்கிரிம்.

साहस्रक्रूरवक्त्रप्रभव गुरुमरुत्पूरहुं हुंभभं भं
झंझीकृच्छंखशृङ्गप्रमुखवरमहावाद्यभृद्भानुकोपम्।
दृष्ट्वा हाहाहहेति भ्रमितसुरगणाऽभीतिसंदायिपार्ष
द्यास्ते नृत्यईशो नटति तमनघं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५१

151. 1000 முகங்களில் இருந்து உண்டான அதிகமான காற்றின் பூரணத்தால் ஹூம் ஹூம் பம் பம் ஜம் ஜீ என்று சப்திக்கிற சங்கம், கொம்பு முதலிய உயர்ந்த வாத்தியங்களை தரிக்கிற பானுகோபன் என்கிறவனைப் பார்த்து ஹா ஹா ஹஹ என்று பிரமிக்கிற தேவகணத்திற்கு அபயப்பிரதானத்தை செய்கிற பிரமதகணத்தினால் சூழப்பட்ட ஸபையில் யாதொரு பரமேச்வரானவர் நடனம் செய்கிறுரோ அப்படிப்பட்ட பரிசுத்தரான குஞ்சிதாங்கிரிம்.

कैलासाद्रिं कदाचित्प्रबलभुजबलाद्रावणश्चालयित्वा
दाक्षायण्याऽति भीत्याकिमिदमिति समालिङ्गितस्याशुयस्य।

पादांगुष्ठाग्रनीतद्विरसनभुवनक्ष्माधरोच्छिन्नबाहुः
साम्नास्तुत्वायमिष्टं वरमलभततं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५२

152. ஓர் ஸமயம் ராவணன் தனது புஜபலத்தினாலே கைலாஸபர்வதத்தை அசையும்படி செய்து அம்பிகையினால் அதிக பயத்தோடு இது என்ன அதிசயம் என்று சீக்கிரம் ஆலிங்கனம் செய்யப்பட்ட யாதொரு பரமேச்வரனுடைய கால் பெருவிரலின் நுனியினால் அடைவிக்கப்பட்ட பாதாள லோகத்தை உடைய கைலாஸ பர்வதத்தினால் நொருங்கிப்போன கைகளை உடையவனாய் இருந்துகொண்டு ஸாமவேதத்தினால் யாதொரு பரமேச்வரனை துதித்து தனக்கு இஷ்டமான வரத்தை அடைந்தானோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

श्रीरुद्रं कोटिसंख्या त्रिगुणितमनिशं यत्पुरस्ताज्जपित्वा
शैलादिर्यस्य शम्भो रनवधिककृपापाङ्गपूराभिषिक्तः।
मत्तुल्योऽसि प्रियोऽसि त्वमपि च सकलं ज्ञातवांश्चासिताते
त्युक्तो येनाथयस्य प्रमथपतिरभूत् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५३

153. யாதொரு பரமேச்வரரின் ஸன்னிதானத்தில் சிலாதர் என்கிற முனியின் குமாரரான நந்திகேசர் மூன்றுகோடி தடவை ஸ்ரீருத்திரத்தை பாராயணம் செய்து பரமேச்வரனுடைய அளவற்ற கிருபையோடு கூடின கடைக்கண்ணால் பார்க்கப்பட்டவரும், நீ எனக்கு ஸமானமானவன், எனக்குப் பிரியம் உள்ளவன், ஏ அப்பா எல்லாவற்றையும் அறிந்தவனாகவும் ஆகிறாய் என்று யாதொரு பரமேச்வரனால் சொல்லப்பட்டாரோ, யாதொரு பரமேச்வரனுடைய பிரமதகணங்களுக்கெல்லாம் பதியாகவும் ஆனாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இச் சரித்திரம் சிவபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.)

श्रीमान्भृङ्गी मुनीन्द्रोमृगपरशुकरं देवमेवैकमीशं
नत्वा तत्पार्श्वगायानिजविसुरुपश्चण्डिकायाश्चवाक्यात्।
शाक्तं मांसादिवर्गं स्वतनुवरगतं प्रोत्सृजन्यत्प्रसादात्
लेभे दण्ड त्रिपादं स्वधुरिव वसतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५४

154. ஸ்ரீமானான பிருங்கி என்று பெயருள்ள ஒரு முனிவர் மானையும், பரசுவையும் தாங்கின தேவரான ஈசன் ஒருவனையே நமஸ்கரித்து ஈச்வரனின் இடதுபாகத்தில் உள்ளவளும் தன்னை வணங்காததினால் கோபித்தவளுமான அம்பிகையின் வாக்கியத்தால் சக்தி ஸம்பந்தமான தனது சரீரத்தில் உள்ள மாம்ஸம் முதலியவைகளை உதரினவராய் இருந்துகொண்டு யாதொரு பரமேச்வரனுடைய பிரஸாதத்தால் தண்டத்தையும் (ஊன்று கோல்) மூன்று கால்களையும், ஈச்வரனின் முன்பாகத்தில் வஸிக்கும் தன்மையையும் அடைந்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कश्चिद्विप्रोऽरिटाख्यस्स्वपतिनियमविध्वंसकम्पातरङ्गां
नारीं दग्ध्वा सतीं तच्चितिगतभसितैर्लेपयन्साम्बमूर्तिम् ।
नैवेद्यं कर्तुमिच्छन्निहनयचरुमित्याह्वयन्यत्प्रसादात्
कान्तां भेजे निजान्ते शिवपदमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १५५

155. ரிடர் என்று பெயர் உள்ள ஓர் பிராம்மணன் தனது நியமம் கெட்டுப்போகிற விஷயத்தில் பயந்தவளும் பதிவ்ரதையுமான பத்தினியை கொளுத்தி அச்சிதையில் உண்டான பஸ்மாக்களால் யாதொரு பரமேச்வரனை அபிஷேகம் செய்து நைவேத்தியத்தை செய்யக்கருதி ஏ பிரியே பகவன் நிவேதனத்தை கொண்டுவா என்று ஆஹ்வானம் செய்தவராய் இருந்துகொண்டு யாதொரு பரமேச்வர பிரஸாதத்தால் இறந்துபோனவளான அப்பத்தினியையும், இறுதியில் சிவபதத்தையும் அடைந்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

गौर्यां शृङ्गारवाप्यां स्वसखिवरगणैः क्रीडयन्त्यां कपर्दी
गत्वा तद्धस्तपंकात्जनितमपि नरं द्वास्थमुद्दण्डचण्डम् ।
हत्वान्तस्संप्रविष्टः कुपितसखिमुदे तं पुनर्जीवयित्वा
तस्मै विघ्नेश्वरत्व प्रमुखवरमदात्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १५६

156. கௌரீயானவள் நந்தவனத்தில் உள்ள குளத்தில் தனது தோழிகளோடுகூட விளையாடிக்கொண்டிருக்கும் தருணம் கபர்த்தியான யாதொரு பரமேச்வரன் அந்த நந்தவனத்தை அடைந்து அந்த நந்தவனத்தின் வாசல் கார்ப்பவனும்

மிகவும் கொடுமையான நடையை உடையவனும், அம்பிகையின் கையில் உள்ள பக்கத்தில் இருந்து உண்டானவனுமான ஒரு நாமேன சங்கரித்து உள்புகுந்து அந்த துவாரபாலகனை நாமேனக் கொன்றதினுல் கோபத்தை அடைந்த அம்பிகையின் ஸந்தோஷத்தின்பொருட்டு அந்நாமேன மறுபடியும் (யானைத்தலேயைச் சேர்த்து உயிர்பித்து) அவன் பொருட்டு விக்னங்களுக்கு ஈச்வரனுக இருக்கல் முதலிய வரங்களே கொடுத்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

एकान्ते जातु यस्य प्रमुदितमनसा प्रोक्तवेदान्त तत्वो
पेक्षारुएस्य वाक्याद्गिरिगरितनया धीवराधीशवंशे।
आविर्भूयाम्बुधिस्थप्रबलशफरसंग्राहिणं यं वरेण्यं
वृत्वा तद्वामभागे वसतिमपि गता कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५७

157. ஓர் ஸமயம் ஏகாந்தத்தில் ஸந்தோஷத்தோடுகூடின மனஸால் சொல்லப்பட்ட வேதாந்த சாஸ்திர தத்துவங்களே கேட்கிறவிஷயத்தில் அச்ரத்தையாய் இருந்ததினுல் கோபத்தை அடைந்த யாதொரு பரமேச்வரனுடைய வாக்கியத்தினுல் ஹிமவானுக்கு குமாரியான பார்வதி வலேயர் வம்சத்தில் ஜனித்து (தன் பர்வகாலத்தில்) ஸமுத்திரத்தில் உண்டான ரொம்பவும் பலம்வாய்ந்த மகாமத்ஸ்யத்தை பிடித்தவரும், வரேண்யருமான யாதொரு பரமேச்வரனே கல்யாணம் செய்து கொண்டு வாமபாகத்தில் வஸிப்பதையும் அடைந்தாளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது திருவிளையாடல் வலேவீசியபடலம்).

केकी भूत्वा मृडानि स्वपितृकृतशिवद्वेषसंवृद्धपापं
भस्मीकर्तुं पुराणं शतधृतिरचिते कानने यं त्रिणेत्रम्।
संपूज्यानन्यदृष्टं नटनमतिमुदा वीक्षमाणाकृपाद्रेः
यस्यालोकैः पुनीतासमजनि नितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५८

158. மிருடானியானவள் தனது பிதாவான தக்ஷனுல் செய்யப்பட்ட சிவத்வேஷத்தினுல் உண்டான பாபத்தை பஸ்மமாக செய்வதற்கு மயிலின் உருவத்தை எடுத்துக்கொண்டு

பிர்ம்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட வனத்தில் (மாயூர க்ஷேத்திரத்தில்) முக்கண்ணனான யாதொரு பரமேச்வரனை பூஜை செய்து இதரர்களால் பார்க்கப்படாததான பரமேச்வரரின் தாண்டவத்தை பார்க்கிறவளாக இருந்துகொண்டு கிருபையினால் நினைத்ததான யாதொரு பரமேச்வரனுடைய கடைக்கண் பார்வைகளினாலே பரிசுத்தையாக ஆனாளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது மாயூர மாஹாத்மியத்தில் உள்ளது.)

यस्य क्षेत्रे मृतानां सकलजनिभृतां सञ्चितादीनि पापा
न्यब्दानेकप्रभोज्यान्यपि च निमिषतो भैरवश्शूलघातात्।
भस्मीकृत्याशुभूयो जननमृतिहरं तारकं यन्निदेशात्
तत्वं सम्बोधयन्यत्सदसि वसति तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५९

159. யாதொரு பரமேச்வரனுடைய க்ஷேத்திரத்தில் (சிதம்பரத்தில்) மரணத்தை அடைந்தவர்களான ஸகல பிராணிகளுக்கு அனேக வருஷங்களில் அனுபவிக்கத்தகுந்த ஸஞ்சிதம் முதலிய பாபங்களை (ஸஞ்சிதம் என்பது அனேகப் பிறவிகளில் செய்யப்பட்ட பாபசேஷங்கள்) ஒரு நிமிஷத்தில் யாதொரு பரமேச்வரனுடைய கட்டளையினாலே பைரவர் தனது சூலத்தைக் கொண்டு அடித்து சீக்கிரம் பஸ்மமாகச்செய்து மறுபடி ஜனன மரணத்தை போக்கடிக்கிறதான தாரக மந்திரத்தையும், பிர்ம்ம தத்துவத்தையும் உபதேசித்துக்கொண்டு யாதொரு பரமேச்வரனுடைய சித்ஸபையில் வஸிக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது पुण्डरीकपुरमाहात्म्ये अ-4 श्लो-49-53½
दर्शनाद्देवदेवस्य विमुक्ता मनुजायतः। क्षेत्रान्तरेषु यत्पुण्यं पापंवा क्रियतेनरैः॥ तदेवात्रकृतं सर्वमेकंकोटिगुणं भवेत्। क्षेत्रपालस्तुतेषांवै पापिनां पापशान्तये॥ शासितानयमोनान्योह्यसमर्थास्तुतेयतः। शूलाग्रेगतुदण्ड्यन्ते तेनपापरतानराः॥ अष्टाविंशतिभिःपापैः कोटिभिर्नरकेमुने। अतिघोरैस्तुपीड्यन्ते यमेनाऽऽभूत संप्लवम्॥ तावत्कालेनतेषांवयद्दुःखं जायतेमहत्। तद्दुःखं कोटिगुणितं लभन्ते प्राणिनस्त्विह॥ क्षेत्रपालेन शूलाग्रे दण्ड्यमानाक्षणेवत॥ इति॥

சிதம்பர புராணம் நியமச் சருக்கம் பா. 37, 38, 39.

சீதமலர்ப் பொழிற்றில்லை யிருந்துதீ
வினைபுரிந்தோர் தெய்வமன்றுட்
பாதமலர் கண்டுடனே முத்தரா
தலினானும் பலனுமன்றே
ரோதுவினைப் பயனூட்ட வுரனிலனென்
பதுகொண்டு தண்டஞ்செய்தற்
காதிபரம் பரன்காலற், கதிகார
மவ்வளவுக் கமைத்தானல்லன்.

அன்னதனுக் கதிகார மப்பதிப்பால்
வயிரவனுக் களித்தான்காலன்
பன்னரிய வோரிருபத் தெண்கோடி
நரகத்துட் பதுமத்தண்ணா
றன்னுரிய கற்பமெலாம் புரிதண்ட
மவ்வடுகன் றயங்குசூலத்
துன்னரிய நுனியிடையோர் கணப்போதிற்
படுந்துயருக் கொவ்வாதம்மா.

அத்தலத்தி னிடைக்கொடிய பாதகங்கள்
புரிந்தோரை யனேகங்கோடி
நித்தமுறு கற்பமெலாம் பதிப்பாலன்
காதலத்து னிகரிலாத
முத்தலையி னுனியினருங் கொடியவினைப்
பெரும்பயன்கண் முடித்துநீங்கத்
துய்த்திடுமா றுய்த்திடுவன் றுய்க்குப்போ
துளதுயரஞ் சொல்லற்பாற்றே.

(पाद्मे शिवगीतायाञ्च अ-16 श्लो-9) अविमुक्ते द्वारकायां श्रीशैले पुण्डरीकके। देहान्ते तारकंब्रह्म लभतेमदनुग्रहात्॥ என்பவைகளான பிரமாணங்களால் நன்கு கூறப்பட்டுள்ளதே),

विष्णोरन्यः परोनेत्यसकृदपिमुधाजल्पमानं मुनीन्द्रं
नन्दीकोपप्रभूतस्तनितनिभरवस्तम्भितप्रोच्चबाहुम्।

व्यासं दृष्ट्वा मुकुन्दः स्वपतिरितिशिवं बोधयन्यत्कृपाया
निन्ये पात्रत्वमीशं तमखिलविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १६०

160. விஷ்ணுவைக் காட்டிலும் வேறு உயர்ந்த தேவர் இல்லை என்று அடிக்கடி அஞ்ஞானத்தினால் (காசி க்ஷேத்திரத்தில் விச்வநாதருடைய ஸந்நிதியில்) சொல்லுகிறவரும், முனிச்ரேஷ்டரும், நந்திகேச்வரரின் கோபத்தினால் உண்டான இடிக்கு ஒப்பான சப்தத்தினால் ஸ்தம்பிக்கும்படி செய்யப்பட்ட உயர்த்தூக்கின கைஉள்ளவருமான வியாஸரைப் பார்த்து மஹாவிஷ்ணு ஸர்வமங்களகரரான பரமேச்வரனை தனக்கு பதி என்று போதித்து யாதொரு பரமேச்வரனுடைய கிருபைக்கு பாத்திரமாக இருக்குகையை அடைவித்தாரோ அப்படிப்பட்ட ஈசனும், எல்லோர்களாலேயும் துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம். இஃது சங்கர சம்ஹிதையிலுள்ளது.

सर्वे देवाश्च विष्णोर्हृदयसरसिजोद्भासिलिङ्गं यजन्तः
कुर्वेऽप्यन्योन्यचर्चापदघनविलसत्पञ्चरुद्रादिमन्त्रैः।
स्तुत्वा यत्प्राप्तविद्याजपपरकविराड्योगसंतप्तलोकान्
सौख्यं निन्युः नितान्तं यदमलदयया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १६१

161. எல்லா தேவர்கள் மந்திரமலையில் விஷ்ணுவின் ஹிருதய தாமரையில் விளங்குகிற லிங்கரூபியான பரமேச்வரனை பூஜை செய்கிறவர்களாக இருந்துகொண்டு ஒருவருக்கொருவர் சர்ச்சைகளோடு கூடின பத, கன, கிரமங்களால் விளங்குகிற (வேதமந்திரங்களை உச்சரிக்கும் ஒருவித முறை) பஞ்ச ருத்திரம் முதலிய மந்திரங்களால் துதித்து யாதொரு பரமேச்வரனிடம் இருந்து அடையப்பட்ட மிருதஸஞ்ஜீவினீ மந்திரஜப சீலரான சுக்கிராசாரியரின் யோகாக்கினியால் தபிக்கிற லோகங்களை மிகவும் ஸௌக்கியத்தை அடையும்படி செய்தார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது கூர்ம புராணத்தில் உள்ளது.)

यस्योक्त्या विघ्नराजस्सुरगणविनुतो रक्षसां सार्वभौमात्
मायासंमोहिताद्यज्ञानिमशुभकरं बाहुनाऽऽदाय भूम्याम्।

संस्थाप्याग्रे युयुत्सुं तमपि निशिचरं स्वीयशुण्डाग्ररन्ध्रा
कर्षात्सम्भुग्नदेहं दशभुजमकरोत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १६२

162. யாதொரு பரமேச்வரனுடைய வாக்கியத்தால் தேவர்களால் துதிக்கப்பட்ட விநாயகர் மாயையினுல் மோகிக்கும் படி செய்யப்பட்ட ராக்ஷஸச்ரேஷ்டனை இராவணனிடம் இருந்து மங்களத்தை செய்கிறதான யாதொரு பரமேச்வர னுடைய லிங்கத்தை கையினுல் வாங்கி பூமியில் வைத்து (மறுபடி அந்த லிங்கத்தை எடுக்கமுடியாத காரணம்பற்றி கோபத்துடன்) தனது முன்பாக யுத்தம் செய்ய விரும்பின அக்நிசரனை (ராவணனை) தன் துதிக்கை நுனித்துவாரத்தின் ஆகர்ஷணத்தினுல் நொறுங்கிப்போன சரீரத்தை உள்ளவனுகச் செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது கோகர்ண மஹாத் மியத்தில் உள்ளது.

आर्यावमांसभूषानवमणिगणभासंगवैवर्ण्यनील
ग्रीवालोकातिशङ्किप्रसृतविषभयाक्रान्तदिक्पालवर्गम् ।
चूडाचन्द्राजिहीर्षादरविवृतफणाकुण्डलीकर्णलोलत्
गङ्गाकूलायमानस्वसटवरवनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १६३

163. அம்பிகையின் இடதுதோள் புறத்திலுள்ள ஆபரணங் களின் நவரத்தின காந்தி ஸம்பந்தத்தினுல் உருமாறின நீல கண்டத்தைப்பார்த்து மிகவும் காலகூட விஷப்பிரசார மென்ற ஸந்தேகத்தால் பயந்து ஓடுகிற திக்பால கூட்டத்தை உடைய வரும், தலையில் உள்ள சந்திரனை உண்ண விருப்பத்தால் சிறிது விரிக்கப்பட்ட படங்களோடுகூடின ஸர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்ட இரண்டு காதுகள் பர்யந்தம் அசைகிறதும் கங்கைக்கு கரைபோன்றதுமான தனது ஜடைகளாகிற சிரேஷ்ட மான வனத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

शिञ्जन्मञ्जीरमञ्जुद्युतिशमितजगन्मोहमायाविलासं
फालाक्षिस्फारकुण्डप्रभवहुतवहध्वस्त कामप्रभावम् ।
संसाराम्बोधिमध्यभ्रमदखिलजगत्तारनौकायिताङ्घ्रिं
द्वन्द्वाद्वन्द्वादिशून्यंविजयितुतकृतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १६४

164. சப்திக்கிறதுகளான சிலம்புகளின் அழகுவாய்ந்த காந்தியினால் அடக்கப்பட்ட உலகத்திற்கு மோஹத்தை உண்டு பண்ணுகிற மாயையின் பிரபாவத்தை உடையவரும், நெற்றிக் கண்ணுகிற பெரிய குண்டத்தில் உண்டான அக்கினியால் துவம்ஸம் செய்யப்பட்ட மன்மதனின் பிரபாவத்தை உடைய வரும் ஸம்ஸார ஸமுத்திரத்தின் நடுவில் சுழலுகிற ஸமஸ்த உலகங்களை காப்பாற்றுகிற விஷயத்தில் ஓடம் போன்றதான சரணத்தை உடையவரும் தொந்துவாத்தொந்துவங்கள் அற்ற வரும் அர்ஜுனனால் துதிக்கப்பட்ட கிருதியை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

एकान्ते यस्य लीलारदवसनसुखास्वाददन्तक्षतानि
व्याघ्रत्वग्रोमरूक्षाकनकमृदुतरक्षौमभूतीरजांसि।
दृष्ट्वा कस्मादियं श्रीस्त्वयि भवति वदेत्यालिगीः सोपहासं
श्रुत्वा गौरी तदासीन्नतमुखकमला कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६५

165. ஏகாந்த ஸமயத்தில் யாதொரு பரமேச்வரனுடைய லீலா காலத்தில் உண்டான தந்தக்ஷதங்களையும், புலித்தோலின் ரோமங்களோடு கூடினதும், பொன்வர்ணமும் ரொம்பவும் மிருதுவானதுமான வெண்பட்டாடையிலுள்ள விபூதிதூளிகளை யும், பார்த்து எந்த காரணத்தினால் இவ்வித சோபை உன்னிடம் உண்டானது தெரிவி என்று தோழிகளின் பரிஹாஸ வார்த்தை களைக்கேட்டு அம்பிகை அத்தருணம் குனிந்த முகமுள்ளவளாக ஆனளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

क्रीडन्नास्तेमहेशोगिरिवरसुतया सप्रमोदं मनोज्ञे
हर्म्ये नैवाद्यदेवागदितुमवसरो यातमौनेनशीघ्रम्।
एवं कोपारुणाक्षो विधिहरिमुखरान्वारयन्यद्द्वराभून्
मूलेनन्दीगणेन्द्रैर्वसति तमपरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६६

166. மஹேசர் அம்பிகையோடு மனோஹரமான உப்பரிகை யில் ஸந்தோஷத்துடன் விளையாடிக்கொண்டு இருக்கிறார். ஏ தேவர்களே இப்பொழுது பேசுவதற்கு ஸமயம் இல்லை மவுனத் தோடு சீக்கிரம் இவ்விடம்விட்டு அகலுங்கள் என்று

கோபத்தினுல் சிவந்த கண்களை உடைய நந்திகேச்வரர் பிர்ம்மா, விஷ்ணு முதலான தேவர்களை தகைந்து யாதொரு பரமேச்வரனுடைய கைலாஸ பர்வதத்தின் அடிவாரத்தில் மற்றும் கணங்களோடுகூட வஸிக்கிராரோ அப்படிப்பட்ட தன்னைக்காட்டிலும் ச்ரேஷ்டர் இல்லாதவரான குஞ்சிதாங்கிரிம்.

अक्षक्रीडासुलब्धत्रिदशपुरवधूबोधनात्स्वान्तकाले
नूनानूनानुयोगात्सविशयशमनप्राप्तयत्सन्निधानः।
पापारोपातिरोषप्रहरणसभयोद्भ्रान्तचित्रोयदुक्त्या
विप्रः कश्चिन्निधीनामधिपतिरभवत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६७

167. பாச்சை விளையாட்டில் ஜயித்ததினுல் ஸ்வாதீனையான தேவலோக கன்னிகையின் போதனத்தால் தனது இறுதி காலத்தில் தன்னை அணுகினவனும் புதிய யமனு, பழய யமனு என்ற கேள்வியினுல் ஸந்தேகத்தோடு கூடினவனுமான யமனுல் யாதொரு பரமேச்வரனுடைய ஸன்னிதானத்தை அடைவித்தவனும் தன்னை பாபி என்று சொன்ன காரணம்பற்றி கோபத்தால் சித்திரகுப்தனை அடித்து பயத்தோடு பிரமிக்கும்படி செய்தவனுமான ஓர் பிராம்மணன் பரமேச்வரனுடைய கட்டளையால் நிதிகளுக்கு அதிபதியாக ஆனுனே அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

हंस्यां लब्धस्वजन्माकरटवरवपुस्स्वर्णकान्तिर्भुसुण्डो
लेभे यस्यप्रसादादनितरसुलभं मृत्युभीतेरभावम्।
कल्पेकल्पे वसिष्ठप्रमुखमुनिवरप्रश्रुतानेकवृत्तो
प्यास्ते यद्ध्यानयोगात्कनकगिरिवरे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६८

168. பெண் ஹம்ஸத்தில் இருந்து ஜனித்தவரும், காக்கை வடிவம் தாங்கினவரும் தங்கம்போன்ற மேனியனுமான புசுண்டர் என்னும் யோகி யாதொரு பரமேச்வர பிரஸாதத்தினுல் இதரர்களால் அடைய முடியாததான மரண பயம் இல்லாமல் இருக்குகையை அடைந்தாரோ, கற்பங்கள்தோறும் வஸிஷ்டர் முதலிய முனிவர்களால் கேட்கப்பட்ட அனேக கல்பாந்தரங்களில் நிகழ்ந்த விருத்தாந்தங்களை உடையவராய் இருந்துகொண்டு மஹாமேருமலையில் யாதொரு பரமேச்வரனை தியானம்

செய்துகொண்டு இருக்கிருரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது ஞானவாஸிஷ்டத்தில் கூறப்பட்டுள்ளது.)

धूम्राक्षं रक्तबीजं महिषमपिमधुं कैटभं चण्डमुण्डौ
क्रूरं शुम्भं निशुम्भं सुररिपुमपरं दुर्गमत्युग्रवृत्तम्।
हत्वा युद्धे विधीन्द्रप्रमुखमकुटभादीप्तसिंहासनस्था
दुर्गा यस्यादिशक्तिः निखिलमवति तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६९

169. தூம்ராக்ஷன், ரக்தபீஜன், மஹிஷாஸுரன், மது, கைடபன், சண்டன், முண்டன், குரூரனை சும்பன், நிசும்பன், தேவர்களுக்கு சத்துருவும், இரண்டாம்பேர் இல்லாதவனும், உக்கிரமான விருத்தத்தை உடையவனுமான துர்க்கன் இவர்களை யுத்தத்தில் ஸம்ஹரித்து பிரம்மா, இந்திரன் முதலிய தேவர்களின் கிரீட காந்தியினலே பிரகாசிக்கிற ஸிம்மாஸனமமர்ந்த துர்க்கா தேவி யாதொரு பரமேச்வரனுக்கு ஆதி சக்தியோ எல்லாவற்றையும் ரக்ஷிக்கிராளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

ज्योतिष्टोमाख्यसोमक्रतुसवनहविःपुञ्जमत्यन्तभक्त्या
गूढाकारं यमीशं सगणमपि शिवं यज्ञवाटप्रविष्टम्।
हेरम्बोक्त्याप्रबुध्वास्वयमपिमुदितो याज्यया यत्कराब्जे
दत्वामाराभिधोग्र्यश्शिवनगरमगात्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७०

170. மாரன் என்று பெயர் உள்ள (ஸோமயாஜிமார நாயனர்) ஒரு அந்தணன் ஜோதிஷ்டோமம் என்கிற யாகத்தில் ஹவிஸுகளை மிகவும் பக்தியோடு (நீசவேஷத்தால்) மறைந்த உருவத்துடன் பிரமதகணங்களோடு தனது யக்ஞவாடத்தை அடைந்த ஸர்வமங்களகானை யாதொரு பரமேச்வரனை விநயகரின் அனுக்கிரஹத்தால் அறிந்து ஸந்தோஷத்தோடு தானே யாஜ்யாபுரோனுவாக்கியையோடு (ஓர் மந்திர விசேஷம்) யாதொரு பரமேச்வரனுடைய கையில் அர்ப்பணம் செய்து திருக்கைலையை அடைந்தானே அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

क्रीडार्थं स्वग्रभागस्थितगिरितनुजावक्त्रचन्द्रावलोक
प्रोद्यत्कन्दर्परक्षामुकुलितवरदृक्फालपट्टाभिरामम्।

लीलाडोलानुकूलश्वसनमुखवृषप्रान्तरायातमोह
भ्रान्तस्वर्धेनुमृग्यत्सुरनिजशरणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १७१

171. விளையாட வேண்டி தனது முன்புறம் வீற்றிருக்கிற அம்பிகையின் முகமாகிற சந்திரனைப் பார்த்ததினால் உண்டான மன்மதனை ரக்ஷிக்கவேண்டி மூடின மூன்றாவது கண்ணோடு கூடின பெரிய நெற்றியினால் அழகுவாய்ந்தவரும், விளையாட்டுக்காக செய்யப்பட்ட ஊஞ்சலின் அசைவுகளுக்கு அனுகூலமான மூச்சுக்காற்றுக்களோடு கூடின முகமுள்ள விருஷபத்தின் ஸமீபத்தை அடைந்து மிகவும் மோகத்தினால் சுற்றுகிற காமதேனுக்களை தேடுகிற தேவர்களால் நிறைந்த தனது ஆலயத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

विश्वण्डानेककोटिच्युतिकरडमरुस्फारघोषान्नितान्तं
कल्पान्ताशाङ्किलोकाऽभयकरवलयव्यालरत्नांशुकान्तम्।
तिर्यक्कल्पप्रकुञ्चीकृतपदरविभावाप्तिमोदानुधाव
द्धस्तं प्रोच्चप्रसर्पच्छिखिलसितकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १७२

172. அனேக பிரம்மாண்டங்களை நழுவும்படி செய்கிற (தூக்கின வலது கையில் தரிக்கப்பட்ட) டமருகத்தின் பெருத்த ஒலியினால் மிகவும் பிரளயகாலம் என்று ஆசங்கிக்கிற உலகத்திற்கு அபயப்ரதானம் செய்கிற கையில் (அபயகரத்தில்) சுற்றப்பட்ட ஸர்ப்பத்தின் இரத்தின காந்தியினால் மனோகரரும் குறுக்காக தூக்கிவளைக்கப்பட்ட பாதமாகிற சூர்யனின் காந்தியை அடையவேண்டி ஸந்தோஷத்துடன் பின்பற்றின பேரன ஹஸ்தத்தை உடையவரும், கொழுந்துவிட்டு எரிகிற அக்கினியை தரிக்கிற (மற்றொரு) கையை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

भोभोः भ्रातस्त्वैका षडपि वदनता ब्रह्मिमध्यं किमर्थं
जाता[illegible]वेत्यादरेण द्विपवरवदनेनानुपृष्टे कुमारे।
स्वामिन्[illegible]चाभ्यसितुमथ पितुश्चैकदेति ब्रुवाणे
[illegible]ऽजिघ्रत्[illegible]धी[illegible]वं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १७३

173. முன்னொரு ஸமயம் கைலையில் ஓ தம்பி உனக்கு ஆறு முகம் எதற்காக உண்டானது என்னிடம் சொல் என்று ஆதாவோடு விநாயகர் கேட்க, பிறகு ஸ்வாமின் பிதாவிடமிருந்து ஒரே காலத்தில் ஆறு சாஸ்திரங்களையும் கற்றுக்கொள்வதற்காக (எனக்கு) ஆறுமுகம் உண்டானது என்று பதில் சொன்ன குமாரரான ஸுப்பிரமண்யரை யாதொரு பரமேச்வரன் முத்தமிட்டுக்கொண்டாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

मत्स्याक्षि क्रूरकूर्म पृथुतरकठिनत्वग्वराहेन्द्रदंष्ट्रा
घोरत्रैविक्रमास्थिप्रबलनरहरिस्फाररक्ताजिनानि।
विष्णोर्नेत्राम्बुजातं विधिमुखनिचयं पूषदन्तांश्च धृत्वा
यस्तद्दर्पप्रशान्त्यै प्रथयति विभुतां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७४

174. யாதொரு பரமேச்வரன் மத்ஸியத்தின் கண் குரூரமான ஆமையின் பெருத்த தோல், பன்றியின் பல், கோரமான வாமனரின் எலும்புகள், மிகவும் பலம் வாய்ந்த நரஸிம்மரின் ரத்தம் தோய்ந்த பெருத்த தோல், விஷ்ணுவின் நேத்திரமாகிற தாமரைப் புஷ்பம், பிர்ம்மாவின் முகங்கள், சூரியனின் பற்கள் இவைகளை அந்த அந்த தேவர்களின் கெர்வத்தை அடக்க வேண்டி தனது சரீரத்தில் ஆபரணமாக தரித்துக்கொண்டு பிரபுவாக இருக்கும் தன்மையை பிரகாசப் படுத்திக்கொண்டிருக்கிறுரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:– ஸ்ரீ பரமேச்வரன் விஷ்ணுவின் மத்ஸ்யம் முதலிய அவதார நிக்ரஹத்தில் அபஹரித்த அங்கங்களை தனது திருமேனியில் எவ்விடங்களில் தரிக்கிறுர் எனில் पादे विष्णुविलोचनं कटितटे श्रीनारसिंहाजिनं हारे कूर्मशिरोलसत्करतले कङ्कालनामायुधम्। शूलाग्रे शवकेशवं विधिशिरोमालांश्च दन्तान्रवेः सर्वं विष्णुमयं सदा शिववपुः व्यक्तं पुराणोदितम्॥

कल्पान्तेशमितत्रिविक्रम महाकङ्काल बद्धस्फुरच्छेष स्यूत नृसिंह-पाणिनखरप्रोतादिकोलामिषः। विश्वैकार्णवता विहारमुदितौ यौ मत्स्य-कूर्मावुभौ कर्षन्धीवरतां गतोऽस्तु सतां मोहं महाभैरवः॥ என்கிற ஸ்ரீ மணியசிவனென்று ப்ரஸித்தரான ஸுப்ரமண்யசிவத்தின்

வாக்காலும், சதுர்வேத தாத்பர்ய ஸங்கிரஹத்திற்கு வியாக்யானம் செய்தருளிய ஸ்ரீ சிவலிங்கபூபதியின் வாக்கினாலும் உணர்க.

84, 111 சுலோகங்களில் கூறின அம்சி என்பதை பின்பற்றி இச்சுலோகத்தில் ஸ்ரீநடராஜரே தனது கலைகளில் ஒன்றை இதர க்ஷேத்திரங்களில் உள்ள உருவங்களில் பிரகாசிக்கும்படி செய்தும் இரவில் அர்த்தயாம காலத்தில் தன்னிடத்திலேயே லயிக்கும்படியும் செய்கிறார் என்று கூறுகிறார்.

आसेतोरासुमेरोर्धरणिगतनिजक्षेत्रवर्येषु नित्यं
साहस्राकारभाजां स्वतनुमधिचजुषत्चिलानां प्रमोदात्।
एकांसंयोजयंस्तां निशिनिशि निजहृत्पङ्कजेसन्निरुन्धन्
यो भात्यानन्दमूर्तिर्बहुविधफलदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७५

175. ராமஸேது முதல் மஹாமேருவரை பூமியில் உள்ள தனது க்ஷேத்திரங்களில் ஆயிரம் பேதங்களான தனது சித்ரூப கலைகளில் ஒரு கலையை ஒவ்வொரு நாளும் ஸஞ்சரிக்கும்படி செய்து இரவில் அக்கலையை தனது ஹிருதயத்தில் அடக்கிக் கொண்டு யாதொரு ஆனந்த மூர்த்தியான பரமேச்வரன் விளங்குகிறாரோ அப்படிப்பட்ட பகுவிதமான பலத்தை கொடுக்கிற குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு :- सुव्यक्तमेतत् पुण्डरीकपुरमाहात्म्ये अ-३ श्लो-४३-४६ सर्वेन्द्रियाणिहृदये लीयन्तेहि सुषुप्तिषु। तथैवसर्वक्षेत्राणि पुण्डरीकपुरेलयम्॥ लयोनास्य कदाचिच्च जैमिनेसत्यमीरितम्। देवदेवस्स्वयंसाक्षात्क्षेत्ररूपेणवर्तते॥ क्षेत्रान्तराणिनैवं स्युस्तस्मादेतद्विशिष्यते। क्षेत्रान्तरस्थितादेवा निशीथस्यतुमध्यमे॥ पुण्डरीकपुरंयान्ति तदासेवा विशिष्यते। देवदेवस्सभानाथो नयातिकापि कुत्रचित्॥ इति॥

சிதம்பர புராணம் துச்சகச் சருக்கம் பா-111

எப்பதிகளினுமுள்ள விறையருண் மூர்த்தியாவஞ்
செப்பருஞ் சிதம் பரத்துட் டிருவத் தயாமந்தன்னி
லொப்புற வடைதலானு லுரைக்குமெக் காலத்துள்ளு
மப்பெருங் காலச்சேவை யதிகவுத் தமமாமென்றே.

அப்பர்ஸ்வாமிகளின் (3-வது திருமுறை கோயிற்புக்க திருத் தாண்டகம்.)

மங்குன்மதிதவழு மாடவீதி
மயிலாப்பிலுள்ளார் மருகலுள்ளார்
கொங்கிற் கொடுமுடியாற்
குற்றாலத்தார் குடமூக்கிலுள்ளார்
போய்க்கொள்ளப் புதூர்த் தங்குமிட மறியார்
சாலநாளார் தருமபுரத்துள்ளார் தக்களூரார்
பொங்குவெண் ணீரணிந்து பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற்றம்பலமே புக்கார்தாமே.

(இது முதலான பாசுரங்கள் 11) என்பவனாதிகளான பிரமாணங் கள் இவ்விஷயத்தை நன்கு அறிவிக்கிறதுகள். இம்மூர்த்தியை அர்த்தயாம காலத்தில் தரிசிப்பது இதர க்ஷேத்திரங்கள் எல்லா வற்றையும் தெரிசித்ததற்கு ஒப்பாகும்.

कल्पे कल्पे स्वकीयप्रभवलयभयं त्यक्तुमाद्ये परार्धे
वेदायं कालकालं बहुविधतपसा तोषयित्वा यदुक्त्या।
त्रैसाहस्रं द्विजत्वं दिविपदसुलभं लब्धवन्तः क्रमेण
नित्यं यं पूजयन्ति स्वसरणिविधिना कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७६

176. வேதங்கள் ஒவ்வொரு கற்பங்கள்தோறும் தங்க ளுடைய உற்பத்திநாசத்தால் உண்டாகிறபயத்தை போக்கடிக்க வேண்டி முதலாவது பரார்த்தத்தில் (இக்கற்ப ஆரம்ப காலத்தில்) காலனுக்கும் காலனை யாதொரு பரமேச்வரனை அனேகவித மான தபஸினாலே ஸந்தோஷிக்கும்படி செய்து யாதொரு பரமேச்வரனுடைய கட்டளையால் தேவர்களால் அடைய முடியாத (3000) மூவாயிரம் பிராம்மணர்களாக ஆகி கிரமமாக ஒவ்வொருநாளும் யாதொரு பரமேச்வரனை தங்கள் வழியில் உள்ள விதியினால் (வேதத்தில் சொல்லப்பட்ட விதியினால்) பூஜை செய்கிறதுகளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:- சிதம்பர ரஹஸ்யம், தஹராவிந்யாகண்டம் முதலிய கிரந்தங்களில் இவ்விஷயம் கூறப்பட்டுள்ளது. அதில்

त्रिसाहस्रं द्विसाहस्रं साहस्रं द्विशतंतथा। सन्तितिल्लवने विप्राः कमात्कृतयुगादिषु॥ என்று இக்கலியில் 200 நபர்கள் என்றும் அறிவிக்கிறது. शुद्धान्वयानामेतेषां ज्वलत्पावकरोचिषाम्। अद्यमेक त्रिसाहस्रसङ्ख्या सङ्ख्यातिपूरकः॥ (चि-मा-अ-२४-श्लो-८३)

செம்மைமெய் பெரியோர்போலத் தேடரிதென்று மைந்தன்
மெய்ம்மையிற் றுயரநோக்கி விமலன்வின் னவரும் கேட்ப
வெம்மையொப் பவர்கள்யாரும் யாபவர்க் கொப்போயென்றே
யம்மையப்பனு மாவனுமவர்களி லொருவனென்றான்.

(கோ. இ. ச. 128) என்று சிதம்பர மஹாத்மியம் கோயிற் புராணம் கூறுதலால் ஸ்ரீநடராஜரே மூவாயிரம் ஸங்கியை பூர்த்தி செய்கிறவராக ஆகிறார். மின்னும் ஸ்ரீசிதம்பரம் ஸ்ரீநடராஜர் தேவஸ்தான ஸம்பந்தமான சுமார் 800 வருஷங்களுக்கு மேற் பட்ட எட்டுப்பிரதிகளிலும் நபர்களின் ஸங்கியைகள் சற்றேறக் குறைய அவ்விதமே வரையப்பட்டுள்ளன.

இவர்கள் வேதமூர்த்திகள் என்பதுபற்றி ஸ்ரீமணிவாசகரும் 'வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே' (திரு. கண்டபத்து 10) என்கிற பாசுரத்தில் நன்கு விளக்குகிறார். வேதங்கள் சப்தாத்மகங்களும் ரூபமற்றதுகளும ஆனதால் வேத ரூபிகளான தில்லை வாழந்தணர்கள் என்றே அதன் பொருள். அதே பத்தில் 6-வது பாசுரத்தில் 'மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேனே' என்கிற வாக்கே இப்பொருளை அறிவிக்க கமகம்.

ஞானஸம்பந்தரும் இவ்வந்தணர்களை ஸ்ரீநடராஜ ஸ்வரூபர் களாகவே தரிசித்து

நீலத்தார் கரியமிடற்றார் நல்ல நெற்றிமேலுற்ற கண்ணினர்
பற்றுசூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்தும் சிற்றம்பலஞ் சேர்தலாற் கழற்சேவடி
கைதொழக் கோலத்தாயருளா யுன்காரணங் கூறுதுமே.

(ஞா. திரு. 3-1-3) என்றும் புகழ்ந்து கூறியுள்ளார்.

வேதங்கள் பரமேச்வர ஸ்வரூபங்கள் वेदश्शिवः शिवोवेदः। वेदमूर्तिरहं विप्राः। என்கிற பிரமாணங்களால் அறியப்படுகிறது கள். பரமேச்வர ஸ்வரூபர்களான இவ்வந்தணர்களும் வேத ஸ்வரூபர்கள் என்பதும் தெளிவே.

பின்னும் திருவாரூரில் பகவான் ஸ்ரீஸுந்தரருக்கு 'தில்லை வாழந்தணர்த மடியார்க்கு மடியேன்' என்று இவர்களைப் போற்றி அடி எடுத்துக் கொடுத்தபடியால் இவர்கள் உயர்வை எழுத யார் வல்லனுவான். பட்டிணத்தடிகளும்,

ஆற்றேடுதும்பை யணிந்தாடு மம்பல வாணர்தமைப்
போற்றுதவர்க் கடையாளமுண்டே யிந்தப்பூதலத்திற்
சோற்றுவியற்று சுகமற்று சுற்றத்தணியுமற்றே
யேற்றாலும் பிச்சைகிடையாம லேக்கற்றிருப்பார்களே.

என்று கூறியுள்ளார். அம்பலவாணரைப்போல் அம்பலவாண ஸ்வரூபர்களான தில்லை மூவாயிரவர்களை போற்றுதவனுக்கும் அக்கதியே என்று அப்பாட்டின் உண்மைக் கருத்து. மற்றும் சிதம்பரமாஹாத்மியம், பக்தவிலாஸம், கோயிற்புராணம், திருமுறை முதலியவைகளில் கூறியுள்ளவைகளை விளக்கிக்காட்டில் விரியும்.

அதிகம் இவ்வந்தணர்களைப்பற்றிய அறியவிரிய விஷயங்களை பிரம்மபூயங்கதாளான சாஸ்த்ராசார்ய மஹாமஹோபாத்யாய ஸ்ரீ தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட சிதம்பர தத்துவ நிர்ணயம் என்னும் வடமொழி நூலில் கண்டுகொள்க.

यस्योत्कर्षं च विष्णोस्सदनमधिगतो वह्निसन्दग्धपीठे
स्थित्वा श्रुत्यन्तवेद्यं शिवमपिपरमं बोधयन्स्वांचभूतिम्।
धिक्कुर्वन्दुर्मतीनां निकरमपि यदीयाज्ञयाबन्धुवर्गैः
विप्रः कश्चिद्बुधेड्योरजतगिरिमगात्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७७

177. வித்வான்களால் புகழப்பட்ட ஓர் பிராம்மணன் (ஹரதத்தர்) விஷ்ணுவின் ஆலயத்தை அடைந்து அக்கினியில் காய்ச்சப்பட்ட பீடத்தில் இருந்து யாதொரு பரமேச்வரனுடைய உத்கர்ஷத்தையும் வேதாந்தங்களில் சொல்லப்பட்ட

பரம தத்துவத்தையும் தனது மஹாத்மியத்தையும் விளக்கி துஷ்டர்களுடைய கூட்டத்தை திக்காரம் செய்து யாதொரு பரமேச்வரனுடைய ஆக்ஞையால் பந்துவர்க்கங்களோடுகூட கைலையை அடைந்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது ஹாரதத்த சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது.)

गौर्याः पणिं गृहीत्वाद्धिमगिरिकटके सत्वर स्थूलपृष्ठं
धर्माकारं वृषेन्द्रं निजचरणजवोल्लङ्घिताम्भोधिवर्गम् ।
अध्यारूढो निजाङ्कस्थितगिरितनयां प्रेयसीं वाग्विलासैः
लज्जानम्रां प्रकुर्वन्नतनुतविहृतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १७८

178 ஹிமயமலையின் தாழ்வரையில் கௌரியை கல்யாணம் செய்துகொண்டு சீக்கிரமாக ஸ்தூலமான முதுகு பாகத்தை உடையதும் தர்மத்தின் உருவமும் தனது கால்களின் வேகத்தினால் தாண்டப்பட்ட ஸமுத்திரங்களை உடையதும் ச்ரேஷ்டமுமான விருஷபத்தில் ஏறிக்கொண்டும் தனது மடியில் இருக்கிற அம்பிகையை வாக்விலாஸங்களால் வெட்கத்தினால் வணங்கினவளாக செய்துகொண்டும் லீலையை செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यत्फालस्थं मृगाङ्कं स्वरदमितिमुधा शुण्डयाऽऽदायतस्मिन्
बिम्बेदृष्टस्ववक्त्रप्रतिफलनसमाकर्षणव्यग्रचित्तम् ।
दानामोदानुधावद्भ्रमरमुखरितस्वर्गपातालभागं
योऽजिघ्रत्स्वाङ्कसंस्थं गजमुखमनिशं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १७९

179. யாதொரு பரமேச்வரனுடைய சிரஸில் உள்ள சந்திரனை தனது கொம்பு என்கிற எண்ணத்துடன் துதிக்கையினாலே எடுத்து அந்த சந்திர பிம்பத்தில் காணப்படுகிற தனது பிரதி பிம்பத்தை ஸ்வீகரிப்பதில் முயற்சி உள்ளவரும், மதஜல வாஸனையினால் சுழல்கிறதுகளான வண்டுகளின் சப்தங்களால் பூரணம் செய்யப்பட்ட ஸ்வர்க்கம், பதாளம் இவைகளின் பிரதேசத்தை உடையவரும் தனது மடியில் இருக்கிறவருமான விநாயகரை யாதொரு பரமேச்வரன் மிகவும் முத்தமிட்டுக் கொண்டாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कात्यायन्याः कराब्जं दिनकरवदनाधीतवेदार्थबोधात्
लब्धानन्दान्तरङ्गप्रशमिततमसस्तापसस्याश्रमे यः।
गृह्णन् संसारवार्धावधिकभयकरे मग्नसत्वप्रपञ्चं
नित्यं रक्षन्नजस्रं जयति शिवपुरे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८०

180. ஸூர்யனிடத்தில் இருந்து அப்யஸிக்கப்பட்ட வேதங்களுடைய அர்தஜ்ஞானத்தால் அடையப்பட்ட ஆனந்தத்தோடு கூடின ஹ்ருதயத்திலிருந்து அகற்றின அஜ்ஞானத்தை உடைய (காத்தியாயனர் என்கிற) முனிவருடைய ஆச்ரமத்தில் அவர் புதல்வியான காத்தியாயனியை பாணிக்கிரஹணம் செய்துகொண்டு ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூழ்கின பிராணிகளை ரக்ஷிக்கிறவராய் இருந்துகொண்டு சிவபுரத்தில் யாதொரு பரமேச்வரன் பிரகாசிக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இக்கதையை திருவீழிமிழலை புராணத்தில் காண்க.)

यन्मूर्तिं ब्रह्मनिष्ठाः परमहसि पदे प्राज्ञमानन्दरूपं
शैवास्सादाख्यमूर्तिं हरिमिति च परे शक्तिमन्येऽपरे तु।
विघ्नेशं चेतरेऽह्नां पतिमिति वटुकस्कन्दविध्यग्निशक्रान्
इन्दुं केचिद्विभाव्याखिलसुखमभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८१

181. யாதொரு பரமேச்வரரான நடராஜமூர்த்தியை பிர்ம்ஹஜ்ஞானிகள் தேஜஸ்ஸை கடந்ததான ஸ்தானத்தில் ஆனந்த ரூபரான பிராஜ்ஞனாகவும், சைவர்கள் ஸதாசிவமூர்த்தியாகவும், மற்றும் அன்யர்கள் விஷ்ணு, சக்தி, விக்னேச்வரர், ஸூர்யன், பைரவர், ஸுப்ரமண்யர், பிர்ம்மா, அக்கினி, இந்திரன், சந்திரன் இவ்விதம் பற்பல வடிவங்களாகவும் பாவித்து (கருதி) பூஜை செய்து அகில ஸுகங்களையும் அடைந்தார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

एकं ब्रह्माऽद्वितीयं त्रिविधमपि चतुर्वाङ्मयं पञ्चबाण
भ्रातृव्यं षड्विपक्षद्विषदभिविनुतं सप्तजिह्वालिकाक्षम्।
अष्टस्येणाङ्कचूडं नवरसनटनालोलवासोदशाशं
रुद्रैस्सादित्यवर्गैस्सततनतपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८२

182. ஒன்றாயும் பிர்ம்ஹமாயும், இரண்டாவது இல்லாததாயும், மூன்றுவிதமாய் (பிர்ம்ஹ விஷ்ணு ருத்திர ஸ்வரூபமாய்) இருந்தபோதிலும் நான்குவித வாக்ஸ்வரூபமாயும் மன்மதனுக்கு சத்துருவாயும், காமக்ரோதாதிகளற்ற முனிவர்களால் துதிக்கப்பட்டவரும், அக்கினிக்கண்ணுள்ள நெற்றியை உடையவரும், அஷ்டமியில் உண்டான சந்திரனை தலையில் சூடினவரும், நவரஸங்களோடு கூடின நடன விலாஸத்தில் சலிக்கிற வஸ்திரரூபங்களான பத்து திக்குகளை உடையவரும், ஆதித்தர்களோடு கூடின ருத்திரர்களாலே எப்பொழுதும் வணங்கப்பட்ட சரணத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

இவ்விதம் திருமந்திரம் 1-1-1

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறுவிரிந் தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.

என்கிற பாட்டில் எண்கள் அமைத்தல் உணரத்தக்கது.

विष्णोर्ल्ललाटदेशच्युतरुधिरझरीसङ्गमेनाप्यपूर्णं
ब्राह्मं हस्ते कपालं डमरुमपि वहन्विश्वकद्रून्स्वपार्श्वे।
दंष्ट्राभापिशङ्गीकृतविपुलजटो भैरवः क्षेत्रपालो
विश्वं रक्षन्नुपाधेयमपि भजति तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८३

183. விஷ்ணுவினுடைய நெற்றியிலிருந்து ஒழுகுகிற ரக்ததாரையினாலே நிறையாததான பிர்ம்மாவின் கபாலத்தையும், டமருகத்தையும், ஹஸ்தத்திலும் தனது பார்ச்வ பாகங்களில் நாய்களையும் வகித்துக்கொண்டு தெத்துப்பல்லின் காந்தியினாலே பொற்கொன்றை வர்ணமாக செய்யப்பட்ட விஸ்தாரமான ஜடைகளையுடைய க்ஷேத்திரபாலர் என்கிற பைரவர் உலகத்தை உபாதையிலிருந்து ரக்ஷித்துக்கொண்டு யாதொரு பரமேச்வரனை ஸேவிக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सीताहस्ताब्जपिण्डीकृतवरपृथिवीलिङ्गमूलानुकर्ष
क्रुध्यद्बालास्यशाखामृगपतिरचितस्तोत्रतुष्टान्तरङ्गम्।

रक्षोवृन्दप्रहारप्रभवकलिनिवृत्याश्रिताम्बोधितीर
श्रीरामप्रष्ठराजार्चितपदयुगलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् १८४

184. ஸீதையின் கையினால் பிடித்து செய்யப்பட்ட பார்த்திவ லிங்கத்தை இழுத்ததால் அறுந்துபோன வாலையும், உடைந்த முகத்தையும் உடைய ஆஞ்சநேயரால் செய்யப்பட்ட ஸ்துதியினாலே ஸந்தோஷத்தை உடையவரும், ராக்ஷஸக் கூட்டங்களை ஸம்ஹரித்ததினால் உண்டான பாபத்தை நிவர்த்திக்க வேண்டி ஸமுத்திர தீரத்தில் (ராமேச்வர க்ஷேத்திரத்தில்) ஸ்ரீராமன் முதலிய அரசர்களால் அர்ச்சிக்கப்பட்ட பதயுகளத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம். (இஃது ஸேது புராணத்தில் கூறப் பட்டுள்ளது.)

योगान्निर्बीजसंज्ञात्समुदितपरमानन्दकाष्ठासमाधि
स्थित्यावल्मीकगूढां तनुमवनिगतां नीतकल्पां धरन्स्वाम् ।
श्रीमान्श्रीमूलसंज्ञोनृपनुतचरितो नित्यनिस्सङ्गविद्यो
प्याद्यस्सिद्धो यमन्तः कलयति नितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १८५

185. நிர்பீஜ யோகத்தினால் பரமானந்தத்தை அநுபவிக்கிற ஸமாதி அவஸ்தையோடு அனேக கற்பங்கள் கழிந்த காரணம் பற்றி புத்தினால் மூடப்பட்டதும் பூமியில் மறைந்ததுமான தனது சரீரத்தை தரிப்பவரும் அரசர்களால் ஸ்தோத்திரம் செய்யப் பட்ட சரித்திரங்களை உடையவரும், ஆத்மஞானியுமான ஸ்ரீ திருமூலர் என்று பெயர் உள்ள முதன்மையான ஸித்தர் யாதொரு பரமேச்வரனை எப்பொழுதும் தியானம் செய்து கொண்டிருக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு :- திருமூலர் என்கிற ஸித்தர் பரமனால் ஸ்ருஷ்டிக்கப் பட்ட ஸித்தர்களில் முதன்மைவாய்ந்தவர். இவர் எக்காலமும் சிவராஜ யோகத்தில் (அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியில்) இருந்து பரமேச்வரனோடு இரண்டறக் கலந்து இருத்தலே பணி பூண்டவராவர்.

ஓர் ஸமயம் ஓர் அந்தணர் வீட்டை அடைந்து பசிப்பிணி தீர வேண்டி அமுது வேண்டினார். அவ்வில்லத்திலுள்ள அன்னை

இவரைக்கண்டு மிகவும் பக்தியோடு நற்சுவை உண்டி அளிக்கக் கருதி ஓ சுவாமி, சற்று இவ்விடம் அமருங்கள். கீரை மசிகிறது அது பக்குவமானதும் புசிக்கலாம், என்னை அனுக்ரஹிக்க வேணுமென்று பலமுறை வணங்கி போற்றிப் பாகசாலையை அடைந்தனள்.

பிறகு ஸித்தர் அவ்வுணவை விரும்பாமல் அங்குள்ள ஒரு பிள்ளையார்கோயிலை அணுகி அங்கு ஒரு சுரங்கம் இருக்கக்கண்டு மிகவும் மகிழ்ந்து அதனுள் சென்று யோகஸமாதியில் அமர்ந்தார். நீண்டகாலங்கள் சென்றதுகள். இவர் சரீரத்தில் புற்று மூடிக் கொண்டதோடு அக்கோயிலும் பூமியில் மறைபட்டு அக் கோயிலுக்குமேல் ராஜபாட்டையும் அமைக்கப் பட்டது.

இவ்விதமிருக்க ஒரு ஸமயம் அக்காலத்தில் அரசு நடாத்திய சோழ வம்சத்திய மன்னன் ஒருவன் ரதத்தில் அவ்வழியாகவர, ரதத்தில் கட்டப்பட்ட குதிரைகள் அவ்விடத்தில் பிரமித்து நின்றதுகள். அதுகண்டு அவ்வரசன் இதன் காரணம் என்ன என்று அமைச்சரை வினவ அவர் கீழ் சோதித்தல் நன்று என்றனர். பிறகு அவ்விதம் சோதிக்குப்போது அக்கோயிலும் சுரங்கமும், ஸித்தரின் உருவமும் காணப்பட்டதுகள். அரசன் மிகுந்த ஸந்தோஷத்துடன் அச்சித்த உருவத்தை தனது ரதத்தில் வைத்துக்கொண்டு தனது அரண்மனையை அடைந்து அவ் வுருவத்தை தனது ஸிம்ஹாஸனத்தில் அமர்த்தி ஸமாதியை கலைக்க வேண்டி அமைச்சரின் போதனையால் எருமை வெண்ணையை ஸித்தரின் சிரஸில் சாற்றினன். சற்று நேர மானதும் அவ்வெண்ணை உருகி தேகம பூராவும் பரவினது. ஸித்தரும் பிரஜ்ஞையை அடைந்து கண்விழித்து, அரசனைப் பார்த்து கீரை மசிந்ததா என்று வினவினர். அரசனும் அறு சுவை அமுதை புசிப்பித்து மிகவும் வணங்கிப் போற்றினன். ஸித்தர் அவ்வரசனுக்கு மகப்பேறு உண்டாகும்படி அருள் புரிந்தனர். அரசன் கீரை மசிந்ததா என்று கேட்ட காரணம் என்னவென்று வினவ ஸித்தர் பழய அவ்விருத்தாந்தத்தையும் சொல்லி 'எழுபதுகோடி யுகமிருந்தோபொரு ஸமாதி' என்றும் கூறினர். பிறகு தில்லையில் திருமூலட்டானத்தின் பின்புறம் கல்லால மரத்தின்கீழ் யோகஸமாதியோடு அமர்ந்தனர் என்றும்

மற்றும் பற்பல கதைகளும் கர்ணகர்ணிகையாக கேழ்க்கப் படுகின்றனம்.

திருத்தொண்டர் புராணத்தில் திருமூல நாயனர் சரித்திரம் கூறப்படுகிறது. அச்சரித்திரத்தில் அன்னயனர் இறுதியில் கைலையை அடைந்தாரென்றும், வடமொழி அகஸ்திய பக்த விலாஸத்தில் திருவாவடுதுறை க்ஷேத்திரத்தில் லிங்கத்தின் ஜ்யோதியில் கலந்துகொண்டாரென்றும் கூறப்படுகிறது.

ஸித்தர்கள் ஸ்ரீ பரமேச்வரனை பூஜித்து சிரஞ்ஜீவிகளாய் யோக ஸமாதியில் வீற்றிருக்கும் க்ஷேத்திரங்கள் 21.

यदाहुर्नैदानिकाः॥

आद्यः श्रीमूलसंज्ञोनटपति यजनात्तिल्लवन्यां प्रपेदे सिद्धिंनन्दी च काश्यामरुण गिरिवरे वामकान्तारसिद्धः। भूमूलाधारसंज्ञे कमल मुनिवरः कोङ्कणो वेङ्कटाद्रौ कुम्भश्चानन्तशय्यापुरि नलदपुरे तत्र वाल्मीकि सिद्धः॥ १॥ श्रीरामस्सुन्दराद्रावमृतघटपुरे सार्पकः कृष्ण पुर्यः कृष्णाभिख्येपुरे श्रीफलगिरिशिखरे भोगनाथाभिधानः। श्रीगृद्ध्र द्रौ कुदम्बः परगिरिशिखरे मत्स्यसिद्धः पतञ्जल्याख्यस्सेतौ च गौरीमृग इति गदितः कालहस्तौ नितान्तम्॥२॥ हालास्ये सुन्दरः श्रीनगमधि महितः कोरकोदार्विकेयो वृद्धाद्रौ वैद्यनाथेप्यधिगतसुयशास्सिद्ध धन्वन्तरिश्च। श्रीरङ्गे कञ्चुकाख्यो मुनिरपि च तथा नन्दिदेवाभिधानः श्रीकाश्यामित्यवोचन् भुविशिवनिलयान्येकविंशं महान्तः॥ इति ॥ ३॥

திருமாது தாமிருவர் சேரிடம தாகுநம்
செல்வ மறையோர் திருமருகு தன்னிலே
நருமணப் பெருவேள்வி நல்லோம தூமம்
நல்லதொரு காடெனக் காட்டிடு மாமித்
திருத்தில்லை சிற்சபை நர்த்தன சபேசன்
செய்யநற் றிருபத்ம பாதமது தன்னையே
மருவியே பூசித்து மாருத வன்புடன்
மாபேறு (1)திருமூலர் தாமடைந் தானரோ. 1

பங்கைரும் கவிஞெழுகு காசிநற் பதியதாம்
காணரிய (2)நம் நந்தி வாழிடம தாகுமே
(3)கோங்கணவர் வாழ்கின்ற தலமதா மேசெனில்
குலவுநற் றிருப்பதிக் குன்றமது யென்னலாம்
சங்கையிற் சீர்காழி தன்னகரை நாநாளும்
சார்(4)நந்தி தேவர்தம் இடமதா யெண்ணுவர்
பங்கமில் வேளூர தன்னூர தாகவே
பார்புகழ்(5) தந்வந்திரி தானடைந் திட்டனன். 2

அருமைநற் (6)கமலமுனி ஆரூர தாகுமே
அனவரத மெட்டிகுடி யமர்ந்தனர் (7)வால்மீகி
தருமமிகு சிரங்கம் (8)சட்டமுனி தன்னதாம்
சிறப்புற்ற கருவூரிற் (9)கருவூர் தாமுமே
பெருமைபெரு பழனிமலை தன்னிடம தாகவே
பேசரிய (10)போகமுனி பிரியாது வந்தனர்
இருமையறு (11)சுந்தரா நந்தருந் தாமுமே
என்றென்று மாமதுரை மாறு துறைந்தனர். 3

குமாரகுரு திருப்பரங் குன்றமது தன்னையே
கூறிய (12)மச்சமுனிக் குறிக்கொண்ட காகுமே
சமரசம் தழையுநல் லழகர்மலை தன்னிலே
சாற்றுதற் கரியவொரு (13)ராமதேவருந் தான்
அமரர்விரும் பனந்த சயனமது தன்னிலே
அமர்ந்தகொரு (14)கும்பமுனி வாசமது கொண்டனர்
நமவர்வாழ் ஸ்ரீசைல பெருநகர் தன்னையே
நாடரிய (15)கோரக்கர் தமதிடம தாமென்பர். 4

கூடரிய கழுக்குன்ற மெனுமத் தலமதே
கொனற்கரிய (16)துதம்பையர் தம்தான மதாகுமே
தேடரிய இராமேச் சுரமது தன்னையே
திண்மைமிகு (17)பதஞ்ஜலி வாசமாக் கொண்டனர்
நாடரிய நற்றவர்கள் வாழ்கின்ற வருணையே
ந(18)திடைக் காடாம் நண்ணுதற் கிடமதாம்
பீடரிய (19)வகப்பைநற் சித்தர்த மிடமது
எழில்மருவு விருத்தகிரி தலமது தானதாம். 5

அந்தமில் காளத்தி (20)கௌரிமாறு குமே
(21)ஆவாட்டி சீர்க்கடலூர் தலமதவு மாமே
சந்தத மந்தந்தத் தலசிவ லிங்கத்தை
சார்ந்து நற்புத்தியொடு வருச்சித்து யேத்தியே
யெந்தையின தருள்பெற்ற சித்தர்க ளாருவர்
இணையில் மூவெழுவர் தம்பாதமது தன்னையே
சிந்தையிற் சென்னியிற் சேர்ப்பித்து நாளும்
பந்தமதை யோட்டுவோம் சந்ததமும் நாமே. 6

हल्लीसोन्मुख्यकेलीनमितनिजशिरस्संस्थगङ्गामुखेन्दोः
आलोकोत्पन्नकोपत्वरितगतिशिवासांत्वनव्यग्रचित्तम्।
दृष्ट्वा कण्ठस्थनीलं जलमुगितमुपाऽऽयातकौमारवाहात्
बिभ्यद्भूषाफणिनां मणिरुचि सुपुमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८६

186. பின்னல்கோலாட்டம் முதலிய விளையாட்டுகளில் வணங்கின தனது சிரஸில் உள்ள கங்கையின் முகச்சந்திரனைப் பார்த்ததினால் கோபித்தும், வேகமான நடையை உடையவளும் ஆன அம்பிகையை ஸமாதானம் செய்கிறவரும் தனது கண்டத்தில் உள்ள விஷத்தைப்பார்த்து மேகம் என்கிற புத்தியால் ஸமீபத்தை அடைந்த ஸுப்ரமண்யருடைய வாஹனமான மயிலிடமிருந்து பயத்தை அடைந்ததுகளான ஆபரண ஸர்ப்பங்களின் ரத்தின காந்திகளால் அழகுவாய்ந்தவருமான குஞ்சிதாங்கிரிம்.

स्वर्गाधीशोपदिष्टामखिलसुखकरीं यत्तिरोधानशक्तेः
विद्यां मोदाज्जपित्वा सुरयुवतिसमामाप भैमीं स्वकान्ताम्।
यत्सेवानिर्गताऽऽर्किग्रहरचितमहोपद्रवो नैषधेन्द्रो
विश्वं रक्षन्निजान्ते द्युसदनमभजत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८७

187. நிஷத தேசத்திற்கு அரசனான நளன் தேவேந்திரனால் உபதேசம் செய்யப்பட்டதும் ஸமஸ்த ஸுகத்தையும் கொடுப்பதுமான யாதொரு பரமேச்வரனுடைய திரோதான சக்தியினுடைய மந்திரத்தை (திரஸ்கரிணி மந்திரத்தை) ஸந்தோஷத்தோடு ஜபம் செய்து தேவஸ்திரீக்கு ஒப்பான தமயந்தியை அடைந்தானோ யாதொரு பரமேச்வரனுடைய ஸேவையால்

சனிச்வரக்ரஹ பாதைகளை போக்கடித்தும் வெகுகாலம் உலகை காப்பாற்றியும் இறுதியில் ஸ்வர்க்கத்தையும் அடைந்தானே அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இஃது திருநள்ளாறு ஸ்தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது.)

விட்புலந்தனி புரந்தருளும் வேந்தர்கோ
னட்பொடு மினியசொன்ன வின்றியாவர்க்கும்
கட்புலனுறு ருக்காண் கிலாததோர்
நுட்பநூல் விஞ்சையை நுவன்றிட்டானரோ.

என்று அதிவீரராமபாண்டியரும், இந்திரன் நளனுக்கு திரஸ்கரணீ மந்திரத்தை உபதேசித்தான் என்றும் கூறியிருக்கிறார். (நைடதம் நளன் தூதுப் படலம் பா. 37) (நுட்பநூல்விஞ்சை— நுட்பமான நூலில் சிதம்பர கல்பத்தில் சொல்லப்பட்ட விஞ்சை மந்திரம் திரஸ்கரணீ மந்திரம் என்பது அதன் பொருள்.)

திருஞானசம்பந்தரும் (2-ம் திருமுறை திருநள்ளாற்றுப் பதிகம் பா. 3).

விளங்கிழை மடந்தைமலை மங்கை யொருபாகத்
துளங்கொள விருக்கிய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே.

என்று கூறியுள்ளார்.

कन्दर्पाणां बहूनां प्रसवकरवरापाङ्गवीक्षाविलासै
रुद्याने राजताद्रेर्हरिधृतसुतनोश्शास्त्रभिख्यं कुमारम् ।
उत्पाद्यायातगौरीमधुरवचनतः पालकत्वं वनानां
सर्वेषां दत्तवान्यस्त्रिजगदभिनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १८८

188. யாதொரு பரமேச்வரன் (முன் ஒரு ஸமயம்) கைலாஸ பர்வதத்தில் உள்ள உத்யானத்தில் அனேகம் மன்மதர்களை உண்டுபண்ணுகிற கடைக்கண் பார்வைகளினாலே விஷ்ணு மோகினியிடம் இருந்து சாஸ்தா என்கிற புதல்வனை உண்டு பண்ணி அச்சமயம் அங்கு வந்தவளான அம்பிகையின் இனிமையான வாக்கினாலே அக்குமாரனுக்கு எல்லா வனங்களுக்கும்

பாலகனாக இருக்கும் தன்மையைஅளித்தாரோ அப்படிப்பட்ட மூன்று உலகங்களினால் துதிக்கப்பட்ட குஞ்சிதாங்கிரிம். இஃது சங்கர ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

मुग्धे कैलासवासीजरठशुभकरो गौरि चर्माम्बरोऽसौ
ब्रह्मन्नैश्वर्यदोऽम्बे पितृभुवि नटकृद्विप्रकैवल्यदाता।
एवं यद्वाक्यभङ्गीं मुहुरपि च तिरस्कृत्य सद्मान्तरालं
गन्तुं व्यग्रामुमां योऽप्यकुरुतमुदितां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८९

189. அவதாரிகை. ஹிமயமலையில் அம்பிகை பரமசிவனை கல்யாணம் செய்துகொள்ளவேண்டி தபஸ் செய்துகொண்டு இருக்கும் தருணம் அத்தேவியை பரீக்ஷை செய்யக் கருதி கிழ பிராம்மண உருவத்தோடு அணுகி அவளிடம் ஸல்லாபம் செய்த விபரத்தை இதனால் அறிவிக்கிறார்.

ஈச்வரர்: ஏ அழகுவாய்ந்தவளே நீ மனதில் கருதிய சிவன் கைலாயம் என்னும் மலையில் வஸிப்பவன் (மலையன்) அதனால் உனக்கு தகுந்தவன் ஆகான்.

அம்பிகை: ஓய் கிழவரே அவர் மங்களத்தை செய்கிறவர்.

ஈச்வரர்: ஏ கௌரீ அவன் தோலைக் கட்டிக்கொண்டவன் வஸ்திரம் இல்லாதவன் (தரித்திரன்).

அம்பிகை: ஏ பிராம்மணரே எல்லோருக்கும் ஐச்வர்யங்களை கொடுக்கிறவர்.

ஈச்வரர்: ஏ அம்மா ச்மசான பூமியில் நடனம் செய்கிறவன்.

அம்பிகை: ஓய் பிராம்மணரே மோக்ஷத்தை கொடுக்கிறவர்.

இந்தப்பிரகாரம் யாதொரு பரமேச்வரனுடைய வார்த்தைகளின் ரீதியை அடிக்கடி திரஸ்காரம் செய்து தனது பர்ணசாலையின் உள்புறத்தை அடைய விரும்பினவளான உமாதேவியை யாதொரு பரமேச்வரன் (தனது ஸ்வரூபத்தை காண்பித்து) ஸந்தோஷத்தை உடையவளாக செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குமாரஸம்பவம் 5 வது ஸர்க்கத்தில் ஸ்ரீ காளிதாஸரின்

इतोगमिष्याम्यथवेतिवादिनी चचालबालास्तनभिन्नवल्कला।
स्वरूपमास्थाय च तां कृतस्मितः समाललम्बे वृषराजकेतनः॥ ८४७॥

இவ்விதங்களான வாக்குகள் நன்கு உணரத்தக்கதுகள்.

यद्द.सेन्दुप्रभूतानिखिलमपि जगद्व्यापिनी चन्द्रिकाभा
प्याविष्णुस्थावरान्तं हृदयमधिगतं बाह्यगश्चान्धकारम्।
दूरीकृत्याशुसर्वान्स्वपदसरसिजध्यानशीलानजस्रं
रक्षत्य.यन्तहीनं गुरुभृगुविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९०

190. யாதொரு பரமேச்வரனுடைய புன்சிரிப்பில் இருந்து உண்டானதும் ஸமஸ்த உலகை வியாபிக்கிறதுமான சந்திரகாந்தியானது விஷ்ணு முதல் ஸ்தாவர பர்யந்தம் உள்ளும் புறமும் உள்ள இருட்டை சீக்கிரமாக போக்கடித்து தனது பாதத்தை தியானம் பண்ணுகிறவர்களான எல்லாப் பிராணிகளையும் மிகவும் ரக்ஷிக்கிறதோ அப்படிப்பட்ட ஆதி அந்தம் இல்லாதவரும், தேவகுரு, அஸுரகுருவால் துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

गोदावर्यास्तटस्थोऽनृतवचनपरो दुष्टकार्तान्तिकोयत्
क्षेत्रे गौल्यां जनित्वा निजसुकृतलवात्स्वीयपातोक्तिदोषम्।
भस्मीकर्तुं चिरं यं स्तुतिभिरभिनमन्सुन्दराङ्घ्रेर्यदुक्त्या
जातोयत्क्षेत्रपालो जयति तमसमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९१

191. கோதாவரி தீரத்தில் உள்ளவனும், பொய் சொல்லுகிறவனும் துஷ்டனுமான ஓர் சோதிடன் க்ஷேத்திரடன கதியில் ஸ்ரீ நடராஜரை தரிசித்த புண்யத்தின் காரணத்தால் தனது மறுபிறவியில் யாதொரு பரமேச்வரனுடைய க்ஷேத்திரமான சிதம்பரத்தில் பல்லியாய்ப் பிறந்து ஸ்வல்ப புண்ணியத்தினால் பூர்வஜன்ம வாஸனையை தெரிந்தவனாய் தனது பல்லியினத்தின் விழுகலினாலேயும், வசனத்தினாலேயும் பிராணிகளுக்கு உண்டாகும் தோஷத்தை போக்கடிப்பதற்கு பரமேச்வரனை துதித்து வணங்கி ஸந்துஷ்டரான அப்பரமேச்வரனுடைய

கட்டளையால் அழகுவாய்ந்த சரீரம் உள்ளவனும், யாதொரு பரமேச்வரனுடைய க்ஷேத்திரத்தை ரக்ஷிக்கிறவனாகவும் விளங்கு கிறனோ அப்படிப்பட்ட ஒப்பற்றவரான குஞ்சிதாங்கிரிம்.

இக்கதை அர்த்தயாம அழகரைப் பற்றியது. சிதம்பர ரஹஸ்யத்தில் கூறப்பட்டுள்ளது. அப்பல்லியின் உருவத்தை ஸ்ரீ சித்ஸபையின் கீழ்புறம் கொடுங்கையிலும் அப்பல்லிக்கு அனுக்கிரஹம் செய்த பல்லீசுவரர் என்கிற மூர்த்தியை வடக்கு இரண்டாவது பிரகாரத்திலும் நித்தியம் தரிசித்தல் நன்று.

भुक्त्वा हालाहलांशं युधिनिहततनुं दारुकाख्यं सुरारिं
कृत्वा घोरस्वकृत्यप्रचलितभुवनां भद्रकालीं शिवो यः।
प्रत्येयानन्दनृत्तं पितृपतिभुवने दर्शयित्वा तयाऽण्डान्
सर्वान्संरक्षतीशस्तमिनविधुनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९२

192. சிவபெருமான் கண்டத்திலுள்ள ஹாலாஹல விஷத்தின் அம்சத்தை புசித்து யுத்தத்தில் தாருகாஸுரனை ஸம்ஹரித்து கோரமான தனது கிருத்தியத்தால் உலகை நடுங்கும்படி செய்கிறவளும் ருத்திரபூமியில் வீற்றிருப்பவளுமான பத்திரகாளியை அணுகி யாதொரு பரமேச்வரன் (தனது) ஆனந்த நடனத்தை காண்பிவித்து (அதனால் அவளுடைய மதவேகத்தை சமனம் செய்து) அவளால் எல்லா அண்டங்களையும் ரக்ஷிக்கிறாரோ அப்படிப்பட்ட சூர்யசந்திரர்களால் துதிக்கப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

இக்கதையை ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் பிரம்ம தர்க்கஸ்தவத்தில் (சு. 48, 49) கூறியுள்ளார். திருவாசகம் திருச்சாழல்

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுவது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றாணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டங்காண் சாழலோ. 14

என்று கூறுதலுமுணர்க,

यस्योद्वाहे हिमाद्रिं गतवति निखिलप्राणिवर्गेऽर्कसूनोः
आशामौन्नत्यभाजं रचयितुमधरां विन्ध्यमद्रिं च दैत्यम्।

धिकर्तुं कुम्भजन्माचुलुकितजलधिः प्रेषितो येनमोदात्
तं देवं कोटिकोटिद्युमणितनुरुचिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९३

193. யாதொரு பரமேச்வரனுடைய விவாஹ காலத்தில் ஹிமயமலையை ஸமஸ்த பிராணிகளும் அடைந்திருக்கும்பொழுது உயரதாக்கப்பட்ட தெற்கு பாகத்தில் உள்ள பூமியை ஸமமாக செய்வதற்கும், விந்திய பர்வதத்தையும், வாதாபி, இல்வலன் என்கிற அஸுரர்களை சங்கரிப்பதற்கும், உள்ளங்கையில் அடக்கப்பட்ட ஸமுத்திரத்தை உடைய அகஸ்தியர் யாதொரு பரமேச்வரனாலே சந்தோஷத்தோடு தெற்கு திக்கைக் குறித்து அனுப்பப்பட்டாரோ அப்படிப்பட்ட அனேகம் சூர்யர்கள் போன்ற சரீரகாந்தியை உடைய குஞ்சிதாங்க்ரிம். இது கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

वीणा संक्रान्तकान्तामधुरतररसालापगितिप्रमोद
प्रोद्यद्रोमाञ्च कूटद्विगुणतनुलता भोगसौन्दर्यशिल्पम् ।
यन्नानारत्नभूषाकिरणकवलितेदिक्तटे वप्रलीलां
कुर्वन्त्यद्यापि मोदात् द्विरदपरिवृढाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९४

194. வீணையை மீட்டுகிறவளான அம்பிகையின் கானத்தினால் ஸந்தோஷத்தை அடைந்தவரும், விர்த்தி அடைந்த ரோமாஞ்சத்தினால் இரட்டிப்பாக செய்யப்பட்ட சரீரத்தின் ஸௌந்தர்யத்தை உடையவருமான யாதொரு பரமேச்வரனுடைய இரத்தினமயமான ஆபரணங்களின் கிரணங்களால் வியாபிக்கப்பட்ட திக்பிரதேசங்களில் திக்கஜங்கள் மகிழ்ச்சியோடு கரைமுட்டி விளையாடுதலை இப்பொழுதும் செய்கிறதுகளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்க்ரிம்.

कस्त्वं किन्नामधेयो धरणिसुरवपुः कम्पितापादचूडो
गोत्रं सूत्रं कुलं त्वत्पितरमपि तथा मातरं बन्धुवर्गम् ।
शत्रु मित्रं कलत्रं तनयमपि वयोज्ञातुमीहे तवेति
प्रोवाचाद्रौ पुरायं प्रतिगिरित्तनया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९५

195. அம்பிகை முன் ஒரு காலம் இமயமலையில் (பரமேச்வரனை கல்யாணம் செய்துகொள்ளவேண்டி தபஸ்

செய்யும் தருணம் தன்னை பரீக்ஷைசெய்யவந்தவரான யாதொரு பரமேச்வரனை) நீர் யார், உமது பெயர் என்ன, பிராம்ஹணரும் நடுங்கின சரீரத்தோடு கூடியவராகவும் ஆகுநீர். உமது கோத்திரம், ஸுத்திரம், குலம், தகப்பன், தாயார் பந்துக்கள், சத்துரு, தோழன், பத்தினி, குமாரன், வயது இவைகளை அறிவதற்கு இச்சிக்கிறேன் என்று கேட்டாளோ அப்படிப் பட்ட குஞ்சிதாங்கிரிம்.

स्कन्दे विघ्नेशशुण्डां स्वकरसरसिजैः मानयित्वातदुक्तैः
स्वीयैर्वक्त्राक्षिसंख्यागणनपरिभवैरोदिते सानुकम्पा।
देवी दृष्ट्वा स्वसूनोश्चरितमपि यदीयाज्ञया हेमकूटे
वाचा सप्रेमभाजावतनुततनयौ कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९६

196. ஹேமகூடத்தில் ஸுப்ரம்ஹண்யர் விநாயகருடைய துதிக்கையை தனது கைகளினால் அளந்த காரணம்பற்றி அவ் விநாயகரால் தனது முகங்களுடையதும், கண்களுடையது மான எண்ணுதலாலுண்டான அவமானத்தால் அழுதுகொண்டு இருக்கும் தருணம் தயை உள்ள தேவீ இதை அறிந்து யாதொரு பரமேச்வரனுடைய ஆக்ஞையினாலே ஹிதத்தைப்போதித்து அவ்விரு குமாரர்களையும் பிரிய முள்ளவர்களாக செய்தாளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

स्वामिन्मास्त्वाधिपत्यं शमनपदमहाराज्यभारेममालं
पाशं दण्डञ्च वाहं महिषमपि भटांस्त्वत्पदेद्यार्पयेऽहम्।
इत्युक्त्वा ग्रेनतास्यं शिवयजनपराकर्षं कुप्यद्गणेन्द्रो
च्छिन्नं दृष्ट्वा यमं योऽप्यकुरुतमुदितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९७

197. ஸ்வாமின் இனி எனக்கு யம ராஜதானிக்கு பதியாய் இருக்கும் தன்மையானது போதும் பாசம், தண்டம் வாகன மான மஹிஷம் படர்கள் இவை எல்லாவற்றையும் இப்பொழுது நான் உமது பதத்தில் அர்ப்பணம் செய்கிறேன். என்று தனது முன்பாக சொல்லி வணங்கினவனும் சிவபூஜை செய்கிற பக்தனின் உயிரைக் கவர்ந்ததின் காரணத்தால் கோபங் கொண்ட சிவகணங்களால் ஹிம்ஸையை அடைந்தவனுமான

யமனை யாதொரு பரமேச்வரன் (இனி எனது பக்தர்கள் விஷயத்தில் அணுகாதே என்று சொல்லி) ஸந்தோஷத்தோடு கூடியவனாக செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

இக்கதை வடமொழி புண்டரீகபுர மாஹாத்மியம் 2வது அத்தியாயத்திலும் சிதம்பர புராணம் துன்மதச் சருக்கத்திலும் கூறப்பட்டுள்ளது.

पित्रोर्दुःखैकहेतुं कमठनिभतनुं पापजांस्त्वां प्रमोक्तुं
वार्धौ स्थित्वा निरुन्धन्रथमपि तरणेस्तन्मुखाद्यस्य विद्याम् ।
लब्ध्वा जप्त्वाथ भूत्वा सुरयुवतिसमाह्लादि सौन्दर्यकायो
राजा स्वामात्यपुत्रीपरिणयमकरोत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९८

198. ஓர் அரச குமாரன் தாய் தந்தையர்களுக்கு துக்கத்தை உண்டுபண்ணி வைக்கிறதும் பாபத்தினாலே உண்டானதுமான தனது ஆமை போன்ற சரீரத்தை விடுவிப்பதற்கு ஸமுத்திரத்தை அடைந்தும் சூர்யனின் ரதத்தை தகைந்தும் அதனால் களிப்புற்ற சூர்யனின் முகத்தில் இருந்து யாதொரு பரமேச்வரருடைய மந்திரத்தை (சிதம்பர வித்தையை) அடைந்தும் ஜபித்தும் அதன் காரணத்தால் தேவ கன்னிகைகளால் விரும்பப்பட்ட அழகு வாய்ந்த சரீரத்தோடு கூடி தனது மந்திரியின் குமாரியை விவாகம் செய்து கொண்டானோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

किं दारैः किं पुत्रैः किमिति च वसुभिः किं सुहृद्भिः किमन्यैः
भूयान्नास्त्येव सत्यं फलमिति हृदये सन्ततं चिन्तयन्तः ।
त्यक्त्वा दुःखादिहेतुं यदमलवसुधाप्रान्तक्लृप्ताश्रमास्ते
सिद्धास्सर्वे बभूवुर्यदनुगतधियः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९९

199. எல்லா ஸித்தர்களும் பத்தினிகள், புத்திரர்கள், தனங்கள், ஸ்நேகிதர்கள் மற்றுமுள்ளதுகள் இவைகளால் என்ன பலன்கள் உண்டாகப்போகிறதுகள் என்று மனதில் எண்ணி துக்கங்களுக்கு காரணங்களான இவைகளை தள்ளி யாதொரு பரமேச்வரனுடைய சிதம்பர க்ஷேத்திரத்தின் ஸமீப பிரதேசங்களில் ஆச்சிரமங்களை அமைத்து பரமேச்வரனை தியானம் செய்து கொண்டு வஸிக்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

हेमाद्रिप्रान्तभागस्थलकमलवनाक्रीडनोद्योगहंस
व्रातालोकापदेशात्सविधगतशिवाहस्तगाढोपगूढम्।
नानाकारानुभूतानुपमरतिसमुत्कूजितार्याकुचाग्र
स्पर्शोन्मृष्टालिकान्तस्थलसितभसितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २००

200 மஹாமேருவின் ஸமீப பிரதேசத்தில் உள்ள பூ தாமரை (பூமி தாமரை) வனங்களில் கிரீடை செய்கிற ஹம்ஸக் கூட்டங்களை பார்க்கிற வியாஜத்தினால் ஸமீபத்தை அடைந்த அம்பிகையால் ஆலிங்கனம் செய்யப்பட்டவரும் அனேகவித உருவங்களோடு அனுபவிக்கப்பட்ட உயர்ந்த ரதியால் உண்டான மணிதத்தோடு கூடின அம்பிகையின் குசாக்ரத்தின் ஸ்பரிசத்தினால் அழிக்கப்பட்ட நெற்றியில் உள்ள வெளுத்த விபூதியை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

विष्णोनैवाद्य दृष्टुं भवति च समयोवेदवाक्यार्थबोधे
ब्रह्मन्कालोनचैषो हरिमुखविबुधागच्छतान्यत्रयूयम्।
आस्तां वीणामुने सोप्युपदिशति परं ब्रह्मतत्वं मुनीनां
इत्युक्त्वा तान्यदुक्त्यात्वरयतिगणराट् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०१

201. ஓய் விஷ்ணோ தரிசனம் செய்வதற்கு இது ஸமயம் இல்லை. ஓ பிர்மாவே வேதவாக்கியங்களின் அர்த்தத்தை அறிவதற்கு இது காலமில்லை. இந்திரனை ஆதியாக உள்ள ஓ தேவர்களே, நீங்கள் வேறு எங்கேயாவது செல்லுங்கள். ஓ நாரதரே உமது வீணை இருக்கட்டும். இப்பொழுது பரமேச்வரன் ஸனகாதி முனிவர்களுக்கு பிர்ம தத்துவத்தை உபதேசம் செய்து கொண்டிருக்கிறார் என்று சொல்லி, அத்தேவர்களை (கைலேயங் கிரியில்) யாதொரு பரமேச்வரனுடைய கட்டளையால் நந்திகேச்வரர் அவ்விடத்தைவிட்டு அகலும்படி செய்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यद्वर्षं मानुषाणां तदपि च दिवसं देवतानां प्रसिद्धं
प्रोक्तं तच्चापकुम्भ प्रथमयुगहरिस्त्रीषु मासेषुषट्सु।
आसन्यन्नृत्तमूर्तं रुदयमुखवराभ्यर्चनास्तेतमिन्द्रा
द्यष्टाशापालपूर्वाखिलसुरविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०२

202. மனிதர்களுடைய வருஷம் தேவர்களு ஒரு நாள் ஆகும். இது பிரஸித்தமானது. அப்பனித வருஷத்தில் உள்ள மார்கழி, மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாசி இந்த ஆறு மாதங்களில் உள்ள மஹாபிஷேக பூஜைகள் யாதொரு நடராஜமூர்த்திக்கு உஷக்காலம், காலஸந்தி, உச்சிக்காலம், ஸாயரக்ஷை, இரண்டாம் காலம், அர்த்தயாமம் ஆகிய ஆறுகால பூஜைகளாக ஆகிறதுகளோ அப்படிப்பட்ட அஷ்ட திக்பாலகர்கள் முதலிய தேவர்களால் துதிக்கப்பட்டவரான குஞ்சிதாங்கிரிம்.

यस्येशस्यांशभूताश्शरभवटुकराड्वीरभद्रादिदेवाः
कल्पे कल्पेऽम्बुजाक्षद्रुहिणमुखधृतक्रूरसत्वोग्रकृत्यम्।
निघ्नन्तस्सार्वकालं जगदपिसकलं पालयन्तोऽन्तरङ्गे
ध्यायन्तो यं जयन्ति प्रचुरमहसं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०३

203. யாதொரு பரமேச்வரனுடைய அம்சத்தில் இருந்து ஆவிர்ப்பவித்தவர்களான சரபர், பைரவர், வீரபத்திரர் முதலிய தேவர்கள் ஒவ்வொரு கற்பங்களிலேயும், விஷ்ணு, பிர்ம்மா முதலிய தேவர்களால் செய்யப்பட்ட குரூரமான கிருத்தியத்தை அடக்கிக்கொண்டும், உலகத்தை எப்பொழுதும் காப்பாற்றியும், ஹிருதயத்தில் யாதொரு பரமேச்வரனை தியானம் செய்து கொண்டும் விளங்குகிறார்களோ அப்படிப்பட்ட அதிகமான காந்தியை உடையவரான குஞ்சிதாங்கிரிம்.

कुप्यत्ततोक्तिभङ्ग्याविपिनमधिगमन् विप्रगोसङ्घरक्षां
कुर्वंस्तत्रैवदिष्ट्या सरसि च विहृतिं तन्वतीनां सुरीणाम्।
गायन्तीनां मनांसि स्ववशमपि नयन् यत्पदध्यानयोगात्
रेजे कश्चिन्नरेन्द्रो जितरिपुनिकरः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०४

204. ஓர் அரச குமாரன் (ராஜ்யம் இழந்த காரணத்தால் கோபத்தை அடைந்த) தகப்பனின் வார்த்தையால் காட்டை அடைந்து அங்கு ஒரு முனிவருடைய பசுக்களை இரக்ஷிக்கிறவனாய் இருந்துகொண்டு தெய்வ யோகத்தால் குளத்தில் நீராடுகிறவர்களும், கானம் செய்கிறவர்களுமான தேவ ஸ்த்ரீகளை

தனது வசமாக்கியும் யாதொரு பரமேச்வரனுடைய சரணத்தின் தியானத்தினாலே சத்ருக்களை வென்றும் விளங்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सौवर्णश्मश्रुकान्त्या कपिशकुमुदिनीनाथबिम्बं विजेतुं
नासालोलम्बभूषामणिरुचिभिरवप्रोन्नटद्दिव्यसिन्धुम्।
मूर्ध्ना बिभ्राणमच्छच्छविमुखकमलामोदपुष्पंधयाक्षं
नानाविद्यांकुराभद्विजगणलसितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०५

205. தங்கப்போன்ற மீசையின் காந்தியால் பொற்கொன்றை வர்ணமான சந்திர பிம்பத்தை தனது மூக்கிலுள்ள ஆபரணத்தின் சோபையால் ஜயிப்பதற்குபோல, சலிக்கிற கங்கையை சிரஸில் தரிக்கிறவரும், மிகவும் வெளுத்ததான முகமாகிற தாமரை மலரில் பற்றுள்ள வண்டுபோன்ற நேத்திரமுள்ளவரும் அனேக வித்தைகளின் முளைகள் போன்ற பற்களால் விளங்குகிறவருமான குஞ்சிதாங்கிரிம்.

ज्वालामालान्तराल प्रविलसदमलस्वाङ्गलोलम्ब चेला
मूलालग्नालिशिल्पोल्ललितकटिरटत्किङ्किणी जालभूषम्।
नैलीहालाहलाभाकवलित जलमुक्कारकोलाहलोद्यत्
केलीमायूरलास्यप्रमुदितललनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०६

206. அக்கினிஜ்வாலைகளின் நடுவில் விளங்குகிற பரிசுத்தமான தனது அவயவத்தில் சலிக்கிற வஸ்திரத்தின் நுனியில் ஸம்பந்தித்ததும், வண்டுகளின் கூட்டங்கள் போன்றதும் இடுப்பில் கட்டப்பட்டதுமான கிங்கிணிபூஷணங்களை உடையவரும், (கண்டத்திலுள்ள) நீலமான ஹாலஹல விஷத்தின் காந்தியால் முழுங்கப்பட்ட மேகங்களுடைய சப்தத்தினாலே சந்தோஷத்தை அடைந்து விளையாடுகிற மயூரங்களின் நிர்த்தனத்தினால் ஸந்தோஷித்த அம்பிகையை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

यो यस्यज्ञानशक्तिं दहरकुहरणीं श्रीमहाषोडशार्णां
विद्यां श्रीनाथवीरैः गुरुभिरपिनुतां योगिनीदूतिसेव्याम्।

आत्माऽभिन्नां शिवां तां हृदिपरिचिनुतेसः स्वयं निर्विकल्पो
भूत्वा योगीन्द्रपूज्यो भवतितमगुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०७

207. யாதொரு பரமேச்வரனுடைய ஞானசக்தியும், தஹராகாசத்தில் விளங்குபவளும், ஸ்ரீ நாதவீரர்களினால் அறிக்கப்பட்டவளும், யோகினிநாதிகணங்களினலே ஸேவிக்கப் பட்டவளும், ஆத்மாவைக்காட்டிலும் வேருகாதவளும். பிரஸித்தையும், ஸ்ரீஷோடசாக்ஷரி மந்திராதி தேவதையும், ஸர்வமங்களகரையுமான வித்தையை எவன் ஹிருதயத்தில் தியானம் செய்கிருனே அவன் நிர்விகல்பனுகி யோகிச்ரேஷ்டர் களினலே பூஜிக்கப்படுகிறவனுக ஆகிருன். அப்படிப்பட்ட குணமற்றவரான குஞ்சிதாங்கிரிம்.

यच्छम्भोर्नृत्तरङ्गं पितृभुवनमभूत्कालकूटं च भिक्षा
भूषानागाविभूतिर्मलयभवरजो ब्रह्मशीर्षं कपालम्।
अद्रिश्शय्याच वस्त्रं त्वगपि सहकृताभूतभेतालवर्गा
वाहश्चोक्षापतिस्तं धृतहरिविशिखं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०८

208. யாதொரு சம்புவான பரமேச்வரனுக்கு ச்மசானம் நடனம் செய்யும் இடமாகவும், காலகூடம் என்கிற விஷம் உணவாகவும் ஸர்ப்பங்கள் பூஷணங்களாகவும் விபூதி வாஸனைப் பூச்சாகவும் பிர்ம்மாவின் மண்டை ஓடு உணவின் பாத்திரமாக வும் மலை படுக்குமிடமாகவும், தோல் வஸ்திரமாகவும், பூதம் பேதாளம் முதலியவைகள் கூட இருப்பவர்களாகவும் எருது வாஹனமாகவும் ஆனதுகளோ அப்படிப்பட்ட விஷ்ணுவை பாணமாக உடைய குஞ்சிதாங்கிரிம்.

वासिष्ठब्रह्मदण्डप्रमुषितसुधनुर्बाणसेनासमूहो
ब्राह्मण्यप्राप्तिकामोरचितवरतपाः कौशिकः क्षत्रवर्यः।
तुष्टस्वायम्भुवास्यप्रभवितसवितृख्यात यच्छक्ति विद्या
प्राप्तस्वेष्टानुभावो भुविजयतितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०९

209. வஸிஷ்டரின் பிர்ம்மதெண்டம் என்னும் அஸ்திரத்தினல் வியர்த்தமாகப்போன வில், பாணம், ஸேனைகள்

இவைகளின் கூட்டங்களை உடையவரும், பிராம்மணராக ஆக விரும்பினவரும், கொடுமையான தபஸை உடையவரும், க்ஷத்ரிய ச்ரேஷ்டருமான கௌசிகர் (விச்வாமித்திரர், கொடுமையான தபஸ் செய்த காரணம் பற்றி) ஸந்தோஷத்தை அடைந்த பிர்ம்மாவின் முகத்தில் இருந்து வெளிவந்த ஸாவித்திரி என்று பெயர் உள்ள யாதொரு பரமேச்வரனின் சக்தியான காயத்ரீ மந்திரோபாஸனையால் தனது இஷ்டத்தை (பிராம்மணராக இருத்தலை) அடைந்து பூமியில் மிகவும் விளங்குகிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்க்ரிம்.

यातायातादिहीनं यमनियमपरप्रार्थित ब्रह्मतत्वं
यज्ञं यज्ञाग्निरूपं यजनकरवुधैरीड्यमानं त्रिसन्ध्यम्।
याथार्थाकारलीनाखिल भुवनमजं यामनीशानचूडं
याच्ञाकापट्यहीनं यति वरविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१०

210. போக்குவரவு இல்லாதவரும், யோகிகளால் விரும்பப்பட்ட பிர்ம்மதத்துவம் உள்ளவரும், எக்ஞரூபியும், எக்ஞ மத்தியில் உள்ள அக்கினி ரூபியும், யாகத்தை செய்கிற வித்துவான்களினால் மூன்றுகாலமும் துதிக்கப்பட்டவரும், உண்மையான உருவத்தில் மறைந்த ஸகல உலகத்தை உள்ளவரும், பிறப்பற்றவரும், சந்திரனை சிகையில் தரித்தவரும், யாசனை செய்கிறவனிடம் கபடமற்றவரும், ஸன்னியாஸிகளினாலே துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்க்ரிம்.

विश्वेश विश्ववन्द्यं विविधभयहरं विश्वरूपं वृषाङ्कं
वि॰णुं विन्ध्यारिकान्तामुखरमुनिसती पूजिताङ्घ्रिं विरागम्।
विद्याविश्रान्ति भूमिं विधुधरमकुटं व्युप्तकेशं विनाश
स्थित्युत्पत्यादिहेतुं विकृतिमविकृतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २११

211. உலகத்திற்கு ஈசரும், உலகத்தால் வணங்கப்படுகிறவரும், (உலகத்திற்கு உண்டாகும்) அனேகவிதமான உத்பாத பயங்களைப் போக்கடிப்பவரும், பெரிய உருவம் உள்ளவரும், அல்லது உலகை தனது திருமேனியாக கொண்டவரும், விருஷபத்தை அடையாளமாக கொண்டவரும், வியாபியும்,

அல்லது விஷ்ணுவின் உருவம் உள்ளவரும், அகஸ்திய பத்தினியான லோபாமுத்திரை முதலிய மஹரிஷி பத்தினிகளால் பூஜிக்கப்பட்டவரும், ஆசை அற்றவரும், ஞானத்தின் எல்லையும் சந்திரனை முடியில் தரித்தவரும், அவிழ்ந்துபோன அல்லது தொங்குகிற கேசமுள்ளவரும், அழித்தல், காத்தல், படைத்தல், இவைகளுக்கு காரணரும், விகாரமுள்ளவரும், விகாரமற்றவருமான குஞ்சிதாங்கிரிம்.

(விகாரம் என்பது உருவம்மாறி உருவம் தாங்கல், தன்மயமாய் இருத்தல், விகாரமற்றல்).

केल्यामौत्सुक्यभाजा तुहिनगिरिजया सस्पृहं दत्तवीटी
सेवारक्ता धरोद्यद्युति जितदिनकृद्बालबिम्बांशुचक्रम्।
गीती प्रावीण्यशैली प्रकटनकुतुकात् हस्तवास्तव्यलोलां
वीणां संवादयन्तं प्रथमरसमयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१२

212. விளையாட்டில் சந்தோஷத்தை அடைந்த இமயமலையின் புதல்வியான அம்பிகையினால் ஆசையோடு கொடுக்கப்பட்ட தாம்பூலஸேவையினாலே சிவந்த உதட்டின் காந்தியால் ஜயிக்கப்பட்ட இளம் ஸூர்யனின் காந்தி ஸமூகத்தை உடையவரும், ஸங்கீத வல்லமையின் ரீதியை பிரகாசப்படுத்த ஸந்தோஷத்தினால் வீணையை மீட்டுகிறவரும் சிருங்காரஸஸ்வரூபியுமான குஞ்சிதாங்கிரிம்.

(வீணையை தரித்த நடராஜர் உருவம் காச்யப சில்பத்தில் கூறப்பட்டுள்ளது. இதுவபோல் மற்ற உருவபேதங்களையும் கண்டுகொள்க.)

अश्वत्थामा कृपार्योऽवलिरपिहनुमान्कुम्भकर्णानुजातो
व्यासर्षिर्जामदग्न्योऽप्यधिगतयशसस्सप्तधीरा महान्तः।
यत्पादाब्जार्चयाऽऽपुर्जनिमदसुलभं श्रीचिरंजीविभावं
तं कृष्णश्वेतरक्तद्युतिमतिकरुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१३

213. அச்வத்தாமன், கிருபர், பலி, ஹனுமான், விபீஷணன் வியாஸர், பரசுராமர் என்று பெயர் உள்ளவர்களும், பிரஸித்தர்களும், தீரர்களுமான ஏழு மஹான்கள் யாதொரு பரமேச்வரனுடைய பாதத்தின் பூஜையினாலே பிராணிகளால் அடைய முடியாததான சிரஞ்சீவியாய் இருக்கும் தன்மையை அடைந்தார்களோ அப்படிப்பட்ட கருப்பு, வெளுப்பு, சிகப்பு மூன்றுவித காந்தி உள்ளவரும் அதிக கருணையோடு கூடியவருமான குஞ்சிதாங்கிரிம்.

जाया दानप्रकुप्यत्स्वजनकृतरणा वेशकाले प्रसन्नं
यं दृष्ट्वा नेत्रवारिस्नपिततनुलताभोगसातङ्ककम्पः।
यस्याङ्घ्रिध्यानभानुप्रकटितविभवो वैश्यजोभक्तवर्यो
ध्यध्यारूढोवृषेन्द्रं रजतगिरिमगात् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१४

214. தனது பத்தினியை கொடுத்ததினால் கோபத்தை அடைந்த தனது பந்துக்களோடு போர்புரிகிற ஸமயம் பிரஸன்னரான யாதொரு பரமேச்வரனைப் பார்த்து கண்ணீரால் நனைக்கப்பட்ட சரீரத்தோடும், நடுங்கின ஹிருதயத்தோடும் பரமேச்வரனுடைய பதத்தை நினைத்தலாகிற சூர்யனால் பிரகாசப்படுத்தப்பட்ட வைபவத்தை உடையவனும் வைச்யனுமான பக்தன் (இயற்பகைநாயனார்) விருஷபத்தின்மேல் ஏறிக்கொண்டு கைலாஸத்தை அடைந்தானோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

त्यक्तस्वस्वाधिकारास्सरसिजनयनाश्चागतं देवसौख्य
प्राप्त्यै गोविन्दमुक्त्वा कुशलमपिकराश्लेत्रपूर्वं प्रमोदात्।
वत्सत्वं ब्रह्मतत्वं हृदि न विकलयन्प्रार्थ्यसेदुःखहेतुं
कर्मेऽत्युद्बोधयन्तो यमपिगिरिवरे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१५

215. தேவர்களுக்கு உண்டான அஸுர உபத்திரவங்களை போக்கடித்து ஸவுக்கியத்தை அடைவிக்கவேண்டி கைலயங்கிரியை அடைந்த (அக்கல்பத்தில் உள்ள) விஷ்ணுவை நோக்கி அக்கைலயங்கிரியில் வாழ்கின்ற பூர்வ கல்பங்களில் விஷ்ணுக்களாக இருந்த பழய விஷ்ணுக்கள் ஆலிங்கனம் செய்து குசல ப்ரச்னம் செய்து ஸந்தோஷத்தால் ப்ர்ம்ம தத்துவத்தை மனதில்

என்றாமல் துக்கத்திற்கு காரணமான இக்கர்மாவை பரமனிடத்தில் பிரார்த்திக்கிறாயே என்று விளக்கி யாதொரு பரமேச்வர தத்துவத்தை போதிக்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

भोभो ब्रह्मर्षिमुग्धास्सदयमपि मयाशिक्षिताश्चाप्यजस्रं
वेदान्ते तत्वबोधेनभवतविबुधा यत्ततोऽद्यापियूयम्।
मेधाप्राप्त्यै सभेशं व्रजतशरणमित्यादराद्बोधयित्वा
धाता यत्क्षेत्रराजं मुनिगणमनयत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१६

216. பிர்ம்மதேவர் தன்னிடம் வேதாத்தியயனம் செய்கிற முனிவர்களைக்குறித்து ஹே பிர்ம்மரிஷிகளே என்னால் எப்பொழுதும் அத்தியயனம் செய்விக்கப்பட்டவர்களாக இருந்தபொழுதிலும் நீங்கள் வேதாந்த தத்துவ ஞானத்தை அறிகிற விஷயத்தில் யாதொரு காரணத்தினால் இன்னமும் பண்டிதர்களாக ஆகவில்லையோ அந்த காரணத்தால் நீங்கள் இப்பொழுது மேதையை அடையவேண்டி நடராஜனை சரணமாக அடையுங்கள் என்று சொல்லி யாதொரு நடராஜமூர்த்தியின் சிதம்பர க்ஷேத்திரத்தை அம்முனிக்கூட்டத்தை அடையும்படி செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

गीर्वाणाद्रिं कदाचिद्विपुलरदनयोरन्तरेस्वर्णरम्भा
भ्रान्त्या संधार्यवेगाद्रजतगिरिवरे क्रीडयन्तं गणेशम्।
दृष्ट्वा प्रेम्णाऽद्रिजाता यमपि च तरसाऽऽहूयनिर्दिश्यसूनोः
वृत्तं तुष्टाऽभवत्तं दिविषदधिपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१७

217. ஓர் ஸமயம் மஹாமேரு பர்வதத்தை பெருத்ததான இரண்டு கொம்புகளின் நடுவில் தங்க வாழைமரம் என்கிற பிராந்தியினால் தரித்துக்கொண்டு வேகத்தோடு கைலையங்கிரியில் விளையாடுகிற விநாயகரைப்பார்த்து அம்பிகை ஆசையோடும் பரபரப்போடும் யாதொரு பரமேச்வரனை கூப்பிட்டு குமாரனின் விளையாட்டை காண்பிவித்து ஸந்தோஷத்தோடு கூடினவளாக ஆனாளோ அப்படிப்பட்ட தேவர்களுக்கு அதிபதியான குஞ்சிதாங்கிரிம்.

सोत्साहं वीरबाहुप्रमुखसखियुतो दोर्भिरब्धिं षडास्य
स्तीर्त्वा पूर्वक्ष्माभृत् शिखरमधिजुषं बालमार्तण्डबिम्बम्।
चोलीमानीयमानोधुरिच विरचयन्सैंहिकेयस्यलीलां
यद्वाचा संव्यधात्तं नभसिच परमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१८

218. ஸுப்பிரமணியர் வீரபாகு முதலிய தோழர்களோடு சமுத்திரத்தை கைகளினல் நீந்தி தாண்டி மிகவும் ஸந்தோஷத்தோடு அச்சமுத்திரத்தின் கிழக்கு திக்கில் உள்ள பர்வதத்தின் உச்சியில் உதிக்கிற இளம் சூர்யபிம்பத்தை சோளிப்பையில் அடக்கி ராகுவின் விளையாட்டை செய்கிறவராய் இருந்துகொண்டு யாதொரு பரமேச்வரனின் வாக்கினுல் அச்சூரிய பிம்பத்தை ஆகாசத்தில் விடுவித்தாரோ அப்படிப்பட்ட ச்ரேஷ்டரான குஞ்சிதாங்கிரிம்.

सद्व्योम व्यापितारप्रवलयविलसद्ज्ञानवाञ्छाक्रियादि
श्रीमच्चिच्छक्ति विद्याहतविपुलतमो राजसं सत्प्रकुम्भम्।
गाढाऽविद्याकवाटो न्नयनशममुखद्वारपालाभिगोप्य
न्मोक्षद्वारान्तरंगोपनिषदुपचितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१९

219. ஸத்ரூபமான ஆகாசத்தை வியாபித்த ஓங்காரமயமான பிரகாரத்தினல் விளங்குகிறதும், ஞான இச்சாகிரியைகளை ஆதியாய் உள்ள சித்சக்திகளினல் போக்கடிக்கப்பட்ட தமஸ்ஸை உடையதுமான ராஜஸபையில் நடனம் செய்கிறவரும் நெருங்கின அக்ஞானமாகிற கதவை திறக்குகிற சமதமம் முதலிய வாசற்காப்பாளர்களினலே ரக்ஷிக்கப்படுகிற மோக்ஷத்வாரத்தினுட்புறமுள்ள உபநிஷத்துகளினல் காண்பிவிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

आविः स्मेराननस्य द्युतिभिरभिनवैः पाणिपद्मान्तराल
प्रोद्यत्कान्ति प्ररोहैर्नभसि च रचयन् जालमह्नां पतीनाम्।
नव्यासम्भोदामलामधिधरणिरुचा पार्श्वगायाश्शिवायाः
चित्रं यो नानटीति भ्रमरनटनकृत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२०

220. மந்தஹாஸத்தோடு கூடின முககாந்திகளினலேயும் புதிதுகளான தாமரைப்பூபோன்ற கைகளின் மத்தியத்தில் உண்டாகிற காந்தி வீழ்ச்சிகளினலேயும் ஆகாசத்தில் ஸூர்யர்களுடைய கூட்டங்களையும் வாமபாகத்தில் உள்ள அம்பிகையினுடைய காந்தியினலே புதிதான மேகவரிசையை பூமியிலும் செய்துகொண்டு யாதொரு பரமேச்வரன் ஆச்சரியகரமான தாண்டவத்தை செய்கிருரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்ஙிரிம்.

अच्छामच्छिन्नधाराममृतकररुचेर्वर्षयन्लब्धकामां
दीनामत्यन्तखिन्नां रतिमपि मुदितां संव्यधादीश्वरोयः।
यद्रङ्गाखण्डलाशामधिगतपरमानन्दकूपाम्बुपानात्
वाचालत्वं प्रपन्नास्सुरगुरुमुखराः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२१

221. யாதொரு பரமேச்வரன் தலையில் உள்ள சந்திரனுடைய காந்தியினலே ஸ்வச்சமாயும் ஒழிவடையாததாயும் உள்ள அமிர்ததாரையை வரிஷித்துக்கொண்டு தீனையும் மிகவும் துக்கத்தை அடைந்தவளுமான ரதியை இஷ்டத்தை (தனது பதியை) அடைந்தவளும் ஸந்தோஷத்தோடு கூடியவளுமாக செய்தாரோ யாதொரு பரமேச்வரனுடைய சித்ஸபையின் கீழ்புறத்தில் உள்ள பரமானந்தகூபம் என்கிற கிணற்றின் தீர்த்தத்தை பானம் பண்ணினதால் தேவகுரு முதலிய பெரியோர்கள் வித்வான்களாக ஆனர்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்ஙிரிம்.

ओङ्कारस्वर्णसंसत्प्रसृतपरशिवज्योतिरानन्दनृत्ता
ऽऽलोकादुत्तीर्णमुग्रं भवमतिविपुलं वार्धिकल्पं मुनीन्द्रैः।
ऊहापोहादिहीन स्वतनुगतजगद्वृन्द मध्यात्मविद्या
बोधाचार्यं पुराण प्रशमिततमसं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२२

222. பிரணவரூபமான ஸ்வர்ண ஸபையில் விளங்குகிற பரசிவத்தின் ஜ்யோதிரூபமான ஆனந்த நர்த்தனத்தின் தரிசனத்தால் பயங்கரமும், ரொம்பவும் பெரிதும் ஸமுத்திர துல்யமுமான ஸம்ஸார பந்தமானது முனிவர்களால் அகற்றப் பட்டதோ, கருதரிய தனது திருமேனியை அடைந்த அமல

பிரபஞ்சங்களை உடையவரும் வேதாந்த சாஸ்திரத்திற்கு ஆசாரியரும், போக்கடிக்கப்பட்ட இருளை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

दक्षाद्वामाच्चपृष्ठात् द्रुहिणहरिहरान्सर्वसम्पत्समृद्धान्
कल्पारम्भे यईशोऽप्यनितरसुलभस्वेच्छया सप्रमोदम्।
सृष्ट्वा संसृष्टिरक्षालयकरणविधौ योजयित्वातु वाणी
लक्ष्मीगौरीतिशक्तित्रयमपि च ददौ कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२३

223. யாதொரு பரமேச்வரன் கல்பத்தின் ஆரம்ப காலத்தில் தனது இச்சையினாலே ஸந்தோஷத்தோடு வலது புறத்திலிருந்தும், இடது புறத்திலிருந்தும், பிருஷ்ட பாகத்தி லிருந்தும் ஸகல ஸம்பத்துகளோடு கூடின பிரம்ம, விஷ்ணு, ருத்திரர்களை உண்டுபண்ணி ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்கிற முத்தொழில்களில் ஏவி, ஸரஸ்வதி, லக்ஷ்மி, கௌரீ என்கிற மூன்று சக்திகளையும் அவர்களுக்கு அளித்தாரோ அப்படிப் பட்ட குஞ்சிதாங்கிரிம்.

काचिन्नालायनीति प्रथितमुनिसती भर्तुरिष्टानुकूला
माण्डव्यप्रोक्तशापज्वलनशमनकृद्दुर्दिनश्रीविलासा।
यन्मन्त्र ध्यानयोगादनितरसुलभान्पञ्चकान्तान्नरेन्द्रान्
लेभे जन्मादि हीनं शिवपदमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२४

224. பிரஸித்தரான மௌத்கல்ய முனிவரின் பத்தினியான நளாயினி என்று பெயர் உள்ள ஒரு பதிவிரதா ஸ்திரீ கணவனுக்கு பணிவிடை செய்கிறவளும் மாண்டவ்ய முனிவரால் தன்னிடம் ஏவப்பட்ட சாபத்தை தனது பாதிவ்ரத்திய பலத்தினால் விலக்கியவளும் யாதொரு பரமேச்வர னுடைய மந்திர தியான யோகத்தினால் இதரர்களால் அடைய முடியாதவர்களான ஐந்து பர்த்தாக்களையும் இறுதியில் சிவ பதத்தையும் அடைந்தாளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सिह्मस्कन्धाधिरूढं सितवसनधरं सिन्धुसम्बद्धशीर्षं
सिञ्चन्माध्वीमधूकप्रमुखसुमगणोद्दामभूषामनोज्ञम्।

सिद्धादित्याहि विद्याधर पितृ दिविषद्दैत्यगन्धर्वयक्षो
रक्षो योगीन्द्र साध्याखिल जनविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२५

225. ஸிம்மத்தில் ஏறிக்கொண்டவரும், வெளுத்த வஸ்திரம் உள்ளவரும், கங்கையை தரித்தவரும், தேன் ஒழுகுகிற புஷ்ப மாலைகளை அணிந்தவரும், ஸித்தர்கள், ஆதித்தியர்கள், நாகர்கள், வித்தியாதரர்கள், பிதுருக்கள், தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ராக்ஷதர்கள், யோகீந்திரர்கள், ஸாத்தியர்கள் முதலிய ஸமஸ்த ஜனங்களினாலே துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

प्रत्याहारादियोगैर्हृदयकमलतो ब्रह्मरन्ध्रं स्वकीयं
प्राणानानीयदिव्यं गणमपि शरदां वाहयन्तो महान्तः।
योगीन्द्रास्सिद्धविद्यौषधिमणिगुलिकासेवयावज्रदेहाः
स्वात्मानं यं भजन्ति ज्वलनवरदृशं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२६

226. மகான்களான யோகீச்வரர்கள் தனது பிராண வாயுக்களை பிரத்யாஹாரம் முதலிய யோகங்களினாலே ஹிருதயத்தில் இருந்து பிர்ம்மரந்திரத்தை அடைவித்து அனேகம் தேவவருஷங்களை போக்கடித்தும் ஸித்தமான வித்தைகள், ஓஷதிகள், மணிகள், குளிகைகள் இவைகளின் ஸேவையால் வச்சிரத்துக்கு ஒப்பான தேகங்களை அடைந்தும், ஆத்மஸ்வரூபியான யாதொரு பரமேச்வரனை ஸேவிக்கிறார்களோ அப்படிப்பட்ட அக்கினிக்கண்ணனான குஞ்சிதாங்கிரிம்.

सानावस्मिन्किमर्थं वसत सुरवरा गच्छताद्याखिलेश
क्षेत्राधारं धराया हृदयकमलगं पुण्डरीकाभिधानम्।
क्षेत्रं तत्रैव देवो दशशतकलया राजतीति प्रियोक्त्या
नन्दीयद्दर्शनार्थं त्वरयति च गिरेः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२७

227. நந்திகேச்வரர் கைலாஸத்தின் தாழ்வரையில் வஸிக்கிற தேவர்களைக்குறித்து ஏ தேவர்களே இவ்விடத்தில் ஏன் வஸிக்கிறீர்கள். பூமிக்கு ஹிருதய கமலத்தில் உள்ளதும் அகில க்ஷேத்திரங்களுக்கு ஆதாரமும், புண்டரீகம் என்று பெயர்

உள்ளதுமான க்ஷேத்திரத்தை (சிதம்பர க்ஷேத்திரத்தை) அடையுங்கள். அங்கு பரமேச்வரன் 1000 கலைகளோடு விளங்குகிறார் என்று பிரியமான வார்த்தையால் யாதொரு நடராஜ தரிசனத்தின் பொருட்டு அப்பர்வதத்திலிருந்து அத்தேவர்களை சீக்கிரமாக போகும்படி ஆஜ்ஞாபிக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सृष्ट्यर्थं ब्रह्मणायस्स्तुतनिजविभवस्तस्यलालाटदेशात्
आविर्भूयस्वतन्त्रो विकृततनुवरान्रुद्रवर्गान्गणेन्द्रान्।
सृष्ट्वा तान्प्रेरयित्वा जगदवनविधौ सर्वदा सत्वसंस्थो
ऽरक्षद्विश्वाधिकं तं नतजनसुखदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२८

228. பிர்ம்மாவினுல சிருஷ்டித் தொழிலின் பொருட்டு துதிக்கப்பட்ட மாகாத்மியத்தை உடைய யாதொரு பரமேச்வரன் அப்பிர்ம்மதேவருடைய நெற்றியில் இருந்து ஆவிற்பவித்து தனது உருவம் தாங்கிய ருத்திரர்களையும் மற்றும் கணங்களையும் உண்டுபண்ணி அவர்களை எப்பொழுதும் உலகை காக்கும்படி ஏவி தான் ஸ்வதந்திரராய் ஸர்வாந்தர்மியாக இருந்து கொண்டு ரக்ஷித்தாரோ அப்படிப்பட்ட உலகைக் கடந்தவரும், வணங்கின ஜனங்களுக்கு ஸுகத்தை அளிப்பவருமான குஞ்சிதாங்கிரிம்.

वाचां केलिष्वमन्दं दितिजदिविषदोर्मुष्टिमुष्टीरणेऽब्धे
स्तीरे जाते सुधाढ्यं घटमपिकलयन्हस्तकोणे मुरारिः।
सम्मोहाद्यान् द्वितीयानरचयदमृतान् कामिनी कामिनीनां
भूत्वायश्शूलपाणे रनवधिदयया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२९

229. யாதொரு பரமேச்வரனுடைய அளவற்ற கிருபையால் முராரியான மஹாவிஷ்ணு பாற்கடலின் கரையில் விளையாட்டான வார்த்தைகளினால் தேவாஸுரர்களுக்கு அதிகமான முஷ்டி யுத்தமானது உண்டாயிருக்கும் தருணம் அமிர்தத்தினால் பூர்ணமான கடத்தை கையில் தாங்கி காமினிகளுக்கு காமத்தை உண்டுபண்ணும் ஸ்த்ரீயின் வடிவம் எடுத்து

அவ்வடிவத்தால் ஆத்தியர்களான அஸுரர்களை மோஹிக்கும் படிக்கும் தேவர்களை அமிர்த பானம் பண்ணினவர்களாகவும் செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

पद्मेमास्त्वद्य लीलाफणिपतिशयनं वैनतेयोपिनालं
भूमित्वं शीघ्रमायाह्यहमपि नटने तिल्लवन्यां पुरारेः।
हस्ताभ्यां वादयिष्याम्यहहचटुतरं मद्दलं चेत्युदीर्य
प्रायाद्यद्रङ्गमादौ हरिरपितमजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २३०

230. ஏ லக்ஷ்மியே இப்பொழுது விளையாட்டு வேண்டாம், ஸர்ப்ப படுக்கையும் வேண்டாம், கருடனும் வேண்டாம், ஏ பூமி சீக்கிரமாக வா. நான் தில்லை வனத்தில் புராரியினுடைய நடனத்தில் கைகளினால் மிகவும் ஸமர்த்தமாக மத்தளம் வாசிக்கப் போகிறேன் என்று சொல்லி விஷ்ணு முதலில் யாதொரு பரமேச்வரனுடைய ஸபையை (தாண்டவமாடும் காலத்தில்) அடைந்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

पश्येदं स्वर्णशृङ्गं ममसदनवरं गौरिकेदारसंज्ञं
काशीं काञ्चीपुरीमप्यरुणगिरिवरं श्वेतकान्तारदेश्यम्।
वेदारण्यं च सेतुं मुहुरपि वृषभं योऽधितिष्ठन्प्रियायै
निर्दिश्याप्नोति नैजं निलयमनुदिनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २३१

231. யாதொரு பரமேச்வரன் ஒவ்வொருநாளும் விருஷபத்தில் ஏறிக்கொண்டு பிரியையான அம்பிகையின் பொருட்டு தங்கமயமான சிகரங்களோடுகூடின எனது ஆலய சிரேஷ்டம் இது. ஏ கௌரீ கேதாரம் என்று பெயர் உள்ள க்ஷேத்திரம் காசி காஞ்சிபுரம், அருணாசலம், ச்வேதாரண்யம், ராமஸேது என்றும் ஒவ்வொரு க்ஷேத்திரங்களையும் பார் என்றும் காண்பித்து பிறகு தனது வாஸஸ்தானமான க்ஷேத்திரத்தை (சிதம்பரத்தை) அடைகிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

स्वामिन्भिक्षोभवेद्वाकनुतवनगरे पर्वतेवाबने वा
वासः कस्मादिहत्वं चरसि वदविभो कुत्र गन्तासिभिक्षाम्।

कुर्वन्नैवतिष्ठन्विरचयतु भवान्केलिमस्माभिरेवं
स्त्रैणं यं चाभ्यधावद्वनभुविविवशं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३२

தாருகாவனத்தில் முனிபத்தினிகளின் பிரச்னங்களை விளக்குகிறார்.

232. ஏ பிக்ஷுவான ஸ்வாமியே உமக்கு பட்டணத்திலோ பர்வதத்திலோ, வனத்திலோ, எந்த இடத்தில் வஸிக்கிறீர். எதனால் இவ்விடம் நீர் ஸஞ்சாரம் செய்கிறீர், எங்குபோக இச்சிக்கிறீர் சொல்லும். இங்கே பிக்ஷை செய்துகொண்டும், வஸித்துக்கொண்டும், எங்களோடுகூட விளையாட்டை செய்யும். இவ்விதம் யாதொரு வசமாகாத பரமேச்வரனை தாருகாவனத்தில் முனிவர்களின் ஸ்த்ரீ ஸமூகமானது சூழ்ந்ததோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

वामा वामाङ्गभागो नयनमपि जटाः कुण्डलौयज्ञसूत्रं
वाहोवाणश्च चापध्वजरथतुरगा यस्यजाताविचित्रम् ।
सूतश्चापि स्फुलिङ्गैर्निटिलनयनजैर्दाहयित्वाण्डजालं
कल्पे कल्पे पुनयस्सृजति तदखिलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३३

233. யாதொரு பரமேச்வரனுக்கு வாமபாகம், நேத்திரம், ஜடைகள், இரண்டு குண்டலங்கள், எக்ஞ ஸூத்திரம், வாஹனம், அம்பு வில், கொடி, ரதம், குதிரை, தேர்ப்பாகன் இவைகள் விசித்திரமாக ஆனதுகளோ, யாதொரு பரமேச்வரன் நெற்றிக் கண்ணிலுண்டான அக்கினிப் பொறிகளினால் ஒவ்வொரு கல்பங்களிலும் எல்லா அண்டங்களையும் பொசுக்கி மறுபடி அவ்வண்டங்களை சிருஷ்டிக்கிறாரோ அப்படிப்பட்ட நாசமற்றவரான குஞ்சிதாங்கிரிம்.

पादाङ्गुष्ठस्य यस्य द्युतिकवचितदिक्चक्रवालान्तराले
ब्रह्मा हंसं मुरारिः कलशजलनिधिं देवराजो गजेन्द्रम् ।
स्वर्गं वाजपेयी दिनकरशशिनौ सैंहिकेयश्च शुक्लं
वर्णं शिल्पीनितान्तं मृगयति सततं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३४

234. யாதொரு பரமேச்வரனுடைய காலின் பெருவிரலின் காந்தியினால் வியாபிக்கப்பட்ட திக்குகளில் பிர்ம்மா

ஹம்ஸத்தையும், விஷ்ணு பாற்கடலையும், இந்திரன் ஐராவதத்தையும், வாஜபேயம் என்கிற யாகத்தை செய்தவன் தனது வெண்குடையையும், ராகு என்கிற ஸிம்ஹம் ஸூர்யன், சந்திரன் இவ்விருவர்களையும், சில்பி வெள்ளைவர்ணத்தையும் எப்பொழுதும் தேடுகிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

ज्ञानेच्छाभ्यां सखिभ्यां सहरहसिमुदानक्तमश्रान्तलीलो
भूत्वा प्रातस्सभायामिह किमु भवतस्साहसं नन्दनीयम्।
यातु स्वर्गापगाया निकटतटमयं नार्थनीयो जनश्चे
त्युक्त्वा साचीकृतामन्वनयदगसुतां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २३५

235. ஞானசக்தி, இச்சாசக்தி இவ்விருவர்களோடு இரவில் ஸந்தோஷத்தோடுகூட ரஹஸ்யமாக வெகுநேரம் விளையாடி ப்ராதக்காலத்தில் இந்த ஸபையில் வந்தவரான உம்முடைய ஸாகஸமானது கொண்டாட தகுந்ததே கங்கையின் ஸமீப ப்ரதேசத்தை அடைவீர். இந்த ஜனம் (நான்) விரும்பத்தக்கவள் அல்ல. இவ்விதம் சொல்லி திரும்பின முகத்தையுடைய அம்பிகையை (கிரியாசக்தியை) யாதொரு பரமேச்வரன் (முன்னொரு ஸமயம்) ஸமாதானம் செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कल्पान्ते वृद्धिभाजां कवलितजगतां सप्तवारान्निधीनां
मध्ये पालाशशायी हरिरिह पुरुषोनास्तिमत्तोऽपरोन्यः।
एवं दर्पावलीढेऽप्यनुपदमुदितं शूलिनं भैरवं यं
दृष्ट्वाभीत्या ननामस्तुतिभिरभिनवैः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २३६

236. கற்பத்தின் முடிவில் உலகம் பூரா வியாபித்த எழு ஸமுத்ரங்களின் நடுவில் ஆல இலையில் பள்ளிகொண்ட பெருமாள் இங்கு என்னைக்காட்டிலும் வேறு புருஷன் இல்லை என்று கொழுப்பு அடைந்தவராக இருக்கும் தருணம் ஸமீபத்தில் ஆவிற்பாவத்தை அடைந்து சூலாயுதம் ஏந்திய பயிரவ ரூபியான யாதொரு பரமேச்வரனை பார்த்து பயத்தினால் புதிதுகளான ஸ்தோத்திரங்களோடு நமஸ்கரித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यत्संहाराखवेगं मुहुरपि हृदयेतर्कयन्नम्बरान्ते
प्राणत्राणाययत्नं दशरथनृपतेर्युद्धरङ्गे प्रकुर्वन्।
रोहिण्याकारचक्रानुगतिमपि जहौ सौरिरर्कात्मजातः
तं देवं राहुकेतुग्रहमुखविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २३७

237. ஸூர்ய புத்திரான சனீச்வரன் ஆகாசத்தில் உண்டான தசரத சக்கரவர்த்தியின் யுத்தரங்கத்தில் யாதொரு பரமேச்வரனுடைய ஸம்ஹாராஸ்திரத்தின் வேகத்தை அடிக்கடி மனதில் எண்ணியும் பிராணனை ரக்ஷிப்பதற்காக யத்தனத்தை செய்துகொண்டும், ரோகணீ சகட கதியை விட்டாரோ அப்படிப்பட்ட தேவரும், ராகு கேது முதலிய கிரஹங்களால் துதிக்கப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

इन्दुर्यत्क्षेत्रसेवासमसमयवलतिल्ववृक्षानिलानां
स्पर्शादुन्मृष्टवर्ष्मा सुरगुरुयुवतीसङ्गजैः पापरोगैः।
यद्वक्त्रालोकनेनस्वतनुपरिगलच्चान्द्रिकासारसिक्तान्
सर्वान्लोकानकार्षीत्शमनमदहरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २३८

238. சந்திரன் யாதொரு பரமேச்வரனுடைய (சிதம்பர) க்ஷேத்திரத்தை அடைந்த காலத்தில் வீசுகிற தில்லை விருக்ஷ காற்றுகளுடைய ஸம்பந்தத்தால் தேவ குரு பத்தினியின் ஸங்கமத்தினால் உண்டான பாபரோகங்களால் விடுவிக்கப் பட்ட சரீரத்தை அடைந்தும் யாதொரு பரமேச்வரனுடைய முகதரிசனத்தினால் ஸர்வலோகங்களையும் தனது சரீரத்திலிருந்து வெளிவருகிற கிரண பிரவாஹங்களால் நினைந்ததுகளாகச் செய்தானே அப்படிப்பட்ட யமனது மதத்தை அடக்கின குஞ்சிதாங்கிரிம்.

कालिन्दीवीचिजालैर्भुवनमहिपते र्नीतमानन्दभाजं
कान्तं सीमन्तिनीति क्षितिपतितनयाकाचिदौपासनैस्तैः।
सौम्यैरुद्दामकल्पैः प्रमुदितमनसोयस्य शम्भोः प्रसादात्
प्रापावैधव्ययोगं सुखमपि निखिलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २३९

239. ஸீமந்தினி என்று பெயர் உள்ள ஓர் அரசகுமாரி பலவித உபாஸனைகளால் ஸந்தோஷத்தை அடைந்த யாதொரு சம்புவான பரமேச்வரனின் பிரஸாதத்தினாலே யமுனாநதியின் அலைகளால் பாதாளலோகத்தை அடைவித்தவனும் ஆனந்தத்தை அடைந்தவனுமான தனது கணவனையும் அகில சுகங்களையும் அடைந்தாளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இக்கதை பிர்ம்மோத்தர கண்டத்தில் கூறப்பட்டுள்ளது.)

विष्णौ निर्ज्वालचक्रे भ्रमितहृदि विधौ भास्करे दन्तहीने
शक्रे निर्भिन्नगण्डे हुतभुजि विशिखे त्यक्तजीवेऽखिलेऽन्ये।
छित्वा दक्षोत्तमाङ्गं मखभुवि सगणं वीरभद्रं चरन्तं
दृष्ट्वा योऽतोषयत्तं प्रमुदितहृदयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २४०

240. விஷ்ணு ஜ்வாலையற்ற சக்கரத்தை உள்ளவராகவும் பிர்ம்மா பிரமையோடு கூடியவராகவும் ஸூர்யன் உதிர்ந்த பற்களை உள்ளவனாகவும், இந்திரன் உடைந்த கன்னங்களை உடையவனாகவும், அக்கினி அறுந்த சிகை உள்ளவனாகவும் மற்றும் இதர தேவர்கள் இழந்த சிவனை உள்ளவர்களாகவும் இருக்கும் தருணம் யக்ஞவாடத்தில் தக்ஷபிரஜாபதியின் தலையை அறுத்து ஸந்தோஷத்தோடு உலாவுகிறவரான வீரபத்திரரை யாதொரு பரமேச்வரன் ஸந்தோஷிக்கும்படி செய்தாரோ அப்படிப்பட்ட ஸந்துஷ்ட ஹிருதயரான குஞ்சிதாங்கிரிம்.

सावित्रीति प्रसिद्धा नरपतितनुजा काननान्तः स्वभर्तुः
प्राणानाहर्तुकामं सभटमपि यमं यस्य पूजाप्रभावात्।
सम्मोह्यानम्य तस्मात्पतिमपि तनयान्राज्यमन्याः समृद्धीः
लेभे तं कालकालं कटितटफणिनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २४१

241. ஸாவித்திரி என்று பிரஸித்தையான அரசகுமாரி காட்டில் தனக்கு முன்பாக தனது பர்த்தாவின் (ஸத்தியவானின்) பிராணன்களை அபகரிப்பதற்கு இச்சை உள்ளவனும், படர்களோடு கூடினவனுமான யமனை யாதொரு பரமேச்வரனுடைய பூஜா பிரபாவத்தால் மோகிக்கும்படி செய்தும் வணங்கியும்

அவனிடம் இருந்து தனது பார்த்தாவையும், புத்திரர்களையும், ராஜ்யத்தையும் ஸம்பத்துக்களையும் அடைந்தாளோ அப்படிப் பட்ட காலனுக்கு காலனும் இடுப்பில் (கடிஸூத்திரமாக) கட்டப்பட்ட நாகத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

ब्रह्मैवाहं शिवोहं विभुरहममलश्चिद्घनोऽहं विमायः
सोऽहं हंसस्स्वतन्त्र स्तदहमतिजरः प्रज्ञयाकेवलोहम्।
ध्येयध्यातृ प्रमाणैः गलितमतिरहं निश्चलोऽहं सदेति
प्राज्ञायच्चित्सभायां अतिशयमभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २४२

242. நான் பிர்மமே, நானே சிவன், எங்கும் வியாபி, பாபமற்றவன், ஞானகனன், மாயையற்றவன், ஹம்ஸஸ்வரூபன் ஸ்வதந்திரன், கிழத்தன்மை இல்லாதவன், கேவலம் பிரக்ஞை யோடுகூடினவன், திருபுடி அற்ற புத்தியுள்ளவன், எப்பொழுதும் சலனம் அற்றவன் என்று பிராக்ஞர்கள் யாதொரு பரமேச்வர னுடைய சித்ஸபையில் ஆனந்தாதிசயத்தை அடைந்தார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कान्तारे जातु कृष्णोद्विजरविमणिहृत्भल्लवन्दीकृतायाः
सौन्दर्यान्निर्जितायास्सुरवरयुवतीं जाम्बवत्याः प्रियायाः।
पाणिं जग्राह यस्यप्रतिदिनयजनात्कीर्तिमाशाविहारां
लेभे तं सर्वविद्यालयकरनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २४३

243. கிருஷ்ணன் ஓர் ஸமயம் காட்டில் ஓர் பிராம்மண னின் ஸூரியனிடமிருந்து பெற்ற ஸ்யமந்தகம் என்கிற மணியை அபஹரித்த கரடியை ஸம்ஹாரம் செய்து அக்கரடியால் சிறை யிடப்பட்டவளும், தனது அழகினால் தேவஸ்திரீயை ஜயித்தவளு மான ஜாம்பவதி என்னும் கன்னிகையை யாதொரு பரமேச்வர னுடைய நித்தியார்சனை வைபவத்தால் பாணிக்கிரஹணம் செய்து கொண்டாரோ எல்லா திக்குகளில் பரவிய கீர்த்தியையும் அடைந்தாரோ அப்படிப்பட்ட ஸர்வவித்தைக்கும் இருப்பிட மான நடனத்தை உடைய குஞ்சிதாங்கிரிம்.

मालादिग्बन्ध पूजाकवचवरमहायन्त्र विद्यारहस्य
श्रीमत्साहस्रनामस्तवपरिविलसद्यन्नवाङ्गानिपूर्वम्।

सूतश्रीजैमिनिभ्यां रहसि सकरुणं प्रोक्तवान्दीक्षयित्वा
पाराशर्योमहर्षिः श्रुतिविभजनकृत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४४

244. முன் ஒரு காலம் வேதங்களை வகுத்தவரும், பராசருக்கு புதல்வருமான வியாஸ முனிவர் ஸூதர் ஜைமுனி இவ்விருவர்களுக்கும் ரஹஸ்யத்தில் தீக்ஷை செய்து கருணையோடு மாலை, திக்பந்தனம், பூஜாவிதானம், கவசம், யந்திரம், மந்திரம், ரஹஸ்யம், (அதன் பொருள்) ஸஹஸ்ரநாமா ஸ்துதிகள் இவைகளால் விளங்குகிற யாதொரு பரமேச்வரனுடைய நவாங்கங்களை (நவாங்கம் என்பது மந்திர சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஓர் விதமான கிரமம்) உபதேசம் செய்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்க்ரிம்.

सद्योजातादिमानां वदनजलभुवां पञ्चकाद्यस्यजातान्
मन्त्रां स्त्रैलोक्यवश्य प्रमुखवर महासिद्धिदान्सप्तकोटीन् ।
श्रुत्वा गौरी यदुक्त्या जगदुपकृतये सप्रयोगान्सकल्पान्
तान्लोकानानिनायस्वयमतुलकृतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४५

245. யாதொரு பரமேச்வரனுடைய ஸத்தியோஜாதம் முதலான ஐந்து முகங்களில் இருந்து வெளிவந்ததுகளும் மூன்று லோகங்களையும் வச்யம் பண்ணுகிறது முதலான ஸித்திகளைக் கொடுக்கிறதுகளுமான ஏழு கோடி மந்திரங்களை அறிந்து யாதொரு பரமேச்வரனுடைய கட்டளையால் அம்பிகை ஸ்வயமாகவே லோகோபகாரத்தின் பொருட்டு அம்மந்திரங்களை பிரயோகங்களோடுகூட உலகில் பிரகாசிக்கும்படி செய்தாளோ அப்படிப்பட்ட ஒப்பற்ற கிருதியுள்ள குஞ்சிதாங்க்ரிம்.

अद्राक्षीन्नन्दिकेशः कनकसदसि यं ह्यर्धनारीस्वरूपं
पश्चान्नारायणार्धं पुनरपिगिरिजारूपमाकारहीनम् ।
तारं तन्मण्डलान्तर्ज्वलनमनुपमं सच्चिदानन्दमूर्तिं
नृत्तेशानं मुहूर्तं तमपरसुगमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४६

246. ஒரு ஸமயம் நந்திகேச்வரர் (சிதம்பர க்ஷேத்திரத்தில் உள்ள) கனக ஸபையில் ஒரு முஹூர்த்தகாலம் யாதொரு

பாமேச்வானே அர்த்தநாரீ ஸ்வரூபமாகவும் பிறகு சங்கர நாராயண வடிவமாகவும், அம்பிகையின் ரூபமாகவும், உருவம் இல்லாததும், (லிங்கமாகவும்) ஓங்காரமும் அதன் நடுவில் அக்னியையும், ஒப்பற்றதும், ஸச்சிதானந்த ஸ்வரூபமுமான நடராஜமூர்த்தியாகவும் பார்த்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

पार्वत्युत्सङ्गदेशस्थितिमधिजुषतोः स्कन्दहेरम्बयोस्ता
वाहूयाद्याखिलाण्डान्झटिति च युवयोः कस्समर्थोऽटनेसः।
स्वीकुर्यादेतदाम्रं फलमिति निगदन्नग्रतो यस्तदीयं
वृत्तं दृष्ट्वा मुमोद क्षितिधरशिखरे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २४७

247. கைலயங்கிரியில் பார்வதியின் மடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிற ஸுப்பிரமணியரையும், விநாயகரையும் கூப்பிட்டு உங்கள் இருவர்களுக்குள் இப்பொழுது ஸமஸ்தமான அண்டங்களை சுற்றிவருவதில் எவன் ஸமர்த்தனே அவன் இந்த மாம்பழத்தை எடுத்துக்கொள்ள கடவன் என்று சொல்லி யாதொரு பாமேச்வரன் தனக்கு முன்பாக அவ்விருவர்களுடைய செய்கையைப் பார்த்து ஸந்தோஷித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

(அவ்விருவர் விருத்தமாவது) ஸுப்பிரமணியர் தனது மயில் வாகனத்தில் ஏறி அகில அண்டங்களையும் சுற்றி பாமேச்வரனுடைய ஸமீபத்தை அடையும் தருணம் நோக்கி அங்ஙனமே விநயகர் எழுந்திருந்து ஸ்வாமியை மூன்று பிரதக்ஷிணம் செய்து துதித்து அக்கனியை பெற்றுக்கொண்டார். இதுகண்டு ஸுப்பிரமணியர் கோபத்துடன் தெற்கு நோக்கி வரும்பொழுது பாமேச்வரன் பின்தொடர்ந்து ஓர் மலையின் உச்சியில் அக்குமாரனைக்கண்டு கருணையால் பலம் நீ என்று பழத்தை அருந்தினர் அதனுல் பழனி என்று அக்ஷேத்திரம் விளங்குகிறது.

नानाजीवात्मवादि प्रकटितकुनया भासयुक्त्यद्रिपक्ष
च्छेदानुधावड्डमरुकमुखरज्ञात सत्यार्थलोकम्।

वाञ्छाकल्पद्रुकल्प प्रपद्युगनत ब्रह्मनिष्ठावलिं तं
चिन्मात्रं चित्सभेश निरतिशयगुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४८

248. ஜீவன் ஆத்மா வேறு என்று வாதம் பண்ணுகிறவர்களால் சொல்லப்பட்ட கித்திமமான யுக்திகளாகிற பர்வதத்தின் இரண்டு ரக்கைகளை வெட்டுவதன் பொருட்டு பரவுகிற டமருகத்தின் சப்தத்தினல் அரியப்பட்ட ஜீவன் ஆத்மா ஒன்று என்கிற உண்மைப் பொருளைக்கொண்ட உலகை உடையவரும் இஷ்டத்தைக் கொடுக்கிற விஷயத்தில் கற்பக விருக்ஷம் போன்ற இரண்டு பாதங்களில் வணங்குகிற பிர்ம்ஹநிஷ்டர்களை உடையவரும் பிரசித்தரும் ஞானஸ்வருபரும் சித்ஸபேசரும் அதிசயிக்க முடியாத குணங்களோடு கூடினவருமான குஞ்சிதாங்கிரிம்.

विष्णोश्चक्रापहर्तुः प्रथितबलजुषो भूतचक्राधिपस्य
क्षुत्तृड्दुःखप्रशान्ति प्रदनिजचरित स्तब्धपाण्ड्यात्मजातम् ।
श्वश्रूवाञ्छाभि पूर्त्यै निजधुरि च मुदाऽऽनीत सप्ताम्बुराशिं
भक्तस्त्रीरकपिष्टाशनरुचिमुदितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४९

249. விஷ்ணுவின் சக்ரத்தை விழுங்கினதும் அதிகமான பலத்தோடு கூடினதுமான (குண்டோதரன்) பூதராஜனுடைய பசிதாஹங்களைப் போக்கடிக்கிறதான தனது லீலையால் அசைவற்றவளான பாண்டிய குமாரியை உடையவரும் தனக்கு மாமியாரான காஞ்சனமாலையின் இஷ்டத்தை பூர்த்தி செய்ய வேண்டி தன் முன்பாக ஸந்தோஷத்தோடு அழைப்பிக்கப்பட்ட ஏழு கடலை உடையவரும் தன்னிடம் பக்தி உள்ள ஓர் ஸ்திரீயினல் கொடுக்கப்பட்ட பிட்டில் (மாவினல் செய்யப்பட பணியாரம்) பிரியமுள்ளவருமான குஞ்சிதாங்கிரிம். (இச்சரித்திரங்கள் திருவிளையாடல் புராணத்தில் கூறப்பட்டுள்ளவை.)

अत्रेः कान्ताऽनसूयानिखिलजननुतार्यंसमभ्यर्च्यपुत्रं
दत्तात्रेयाऽभिधानं त्रिमुखमपि चतुर्बाहुमद्वैतवृत्तिम् ।
अत्यन्तोद्दामलीलं सकलमुनिततेरग्रगण्यं महान्तं
लेभे तं स्वात्मबुद्धत्रिभुवनचरितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २५०

250. அத்திரி மஹரிஷியின் பத்தினியும், ஸமஸ்த உலகங்களால் போற்றப்பட்டவளுமான அனஸூயை, யாதொரு பரமேச்வரனை பூஜை செய்து மூன்று முகமும் நான்கு கையும் அத்வைத விருத்தியும் வேதாந்த சாஸ்திரத்தில் விசேஷமான பிரஜ்ஞையும் ஸகல முனிக்கூட்டங்களுக்கு முதன்மையும், மஹானுமான தத்தாத்திரேயர் என்பவரை புத்திரனாக அடைந்தாளோ அப்படிப்பட்ட தனது அந்தரத்தில் அறியப்பட்ட மூன்று உலக சரித்திரங்களை உடைய குஞ்சிதாங்கிரிம்.

कल्पारम्भे यदीयाद्धरगलविवरादोमथेतिद्विशब्दौ
सिद्धान्तार्थं प्रबोद्धृप्रवरशिवकरावाविरास्तां पुरस्तात्।
पश्चाद्वेदादि विद्याविधिहरिमुखरा देवतास्सर्वलोका
जातास्तं दक्षिणास्यं द्युतिकरनिलयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५१

251. கல்பாரம்ப காலத்தில் யாதொரு பரமேச்வரனுடைய கண்டத்திலிருந்து முதலில் சாஸ்திரார்த்தங்களைப் போதிக்கிறதும் மிகவும் மங்களகரமுமான ஓம் அத என்கிற இரண்டு சப்தங்கள் உண்டானதுகள். ओङ्कारश्चाथशब्दश्च द्वावेतौ ब्रह्मणः पुरा। कण्ठम्भित्वा विनिर्यातौ तस्मान्माङ्गलिकावुभौ॥ इतिस्मर्यते॥ பிறகு வேதங்களை ஆதியாக உள்ள ஸகல வித்தைகளும் பிர்ம்ம விஷ்ணுக்களை ஆதியாக உள்ள ஸகல தேவர்களும் ஸமஸ்த லோகங்களும் உண்டானதுகளோ அப்படிப்பட்ட தெற்கு நோக்கிய முகம் உள்ளவரும் ஸூர்யன் சந்திரன் அக்கினி இவர்களின் மண்டல மத்தியில் வஸிப்பவரும் அல்லது பிரகாசிக்கிறதான வாஸஸ்தானம (ஸபை) இதை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

सङ्कल्पोल्लासहीनं सरिगमपधनी सप्तवर्णानुवर्ण
प्रारम्भोद्गानलोलाखिल सुरयुवती बृन्दसङ्कीर्णरङ्गम्।
नादध्यानानुमोदागतनिजनिकटानेक सिद्धर्षिदेव
स्तोत्रध्वानैर्नितान्तैर्जितजलधिरवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५२

252. ஸங்கல்பத்தில் ஆசை அற்றவரும் ஸரிகமபதநி என்கிற ஏழு ஸ்வரங்களோடு கானம் செய்கிற தேவஸ்திரீ கூட்டங்களினால் நிறைந்த ஸபையை உடையவரும் நாத ப்ரும்மத்தை தியானம் செய்யவேண்டி தனது ஸமீபத்தில் வஸிக்கிற ஸித்தர்கள், ரிஷிகள், தேவர்கள் இவர்களுடைய ஸ்தோத்திர சப்தங்களினாலே ஜயிக்கப்பட்ட ஸமுத்திர ஒலியை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

दोष्णां साहस्रयुग्मैर्धृतपरशुमुखैराननानां सहस्रैः
त्रैसाहस्रैस्तथाक्ष्णामपरिमितजटाघोरणी धाटिकाभिः।
ज्वालामालाभिरग्नेरपहसितघनै रट्टहासैर्विशालैः
निष्वानैर्योऽन्तकाले विहरतितमजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २५३

253. யாதொரு பரமேச்வரன் ஸர்வஸம்ஹார காலத்தில் பரசு முதலிய ஆயுதங்களை தரித்ததுகளான இரண்டாயிரம் கைகளோடும், மூவாயிரம் கண்களோடும், ஆயிரம் முகங்களோடும், தொங்குகிற அளவுகடந்த ஜடைகளோடும், அக்கினியின் ஜ்வாலைகளால் சூழப்பட்டும், இடி சப்தங்களை திரஸ்கரிக்கிற ஸிம்ம நாதங்களோடும் விளையாடுகிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

शेषे जातु स्वभोगात्सुरगिरिशिखरं वेष्टयित्वानितान्तं
त्रैलोक्यप्राणभूतां कवलयतितनूं नारदात् ज्ञातवृत्तः।
वायुर्यद्ध्यानयोगात् प्रबलतनुरयात् भुग्नवक्त्रं सभूभृत्
शृङ्गं विक्षेपवार्धौ फणिपतिमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २५४

254. ஆதிசேஷன் ஓர் ஸமயம் மஹாமேருவை தனது உடலால் சுற்றிக்கொண்டு மூன்று லோகங்களுக்கும் ப்ராண பூதமான வாயுவை அடக்கி இருக்குப்பொழுது அது ஸமயம் நாரதரால் அறிவிக்கப்பட்ட வாயு பகவான் யாதொரு பரமேச்வரனுடைய தியான யோகானுபாவத்தால் உண்டான பலத்தின் வேகத்தினாலே முகத்தை உடைத்து அம்மலையின் சிகரத்தோடு அவ்வாதிசேஷனை ஸமுத்திரத்தில் எறிந்தானோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

विश्वामित्रप्रयुक्तात् स्वपुरसुतसुहृत्कामिनी विप्रयोगात्
क्लिश्यन्नालीकवार्ताङ्गदितुमपिपटुः पूजयायस्यनित्यम्।
लब्ध्वा स्वां संपदं तामभजदथहरिश्चन्द्र संज्ञोनरेन्द्रो
धामस्वायम्भुव तं निगमरथवहं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५५

255. விச்வாமித்திரரால் அபஹரிக்கப்பட்ட தனது நகரம், புத்திரன், ஸ்நேகிதன், பத்நினி, இவர்களின் பிரிதலினாலே துக்கத்தை அடைந்தவனாக இருந்த பொழுதிலும் பொய் சொல்லுவதில் இசையாதவனான அரிச்சந்திரன் என்கிற அரசன் யாதொரு பரமேச்வரனுடைய நித்திய பூஜையினாலே தனது ஸம்பத்துக்களை அடைந்தும் பிறகு பிர்ம்ம லோகத்தையும் அடைந்தானோ அப்படிப்பட்ட வேதங்களை குதிரையாகவுடைய குஞ்சிதாங்க்ரிம். (இது காசீ கண்டத்தில் கூறப்பட்டுள்ளது).

आबाल्यात् द्रव्यमेतत्सुमुखितवमुदे यन्मयात्तं तदद्य
स्वीकुर्वाणानितान्तं मदनशरहतं गाढमालिङ्ग्यदोर्भ्याम्।
अत्रैवाश्वासयेति त्वरितगतिमुमामालिभिर्वारितोऽपि
श्रीमान्योह्यन्वगच्छन्नगतटभुवितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५६

(அவதாரிகை) இமயமலையில் தேவி பரமசிவனை விவாகம் செய்யவேண்டி தபஸ் செய்யும் தருணம் பரமசிவன் விருத்த பிராம்மண வடிவம் கொண்டு அவ்விடம் செய்த லீலையை அறிவிக்கிறார்.

256. ஏ நல்ல முகத்தை உடைய பார்வதியே! பால்யம் முதற்கொண்டு என்னால் சம்பாதிக்கப்பட்டதான பொருள் யாவற்றும் உனது ஸந்தோஷத்தின் பொருட்டு ஆகட்டும். இப்பொழுது அதை அங்கீகரித்து மிகவும் மன்மதனின் பாணத்தினால் அடிக்கப்பட்ட என்னை ஆலிங்கனம் செய்து ஆச்வாசம் பண்ணக்கடவாய் என்று சொல்லி யாதொரு ஸ்ரீமானான பரமேச்வரன் ஸகிகளினாலே தடுக்கப்பட்டவராக இருந்த பொழுதிலும் வேகமாக உள்புறம் செல்லுகிற அம்பிகையை பின்தொடர்ந்து சென்றாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

आलित्वं सान्त्वयार्यां मयिकुपितधियं दारुकारण्यवासि
स्त्रीणां केलीविलासैर्हरिधृतसुतनोस्साहसात्पर्वतेन्द्रे।
सङ्गाद्दिव्यापगायामदनदहनतश्चेतिसाकूतमुक्त्वा
कान्तागारेजयां योऽगमयदसुलभं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५७

257. யாதொரு பரமேச்வரன் ஏ தோழி, நீ, தாருகா வனத்தில் உள்ள ஸ்திரீகளுடன் விளையாடினதனுலேயும், மஹா மேருவில் விஷ்ணு மோகினியோடு கூடினதனுலேயும் கங்காஸங்கமத்தினுலேயும் மன்மதனைப் பொசிக்கினதனுலேயும், என்னிடம் கோபித்த உனது தோழியான உமையை ஸமாதானம் செய் என்று அபிப்பிராயத்தை உள்ளடக்கிசொல்லி (உப்பரிகை யில்) அந்தப்புரத்தில் ஜயை என்கிற சகியை அனுப்பினரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यश्शम्भुर्लीलयास्वं जनिमसुखकरं तापसानां वचोभिः
हस्तादुत्पाट्यदेवैः किमिदमिति भयाद्वीक्षितोऽरण्यदेशे।
चिक्षेपब्रह्मविष्णुस्तुतिभिरपि पुनस्तान्मुनीन्ज्ञातत्वान्
कृत्वाप्यन्तर्दधे तं प्रणतफलकर कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५८

258. யாதொரு சம்புவான பரமேச்வரன் விளையாட்டாக தனது லிங்கத்தை தாருகாவனத்திலுள்ள முனிவர்களின் வார்த்தையால் கையினல் பிடுங்கி தேவர்களினுலே இது என்னது என்று பயத்தினல் பார்க்கப்பட்டவராக இருந்துகொண்டு எறிந்தாரோ பிறகு பிர்ம்ம விஷ்ணு முதலிய தேவர்களின் ஸ்துதிகளினுலே அம்முனிவர்களை ஞானவான்களாக செய்து அந்தர்தியானத்தை அடைந்தாரோ அப்படிப்பட்ட வணங்கிய வர்களின் இஷ்டத்தை அளிக்கிற குஞ்சிதாங்கிரிம். (இது சிவ தத்துவ ஸுதாநிதியில் கூறப்பட்டுள்ளது.)

सिद्धाकारप्रगुप्त स्वतनुमपि जगद्दृष्टमाहेन्द्रजालं
चित्रस्तम्भस्थितेन प्रचलितकरिणा भुक्तपुण्ड्रेक्षुखण्डम्।
क्षुत्काहारापहार भ्रमितनरपति स्तोत्रनिर्निद्रतान्तः
पद्मं.साहस्रनेत्र प्रमुखनुतपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५९

259. வித்த வடிவத்தினல் மறைக்கப்பட்ட உருவமுள்ளவரும், உலகில் பஹேந்திரஜாலம் என்கிற வித்தையை காண்பித்தவரும், அழகு வாய்ந்த ஸ்தம்பத்தில் செதுக்கப்பட்ட யானையினலே புசிக்கப்பட்ட கரும்பை உடையவரும், முக்தாஹாரத்தை அபகரித்ததினல் பிரமையை அடைந்த அரசனுடைய (பாண்டியன்) ஸ்தோத்திரத்தினல் ஸந்தோஷத்தை அடைந்தவரும் இந்திரன் முதலிய தேவாகளால் ஸ்துதிக்கப்பட்ட சரணத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம். (இக்கதைகள் திருவிளையாடற் புராணத்தில் உள்ளவை).

मौलौ गङ्गागलान्तर्गरलमहितते: कङ्कणं दोषिफाले
चन्द्रं तार्तीयनेत्रं ज्वलनसमशिखं शूलमाजं कपालम्।
भूतप्रेतादिसेना निगमभयशुनो यस्यलीला किरात
स्य.श्रेदृष्ट्वाकिरीटी भ्रमितमातरभू कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६०

260. அர்ஜுனன் விளையாட்டாக வேட உருவம் தாங்கிய யாதொரு பரமேச்வரனுடைய சிரஸில் கங்கையும், கழுத்தின் நடுவில் விஷத்தையும், கையில் ஸர்ப்பக் கூட்டங்களையும் சிரஸில் சந்திரனையும், நெற்றியில் மூன்ருவது கண்ணையும், அக்னி ஜ்வாலைபோல் கூர்மையான சூலத்தையும், பிர்ம்மகபாலத்தையும், பூதம் பிரேதம் முதலிய ஸேனைகளையும், வேதபயங்களான நாய்களையும் பார்த்து பிரமித்த புத்தியை உடையவனுக. ஆனதே அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இது பாரதத்திலுள்ளது)

कस्तूरीपङ्कलेपं मृगमदतिलकं पुष्पमालां च नूत्नां
दृष्ट्वा जात्वम्बुजाक्षी धरणिधरसुताप्यन्यथा तर्कयन्ती।
नाथेदं लक्ष्मसत्यां मयितव समभूत् ब्रहिकस्य.मुदेत्वे
त्यायान्तं निर्बवन्धाधिकशपथमरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६१

261. கஸ்தூரிப் பூச்சு ஜவ்வாது பொட்டு நூதனமான புஷ்ப மாலை இவைகளை பரமேச்வரனிடம் ஓர் ஸமயம் தாமரை பூ போன்ற கண்களை உடைய இமயபர்வதத்தின் குமாரியான அம்பிகை பார்த்து வேறுவிதமாக கருதி நாதரே இந்த அடையாளம் நான் இருக்கும்பொழுது உமக்கு எவளுடைய

ஸந்தோஷத்தின் பொருட்டு உண்டானது சொல்லும் என்று தமது அந்தப்புரத்தை அடைந்த யாதொரு பரமேச்வரனை சபதத்தோடு மிகவும் நிர்ப்பந்தித்தாளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कथ्यं कल्पद्रुकाम्यं करिवसनधरं कृष्णरक्ताङ्गवर्णं
कालातीतं कवीन्द्र कविकुलविनुतं क्लृप्तलीलाविशेषम्।
कृत्याकृत्यादिशून्यं कुमतिविरहितं कुध्रबाणासनाङ्कं
कङ्कालं कालिनृत्तप्रमुदितहृदयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६२

262. கொண்டாடத் தகுந்தவரும், கற்பகவிருக்ஷங்களினாலேயும் விரும்பத்தகுந்தவரும், யானைத்தோலை கட்டிக்கொண்டவரும், கருப்பும் சிகப்புமான வர்ணத்தை உடையவரும், காலனை அதிக்ரமித்தவரும், கவிகளுக்குள் ச்ரேஷ்டரும் கவிகளின் கூட்டங்களால் மிகவும் துதிக்கப்பட்டவரும், நிர்ணயம் செய்யப்பட்ட லீலா விசேஷத்தை உடையவரும், செய்யத் தகுந்தது செய்யத் தகாதது என்பது இல்லாதவரும், ஞானமற்றவனால் விடப்பட்டவரும், பர்வதத்தை வில்லாக உடையவரும், கங்காள ஸ்வரூபரும், காளியின் நிர்த்தனத்தில் ஸந்தோஷத்தோடு கூடினவருமான குஞ்சிதாங்கிரிம்.

सर्वेषामस्मिकर्ता प्रभुरपिजगतां पालको नाशकश्चे
त्युच्चैर्विष्णौ कदाचित्प्रलपति च मुदायस्स्वयं तत्समक्षम्।
रुद्रस्संहारमूर्तिः स्वतनुरुहततेराशु विष्णूनसंख्यान्
सृष्ट्वातदर्पवह्निं पुरभिदशमयत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६३

263. ஓர் ஸமயம் மஹாவிஷ்ணு மோகத்தினால் எல்லா உலகங்களுக்கும் நானே கர்த்தா, ரக்ஷிக்கிறவன், நாசம் செய்கிறவன், பிரபு என்று உயர்ந்துஇருக்கும்படி உளறிக்கொண்டிருக்கும் தருணம் யாதொரு திருபுரானை ஸம்ஹாரம் செய்த பரமேச்வரன் அம்மஹாவிஷ்ணுவின் முன்பாக ஸம்ஹார மூர்த்தியான ருத்திர ஸ்வரூபம் தாங்கி தனது ரோமாக்களில் இருந்து சீக்கிரமாக அளவிட முடியாததான விஷ்ணுக்களை

ஸ்ருஷ்டித்த அவ்விஷ்ணுவின் கர்வத்தைப் போக்கடித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இது சிவாஹஸ்யத்தில் கூறப்பட்டுள்ளது.)

कान्तासंहारकुप्यत्भृगुमुनिगदित भीकरंघोरशापं
नानाजन्मैकहेतुं शमयितुमनिशं पूजयन्तं मुकुन्दम्।
उत्पत्तीनां दशैव त्रिजगदभिभवद्दानवान् शिक्षितुं ते
भूयादित्यादिदेशप्रभुरतिकृपया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६४

264. தனது மனைவியைக் கொன்ற காரணம்பற்றி கோபித்த ப்ருகு முனிவரால் ஏவப்பட்டதும், பயங்கரமும் அனேக பிறவிகளுக்கு காரணமும் கொடுமையுமான சாபத்தை சமனம் செய்வதற்கு எப்பொழுதும் தன்னை பூஜிக்கிற முகுந்தனைக் குறித்து யாதொரு பரமேச்வரன் மிகவும் கிருபையோடு மூன்று லோகங்களை அவமதிக்கிற அசுரர்களை சிக்ஷிப்பதின் பொருட்டு, உனக்கு பத்து பிறவிகள் உண்டாகட்டும் என்று ஆக்ஞாபித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இது சங்கர ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது)

लीलांयस्यानभि ॥ रवभुवि यतिनायेनवेद्यन्तरस्मिन्
क्षिप्तं यावत्कपाल निरसितुमबलाद्योसदश्चास्तुवन्यम्।
पौरोडाशस्यभूयादधिकरणमिदं संयजन्तामिदानीं
इत्युक्त्वाऽदर्शिनैजं निगममयवपुः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६५

265. யாதொரு பரமேச்வரனுடைய லீலையை அறியாதவர்களும் யக்ஞவாடத்தில் யதி வேடம் பூண்ட யாதொரு பரமேச்வரனால் வேதிமத்தியில் வைக்கப்பட்ட கபாலத்தை அப்புறம் எடுத்தெறிவதில் ஸமர்த்தமில்லாதவர்களுமான தேவர்கள் யாதொரு பரமேச்வரனை ஸ்துதித்தார்களோ அப்பரமேச்வரனால் இந்த கபாலமானது புரோடாசத்திற்கு அதிகாரணமாக ஆகட்டும். இப்பொழுது யக்ஞத்தை நடத்துங்கள் என்று ஆக்ஞாபித்து வேதமயமான தனது உருவமானது காண்பிவிக்கப்பட்டதோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். (இக்கதையை பாத்ம புராணத்தில் கண்டுகொள்க.)

देवेन्द्रे वृत्रहत्यापरिभवति तदास्वर्गराज्याधिकारे
युक्तं दर्पावलीढं नहुषनरपतिं कामितारं नितान्तम्।
पौलोमीयस्य नाम्नां मननविभवतः कुम्भजातस्यशाप
व्याजान्निन्येधरां तं जनकनृपनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६६

266. ஓர் ஸமயம் தேவேந்திரன் விருத்ராஸுரனைக்கொன்ற காரணம் பற்றி உண்டான ஹத்தி தோஷத்தினால் மறைந்து இருக்கும்பொழுது அச்சமயம் ஸ்வர்க்க ராஜ்யத்தை ஆளுகிற விஷயத்தில் ஏவல் செய்யப்பட்டவனும், மதம் பிடித்தவனும், அதிக காமத்தோடு கூடினவனுமான நகுஷன் என்கிற பூலோக அரசனை இந்திராணி யாதொரு பரமேச்வரனுடைய நாமாக்களின் ஸ்மரணத்தினால் உண்டான வைபவத்தால் அகஸ்திய முனிவரின் சாபத்தை பின்பற்றி பூமியை அடையும்படி செய்தாளோ அப்படிப்பட்ட ஜனகன் முதலிய அரசர்களினால் துதிக்கப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

दिकालाद्यैर्विचिन्त्यं स्वमनुमननकृन्मान्य मद्वैतसारं
मध्याद्यन्तादि हीनं सकलजनमनो वृत्तिद्रष्टारमाद्यम्।
मायातीतं प्रशान्तं द्युतिकरमखिलज्योतिषामीश्वराख्या
वाच्यं तोजोमयं तं परमपरनटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६७

267. கிழக்கு முதலிய திக்குகள் பூதாதி காலங்கள் இவைகளால் அறியமுடியாதவரும், தனது மந்திரங்களை ஜபிக்கிறவர்களால் கொண்டாடத்தகுந்தவரும், அத்வைதஸாரரும், நடு முதல் முடிவு இல்லாதவரும், ஸகல ஜனங்களுடைய மனதில எண்ணியதை அறிந்தவரும், முதன்மையாய் உள்ளவரும், மாயையை கடந்தவரும், மிகவும் சாந்தியோடு கூடியவரும், ஸூரியன் முதலியவர்களுக்கு பிரகாசத்தை அளிப்பவரும், ஈச்வரன் என்கிற பதத்திற்கு பொருளானவரும், ஜோதி ஸ்வரூபரும், பிரஸித்தரும், உயர்ந்தவரும், தன்னைக்காட்டிலும் வேறு நடிகர் இல்லாதவருமான குஞ்சிதாங்கிரிம்.

भोगात्प्रारब्ध कर्माप्यधिकभयकरे सञ्चितागामिके द्वे
ज्ञानान्नाशं प्रयाते इति निगमवचां स्याहुरेतत्प्रसिद्धम्।

तान्यप्यालोकमात्रात् निजनटनतनोः प्राणिनां जातुदिष्ट्या
निघ्नन्यच्छन्सुखं यस्सदसिविजयते कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६८

268. பிராரப்தம் என்கிற கர்மாவானது அனுபவத்தினலே யும், மிகவும் பயத்தை செய்கிறதான ஸஞ்சிதம், ஆகாமிகம் என்கிற இரண்டும் ஞானத்தினலேயும் நாசத்தை அடைகிறதுகள் என்று வேதவாக்குகள் சொல்லுகிறதுகள். இது பிரஸித்தம். அப்படிப்பட்ட அந்த கர்மாக்களை தனது நடனவிலாஸத்தோடு கூடின உருவத்தை ஒரு ஸமயம் எதிர்சையாய் பார்த்த மாத்திரத்தினல் போக்கடித்தும் பிராணிகளுக்கு ஸகல ஸுகங் களையும் அளித்தும் யாதொரு பரமேச்வரன் ஸபையில் விளங்கு கிருரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यश्शम्भुर्भूर्भुवस्स्वर्भुवनपरिवृढैस्संस्तुतस्सत्यवादैः
यस्मात्सार्वात्म्ययोगानुभवनिपुणतां लेभिरे योगिवर्याः।
लीढालीढार्थतत्वोपनिषदविषयाकाशगोयश्शिवस्तं
प्रत्यग्ब्रह्मैक्यनिष्ठागुरुममरनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६९

269 யாதொரு சப்புவான பரமேச்வரன் பூலோகம், புவர் லோகம், ஸுவர்லோகம் இவைகளில் உள்ள பிராணிகளால் துதிக்கப்படுகிருரோ, யோகி ச்ரேஷ்டர்கள் யாதொரு பரமேச்வரனிடமிருந்து நிர்விகல்பஸமாதியின் அனுபவத்தை அடைகிருர்களோ யாதொரு பரமேச்வரன் பிரகாசமாயும் ரஹஸ்யமாயுமுள்ள பொருளை அறிவிக்கிற உபநிஷத்துகளுக்கு விஷயமாகாத ஆகாசத்தில் இருப்பவரோ அப்படிப்பட்ட ஸாக்ஷாத்தான பிர்ம்ம ஐக்கிய (ஜீவனும் பிர்ம்மமும் இரண்டா இருத்தல்) நிஷ்டைக்கு குருவும், தேவர்களால் துதிக்கப்பட்ட வருமான குஞ்சிதாங்கிரிம்.

वन्ध्याकारत्व भाजादिविचरपतिना खण्डितेष्वासकोटि
त्रुट्यद्वक्त्रास्य पुंसोवपुरतिचकितं वीक्षयन्तो निलिम्पाः।
यं स्तुत्वा यन्निदेशात्तुरगमुखयुतं तं विधायाश्विनीभ्यां
चक्रुयशं यथावत्तमपिनटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७०

270. காயான் உருக்கொண்ட இந்திரனால் துண்டித்த வில்லின் நுனியால் வெட்டப்பட்டவனும் சிரஸு அகன்றவனுமான (யக்ஞ) புருஷனின் சரீரத்தை மிகவும் பயத்தோடு பார்த்தவர்களான தேவர்கள் யாதொரு பரமேச்வரனை துதித்து அவர் ஆக்ஞையினால் அந்த (யக்ஞ) புருஷனை அச்வினீ தேவர்களைக் கொண்டு குதிரை முகத்தை சேர்த்து உயிர்பித்து சாஸ்திரப் பிரகாரம் வேள்வியை செய்தார்களோ அப்படிப்பட்ட நடபதியான குஞ்சிதாங்கிரிம்.

இக்கதை வேதத்தில் கூறப்பட்டுள்ளதே. ஒரு ஸமயம் தேவர்கள் ஒரு யாகத்தை அனுஷ்டித்தார்கள். அத்தருணம் யக்ஞபுருஷன் நாணேற்றின வில்லை கழுத்தில் ஊன்றிக்கொண்டு பெரிய உருவத்துடன் அத்தேவர்கள்முன் தோன்றினான். அப்புருஷனைக்கண்டு பயந்த இந்திரன் கரயான் உருக்கொண்டு அவ்வில்லின் நாணைத் துண்டித்தான். பிறகு அவ்வில் நிமிர்ந்து அப்புருஷனின் தலையை கொய்தது. இதுகண்டு பயந்த தேவர்கள் பரமசிவனை துதித்தார்கள். அத்தருணம் பரமசிவன் மிகுந்த தயவோடு அவர்கள் முன் தோன்றி குதிரையின் தலையை அவ்வுடலோடு சேருங்கள், அப்புருஷன் உயிர்பெருவான் என்று ஆக்ஞாபித்தருளி மறைந்தனர். பிறகு தேவர்கள் அச்வனிதேவர்களைக்கொண்டு அவ்வாறு செய்து யாகத்தை முறைப்படி நடத்தி முடித்தார்கள்.

स्वामिन्कृष्णात्रयुद्धे कनकमयतनुर्भूतिमान् शूलपाणिः
वक्त्रादग्निस्फुलिङ्गान्रणभुवि विकरन्सञ्चरत्यद्वितीयः।
कोऽयं ब्रूहीतिपार्थे वदतिसविनयं वासुदेवोमुहूर्तं
योगात् ध्यात्वाऽब्रवीद्यच्चरितमनुपमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७१

271. ஓ ஸ்வாமின், ஏ கிருஷ்ணா இந்த யுத்தரங்கத்தில் தங்கம் போன்ற சரீரமுள்ளவரும், விபூதி அணிந்தவரும், சூலம் ஏந்தியவரும், முகத்தில் இருந்து நெருப்புப் பொறிகளை பூமியில் வாரி இறைக்கிறவரும், இரண்டாம்பேர் இல்லாதவருமான ஓர் புருஷன் உலாவுகிறார். அவர் யார் சொல்லும் என்று வினயத்தோடு வேண்டின அர்ஜுனனிடம் வாஸுதேவர்

ஒரு முஹூர்த்தகாலம் யோகத்திலுல் தியானம் செய்து யாதொரு பரமேச்வரனுடைய மாஹாத்மியத்தைச் சொன்னரோ அப்படிப்பட்ட உபமானம் இல்லாதவரான குஞ்சிதாங்கிரிம். (இக்கதை பாரதம் துரோண பர்வாவில் கூறப்பட்டுள்ளது.)

सत्यं ब्रह्मैवनान्यज्जगदिदमखिलं चेतिमीमांसयित्वा
ध्यायन्तोऽस्यावुधेन्द्राहृदिचयमनिशं चिद्धनं दुर्निरीक्ष्यम्।
दीपज्वालाशिखावत्सततपरिचयानन्दनृत्तं विमायं
शुभ्रं पश्यन्ति तत्सत्पदविषयमरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७२

272. பிர்மம் ஒன்று தான் உண்மையான பொருள். வேறான இந்த உலகு யாவற்றும் உண்மையான பொருள் அல்ல (பொய்யே) என்று வேதாந்தங்களில் சொல்லப்பட்ட வசனங்களினலே விசாரணை செய்து ஞானிகள் (வித்துவான்கள்) ஹிருதயத்தில் எப்பொழுதும் ஞானஸ்வருபரும் ஊனக் கண்ணினுல் பார்க்க முடியாதவரும், தீபத்தின் ஜ்வாலாக்கிரம்போல எப்பொழுதும் செய்யப்பட்ட ஆனந்த நடன விலாஸரும், மாயை அற்றவரும், வெளுத்த வர்ணருமான யாதொரு பரமேச்வரனை பார்க்கிறுர்களோ அப்படிப்பட்ட தத், ஸத் என்கிற சப்தத்திற்கு வாச்சியாரான குஞ்சிதாங்கிரிம்.

विद्यामग्नौप्रतिष्ठां पयसि च धरणौ योनिवृत्तिं समीरे
शान्त्याख्यां शान्त्यतीतां नभसिनिजकलां योजयन्ह्यप्रमेयः।
सूक्ष्मात्सूक्ष्मान्तरङ्गे दहरकुहरचित्पुण्डरीकाख्यवेश्म
न्यन्तश्चिन्मात्ररूपं रचयति नटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७३

273. யாதொரு பரமேச்வரன் அக்கினியில் தனதான வித்தியா கலையையும், ஜலத்தில் பிரதிஷ்டா கலையையும், பூமியில் நிவர்த்தி கலையையும், வாயுவில் சாந்தி கலையையும், ஆகாசத்தில் சாந்தியதீதா என்கிற கலையையும் சேர்த்துவைத்து ஊகிக்கப் படாதவராய் மிகவும் சிறிதான தஹரகுஹரம் என்றும், புண்டரீகம் என்றும் பெயருள்ள வீட்டின் உட்புரத்தில் ஞான ஸ்வரூபமான நடனத்தைச் செய்கிறுரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सौवर्णे विष्टरे यः कनकघटनिभौ स्वप्रियायाः स्तनौद्वौ
पश्यन्लिलाकटाक्षैः करजलजवरैर्मण्डयन्सप्रमोदम्।
अध्यासीनः पुरस्तान्मणिमुकुरगतं स्वानुबिम्बं शिवायाः
तुष्ट्यै चाहूतवान् श्रीविनुतनिजपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७४

274. யாதொரு பரமேச்வரன் தங்கமயமான ஆஸனத்தில் வீற்றிருந்து அம்பிகையின் ஸ்வர்ணகடம் போன்ற இரண்டு ஸ்தனங்களை லீலாகடாக்ஷத்தால் பார்த்தும் ஸந்தோஷத்துடன் தாமரைப்போன்ற கைகளினல் அலங்கரித்தும் முன்புறத்தில் உள்ள மணிமயமான கண்ணுடியில் பிரதிபலிக்கிற தனது பிரதிபிம்பத்தை அம்பிகையின் ஸந்தோஷத்தின் பொருட்டு அழைப்பித்தாரோ அப்படிப்பட்ட லக்ஷ்மியினல் துதிக்கப்பட்ட திருவடியை உடைய குஞ்சிதாங்கிரிம்,

இதனுல் சுந்தரமூர்த்தி நாயனரின் உற்பத்தியானது கூறப் பட்டுள்ளது.

भूवाय्वाकाशतोयज्वलनरवि शशी यज्वरूपैः प्रपञ्चं
योधत्ते मस्करीन्द्रैश्च्युतमलहृदयैस्सेव्यतेयस्तुरीयः।
हंसाभिख्योऽद्वितीयः स्वगतनिखिलविध्यण्डजालोहिरण्य
श्मश्रुस्तं शान्तकल्पं नियतिपदभर कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७५

275. பூமி, காற்று, ஆகாசம், ஜலம், அக்கினி, ஸூரியன், சந்திரன், யாகம் செய்த அந்தணன் இவைகளின் உருவங் களால் உலகத்தை யாதொரு பரமேச்வரன் தரிக்கிருரோ, மலம் அகன்ற ஹிருதயத்தை உடைய சன்யாஸிகளால் வணங்கப் படுகிருரோ, துரியரோ, ஹம்ஸம் என்கிற பெயர் உள்ளவரோ, தனியரோ, தன்னிடம் அடக்கப்பட்ட ஸகல பிர்ம்மாண்ட கூட்டங்களை உடையவரோ, தங்க மீசைகளை தரித்தவரோ அப்படிப்பட்ட சாந்தமான இச்சையை உடையவரும், நியதி என்கிற பதத்தை தரிப்பவருமான குஞ்சிதாங்கிரிம்.

योऽदात्तेजोत्तमाङ्गामृतकिरणसुधा मण्डपिण्डीकृताङ्गं
तेजोभञ्जेन्दुवह्नियुमणिघनरुचिज्योतिषं हीरकल्पम्।

नित्यं देदीप्यमानं प्रतिसमयमपि स्वस्यपूजां विधातुं
लिङ्गं विप्रेषुमोदात् भवभयहरणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २७६

(யோதாங்கைஜோத்தமாங்காதப்ருதகர ஸுதாபஸ்டபிண்டீ
[க்ருதாங்கம்
தேஜோபக்நேந்துவஹ்நித்யுமணிகருசிஜ்யோதிஷப் ஹீரகல்பம் ।
நித்யம் தேதீப்யமானம் ப்ரதிஸமயமபி ஸ்வஸ்யபூஜாம் விதாதும்
லிங்கம் விப்ரேஷுமோதாத் பவபயஹரணம் குஞ்சிதாங்கிரிம்
[பஜேஹம் ॥)

அவதாரிகை:— 15-வது சுலோகத்தில் கூறப்பட்டுள்ள சந்திரமௌளீச்வர லிங்கத்தின் உற்பத்தியை இங்கு நன்கு கூறுகிறார்.

* 276. யாதொரு பரமேச்வரன் தனது சிரஸில் உள்ள சந்திரனுடைய அமிர்த நுரையினால் பிடிக்கப்பட்டதும், காந்தியால் அடக்கப்பட்ட சந்திரன், அக்கினி, ஸூரியன், மின்னல் இவைகளுடைய பிரகாசத்தை உடையதும், வைரத்திற்கு ஒப்பானதும், எப்பொழுதும் பிரகாசிக்கிறதுமான லிங்கத்தை (சந்திரமௌளீச்வரர் என்கிற ஸ்படிகலிங்கத்தை) ஒவ்வொரு காலங்களிலேயும் தன்னை பூஜிப்பதற்காக ஸந்தோஷத்துடன் (திருஸஹஸ்ர முனிச்வராள் என்கிற) பிராம்மணர்களிடம் கொடுத்தாரோ, ஸம்ஸார பயத்தைப் போக்கடிப்பவரான குஞ்சிதாங்கிரிம்.



॥ श्री चन्द्रमौलीश्वराय नमः ॥

* हैमेसंसदि पुण्डरीकपुरी यत्संस्थं वरं स्फाटिकं
लिङ्गं शङ्करदेशिकेन्द्रयतिना दत्तश्च तत्स्थापितम्।
इत्येवं वदतां मनोगततमः प्रोज्झार्थुमुद्बोधतः
सम्बन्धादिसुगीति युक्तिकिरणैराविष्कृतोभास्करः ॥

अस्मत्पूर्वकुलोद्भवा गुरुवराः श्रीतातपादादयः
पूर्वं शङ्करजन्मतोपि सुतरामद्वैतिनोऽसंशयम् ।
सोऽहं तत्कुलजन्मभागपि गुरोर्भक्तस्तथा चन्द्रभृन्
मौलीशस्य पुरातन प्रकटनं कुर्वेपुराणोक्तिभिः ॥

ஸ்ரீசிதம்பரம் ஸ்ரீசித்ஸபையில் ஸ்ரீ நடராஜருக்கு பிரதிநிதியாக ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் என்கிற ஸ்படிகலிங்கம் அளவுகடந்த காலமாக தில்லைவாழந்தணர்களால் வைதீக முறைப்படி ஒவ்வொரு நாளும் பூஜித்து வருகிறது. உலகு நன்கு அறியும்.

இச்சந்திரமௌளீச்வர லிங்கத்தை ஆதிசங்கரரளித்தார் என்று சிலர் கூறுகின்றனர். அவ்வாதி சங்கரரின் சரித்திரங்கள் பற்பல உள. அவைகள் அவரிடம் அன்பு மிகுதியால் இயற்றப்பட்டவை. ஆனதால் ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ளவைகளே. இவைகளில் ஆனந்தகிரி என்பவரால் இயற்றப்பட்ட ஓர் சங்கர விஜயமும் காணப்படுகிறது.

ஆனந்தகிரி என்பவர் ஆதிசங்கரருக்கு ஸாக்ஷாத் சிஷ்யராவர். இவ்வானந்தகிரியைப்பற்றி வித்யாரண்ணியர் என்பவரால் இயற்றப்பட்ட சங்கர விஜயத்தில் புகழ்ந்து கூறுதலும் காணப்படுகிறது. அவ்வானந்தகிரி சங்கர விஜயத்திலும், மற்றவைகளிலும் இச்சந்திரமௌளீச்வர லிங்கத்தை ஆதி சங்கரர்சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஸபையில் பிரதிஷ்டை செய்தார் என்றோ அல்லது கொடுத்தார் என்றோ காணப்படவில்லை.

சிவரஹஸ்யத்தில் உள்ள சங்கர சரித்திரத்தில் ஸ்ரீ சங்கரர் காசி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ விச்வநாத லிங்கத்திலிருந்து ஆவிர்ப்பவித்த பரமேச்வரனிடமிருந்து ஐந்து ஸ்படிக லிங்கங்களை பெற்றாரென்று கூறப்படுகிறது.

சித்விலாஸ சங்கர விஜயத்தில் ஸ்ரீ கோவிந்தபகவத் பாதரிடமிருந்து ரத்னகற்ப கணபதியையும், சந்திரமௌளீச்வரர் என்னும் ஒரு லிங்கத்தையும் பெற்றுக்கொண்டார் என்று காணப்படுகிறது.

கோகர்ண க்ஷேத்திரத்தில் ஸ்ரீகண்டாசாரியாரிடமிருந்து ஒரு ஸ்படிகலிங்கத்தை அடைந்தார் என்று ஸ்ரீகண்ட சரித்திரம் கூறுகிறது. பிறகு அவ்விலிங்கங்களை எந்த எந்த இடங்களில் ஸ்தாபித்தார் என்பது பற்றி ஒரு சங்கர விஜயத்திலும் கூறப்படவில்லை.

இது நிற்க, பிரம்ஹாண்ட புராணத்தில் ஒரு பிரிவு மார்க்கண்டேய ஸம்ஹிதை என்றும் அதில்,

शिवलिङ्गं प्रतिष्ठाप्य चिदम्बर सभातले।
मोक्षदं सर्वजन्तूनां भुवनत्रय सुन्दरम्॥

சிவலிங்கம் ப்ரதிஷ்டாப்ய சிதம்பர ஸபாதலே।
மோக்ஷதம் ஸர்வஜந்தூநாம் புவநத்ரய ஸுந்தரம்॥

சிதம்பர ஸபையில் எல்லாப் பிராணிகளுக்கும் மோக்ஷத்தை அளிக்கிறதும் மிகவும் அழகுவாய்ந்ததுமான சிவலிங்கத்தை (ஸ்படிகலிங்கத்தை) பிரதிஷ்டை செய்தார் என்கிற பிரமாணத்தை ஒரு புதிய சரித்திரம் அறிவிக்கிறது.

பிரம்ஹாண்டபுராணம் பன்னிருயிரம் சுலோகங்கள் கொண்டது. அதன் லக்ஷணத்தை நாரதீய புராணம் கூறுகிறது.

शृणुवत्स प्रवक्ष्यामि ब्रह्माण्डाख्यं पुरातनम्।
यत्रद्वादशसाहस्रं भाविकल्प कथायुतम्॥
प्रक्रियाख्योऽनुषङ्गाख्य उपोद्घातस्तृतीयकः।
चतुर्थ उपसंहारः पादाश्चत्वार एवहि॥
पूर्वपादद्वयं पूर्वोभागोऽत्र समुदाहृतः।
तृतीयो मध्यमो भागश्चतुर्थस्तूत्तरोमतः॥ इति॥

ச்ருணுவத்ஸ ப்ரவக்ஷ்யாமி பிரம்ஹாண்டாக்யம் புராதநம்
யத்ரத்வாதச ஸாஹஸ்ரம் பாவிகல்ப கதாயுதம்॥
ப்ரக்ரியாக்யோ(அ)நுஷங்காக்ய உபோதகாத ஸ்த்ருதீயக:।
சதுர்த உபஸம்ஹார: பாதாச்சத்வார ஏவஹி॥

பூர்வபாசத்வயம் பூர்வோபாகோத்ர ஸமுதாஹ்ருத: 1
த்ருதீயோமத்யமோபாகச் சதுர்தஸ்த்வுத்தரோபத: ‖ இதி.

ஏ குழந்தாய்! எதில் பன்னீராயிரம் சுலோகங்கள் உள்ளதோ, வரப்போகிற கற்பங்களின் கதைகள் கூறப்பட்டதுகளோ, அப்படிப்பட்ட பிராசினமான பிர்ஹாண்டம் என்று பெயருள்ள புராணத்தை சொல்லுகிறேன் கேள். அதில் 1. ப்ரக்ரியாபாதம், 2. அநுஷங்கபாதம். 3. உபோத்காதபாதம், .4 உபஸம்ஹாரபாதம் என்று பெயருள்ள நான்கு பாதங்கள் உள்ளவை. முதல் இரண்டு பாதங்களை பூர்வபாகம் என்றும், மூன்ருவது பாதத்தை மத்யமபாகம் என்றும், நான்காவது பாதத்தை உத்திரபாகம் என்றும் கூறப்படுகிறது.

இந்த லக்ஷணத்தில் மார்க்கண்டேய ஸம்ஹிதை என்கிற பேச்சே காணப்படவில்லை. லலிதோபாக்யானம், நாஸிகேதோபாக்யானம்போல் இம் மார்க்கண்டேய ஸம்ஹிதையையும் இப்பிர்ஹாண்ட புராணத்தின் கிலபாதத்தில் சேர்ந்ததாக ஒப்புக்கொண்டால் சிதம்பர ரஹஸ்யம், தஹரவித்யாகண்டம், தில்வாரண்ணிய மாஹாத்மியம் முதலிய புராணங்ளிலுள்ள பிரமாணங்கள் முறணுகின்றன.

चिदम्बररहस्ये

कुत्रपूजां प्रकुर्यामिइति चिन्ता समाकुलान्।
त्रिसहस्रद्विजान् ज्ञात्वा देवोदभ्र सभापतिः॥
निजचन्द्रसुधामण्ड मादायस्वयमुत्तमम्।
चन्द्रमौलीश्वराभिख्यं लिङ्गं स्फाटिकमात्मनः॥
निर्मायतेभ्यो विप्रेभ्योददौ काञ्चनसंसति॥ इति॥

குத்ரபூஜாம் ப்ரகுர்யாப இதி சிந்தாஸமாகுலான் 1
த்ரிஸஹஸ்ரத்விஜான் ஜ்ஞாத்வா தேவோதப்ர ஸபாபதி: ‖
நிஜசந்திரஸுதாமண்ட மாதாயஸ்வயமுத்தமம் 1
சந்திரமௌளீச்வராபிக்யம் லிங்கம் ஸ்பாடிகமாத்மந: ‖
நிர்மாயதேப்யோ விப்ரேப்யோ ததௌகாஞ்சஸஸ்ஸதி ‖

ஆதி காலத்தில் தில்லைவாழந்தணர்கள் நிருகாரனை பரமேச்வரனை எங்கு எவ்வாறு பூஜைபுரிவோமென்று ஸந்தேஹத்தோடு இருக்கும் தருணம் தேவரான ஸ்ரீ நடராஜர் இவர்களின் ஸந்தேஹத்தை அறிந்து தனது சந்திரகலையின் அமிர்தநுரையை எடுத்து சந்திரமௌளீச்வரர் என்று பெய ருள்ள ஸ்படிகமயமான ஆத்ம லிங்கத்தை உண்டுபண்ணி அத்தில்லை மூவாயிரவர்களிடம் பொற்சபையில் அளித்தனர்.

आत्मनः ஆத்மந: என்கிற பதப்ரயோகத்தால் இது ஆத்ம லிங்கம் என்றும் சந்திரனின் அமிருதநுரையிலிருந்து உண் டானதால் சந்திரமௌளீச்வரர் எனறும் கூறுவதாயிற்று.

दहरविद्याखण्डे

निजोत्तमाङ्गस्थित चन्द्रबिम्बात् मण्डं समादाय विभुस्सुधायाः।
निर्माय लिङ्गं रजतोपलाङ्गं ददौतदा संसदि चन्द्रचूडः॥ इति॥

நிஜோத்தமாங்கஸ்தித சந்திரபிம்பாத் மண்டம் ஸமாதாய விபுஸ் [ஸுதாயா:।
நிர்மாயலிங்கம் ரஜதோபலாங்கம் ததௌததா ஸம்ஸதி சந்திர [சூட:॥ இதி.

ஸபையில் சந்திரசூடரான ஸ்ரீ நடராஜர் தனது சிரஸி லுள்ள சந்திர பிம்பத்திலிருந்து அமிருதநுரையை எடுத்து வெள்ளிக்கல் போன்ற லிங்கத்தை சிருஷ்டித்து அளித்தனர்.

तिल्वारण्यमाहात्म्ये

लिङ्गमेकं स्थितंदृष्ट्वा हैमेसंसदिशूलिनः।
पुरस्ताद्देवदेवस्य त्रिसहस्र मुनीश्वराः॥
किमेतदितिभूयोपि सन्दिहानाः परस्परम्।
बभूवुश्च तदादेवः प्रोवाच वचनं मधु॥
मयास्रष्टमिदं लिङ्गं स्फाटिकं सर्वकामदम्।
यूयमत्रैव सदसियजत श्रद्धयाक्रमात्॥

லிங்கமேகம் ஸ்நிதம் த்ருஷ்ட்வா ஹைமே ஸப்ஸதி ருசிர: ।
புரஸ்தாத் தேவதேவஸ்ய த்ருஸஹஸ்ர முநீச்வரா: ॥

இதமேதிதி பூயோபி ஸந்திஹாநா: பரஸ்பரம் ।
பபூவுச்சததா தேவ: ப்ரோவாச வசனம் புது ॥

மயாஸ்ருஷ்டமிதம் லிங்கம் ஸ்பாடிகம் ஸர்வகாமதம் ।
பூயமத்ரைவ ஸதஸி யஜத ச்ரத்தயாக்ரமாத் ॥

சித்ஸபையில் ஸ்ரீ நடராஜருக்கு முன்பாக லிங்கத்தைப் பார்த்து தில்லைவாழந்தணர்கள் ஒருவருக்கு ஒருவர் இது எவ்விடமிருந்து வந்தது என்கிற ஸந்தேஹத்தோடு கூடியவர்களாக ஆனார்கள். அவ்வமயம் ஸ்ரீ நடராஜர் ஸர்வ இஷ்டங்களையும் அளிக்கிறதும், ஸ்படிகமயமுமான இவ்விலிங்கம் என்னால் உண்டுபண்ணப்பட்டது. நீங்கள் இச்சபையில் சிரத்தையோடு கிரமமாக பூஜை செய்யுங்கள் என்று இனிமையாக கூறி அருளினர்.

श्रीमताभगवता पतञ्जलिनाकृत पूजासूत्रेपि एतल्लिङ्गस्य
पूजादिकं सर्वंसमाम्नातम् ॥

ஸ்ரீமதாபகவதா பதஞ்ஜலிநாக்ருத பூஜாஸூத்ரேபி
ஏதல்லிங்கஸ்ய பூஜாதிகம் ஸர்வம் ஸமாம்நாதம் ॥

ஸ்ரீ பதஞ்ஜலி முனிவரால் இயற்றப்பட்ட ஸ்ரீ நடராஜரின் நித்திய பூஜா ஸூத்திரத்திலும் இந்த லிங்கத்தின் பூஜை முதலியவை கூறப்பட்டுள்ளவைகளே.

किञ्चभगवान् जैमिनिरपि वेदपादस्तवे ४०

ईश्वरं तमहं वन्दे यस्यलिङ्ग महर्निशम् ।
यजन्ते सहभार्याभिरिन्द्रज्येष्ठा मरुद्गणाः ॥ इत्याह ॥

अत्रयस्य लिङ्गमित्यनेन श्रीचन्द्रमौलीश्वराभिधं स्फाटिकं लिङ्गमेव निर्दिष्टवानिति अन्ते विनायक सुब्रह्मण्य देवीनां पृथङ्निर्देश स्वारस्या दवगम्यते ॥

பின்னும் ஜைமினி முனிவரும் வேதபாதஸ்தவத்தில்

நச்வரம் தமஹம் வந்தே யஸ்யலிங்க மஹர்நிசம் |
யஜந்தே ஸஹபார்யாபிரிந்த்ரஜ்யேஷ்டா மருத்கணா: ||

யாதொரு பரமேச்வரனின் லிங்கத்தை இரவிலும் பகலிலும் இந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் தங்கள் பத்னிகளோடுகூட பூஜை செய்கிறார்களோ அப்படிப்பட்ட ஸ்ரீ நடராஜரை நமஸ்கரிக்கிறேன் என்று கூறுகிறார்.

இதில் லிங்கம் என்று ஸ்ரீ சந்திரமௌளீச்வர ஸ்படிக லிங்கத்தையே குறிப்பிடுகிறார் என்பது கடையில் விநாயகர், ஸுப்பிரமணியர், அம்பிகை இவர்களை தனிமையாய் கூறும் காரணத்தால் அறியப்படுகிறது.

ஜைமினி முனிவர் ஸ்ரீ பதஞ்ஜலி முனிவருடன் கூடினவர். இத்துதியால் ஸபையில் பரமனை போற்றும் தருணம் ஸ்ரீ நடராஜருக்கு முன்பாக இந்த ஸ்படிக லிங்கம் கண்ணுக்கு புலனானது. உடன் அதை பரமனுடைய லிங்கமாக கருதிப் போற்றினார். பிறகு விநாயகர், ஸுப்பிரமணியர், தேவீ இவர்கள் உருவங்கள் காணப்பட்டன. அவைகளையும் துதித்தார். பரமனது அருளையும் பெற்றார்.

கண்ணப்பரின் பூசனையை நேரில் கண்டுகளித்த சிவ கோசரரின் புதல்வரான திரிலோசன சிவாசாரியர் (கண்ணப்பரின் ஸமகாலத்தவர்) க்ஷேத்ராடன கதியால் சிதம்பரமடைந்து மற்ற க்ஷேத்திரங்களைப்போல் இவ்விலிங்கத்தை ஸ்வயம் பூஜிக்க அர்ஹதை இல்லாத காரணம் பற்றி வருந்தினர் என்று சிதம்பர ரஹஸ்யத்தின் பிரிவான சிதம்பர ஸாரம்,

वायुतेजो वारिपृथ्वीलिङ्गानि समपूजयम् ।
नत्वाकाशमयं लिङ्गं भोगमोक्ष प्रदंजवात् ॥

வாயுதேஜோ வாரிப்ருத்வீ லிங்கானி ஸமபூஜயம் |
நத்வாகாசமயம் லிங்கம் போகமோக்ஷ ப்ரதம்ஜவாத் ||

(காளஹஸ்தி, அருணை, திருவானைக்கா, திருவாரூர் இந்த க்ஷேத்திரங்களிலுள்ள லிங்கங்களை ஸ்வயமாக பூஜித்தேன். இச்சிதம்பரத்திலுள்ள போகமோக்ஷத்தை அளிக்கிற ஆகாச லிங்கத்தை (சந்திரமௌளிச்வர ஸ்படிகலிங்கத்தை) மட்டும் ஸ்வயமாக பூஜிக்கவில்லை) என்று கூறுகிறது.

(இந்திரலோசனர் தான் பிறகு உமாபதிசிவமாக அவதரித்தவர்).

மானுடராக்கை வடிவு சிவலிங்கம்
மானுடராக்கை வடிவு சிதம்பரம்
மானுடராக்கை வடிவு சதாசிவம்
மானுடராக்கை வடிவு திருக்கூத்தே.

என்ற திருமூலர் திருமந்திரங் கூறும், (1726)

மானுடவடிவமான சிதம்பரத்தில் சித்ஸபையில் விளங்காநின்ற சிவலிங்கம் சந்திரமௌளிச்வர ஸ்படிகலிங்கம். ஸதாசிவரூபமே. அதன் நாதாந்தத்திலுள்ளது திருக்கூத்தே. ஸ்ரீ நடராஜமூர்த்தியின் உருவமே என்று பூஜாபாதஞ்ஜல மரியாதையின் பொருளை உணர்த்துகிறது.

திருமூலர் ஸ்ரீ பதஞ்ஜலியின் காலத்திலுள்ளவர் என்று

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்றுதொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடெண் மருமாமே. (67)

என்னும் திருமந்திரத்தால் அறியப்படுகிறது,

திருஞானஸம்பந்தரும், (3-1-7)

சாதிபார் பளிங்கின்னேடு வெள்ளிய
சங்கவார் குழையாய் திகழப்படும்
வேதியா விகிர்தா விழவாரணி தில்லைதன்னு

ளாதியார்கிடமாய சிற்றம்பல மங்கை
யாற்றொழுவல் லடியார்களை வாதியாதகலுங்
கலியா மலி இவ்வினையே.

என்றும் பாசுரத்தில் குறிப்பிடுகிறார்.

சாதியில் உயர்ந்த ஸ்படிக லிங்கத்தோடு வெண்மையான சங்கம்-வார் தண்ணீர் நிறைந்த, குழைபோன்ற-வட்டமான பாத்திரங்கள் (அர்க்யவட்டகைகள்) இவைகளோடு விளங்குபவன் என்றும் பொருள் தோன்றுகிறது. ஏனெனில் ஸ்ரீ ஸம்பந்தர் ஸ்ரீ நடராஜரை தரிசிக்கும் தருணம் அவரது முன்பாக இவைகள் பிரகாசிக்கின்றபடியால்

'நீலத்தார்கரிய மிடற்றார் நல்லநெற்றிமேலுறை கண்ணினார்'
(3-1-3)

என்னும் பாசுரத்தில் தில்லைவாழந்தணர்களை சிறப்பித்தது போல், இச்சந்திரமௌளீச்வர லிங்கத்தையும், சங்கம் முதலியவைகளையும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ஸ்ரீ நடராஜப் பெருமானது திருநீறு பூசப்பெற்ற திருவுருவத்தினைப் பொதுவாகவும் தில்லையம்பலத்தில் தூயப் பளிங்கினாலமைந்து காலங்கள்தோறும் தில்லைவாழந்தணர்களால் திருமஞ்ஜனம் செய்து பூசிக்கப்பெறும் சந்திரமௌளீச்வரராகிய சிவலிங்கத் திருவுருவத்தினை சிறப்பாகவும் குறித்து நிற்றல் அறிந்து மகிழத்தக்கதாகும்.

ஸ்ரீ திருஞானஸம்பந்தரைப்பற்றி ஸ்ரீ சங்கரர் सौन्दर्यलहरी (ஸௌந்தர்யலஹரீ) என்னும் அம்பிகையின் வடமொழி ஸ்தோத்திரத்தில் (75 சு.)

तवस्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयः पारावारं परिवहति सारस्वतमिव।
दयावत्यादत्तं द्रविडशिशुरास्वाद्य तवयत्
कवीनां प्रौढानामजनिकमनीयः कवयिता ॥

தவஸ்தன்யம் மன்யே தரணிதரகன்யே ஹ்ருதயத:
பய: பாராவாரம் பரிவஹதி ஸாரஸ்வதமிவ |
தயாவத்யா தத்தம் த்ரவிட சிசுராஸ்வாத்ய தவயத்
கவீநாம் ப்ரௌடாநாமஜநிகமநீய: கவயிதா ||

என்று புகழ்ந்து கூறுகிறார். द्रविडशिशुः (த்ரவிடசிசு:) என்பது ஸம்பந்தரைக் குறித்ததே.

அச்சௌந்தர்யலஹரியை தென்மொழியில் இயற்றிய வீரை கவிராஜபண்டிதரும்,

தருணை மங்கலை யுனது சிந்தை
தழைந்த பாலமு தூறினு லருணகொங்கையி
லதுபெருங்கவி யலைநெ டுங்கடலாகுமோ
வருண நன்குறு கவுணியன் சிறு மதலை
யப்புயல் பெருகியே பொருணயப்பெரு
கவிதை யென்றொரு புனிதமாரி பொழிந்ததே.

(ஸௌந்தர்யலஹரி பா. 74-ல்) ஸம்பந்தர் என்று நன்கு வலியுறுத்துகிறார்.

द्रविडशिशुः (த்ரவிடசிசு:) என்னும் பதத்திற்கு ஆதிசங்கரரே அர்த்தர்என்று லக்ஷ்மீதரர் கூறுகிறார். அது ஸ்ரீ ருத்திரத்தில் व्युप्तकेशाय (வ்யுப்தகேசாய) என்னும் பதத்திற்கு அபினவ சங்கரர், ஆதிசங்கரபரமாக கூறுவதுபோல் பக்தி அதிசயத்தை உணர்த்துவதாகும்.

ஒரு சங்கரவிஜயத்திலாவது அவ்விதம் சங்கரர் தேவியின் ஸ்தன்னியத்தை பானம் பண்ணினார் என்று காணப்படவில்லை.

திருஞானஸம்பந்தர் ஸமகாலத்திலுள்ள அப்பர் ஸ்வாமிகளும் (திருமுறை 1 கோயில் திருவிருத்தம் 9.)

பலிதேர்ந்துழலும் விடங்கர்வேட சின்னத்தினன்
மலிதில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்.

என்று கூறுகிறார்.

விடங்கர் என்பது உளிபடாமூர்த்தியைப் பொருளாய் கொண்டபோதிலும் பரமேச்வரனுல் சந்திரகலையின் அமிருத நுறையில் இருந்து உண்டான காரணம்பற்றி உளிபடாத இச்சந்திரபௌளீச்வர ஸ்படிகலிங்கமாகிற விடங்க வேடத்தை சின்னமாய்க் கொண்டவன் என்றும் பொருள் உணரப்படுகிறது.

திருவாரூர், திருநள்ளாறு, திருவெண்காடு விருத்தாசலம் முதலிய க்ஷேத்திரங்களில் பூஜிக்கப்படுகிற ஸ்படிகலிங்கங்களை விடங்கர் என்றே கூறுகின்றனர். ஆகையால் திருஞான ஸம்பந்தர், அப்பர் இவர்கள் ஆதிசங்கரருக்கு முற்பட்டவர்கள் என்பது பற்றி ஸந்தேகமில்லை.

இவ்விருவர்களுக்கும் முந்தின காலத்தில் அவதரித்த ஸ்ரீ மணிவாசகப் பெருந்தகையும் "தேசப்பளிங்கின்றிரளே போற்றி" என்று இவ்விலிங்கத்தை பரமனது உருவமாக போற்றுகிறுர்.



இது நிற்க ஆதிசங்கரர் ரத்னஸபாபதியையும் அளித்த னர். சிதம்பரயந்திரத்தையும் வரைந்தனர் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனல் மார்க்கண்டேய ஸம்ஹிதைபோல் வேறு ஸம்ஹிதையின் பிரமாணக் கூறுதல் காட்டப்பட வில்லை. இந்த ரத்தினஸபாபதி முன்னொரு ஸமயம் கீழ்க் கோதாவரி தீரத்திலுள்ள அந்தர்வேதி என்கிற க்ஷேத்திரத் தில் பிர்ம்மா ஒரு யாகம் செய்தார். அத்தருணம் ஸதஸ் யாளாக இருந்த தீக்ஷிதர்களின் பிரீதியின் பொருட்டு ஆஹ வநீய குண்டத்திலிருந்து பரமேச்வரனுல் உண்டுபண்ணப் பட்ட-து என்று சிதம்பர ரஹஸ்யத்திலும், அந்தர்வேதி

மாஹாத்மியத்திலும் கூறினதைத் தழுவி இத்துதியில் 16வது சுலோகத்திலும் விளக்கப்பட்டதே.

இம்மூர்த்தியை மணிவாசகரும் "மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை" (திருப்பேர்சுன்னம் பா. 12ல்) என்று பரமனது அபேதஉருவமாகவும் குறிப்பிடுகிறார்.

மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத்துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடுந்திருக்கூத்தைப்
பேணித்தொழு தென்னபேறு பெற்றாரே. (131)

என்கிற திருமந்திரமும் இம்மூர்த்தியைக் குறித்ததே.

அங்குஷ்ட மாத்திரன், பிருதேச மாத்திரன், புருஷ ஸர்மிதன் என வேதக் கூறுதலுக்கு அதிபூதத்தில் சந்திர மௌளிச்வர லிங்கம், ரத்தினஸபாபதி ஸ்ரீ நடராஜமூர்த்தி இம்மூன்று திருமேனிகளும் அர்த்தமென்று ஆன்றோர்களின் மொழிகளைத் தழுவி இம்மூன்று மூர்த்திகளும் அபேதமாயும், பேதமாயும் திருமுறைகளில் கூறப்பட்டுள்ளன. அக்கூறு களுக்குப் பலவாறாக அர்த்தங்கள் அவரவர் அறிவுக்கேற்ற வாறு விளங்குகின்றன. வேதத்திற்கொப்பானதால் சாத்திர இலக்கணங்களை ஆன்றோர்கள் திருமுறை விஷயத்தில் துணைகொள்வார்கள். இம்மூன்று உருவங்கள் ஸ்தூல ஸூக்ஷ்ம ஸூக்ஷ்மதரங்களை குறிப்பிடுகின்றன என்று பிரம்ஹவித்யா ரஹஸ்யம் என்னும் நூலில் சிதம்பராலய அமைப்பு என்கிற பிரகரணத்தில் மருவூர் கணேசசாஸ்திரிகள் அவர்கள் கூறியுள்ளார்கள். அவ்விதமே மதராஸ் ரிப்பன் பிரஸ்ஸில் (1920ல்) பிரசுரித்த சிதம்பர ரகஸ்யம் என்னும் நூலிலும் காணப்படுகிறது.

இலவுலாவிய நீர்மலிவேணிய னலகில்
சோதிய னம்பலத் தாடுவான்.

என்கிற சேக்கிழார் வாக்கும் இம்மூன்று மூர்த்திகளையும் குறிக்கிறது.

திருவம்பல சக்கர ப்ரஸ்தாரமும் திருமந்திரத்தில் கூறப் பட்டதே.

மற்றும் கொங்கணர் புலிப்பாணி நந்திதேவர் முதலிய ஸித்தர்களும் வெவ்வேறு விதமாகவும் கூறுகின்றனர்.

வடமொழியிலுள்ள ஸ்ரீ சிதம்பர யந்திரோத்தாரத்துக்கு பதஞ்ஜலி வியாக்ரபாதர், ஜைமினி, உபமன்யு, பரமானந்தர், சுகப்பிரகாசர், ஸ்ரீமூலநாத தீக்ஷிதர் (உமாபதிசிவத்தின் புதல்வர்), ஸபாபதி தீக்ஷிதர் முதலிய பெரியோர்களால் இயற்றப்பட்ட வியாக்யானங்கள் பற்பல உள. அவைகளில் வெவ்வேறுவிதமாக கூறப்படினும், பாவனு யந்திரமாகவே அறிவிக்கப்படுகிறது.

1908ம் வருஷத்தில் மதருஸ் ரிப்பன் பிரஸ்ஸில் அச்சிடப் பட்ட சங்கரவிஜயத்தில் (ப. 105) ஆதிசங்கரர் சிதம்பரத்தில் சிவகங்கையை உண்டாக்கினர் என்றும் காணப்படுகிறது. அது எந்தப் பிரமாணத்தைப் பின்பற்றினதோ தெரியவில்லை.

இவ்விதம் ஸ்ரீ நடராஜமூர்த்தியால் அளிக்கப்பெற்று நீண்ட காலந்தொட்டு திருஸஹஸ்ர முனிச்வரர்களால் (தீக்ஷிதர் களால்) ஸ்ரீ பதஞ்ஜலி முனிவரின் ஸூத்திர முறைப்படி பரம் பரையாய் பூஜித்து வருகின்ற ஸ்ரீ சந்திரமௌளிச்வர ஸ்படிக லிங்கத்தையும், ரத்தினஸபாபதியையும் ஆதிசங்கரர் அளித் தார், ஸ்தாபித்தார் என்பதும், சிதம்பர சக்கரத்தை வரைந் தார் என்பதும் பொருந்தாததே.

स्फाटिकमात्मनः—यस्यलिङ्गमहर्निशम् ॥

(ஸ்பாடிகமாத்மந:—யஸ்யலிங்கமஹர்நிசம் ||

என்கிற சிதம்பர ரஹஸ்ய, ஜைமினிஸ்தவ பிரமாணத்தால் யாதொரு ஆத்மஸ்வரூபியான பரமேச்வரரின் லிங்கம் என்கிற காரணம்பற்றி ஆத்மலிங்கம் என்று பெயர் பெற்றதை மோக்ஷலிங்கம் என்பதும் பிசகேயாம்.

மார்க்கண்டேய ஸம்ஹிதை பிரமாணத்தில் प्रतिष्ठाप्य (பிரதிஷ்டாப்ய) என்கிற பதம் சரமான இவ்விலிங்கத்தைக் குறிக்காததே. ஸ்திரமான லிங்கத்தைத் தான் குறிக்கும்.

சிதம்பரம் குருவைய்யர் அக்கிரஹாரத்தில் சங்கரமடம் ஒன்று இருந்து தற்காலம் நந்தவனமாக காணப்படுகிறது. அம்மடம் ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்டதே. அம்மடத்தில் லிங்கத்தை ஸ்தாபித்தார் என்பதே அம்மார்க்கண்டேய ஸம்ஹிதை வசனத்துக்குப் பொருள். चिद्म्बरसभातले (சிதம்பரஸபாதலே) சிதம்பர ஸபைக்கு ஸமீபத்திலுள்ள பிரதேசம். அந்த மடாலயம் என்பது பொருத்தமாகிறது. ஏனெனில் மற்ற நான்கு லிங்கங்களை சிருங்ககிரி முதலிய மடங்களில் சேர்த்து ஒரு லிங்கத்தை மட்டும் ஆலயத்தில் சேர்ப்பதும் பொருந்தாததே.

அவ்விதம் கொள்ளாமல் துர்பலமான மார்க்கண்டேய ஸம்ஹிதை கூறுதலை ஒப்புக்கொண்டால், சங்கரருக்கு முந்தி இவ்விலிங்க பூஜை இல்லை என்று கூறுதல் வேண்டும். அக்கூறுதலை சங்கரரிடம் அன்புள்ள சைவ உலகம் ஒப்புக்கொள்ளாது.

துன்முகிஞு சித்திரைமீ (ஏப்ரல் 1956) வெளிவந்த ஸ்ரீ ஸபாநாயகர் திருப்பணிக்குழு வெளியீடு கும்பாபிஷேக நினைவுமலர் 77-ம் பக்கத்தில் குறிப்பிட்ட ஆதிசங்கரர் (கி பி 788–820) இங்கேவந்து ஸ்படிகலிங்கம் கொடுத்தார், சிதம்பர சக்கரம் ஒன்று ஸ்தாபித்தார் என்று தெரிகின்றது என்கிற பூர்வபக்ஷமும் மற்றும் இம்மாதிரியான புதிய மலர்வெளியீடுகளும் ஒத்துக்கொள்ளத்தக்கதன்று என்று இதனால் அறிவிக்கப்படுகிறது.

இந்நூலாசிரியரான உமாபதிசிவத்தின் பெருமை சொல்லவும் பெரிதே. அனுபூதிமானான அவர் வாக்கு கீழ் காட்டின ஆதாரங்களை பின்பற்றினது என்பது உண்மை.

இன்னா் இந்த லிங்கம் பதஞ்ஜலியின் காலத்திலுள்ளது என்பது பற்றி பற்பல பிரமாணங்கள் உள. அவைகளை அதிகம் விளக்கில் விரியுமென அஞ்சி விடுத்தனம். விரிவாக விளக்க வாய்ப்பும் கிடைக்குமெனத் திருவருளை பிரார்த்திக்கின்றனம்.

अस्मिन् क्षेत्रवरे चिदम्बरपुरे मध्ये सभायांस्थितं
लिङ्गं स्फाटिकमीश्वरेण च पुरादत्तं मखीन्द्रैः क्रमात्।
नित्यं षट्समयेष्वहीश्वरकृत श्रीकल्पसूत्रोक्तिभिः
सम्यक्पूजितमात्मसंस्थमभजं श्रीचन्द्रमौलीश्वरम्॥

॥ श्रीन्द्रमौलीश्वरायनमः॥

स्वात्मानन्दानुबोध प्रवितरणसभातारभूतोरुकक्ष्या
मध्यासीनैर्वसिष्ठच्यवनशुकमुखैस्तैः प्रसंख्यानयोगैः।
ईड्यं यं चाश्रयन्तः ककुबधिपतयोनाद्रियन्ते तथास्वं
स्थानं तं तुम्बुरूक्ति प्रमुदितहृदयंकुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७७

277. ஆத்மானந்த ஸுகத்தை அளிக்கிற சித்ஸபையின் ஓங்கார வட்டம் போன்ற பிராகாரங்களில் வஸிக்கிறவர்களும், வஸிஷ்டர், ச்யவனர், சுகர் இவர்களை ஆதியாக உள்ளவர்களும், ப்ரஸித்தர்களுமான யோகீச்வரர்களினுலே பூஜிக்கப்படுகிறவரான யாதொரு பரமேச்வரனை ஆச்ரயிக்கிறவர்களான இந்திரன் முதலிய திக்பாலகர்கள் ஸ்வர்க்கம் முதலிய தங்கள் ஸ்தானங்களை அவ்விதம் ஆதரவு செய்கிறுர்கள் இல்லை. அப்படிப்பட்ட தும்புருவின் கானத்தினுல் ஸந்தோஷித்த ஹிருதயத்தை உடைய குஞ்சிதாங்கிரிம்.

शक्तेर्यस्य प्रसादादधिधरणि महानादिशेषावतारो
योगीन्द्रोदेहभाजामघमतिविपुलं चित्तवाक्कायसंस्थम्।
दूरीकर्तुं च यष्टुं यमकृतकपथा योगशब्दौषधार्चा
ग्रन्थान्पातञ्जलाख्यान्स्वयमपि कृतवान्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७८

சக்சேர்யஸ்ய ப்ரஸாததநிதராணி மஹாநாதிசேஷாவதாரோ
யோகீந்த்ரோதேஹபாஜாமகபநிவிபுலம் சித்தவாக்காய
[ஸர்ஸதம் ।
ஜாரீகர்தும் ச யஷ்டும் யமக்ருதகபதா யோகசப்தௌஷதார்சா
க்ரந்தாந்பாதஞ்ஜலாக்யாந்ஸ்வயமபி க்ருதவாந் குஞ்சிதாங்கிரிம்
[பஜேஹம் ॥

இதில் பதஞ்ஜலி முனிவர் இயற்றிய சாஸ்திரங்களை விளக்குகிறார்.

278. யாதொரு பரமேச்வரனுடைய சக்தியான சிவகாம ஸுந்தரி அம்பாளின் பிரஸாதத்தினால் இப்புவியில் (சிதம்பரத்தில் உள்ள ராஜஸபை என்கிற ஆயிரக்கால் மண்டபத்தில்) மஹானும், ஆதிசேஷனின் அவதாரமுமான (பதஞ்ஜலி) யோகீச்வரர் பிராணிகளின் மனது, வாக்கு, சரீரம், இவைகளில் உள்ளதும் நீண்டதுமான மலத்தை (அக்ஞானம் அபசப்தம் ரோகம்) போக்கடிப்பதற்கும், யாதொரு பரமேச்வரனை வேதத்தில் சொன்ன முறைப்படி பூஜிப்பதற்கும், பாதஞ்ஜலம் என்று பெயர் உள்ளதுகளான யோக சாஸ்திரம் (யோகஸூத்திரம்) சப்த சாஸ்திரம் (மஹாபாஷ்யம்) ஔஷதக் கிரந்தம் (சரக ஸம்ஹிதா) அர்சாகிரந்தம் (சிதம்பரேச்வர நித்ய பூஜாஸூத்திரம்) இவைகளை இயற்றினாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.



॥ श्रीपतञ्जलिमुनये नमः ॥

स्वाधोभोगकलेवरं वलयितं कृत्वोपरिष्टात्कटेः
पुंरूरश्च जटाधरो जपवटं पद्मं तथा पुस्तकम् ।
बिभ्राणः करपङ्कजैरभयमप्यूर्ध्वे फणापञ्चकं
यस्तं नौमि पतञ्जलिं गुरुवरं भस्माक्षभूषं मुनिम् ॥

योदाधर्तिभुवं फणाभिरनिशं शय्याहरेर्भूषणं
शम्भोरत्रिमुनेस्सुतः शशभृतो दूर्वाससोदायभुक्।
दत्तात्रेयगुरोरभूच्चरको गोविन्दयोगीपुनः
पुंसपाकृतिमान् पतञ्जलिमुनिः तं योगिराजं नुमः॥

ஸ்ரீ பதஞ்ஜலி முனிவர் இக்துதியில் 14-வது சுலோகத்தில் ஸ்ரீ நடராஜர் பூஜாஸ்தான ஸூத்திர கிரந்தத்தையும், 80-வது சுலோகத்தில் வியாகரண மஹாபாஷ்ய கிரந்தத்தையும் இயற்றினா என்றும், இச்சுலோகத்தில் அவ்விரண்டு கிரந்தங்களோடு யோக ஸூத்திரம், வைத்திய ஸம்ஹிதை இவவிரண்டு கிரந்தங்களை இயற்றினர் என்றும் கூறுதலால் நான்கு கிரந்தங்கள் ஸ்ரீ பதஞ்ஜலி முனிவரால் இயற்றப்பட்டவை ஆகும்.

योगेन चित्तस्य पदेनवाचां मलं शरीरस्य च वैद्यकेन।
योऽपाकरोत्तं प्रवरं मुनीनां पतञ्जलिं प्राञ्जलिरानतोऽस्मि॥

யோகேநசித்தஸ்ய பதேநவாசாம் மலம் சரீரஸ்யச வைத்யகேந।
யோ(அ)பாகரோத்தம் ப்ரவரம் முநீநாம் பதஞ்ஜலிம் ப்ராஞ்ஜலி
[ரானதோஸ்மி ‖

யோகசாஸ்திரத்தால் சித்தத்தினுடையதும், மஹாபாஷ்யத்தால் வாக்குடையதும், வைத்திய சாஸ்திரத்தால் சரீரத்தினுடையதுமான மலத்தை யாதொரு பதஞ்ஜலி முனிவர் அகற்றினாரோ அப்பதஞ்ஜலி முனிவரை நமஸ்கரிக்கிறேன்.

என்கிற ஆன்றோர் மொழியில் ஸ்ரீநடராஜர் பூஜாபாதஞ்ஜலம் யோகசாஸ்திரத்தில் சேர்ந்ததானதால் தனிமையாக கூறப்படவில்லை.

யோகமானது ஸம்ப்ரஜ்ஞாதம், அஸம்ப்ரஜ்ஞாதம் என இருவகைப்படும். ஸம்ப்ரஜ்ஞாதம் ஸகுணத்தையும், அஸம்ப்ரஜ்ஞாதம் நிர்குணத்தையும் குறிக்கும். यथाभिमतध्यानाद्व (पा-यो-सू-१-३९) (யதாபிமதத்யாநாத்வா) என்பவனுதிகளான ஸூத்திரங்களின் வ்யாக்யானங்களில் வியாஸர் முதலிய பெரியோர்களால் நன்கு விளக்கப்பட்டதே.

योगेनचित्तस्य என்கிற ஆன்றோர் மொழியிலுள்ள யோக பதத்திற்கு ஸகுண நிர்குண ப்ரதிபாதகங்களான யோக பாதஞ்ஜல பூஜாபாதஞ்ஜல சாஸ்திரங்கள் இரண்டையும் பொருளாகக்கொள்ளல் வேண்டும். ஆனதால் ஸ்ரீ நடராஜர் பூஜா விதான ஸூத்திர கிரந்தம் யோகசாஸ்திரத்தின் ஓர் விபாகமாக ஆகும். அவ்விதமே ஆன்றோர்களின் முக்கிய கருத்து. தந்திர ஸம்பந்தமன்றி வைதிகர்களால் வேதத்தில் கூறப்பட்டுள்ள வழியைத் தழுவி பாஷ்யத்தில் பரமனை பூஜிப்பதே இதன் பிரயோஜனம்.

चिदम्बरमाहात्म्यम् अ-२५ श्लो-२१

व्यक्तं पातञ्जलं शास्त्रं पूजोत्सव विधायकम्।
आरोप्यवारणस्कन्धं तूर्यनादपुरस्सरम्॥
पुरंप्रदक्षणीकृत्य सभांप्रावेशयच्छनैः॥ इति॥

வ்யக்தம் பாதஞ்ஜலம் சாஸ்த்ரம் பூஜோத்ஸவ விதாயகம் ।
ஆரோப்யவாரணஸ்கந்தம் தூர்யநாதபுரஸ்ஸரம் ॥
புரம்ப்ரதக்ஷணீக்ருத்ய ஸபாம்ப்ராவேசயச்சனை: ॥ இதி ॥

வியக்தமும் பதஞ்ஜலி முனிவரால் இயற்றப்பட்டதும் ஸ்ரீ நடராஜரின் நித்தியபூஜை, மஹோத்ஸவங்கள் இவைகளின் முறையை நன்கு அறிவிக்கிறதுமான சாஸ்திரத்தை யானைமேல் ஏற்றி மங்கள வாத்தியங்களுடன் வீதிவலம்வந்து ஸபையை (பேரம்பலத்தை) அடைவித்தார்.

दहरविद्याखण्डे

निधायहृदयेपूर्व मेतद्योगानुशासनम्।
सूत्रयमासभगवान् योगशास्त्रं पतञ्जलिः॥
योगसिद्ध्यैबहिःपूजा सूत्रंश्रौतमपिक्रमात्॥

நிதாயஹ்ருதயேபூர்வம் ஏதத்யோகாநுசாஸநம் ।
ஸூத்ரயமாஸபகவாந் யோகசாஸ்த்ரம் பதஞ்ஜலி: ॥
யோகஸித்யைபஹி:பூஜா ஸூத்ரம்ச்ரௌதமபிக்ரமாத் ।

முன்னொருஸமயம் ஸ்ரீ பதஞ்ஜலி முனிவர் யோகசாஸ்திரத்திலுள்ள விஷயங்களை நன்கு அறிந்து பிராணிகளுக்கு அவை

ஸித்திக்கவேண்டி வேதத்தில் கூறப்பட்டுள்ள ஸ்ரீ நடராஜரின் நித்ய பூஜாஸூத்திரத்தையும் இயற்றினர்.

(கோயிற்புராணம் திருவிழாச் சருக்கம் பா-19)

இத்தகைய முனிவருட னொருநாண் மன்ன
னிலங்கியபே ரம்பலத்தி னிருந்து நூலின்
வைத்தமுறை யிறைவற்கு மஞ்ஜ னக்கு
மலரமுது முதலான மல்க வைத்து
நித்தவிழா வெழவேண்டுஞ் செல்வ நல்கி
நிலவுபதஞ் ஜலிமுனியா னிறுத்து வித்த
புத்தகமின் புறமுனிவர் யானை யேற்றிப்
பொற்கோயில் வலங்கொண்டு புகுவித் தார்கள்.

என்பனவாதிகளான பிரமாணங்களும் வலியுறுத்துகின்றன.

80-வது பாஷ்ய சுலோகத்தில் பரமனது பிரஸாதத்தால் என்றும், இச்சுலோகத்தில் அம்பிகையின் பிரஸாதத்தால் என்றும் கூறுதல் சிவசக்தியின் அபேதமே கவியின் நோக்கம்.

शार्दूलाङ्घ्रियुतः पतञ्जलिमुनिः दृष्ट्वा विभोस्ताण्डवं
हैमे संसदि पुण्डरीकपुरि यश्चक्रे गिरीशाज्ञया ।
पूजायोगनिदानशब्दसरणीः श्रेष्ठाः सखा जैमिनेः
त्रैसाहस्रमहीसुरैरभिनुतो जेजीयते योगिराट् ॥

॥ श्रीपतञ्जलिमुनये नमः ॥

द्यूतक्रीडाविहारे शिवगिरिसुतयोः जातुमिथ्योक्तिकुप्य
द्गौरीवाक्य प्रभूतामजगरतनुतां त्यक्तुमत्यन्तघोराम् ।
कैलासोपत्यकायां यमपि च तपसा तोषयन्यत्प्रसादात्
लेभे स्वं प्राक्तनं तद्वपुरपिमुरभित्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २७९

279. ஒரு ஸமயம் பரமேச்வரனும் அம்பிகையும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கும் தருணம் ஸாக்ஷியாக இருந்து பொய்சொன்ன காரணம் பற்றி கோபமடைந்த

அம்பிகையின் வாக்கினால் (சாபத்தினால்) உண்டானதும் மிகவும் பயங்கரமுமான பலிப்பாயின் வடிவத்தைப்போக்கடிப்பதற்கு கைலாஸபர்வதத்தின் தாழ்வரையில் வஸித்தும், தபஸினால் யாதொரு பரமேச்வரனை ஸந்தோஷிக்கும்படி செய்தும், அவருடைய பிரஸாதத்தினால் முனி ஸப்ஹரித்ரவரான மஹாவிஷ்ணு முன்னுள்ள தனது உருவத்தை அடைந்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம். இது சங்கர ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

त्रैगुण्यानामतीतं त्रिजगदभिनुतं सत्रिवर्गापवर्गं
त्रैयन्ताचार्यमूर्तिं त्रिपुटिविरहितं त्रिस्थमप्यत्रिरूपम्।
तृष्णाद्दीनाशयस्थं त्रिशिखवरधरं त्र्यक्षमात्रेयभूषं
त्रेतानन्दं त्रिकोणस्थितिजुषमचलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २८०

280. முக்குணங்களில் உண்டான பிரம்ம விஷ்ணு ருத்திரர்களுக்கு அதீதரும் மூன்று உலகங்களில் துதிக்கப்படுகிறவரும் தர்மார்த்த காமங்களோடு கூடின மோக்ஷத்தை அளிப்பவரும் வேதாந்த சாஸ்திரத்திற்கு உருவும், த்யாதா, தியானம், த்யேயம் என்கிற திருபுடி அற்றவரும், மூன்று உருவத்தோடு இருந்தபோதிலும் அம்மூன்று உருவம் அற்றவரும் அல்லது அத்திரி முனிவரின் ரூபமுள்ளவரும் ஆசையற்ற ஹிருதயத்தில் வஸிப்பவரும், சூலத்தை தரிப்பவரும், முக்கண்ணரும், அத்திரி மஹரிஷியின் புதல்வனான சந்திரனை தரித்தவரும், தக்ஷிணாக்கினி, கார்ஹபத்யம், ஆஹவனீயம் என்கிற மூன்று அக்கினிகளில் (செய்கிற ஹோமங்களில்) பிரீதி உள்ளவரும், ஸ்ரீசக்கரத்தின் நடுவிலுள்ள திரிகோணத்தில் பிந்து ரூபமாக இருப்பவரும், அசைவற்றவருமான குஞ்சிதாங்கிரிம்.

स्वस्त्री वक्षोजयुग्मेऽयमधिककरुणं भावयित्वाचभक्त्या
रत्यासन्तर्प्य तेनप्रमुदितमनसोनृत्तमूर्तेः प्रसादात्।
यस्याभूल्लोकजेताकुसुमयविशिखो मन्मथः श्रीकुमारः
तं देवं सुन्दरेड्यं घुसदननटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २८१

281. புஷ்பாயமான பாணங்களை உடையவனும் லக்ஷ்மிக்கு புதல்வனுமான மன்மதன் தனது பத்தினியின் இரண்டு வக்ஷோஜங்களில் மிகவும் கருணையோடு கூடின யாதொரு பரமேச்வரனை மிகவும் பக்தியோடு பாவனை செய்து (பூஜித்து) கிரீடையினாலே ஸந்தர்பணம் செய்து இக்கிருத்தியத்தினால் ஸந்தோஷ மனஸோடு கூடின யாதொரு பரமேச்வரனின் பிரஸாதத்தால் உலகங்களை ஜயிக்கிறவனாக ஆனானோ அப்படிப்பட்ட தேவரும் ஸுந்தரனாலே (ஸுந்தரமூர்த்தி நாயனார்) துதிக்கப்பட்டவரும், ஆகாச சபையில் நடனம் செய்கிறவருமான குஞ்சிதாங்கிரிம். (இக்கதை சங்கர ஸம்ஹிதையில் உள்ளது. மந்திரசாஸ்திர வாமசாரத்தில் இவ்வித அனுஷ்டானம் கூறப்பட்டுள்ளதே.)

आयुर्यत्कैटभारेः परममभिमतं पूर्णतामेतितावत्
कल्पोयस्यक्षणार्धो भवति च सुगमः किञ्चिदंशेनहीनः।
इत्याहुर्वेदवाचः किमुतशतधृतेः किञ्चदिक्पालकानां
तं कालं कालभक्षं फणिफणनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २८२

282. விஷ்ணுவுக்கு ஆயுளானது எவ்வளவுக்குள் பூர்த்தியடைகிறதோ அவ்வளவான கற்பம் (கற்பம் என்பது ஓர் கால விசேஷம்) யாதொரு பரமேச்வரனுக்கு கொஞ்சம் குறைந்ததும் ஸுகமாய் செல்லக்கூடியதுமான அரைக்ஷண காலமாக ஆகிறது என்று வேதவாக்குகள் கூறுகின்றன. பிரம்மன் இந்திரன் முதலிய திக்பாலகர்களின் காலஹோரையை சொல்ல வேண்டுமா? அப்படிப்பட்ட காலஸ்வரூபியும் (பிரளய காலத்தில்) காலனையும் பக்ஷிக்கிறவரும், பாம்பின் படத்தின் மேல் நின்று நடனம் செய்கிறவருமான குஞ்சிதாங்கிரிம்.

कालीं चण्डोर्ध्वनृत्तावनतमुखगणां ब्रह्मचामुण्डिकाख्यां
गौरीं कोपाग्निजातां दितिसुतभयदामंशयुक्तां विधातुः।
स्वागश्शान्त्यै नितान्तं सविधकृततनुतिं यः कृपापूर्णदृष्ट्या
रक्षन्स्वक्षेत्रपालामकुरुतपरमं कुञ्चिताङ्घ्रिं भजेऽदम्॥ २८३

283. பயங்கரமான ஊர்த்துவ தாண்டவத்தில் தோல்வி அடைந்ததினால் வணங்கின முகத்தை உடையவளும், பிர்ம சாமுண்டிகா என்ற பெயர் உள்ளவளும், அம்பிகையின் கோபத்தீயில் உதித்தவளும், அஸுரர்களுக்கு பயத்தை கொடுக்கிறவளும், பிர்ம்மாவின் அம்சத்தோடு கூடினவளும், தனது அபராதத்தைப் போக்கடிக்கவேண்டி ஸமீபத்தில் மிகவும் துதிக்கிறவளுமான காளியை யாதொரு பரமேச்வரன் கிருபையோடுகூடின பார்வையினால் ரக்ஷித்து தனது க்ஷேத்திரபாலிகையாக இருக்கும்படி செய்தாரோ அப்படிப்பட்ட ச்ரேஷ்டரான குஞ்சிதாங்கிரிம். இது வியாக்ரபுர மாஹாத்மியத்தில் உள்ளது.

குறிப்பு:- இத்தேவியின் கோயில் ஸ்ரீ நடராஜாலயத்திற்கு வடபுறம் இரண்டு பர்லாங்கு தூரத்தில் சிவப்பிரியை என்கிற தீர்த்தத்தின் கீழ்புறத்தில் மேற்கு முகமாக அமைக்கப்பட்டு உள்ளது. தில்லைக்காளி, பிர்ம்மசாமுண்டி என்கிற பற்பல நாமங்களால் போற்றப்பட்டும், நான்கு முகங்கள், நான்கு கைகள் கொண்டும் பீடாஸனத்திலமர்ந்து பக்தர்களின் இஷ்டங்களை எளிதில் அளித்தும், இத்தேவி பிரகாசிக்கிறாள். ஸ்ரீ நடராஜரை தரிசித்த பலன் இத்தேவியை தரிசித்தால்தான். சிதநிக்ஷுபென்று புராண ரஹஸ்யம் இத்தேவியைப் பற்றிய உபாஸனக்ரமங்கள், ஸஹஸ்ரநாமம், த்ருசதி முதலியவை பிர்ம்மயாமளம் என்கிற மந்திர சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளவை. இததேவியின் பூஜை முதலியவை வைதிக முறைப்படி தில்லைவாழந்தணர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தேவிக்குப் பிரதி வருஷம் வைகாசி மாதத்தில் உத்ஸவம் நடத்தி பிறகு ஸ்ரீ நடராஜருக்கு உத்ஸவம் நடத்தப்படுகிறது. மற்றும் பற்பல இதிஹாஸங்கள் உள. விக்கிரமார்கனென்னும் அரசனும், காளிதாஸன் என்கிற மஹா கவியும் இத்தேவியை உபாஸித்து இத்தேவியின் அருளால் இரண்டாயிரம் வருஷம் அரசனாகவும், எல்லா கவிகளினால் போற்றப்பட்டவனாகவும் ஆனார்கள் (विक्रमार्कनृपेन्द्रेण कालिदासेनसेविताम्। साक्षात्कुर्वंसदाभद्रां शिवताण्डवसाक्षिणीम्॥) என்று கூறுகிறார்கள்.

सर्वेशं सर्वसत्वप्रकृतिमविकृतिं सर्वदं सर्वभूपं
सर्वातीतं सदाख्यं सकरुणनयनं सर्ववेदान्तसारम्।

सत्यं सद्व्योमसंस्थं सनकमुनिमुखैरर्चितं सामगीत्या
सुत्साहं संसदीशं सकलकविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८४

284. எல்லாவற்றிற்கும் ஈசரும் ஸர்வபிராணிகளுக்கும் காரணரும், காரணமில்லாதவரும், எல்லாவற்றையும் அளிப்பவரும், எல்லாவற்றையும் அணிந்தவரும், எல்லாம் கடந்தவரும், ஸத் என்பவரும், கருணைவாய்ந்த கண்களை உடையவரும், எல்லா வேதாந்தங்களிலும் ஸாரமாக கூறப்படுகிறவரும், ஸத்யரும், ஸச்ரூபமான ஆகாசத்தில் இருப்பவரும், ஸனகர் முதலிய முனிவர்களால் பூஜிக்கப்பட்டவரும், ஸாமகானத்தில் உத்ஸாஹத்தோடு கூடினவரும், ஸபைக்கு ஈசரும், ஸகல கவிகளால் துதிக்கப்படுபவருமான குஞ்சிதாங்கிரிம்.

कर्तुं चाकर्तुमेतत्सकलमपि जगच्चान्यथा कर्तुमीशः
शक्तश्चाकाशतुल्यो भवितुमपिशिवो यस्समाधिक्यशून्यः ।
जाग्रत्स्वप्नातिशायिपृथुतरसुखकृत्स्थान संस्थोऽपि नैजां
मायामाविष्करोति त्रिविधगुणमयीं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८५

285. யாதொரு பரமேச்வரன் இந்த ஸகல உலகங்களை படைப்பதற்கும், படைக்காமல் இருப்பதற்கும், வேறுவிதமாக செய்வதற்கும் இவைகளில் ஸம்பந்தம் அன்றி ஆகாசப்போல் இருப்பதற்கும் ஸாமர்த்தியம் வாய்ந்தவரோ, தனக்கு ஒப்புயர்வு இல்லாதவரோ, அப்படிப்பட்ட பரமேச்வரன் ஜாக்ரம், ஸ்வப்பனம், ஸுஷுப்தி இவ்வவஸ்தைகளில் பெரிய சுகத்தை உண்டு பண்ணுகிற ஸ்தானத்தில் இருந்தபோதிலும். மூன்று குணங்களின் விகாரமான தனது மாயையை ஏவல் செய்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

साकं गौर्याहिमाद्रेर्निकटवरतटे सञ्चरन्योनिजास्य
स्वेदोद्भूतं प्रभाभिर्विजितदिनकरं बालमाहूयमोदात् ।
भौमाभिख्यामजालिग्रहयुगमनृणाधीश्वरत्वं चवाहं
शक्तिं भूषां ददौ तं दिविचरविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८६

286. ஹிமய பர்வதத்தின் தாழ்வரையில் யாதொரு பரமேச்வரன் கௌரியோடுகூட ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும் தருணம் தனது முகத்தில் உள்ள வேர்வையில் இருந்து உண்டானதும் காந்தியினல் ஸூர்யனை அதிக்கிரமித்ததுமான குழந்தையை கூப்பிட்டு பௌமன் என்கிற பெயரையும், மேஷம் விருச்சிகம் என்கிற இரண்டு வீட்டையும், கடனைப் போக்கடிக்கிற சக்தியையும் (ஆடு) வாஹனத்தையும், சக்தியாயுதத்தையும், ஆபரணத்தையும் அக்குழந்தைக்கு அளித்தாரோ அட்டடிப்பட்ட தேவர்களால் துதிக்கப்பட்டவரான குஞ்சிதாங்கிரிம். இக்கதை பாத்மத்தில் கூறப்பட்டுள்ளது.

यस्मिन्दृष्टे परस्मिन्नचलतिहिमनो देहभाजां कदाचित्
यस्मात्कुत्रापि नान्योभवति च परमोदेवता सार्वभौमः।
एकोदाधर्तितिर्यङ्निजवपुषि जगत्प्रोतमोतं समस्तं
तं चित्रं चित्रनृत्तप्रमुदितगिरिजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८७

287. யாதொரு பரமேச்வரன் பார்க்கப்பட்டிருக்கும் பொழுது பிராணிகளின் மனஸ் ஒரு ஸமயத்திலும் சலிக்கிறது இல்லையோ, யாதொரு பரமேச்வரனைக் காட்டிலும் வேறு உத்தம தேவதை இல்லையோ ஒருவனுக இருந்து தனது சரீரத்தில் குறுக்காக கோர்க்கப்பட்ட எல்லா உலகை தரிக்கிருரோ அப்படிப்பட்ட சித்திரஸ்வரூபரும், ஆச்சர்யகரமான தாண்டவத்தினல் ஸந்தோஷித்த பார்வதியோடு கூடினவருமான குஞ்சிதாங்கிரிம்.

कश्चिन्भूपालसूनुर्वृषभ मुनिवरस्योपदेशात् यदीयां
शैवीं विद्यां जपन्यत्कवचनुतिमपि प्राप्तकामोबभूव।
तं शर्वं वारिजाक्षद्रुहिणसुरपति प्रेतनाथाग्निरक्षः
पाशीवाय्वीशयक्षद्युमणिशशिनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८८

288. ஓர் அரசகுமாரன் விருஷபர் என்கிற முனிச்ரேஷ்டரின் உபதேசத்தால் யாதொரு பரமேச்வரனின் பஞ்சாக்ஷரத்தையும் சிவகவசம் என்கிற ஸ்துதியையும் ஜபித்து ஸகல இஷ்டங்

களை அடைந்தானோ அப்படிப்பட்ட சர்வரும் விஷ்ணு, பிர்மா, இந்திரன், யமன், அக்னி, நிருருதி, வருணன், வாயு, ஈசானன், குபேரன், ஸூர்யன், சந்திரன் இவர்களால் ஸ்துதிக்கப்பட்ட வருமான குஞ்சிதாங்கிரிம். இக்கதை பிர்மோத்திர கண்டத்தி லுள்ளது.

यद्रङ्गस्वर्णकुम्भं दिनकृदनुदिनं वीक्ष्यमेरुभ्रमेण
रथ्यं संरुध्यमध्ये क्षणमपि निवसन्यत्सपर्या सुजातम्।
घण्टाझाङ्कारघोषं त्रिशतदशसखीवेदमन्त्रांश्च भूयः
श्रुत्वातिल्लीवनाख्यं पुरमितिमनुते कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २८९

289. யாதொரு பரமேச்வரனுடைய ஸபையின் தங்க ஸ்தூபியை ஸூர்யன் ஒவ்வொருநாளும் பார்த்து மஹாமேரு என்கிற பிராந்தியால் தனது குதிரையை அடக்கி ஆகாசமத்தியில் சிறிது நேரம் வஸித்து யாதொரு பரமேச்வரனுடைய பூஜா காலத்திலுண்டான மணி ஓசையையும், திருஸஹஸ்ர முனிச்வரர் களின் வேதமந்திரங்களையும் கேட்டு தில்லைவனப் என்று பெய ருள்ள புரம் (சிதம்பரம்) என்று எண்ணுகிருனே அப்படிப் பட்ட குஞ்சிதாங்கிரிம்.

कण्ठेकालोललाटे हुतभुगुरगराड्भूषणं चर्मवस्त्रं
भूतिर्गन्धोविहायो निलयमथपुनः पुष्पवन्तौचनेत्रे।
वृत्तिर्भिक्षास्वकार्यं नटनमगसुताप्रेमकान्तागजास्यः
सूनुः यस्यातिचित्रं समजनिसदयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९०

290. கண்டத்தில் கருப்பு, நெற்றியில் நெருப்பு, பாம்பு ஆபரணம், தோல் வஸ்திரம், விபூதி, சந்தனப்பூச்சு, ஆகாசம் இருப்பிடம், ஸூர்யன் சந்திரன் இரண்டு கண்கள், ஜீவனம் பிக்ஷை, செய்கை கூத்து, பர்வதத்தின் புதல்வி மனைவி, ஆனை முகன் குமாரன் இவ்விதம் யாதொரு பரமேச்வரனுக்கு மிகவும் ஆச்சர்யகரமாக ஆனதோ அப்படிப்பட்ட தயவுள்ள குஞ்சிதாங்கிரிம்.

यत्संसत्स्वर्णभित्तिं परितरनुपमास्स्वर्गनार्यः कराब्जैः
आदर्शाद्यष्टभद्रं कनकमणिमयं यस्यतुष्ट्यै वहन्त्यः।
सेवां कुर्वन्ति पञ्चावरणमधिगतैर्ब्रह्मविष्ण्वीशपूर्वैः
स्तुत्यं तं चित्रकूटस्थितिभिरथसुरैः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९१

291. யாதொரு பரமேச்வரனுடைய ஸபையின் சுவற்றிற்கு நான்குபுறங்களிலேயும் ஒப்பற்றவர்களான தேவப் பெண்கள் மணிகளால் இழைக்கப்பட்ட கண்ணாடி முதலிய அஷ்டமங்கலங்களை (கண்ணாடி, பூர்ணகும்பம், விருஷபம் யுக்ம சாமரம், ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகம், சங்கம், தீபம்) கைகளில் தரித்துக்கொண்டு ஸேவிக்கிறார்களோ, ஐந்து ஆவரணங்களை அடைந்தவர்களும் பிரம்ஹவிஷ்ணுமஹேச்வரர்களை ஆதியாய் உள்ளவர் களும் சித்திரங்களமைந்த கோஷ்டங்களிலுள்ளவர்களுமான தேவர்களால் துதிக்கப்பட்ட குஞ்சிதாங்க்ரிம்.

भक्ताः षष्ठ्यग्रिसंख्याद्विजमुखकुलजा यत्सपर्याविशेषैः
सारूप्यं यस्यनाम्नां मुहुरपिपठनात् यस्यसामीप्यसिद्धिम्।
सालोक्यं यस्यभक्तिप्रकरणजनतासङ्गसम्भाषणाद्यैः
सायुज्यं यस्य भावादनुपममभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९२

292. அறுபத்திமூன்று ஸங்கியை உள்ளவர்களும் அந்தணர் முதலிய வகுப்பில் உதித்தவர்களுமான பக்தர்கள் (63 நாயன் மார்கள்) யாதொரு பரமேச்வரனுடைய பூஜா விசேஷங்களால் ஸாரூப்ய முக்தியையும்; நாமபாராயணத்தினால் ஸாமீப்ய முக்தி யையும், பக்தர்களின் ஸங்கமத்தால் ஸாலோக்ய முக்தியையும், ஐக்கியத்யானத்தினால் ஸாயுஜ்யமுக்தியையும் அடைந்தார் களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்க்ரிம்.

यच्चित्रस्तम्भकक्ष्यामधिविशदखिल प्राणिवर्गान्विशुद्धान्
कुर्वन्कश्चिन्महात्मा पुरुषमृगतनुर्योगिराड्यत्सभायाः।
पूर्वास्मिन्द्वारदेशे निवसति हृदये सन्ततं यं विचिन्वन्
तं देवं चिद्विलासप्रकटितनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९३

293. புருஷமிருக ரூபத்தோடு கூடின மகாத்மாவான ஒரு யோகீச்வரர் சித்திர ஸ்தம்பங்களால் நிறைந்த ப்ராகாரத்தை அடைந்த பிராணிகளுடைய துராசாரங்களைப் போக்கடித்து ஆசாரவான்களாக செய்தும், நடராஜரை எப்பொழுதும் ஹிருதயத்தில் தியானம் செய்து கொண்டும் யாதொரு பரமேச்வரனின் சித்ஸபைக்கு கிழக்கு திக்கில் வஸிக்கிறாரோ அப்படிப்பட்ட சித்விலாஸத்தை பிரகடனம் பண்ணுகிற நடனத்தை செய்கிற குஞ்சிதாங்க்ரிம். இக்கதை சிதம்பர ரஹஸ்யத்தில் கூறப்பட்டுள்ளது.

भेजे त्रैशङ्कवीयां स्थितिमपि च गले यस्यशम्भोः करालः
क्ष्वेलः कल्पान्तकालज्वलनकवलनज्वालकल्लोलकीलः।
सातङ्काहार्यजायास्सभयमधुभिदो वारणप्रेरणाभ्यां
भूयो भूयस्तमाद्यं जलदगलरुचिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९४

294. யாதொரு சம்புவான் பரமேச்வரனுடைய கண்டத்தில் பயங்கரமும், கல்பாந்த காலத்தில் உண்டான அக்கினியை விழுங்குகிறதுமான ஜ்வாலைகளால் வியாபித்த விஷம் (ஹாலா ஹலம்) ஆதங்கத்தோடு கூடின அம்பிகையினுடையதும பயத்தோடு கூடின விஷ்ணுவினுடையதுமான அடிக்கடி உண்டான தடையினாலேயும் பிரேரணையினாலேயும் திரிசங்குவின் ஸ்திதியை (மத்தியில் இருக்குகையை) அடைந்ததோ அப்படிப்பட்ட ஆத்யரும் மேகம் போன்ற கண்டகாந்தியையுமுள்ள குஞ்சிதாங்க்ரிம்.

लोकेष्वद्वैतविद्यां प्रकटयितुमनायस्स्वयं कृत्तिवासाः
मोदात्सर्वज्ञपीठस्थितिजुषममलं शङ्कराख्यं यतीन्द्रम्॥
स्वांशान्नैजाङ्घ्रिपूजाप्रशमिततमसां भूसुराणां कुलाब्धौ
उत्पाद्यान्वग्रहीत्तं शुकमुनिविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९५

295. புலித்தோலை தரித்த யாதொரு பரமேச்வரன் தானே ஸந்தோஷத்தால் உலகத்தில் அத்வைத வித்தையை பிரகாசப் படுத்த இச்சைகொண்டு ஸர்வஞபீடம் எறினவரும் பரிசுத்தரும்

சங்கரர் என்று பெயர் உள்ளவருமான ஓர் யதிச்ரேஷ்டரை தனது அம்சத்திலிருந்து தனது சரண பூஜையினால் அகற்றின அக்ஞானத்தை உடைய பிராம்மணர்களின் (திருஸஹஸ்ர முனீச்வரர்களின்) குலத்தில் உண்டுபண்ணி அனுக்கிரஹம் செய்தாரோ அப்படிப்பட்ட சுகமுனிவரால் துதிக்கப்பட்டவரான குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு :-



॥ श्री सद्गुरुभ्योनमः ॥

श्रीमच्छङ्करसद्गुरुर्विजयते व्यासोक्तसूत्रावलिं
व्याख्यातादशसङ्ख्यकोपनिषदोगीतां हरेर्वाग्भवाम् ।
शैवं भैरवशाक्तिविष्णुगणपत्यर्काभिधं षण्मतं
निर्णीतं भुविसर्ववित् यतिवरोह्यद्वैतसाम्राज्यभृत् ॥

आसीज्जन्म चिदम्बराभिधपुरे तत्रत्रिसाहस्रभू
देवानां च कुले मखीन्द्रतनयोः सर्वज्ञवैशिष्ट्योः ।
पित्रोर्यस्य पुराभगवतो गोविन्द योगीश्वरात्
सन्यासोऽपिसमेश्वरांशमतुलं सेवेगुरुं शङ्करम् ॥

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் அவர்கள் ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தில் அவதாரம் செய்தாள் என்று ஆனந்தகிரி சங்கர விஜயத்திலும், சிதம்பரஸாரமென்னும் கிரந்தத்திலும் கூறப்படுகிறது. தில்லைவாழந்தணர்களின் மரபைச் சார்ந்தவர்களும், யாஜுஷர்களும் ஆங்கிரஸகோத்திரர்களுமான விசிஷ்டாம்பிகை

விச்வஜித் தீக்ஷிதர் என்கிற பெரியோர்கள் அவர்களின் மாதா பிதாக்களாவார்கள். விசிஷ்டை என்கிற அன்னை தில்லைவாழந்தண மரபில் யாஜுஷ ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் உதித்த ஸர்வஜ்ஞ தீக்ஷிதர் காமாக்ஷி அம்மாள் என்பவர்களின் புதல்வியாவாள். விசிஷ்டை என்கிற அன்னைக்கு ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் அம்சமே, லோகத்திலுள்ள துர்மதங்களை அகற்றி வைதிக அத்வைத மதத்தை ஸ்தாபிக்கவேண்டி தேவர்களின் பிரார்த்தனையால் சங்கராசார்யருக அவதரித்தது. இம்மஹான் தனது பால்யத்தில் அனேக விசித்திர லீலைகளை செய்தும் உரியகாலத்தில் உபநயனம் செய்விக்கப்பட்டும், துர்வாஸர் அகஸ்தியர் முதலிய மஹர்ஷிகளிடமிருந்து சிதம்பர ரஹஸ்யம் முதலிய ஸகல வித்தைகளை அப்யஸித்தும், எல்லோர்களினுலேயும் மிகவும் போற்றப்பட்டவருமாக பிரகாசித்தார்.

அக்காலத்தில் மிகவும் பூஜ்யரும் தில்லைவாழந்தணர் மரபி லுதித்தவருமான ஸ்ரீகணேசயோகி என்கிற பெரியாரிடம் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தியின் மந்திரத்தை உபதேசப் பெற்று ஸ்ரீமூலநாதரின் தென்புற கோஷ்டத்தில் விளங்காநின்ற ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் ஸன்னதியில் சிலகாலம் தான் ஸந்யாஸாச்ரமம் பெறவேண்டுமென்கிற எண்ணத்துடன் தபஸை அனுஷ்டித்தார்.

இவ்விதம் அனுஷ்டித்து இருக்கும் தருணம் பகவான் இவர் முன்பு தோன்றி மேற்கு கோபுரத்திலுள்ள குஹையில் ஸ்ரீ பதஞ்ஜலியின் அபராம்சருன கோவிந்தயோகி என்கிற பெரியார் இருக்கிருர், அவரிடம் சென்று உமது இஷ்டத்தை பூர்த்தி செய்துகொள்ளக் கடவாய் என்று அனுக்கிரஹித்து மறைந்தார்.

பிறகு சங்கரர் அக்குஹையை அடைந்து இவ்விஷயத்தை பகவத்கிருபையால் முன்பே உணர்ந்த ஸ்ரீ பதஞ்ஜலியின் அபராம்சருன அக்கோவிந்தயோகீந்திரரின் அனுக்கிரஹத்தால் ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்தார்.

ஸ்ரீ கோவிந்தயோகீந்திரர் தனது குருவான கௌடபாதாசாரியரால் (மாண்டுக்கியோபநிஷத்காரிகை ஸ்ரீவித்யாரத்ன ஸூத்திரம் இவைகளை இயற்றியவர்) தன்னிடம் அளிக்கப்

பட்டதும் வியாஸர் முதல் பரம்பருகதமுமான பிர்ஹ ஸூத்திரம் முதலியவற்றை கொடுத்து இவைகளுக்கு அத்வைத பாஷ்யம் இயற்றி லோகத்தில் பிரகாசிக்கும்படி செய்து அத்வைத மதத்தை ஸ்தாபிப்பாயாக என்று இச்சங்கரருக்கு அருள்புரிந்தனர்.

சங்கரர் ஸ்ரீகோவிந்தபகவத்பாதாளிடமிருந்து பிர்ஹ ஸூத்திரம் முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு அவர் கட்டளை யால் ஸ்ரீசிவகாமஸுந்தரி என்கிற பிர்ஹவித்யா ஸ்வரூபிணி யான அம்பிகையின் ஸன்னதியில் அவைகளுக்கு பாஷ்யங்களை எழுதி முடித்தார்.

இக்கிரந்தங்களை தனது ஆசார்யாளான கோவிந்தபகவத் பாதாளுக்கும் கௌடபாதாசார்யாளுக்குப் படித்துகாண்பித்தும் அவர்களால் நன்கு ஆசிர்வதிக்கவும் பெற்றார்.

பிறகு ஸகல சிஷ்யர்களுடன் மத்யார்ஜுனம் முதலிய க்ஷேத்திரங்களை அடைந்து பரமனைப் போற்றியும் ஆங்காங்கு உள்ள துர்மதங்களை கண்டித்து வைதிகங்களான சைவம் முதலிய ஷண்மதங்களோடு அத்வைத மதத்தை ஸ்தாபித்தார்.

மற்றும் பற்பல சரித்திரங்கள் சங்கரவிஜயங்களில் கூறப் பட்டுள்ளன. ஸ்ரீசிதம்பர க்ஷேத்திரத்தில் ஒரு மடத்தையும் ஸ்தாபித்தார் எனவும் தெரிய வருகிறது. அவருடைய இறுதி யில் காஞ்சிபுரத்தில் ஸித்தி அடைந்தபோதிலும் அவர் ஆத்மா சிதம்பரம் ஸ்ரீநடராஜரிடம் மணிவாசகர்போல் ஐக்கியத்தை அடைந்ததாக பெரியோர்கள் கூறுகின்றனர்.

ஆசார்யாவர்கள் தில்லைவாழந்தண மரபைச் சார்ந்தவர்கள் என்பது பற்றி சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீபிர்ஹவித்யானந்தபாரதி ஸ்வாமிகள் அவர்களால் எழுதப்பட்டு கி. பி. 1946ல் பிரசுரித்த ஸ்ரீசங்கரவிஜய டிண்டிமம் என்னும் நூலில் நன்கு கூறப்பட்டு உள்ளது. பிறகும் பீட பரம்பரையில் இரண்டு ஆசார்யஸ்வாமி கள் தில்லைவாழந்தண மரபிலுள்ளவர்கள். பீடாதிபதிகளாக இரிந்தார்கள் என்றும் மற்றும் இரண்டுஸ்வாமிகள் இச்சிதம்பர க்ஷேத்திரத்திலேயே ஸித்தி அடைந்தார்கள் என்றும் தெரிய வருகிறது.

ஸ்ரீமதாநிசங்கரர் அவதார ஸ்தலம் சிதம்பரம் என்றும் அவர் மரபு தில்லைவாழந்தணர் குலம் என்றும் நிச்சயிக்க ஸ்ரீமதுமாபதிசிவத்தின் வாக்கும் நன்கு வலியுறுத்துகிறது.

एत्त्वाऽऽनन्दगिरिप्रयुक्तविजयं चैदम्बरं सारम
प्यत्रालोच्य पुरातनस्थिति मथश्रुत्वागिरं धीमताम्।
प्रोक्तं शङ्करपूज्यपादचरितं संगृह्यभाषापथा
नूनं यच्चतदेववास्तवमितिज्ञेयं सदाद्वैतिभिः॥

॥ श्रीशङ्करगुरुभ्योनमः॥

पाताले मर्त्यलोके दिविचपुररिपोर्यानियानि प्रियाणि
क्षेत्राण्यासन्तदन्तस्थितिमधिजुषतां लिङ्गबेराविमानाम्।
हेतुः श्रीमूलनाथः शिवजनिवरो यत्सभोदीचिभागे
कक्ष्यायां भाति नित्यं तमखिलजनकं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९६.

296. பாதாளம், பூமி, ஸ்வர்க்கம் இவைகளில் புரரிபுவான பரமேச்வரனுக்கு எந்த எந்த க்ஷேத்திரங்கள் பிரியமானவை களோ அந்த க்ஷேத்திரங்களின் மத்தியில் பிரகாசிக்கிறதுகளான லிங்கங்கள் மூர்த்திகள் முதலியவைகளுக்கு காரணமும், ஸ்ரீ மூலநாதர் என்று பெயர் உள்ளதும் ஸ்வயம்புவுமான சிவலிங்கம் யாதொரு பரமேச்வரனுடைய ஸபையின் வடபுறத்தில் உள்ள பிராகாரத்தில் எப்பொழுதும் விளங்குகிறதோ அப்படிப்பட்ட எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரான குஞ்சிதாங்கிரிம்.

ब्रह्मन्सृष्टिं यथावत्किमपि च कुरुषे भोहरे रक्षकत्वं
साध्यन्ते रुद्रभावं मम च वहसि किं पाल्यतेऽसौत्रिलोकी।
केनानुष्ठीयते किं भुवि च मुनिवरैर्यज्ञइत्थं स्वसेवा
नम्रं यो देववर्गं मुदयति वचसा कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९७

297. யாதொரு பரமேச்வரன் தன்னை ஸேவித்து வணங்கின தான தேவஸமுதாயத்தைக் குறித்த ஓ பிரம்ஹாவே, படைக்கும் தொழிலை முறைப்படி செய்கிறாயா? ஓ விஷ்ணுவே, காக்கும் தொழில் உனக்கு ஸாத்தியமா? ஓ ருத்திரா, எனது பாவத்தை வஹிக்கிறாயா? இப்பொழுது இந்த மூன்று லோகமும் எவரால் இரக்ஷிக்கப்படுகிறது. பூமியில் முனிச்ரேஷ்டர்களால் யாகம் அனுஷ்டிக்கப்படுகிறதா என்று இவ்விதம் தனது வார்த்தையினாலே ஸந்தோஷிக்கும்படி செய்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

निर्मातॄणां घटानां कुलजलधिमणिर्नीलकण्ठाभिधोऽयं
पश्यन्नित्यं मुनीनां नयवचनगणैर्योगिराट्प्रत्ययार्थम् ।
स्वस्त्रीदण्डाग्रहस्तस्सरसि सशपथं गाहमानः प्रपेदे
तारुण्यं यत्प्रसादात्तमनणुमगुरुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २९८

298. குயவனுடைய வம்சத்தில் பிறந்தவனான நீலகண்டன் என்று பெயர் உள்ள ஓர் பக்தன் யாதொரு பரமேச்வரனை நித்தியம் தரிசித்தும் யோகீச்வரருடைய நம்பிக்கையை முன்னிட்டு திருஸஹஸ்ரமுனீச்வரர்களுடைய நியாயத்தோடு கூடின வார்த்தைகளுள் தனது ஸ்திரீயின் கையில் உள்ள தண்டத்தின் நுனியை பிடித்துக்கொண்டு குளத்தில் (யள்வனேச்வரம் என்ற தீர்த்தத்தில்) சபதத்தோடுகூட ஸ்நானம் செய்து யாதொரு பரமேச்வர பிரஸாதத்தால் இளமை பருவத்தை அடைந்தாரோ அப்படிப்பட்ட சிறியது பெரியது இல்லாதவரான குஞ்சிதாங்கிரிம். இக்கதை பெரிய புராணத்திலும், சிதம்பர ஸபாநாத புராணத்திலும் கூறப்பட்டுள்ளது.

लास्यं द्रष्टुं यदीयं शिखिनि दशशिरांस्याजुहावातिभक्त्या
रक्षोनाथस्तथाद्रेर्निकटभुवि फणामण्डलं भोगिराजः ।
अन्ये देवाश्च दैत्याः तपसि च कठिनैस्स्वां तनूं निर्दहन्तो
जातास्सिद्धाश्च साध्यानरहरिविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २९९

299. யாதொரு பரமேச்வரனுடைய தாண்டவத்தைப் பார்க்கவேண்டி ராக்ஷஸேந்திரன் (ராவணன்) மிகவும் பக்தியோடு அக்கினியில் பத்து தலைகளையும் அறுத்து ஹோமம் செய்தானோ அவ்விதமே கைலாஸத்தின் தாழ்வரையில் ஆதிசேஷன் தனது தலைகளின் கூட்டங்களை அக்கினியில் ஹோமம் பண்ணினனே, மற்றும் இதரர்களான தேவர்கள், தைத்தியர்கள், ஸித்தர்கள், ஸாத்தியர்கள் கடினமான தபஸில் தங்கள் தங்கள் சரீரங்களை பொசிக்கினவர்களாக ஆனார்களோ அப்படிப்பட்டவர்களால் துதிக்கப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:— ராவணனால் இயற்றப்பட்ட சிவதாண்டவ ஸ்தவமும் இம்மூர்த்தியைக் குறித்ததாகும்.

स्वामिन्संसारवार्धाविधिकभयकरे दुस्तरे पाशनक्र
च्छन्नेमग्नान्तरं मामनधिगतसदाचारवृत्तिं शठाग्र्यम् ।
दीनं त्वत्पादपूजा विमुखमघयुतं रक्षरक्षेत्यजस्रं
सर्वेलोकाश्श्रयन्ते यमपिसदसि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ३००

300. ஸ்வாமின், அதி பயங்கரமும், தாண்டமுடியாததும் பாசமாகிற மத்ஸ்யங்களால் நிறைந்ததுமான ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் மூழ்கினவனும், ஸதாசாரம் இல்லாதவனும், சடனும், தீனனும், உனது பாதத்தை அர்ச்சிக்காதவனும், பாபத்தோடு கூடினவனுமான என்னை ரக்ஷிக்கவேணும் ரக்ஷிக்கவேணுமென்று மிகவும் எல்லாப் பிராணிகளும் ஸபையில் யாதொரு பரமேச்வரனை ஸேவிக்கிறதுகளோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यद्यप्यैश्वर्यभाजो विधिहरिमुखरास्सन्तिदेवा जगत्यां
तेषां काश्चयुगान्ते नहि पुनरपरो रुद्रएको महर्षिः ।
देवो विश्वाधिकोऽन्यो भवति विभुरिति प्राहुरभ्रान्तवाचः
वेदा यं पञ्चभूतप्रभवलयकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ३०१

301. உலகத்தில் ஐச்வர்யங்களோடு கூடினவர்களான பிர்ம்ஹா, விஷ்ணு இவர்களை ஆதியாக உள்ள தேவர்கள்

இருக்கிறார்கள் என்பது வாஸ்தவமே. அவ்விதம் இருந்தபோதி லும் அவர்களுக்குள் ஒருவராவது யுகாந்த காலத்தில் உயிரோடு இருப்பவர் இல்லை. அக்காலத்தில் பஹரிஷியும் இரண்டாம் பேர் அற்றவரும் தேவரும் உலகை கடந்தவரும் முதல்வரும் புராபுவுமான ருத்திரர் ஒருவர்தான் பிரகாசிக்கிறார் என்று நீண்ட வாக்குகளை உடைய வேதங்கள் யாதொரு பரமேச்வரனை குறித்துச்சொல்லுகிறதுகளோ அப்படிப்பட்ட பஞ்ச பூதங் களுக்கும் உத்பத்திவிநாசத்தைசெய்கிறவரான குஞ்சிதாங்கிரிம்.

यस्मात्चन्द्रार्धचूडान्मृदुहसितमुखान्नीलकण्ठात् त्रिणेत्रात्
वेदान्तोद्गीतवृत्ताद्विधिहरिजनकात् विश्वमायाविलासात्।
वामावामाङ्गभागात् भसित वरतनोः चित्सभेशात् समेतत्
चेतोनान्यं सुरेन्द्रं स्मरति नटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०२

இது முதல் நான்கு சுலோகங்களில் தனது அனுபவத்தை விளக்குகிறார்.

302. அர்த்த சந்திரனைத் தரித்தவரும் மந்தஹாஸத்தோடு கூடினவரும், நீலமான கண்டத்தை உடையவரும், மூன்று கண்கள் உள்ளவரும், வேதாந்தங்களில் சொல்லப்பட்ட சரித்திரங்களை உடையவரும், பிர்ம்ஹா விஷ்ணுக்களை உண்டு பண்ணினவரும், நீண்ட மாயாவிலாஸத்தை உடையவரும் ஸ்திரீரூபமான வாமபாகத்தை தரித்தவரும், விபூதி அணிந்த திருமேனியரும், சிற்ஸபைக்கு ஈசருமான யாதொரு பரமேச் வரனைக் காட்டிலும் வேறான தேவரை எனது சித்தமானது நினைக்கவில்லையோ அப்படிப்பட்ட நடபதியான குஞ்சிதாங் கிரிம்.

बाल्ये क्रीडाविमुग्धः पुनरहमभवं यौवने मीनकेतोः
लक्ष्यो लज्जाविहीनः परमुदर भृतौ काकवत्सार्वकालम्।
देशाद्देशाटन्त्वत्पदयुगजलजं नार्चयं पापयोगात्
सर्वं तत्क्षम्यतामित्ययमहमभजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०३

303. பால்யத்தில் விளையாட்டில் மூடனும் யௌவனத் தில் மன்மதனுக்கு லக்ஷியனும், லஜ்ஜை அற்றவனும், எப் பொழுதும் காகம்போல் வயிற்றை நிறப்புவதற்கு ஒவ்வொரு

ணர்கள்தோறும் அலைந்தும், பாபத்தின் ஸம்பந்தத்தால் தாமரை மலர்போன்ற உனது இரண்டு சரணங்களை பூஜிக்கவில்லை இவை எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளவேணும் என்று யாதொரு பரமேச்வரனை நான் அடைந்தேனோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

सद्वृत्तां स्रग्धराङ्गां विपुलगुणवरालङ्कृतिं मञ्जुपाक
स्थायी शय्यारसाद्यैर्विबुधपरिवृढाह्लादिरीतिं सुवृत्तिम्।
वेदान्तार्थप्रबोद्ध्रीं सुगुणपदगतिं योऽस्मदीयां स्तुतिं तां
अङ्गीकुर्वन्सुखं मेप्रदिशति गुरु तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०४

304. ஸ்ரக்தரை என்கிற விருத்தத்தோடு கூடினதும், விஸ்தாரமான குணம், ச்ரேஷ்டமான அலங்காரம், அழகான பாகம், ஸ்தாயி, செய்யா, ரஸம் இவைகளால் வித்துவான்களுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகிற ரீதியை உடையதும், நல்ல விர்த்தியோடு கூடினதும், வேதாந்தங்களில் சொல்லப்பட்ட அர்த்தங்களைப் போதிக்கிறதும், நற்குணங்களோடு கூடின பத வின்யாஸங்களை உடையதுமான என்னுடைய குஞ்சிதாங்கிரி ஸ்தவம் என்று ப்ரஸித்தமான இத்துதியை அங்கீகரித்து யாதொரு பரமேச்வரன் எனக்கு அதிகமான ஸுகத்தை (ஆத்மஸுகத்தை) கொடுக்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

यश्शम्भुर्नृत्तराण्मे प्रवलतरमहामन्त्रसिद्धिं प्रदत्वा
गुर्वीयोगस्य सिद्धिं जननमृतिहरं चात्मबोधं महान्तम्।
सूतादीनां विमुक्तिप्रदमपि महित गौरवं पत्रमूल
स्वं नृत्तं दर्शयित्वा सुखयति नितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०५

305. யாதொரு சம்புவான நடராஜர் எனக்கு ரொம்பவும் பலமான மஹாமந்திரங்களுடைய ஸித்தியையும், பிறப்பு இறப்பை போக்கடிக்கிற ஆத்ம போதத்தையும். பெற்றான் சாம்பான் முதலியவர்களுக்கு முக்தியை அளிக்கக்கூடியதும், உயர்ந்ததுமான வடு எழுதி அனுப்பின காரணம் பற்றி உண்டான கௌரவத்தையும் கொடுத்து தனது தாண்டவத்தையும் காண்பி

வித்து மிகவும் ஸுகத்தோடு கூடினவனாக செய்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

குறிப்பு:-

அடியார்க் கெளியவன் சிற்றம்பலவன்
கொற்றங் குடியார்க்கெழுதிய கைச்சீட்டு
படிமிசையிற் பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத்
தீக்கைபண்ணி முத்திகொடுக்க முறை.

என்று ஓர் ஏட்டில் எழுதி தனது கையெழுத்திட்டு பரமேச்வரன் உமாபதிசிவத்தினிடம் அனுப்பினார் என்று உமாபதிசிவ சரித்திரம் கூறுகிறது.

क्रोशं क्रोशं यदग्रेस्वपतिमपिरतिर्मन्मथं श्रीकुमारं
शार्दूलाङ्घ्रेश्चडिम्भस्सुखतरमभजद्दुग्ध कल्लोलराशिम्।
स्तावं स्तावं वरेण्यं गगननटपतिं यं च वाचामलक्ष्यं
तोषं तोषं लभन्ते सकलमपिजनाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०६

306. யாதொரு பரமேச்வரனுக்கு முன்பாகரதியானவள் அழுது அழுது தனக்கு பர்த்தாவும் லக்ஷ்மீ குமாரனுமான மன்மதனையும், வியாக்கிரபாதரின் குமாரரான உபமன்யு என்பவர் பாற்கடலையும் மற்றும் ஸுகங்களையும் அடைந்தார்களோ, ஆகாசத்தில் நடனம் செய்கிறவரும், ச்ரேஷ்டரும், வாக்குகளுக்கு எட்டாதவருமான யாதொரு பரமேச்வரனை துதித்துத்துதித்து ஜனங்கள் மிகவும் ஸந்தோஷத்துடன் ஸகல இஷ்டங்களையும் அடைகிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

मन्दं मन्दं यदीयं जनिमखुरसरिद्धारयाव्यासजाद्याः
सेकं सेकं चिराजोहृदयमधिगतं यत्पदं भावयन्तः।
कालं कालं दहन्तो दुरधिगमतमःकाननं ज्ञानयोगात्
लाभं लाभं प्रबोधं वरसुखमभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०७

307. வியாஸகுமாரரான சுகர் முதலிய முனிவர்கள் மெள்ள மெள்ள யாதொரு பரமேச்வர ஸ்வரூபமான லிங்கத்தை

கங்காதீர்த்தத்தினால் அபிஷேகம் செய்தும் விராட்புருஷனுடைய ஹிருதயத்தை அடைந்தவரான யாதொரு பரமேச்வரனை ஒவ்வொரு காலங்களிலேயும் பாவனை செய்தும், ஞானயோகத்தால் அஞ்ஞானமாகிற காட்டைப் பொசிக்கியும், ஆத்ம ஞானத்தை அடைந்தும் ச்ரேஷ்டமான ஸுகத்தை அடைந்தார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

भोजं भोजं यदर्चाजनितमनुपमं भोगमध्यात्मयोगात्
तारं तारं भवाब्धिं विपुलभयकरं यस्यभावात्सुधीन्द्राः।
दाहं दाहं हृदन्तर्गतमतिजरठं पाशवर्गं यदर्णं
जापं जापं रमन्ते परमहसिरदे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०८

308. ஞானிகள் யாதொரு பரமேச்வர பூஜையினால் உண்டானதும், ஒப்பற்றதுமான போகத்தை அனுபவித்தும் அத்யாத்ம யோகத்தினால் ரொம்பவும் பயங்கரமான ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தை தாண்டியும் யாதொரு பரமேச்வர பாவனையால் ஹிருதயத்திலுள்ளதும், மிகவும் கிழத்தன்மை வாய்ந்ததுமான பாசவர்க்கத்தைப் பொசிக்கியும், யாதொரு பரமேச்வரனுடைய மந்திர வர்ணங்களை ஜபித்துக்கொண்டு ஜோதிர்மயமான ஸ்தானத்தில் விளையாடுகிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

बोधं बोधं यदीयं नटनमनुपमं श्रौततत्वार्थगर्भं
ध्यायं ध्यायं हृदब्जे यमपि च महसां पुञ्जमव्याजमूर्तिम्।
वाहं वाहं यदङ्घ्रिं मनसि फणितरक्षवङ्घ्रि जैमिन्यभिख्याः
प्रापुस्सर्वे सदा यत्सदसि निवसतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०९

309. பதஞ்ஜலி, வியாக்கிரபாதர், ஜைமினி என்கிற முனிவர்கள் யாதொரு பரமேச்வரனுடையதும், ஒப்பற்றதும், வேதங்களில் சொல்லப்பட்டதுமான நடனத்தை பார்த்தும் ஹிருதயத்தில் காரணமன்றி மூர்த்திகரித்ததும் காந்திஸமூஹமும் ஆன யாதொரு பரமேச்வரனை தியானம் செய்தும், அவருடைய பாதங்களை மனதில் கருதியும், எப்பொழுதும் யாதொரு பரமேச்வரனுடைய ஸபையில் வஸிக்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

वाचं वाचं महान्तश्शिवहरगिरिजाकान्तदेवेतिपूताः
वर्जं वर्जं विवर्ज्य बहुतरविषमक्लेशमायाविमोहम्।
त्यागं त्यागं कठोरां त्रिविधपरिचया भीषणाख्यां पिशाचीं
ध्यायन्तो यं भजन्ते सततमपि शिवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३१०

310. மஹான்கள் சிவ ஹர கிரிஜாகாந்த தேவ என்கிற நாமாக்களை ஸதா உச்சரித்து பரிசுத்தர்களாய் தள்ள முடியாததும் அதிகமான கிலேசத்தை உண்டுபண்ணி வைக்கிறதுமான மாயாவிமோஹத்தை தள்ளியும், கொடுமையும் முக்குண ஸம்பந்தத்தோடு கூடின ஆசை என்கிற பிசாசத்தை தியாகம் செய்தும், யாதொரு சிவஸ்வரூபியான பரமேச்வரனை எப்பொழுதும் ஸேவிக்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

नावं धावं सदायत्प्रियकरनिलयं भूतिरुद्राक्षवर्गैः
भूषं भूषं स्वकीयां तनुमपि चरितं यस्य वेदान्तगीतम्।
कर्णं कर्णं नितान्तं त्रिषवणयजनं ब्रह्मनिष्ठा यतीन्द्राः
कारं कारं लभन्ते भवपदमभवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३११

311. பிரம்ஹநிஷ்டாளான ஸன்யாஸிகள் எப்பொழுதும் யாதொரு பரமேச்வரனுக்கு பிரியங்கரமான க்ஷேத்திரங்களை அடைந்தும், பஸ்ம, ருத்திராக்ஷங்களால் தனது சரீரத்தை அலங்கரித்தும் யாதொரு பரமேச்வரனுடைய வேதாந்தங்களில் கூறப்பட்ட சரித்திரத்தை கேட்டும் மிகவும் மூன்று காலங்களில் பூஜித்தும் உற்பத்தி அற்றதான பிரம்ஹ பதத்தை (இரண்டறக் கலத்தல்) அடைகிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

नामं नामं सदायं नटपतिमलभं सत्कलत्रं सुपुत्रं
पाठं पाठं यदग्रेऽप्यकृतकवचनान्यापमञ्जा कटाक्षम्।
वारं वारं विभुं यं हविरहमददां सप्ततन्तुष्वचिन्त्यं
नित्यं नित्यं प्रपद्येशरणमसुलभं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३१२

அவதாரிகை: இவ்விரண்டு சுலோகங்களினால் தனது அனுபவத்தை விளக்கி ஸ்துதியை முடிக்கிறார்.

312. நான் எப்பொழுதும் யாதொரு பரமேச்வரனை நடபதியை நமஸ்கரித்து நல்ல பத்நினியையும், நல்ல புத்திரனையும் அடைந்தேன். யாதொரு பரமேசவரனுடைய ஸந்நிதியில் வேதமந்திரங்களை (ஸ்ரீருத்திரம், கைவல்யம், தைத்திரீயம் முதலிய ஔபநிஷத மந்திரங்கள்) பாராயணம் செய்து லக்ஷ்மீ கடாக்ஷத்தை அடைந்தேன். நான் யாகங்களில் விபுலான யாதொரு பரமேச்வரனை உத்தேசித்து ஹவிஸுகளை அர்ப்பணம் செய்தேன். நித்தியமான யாதொரு பரமேச்வரனை சரணமாக அடைந்தேன் அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

श्रावं श्रावं श्रुतिभ्यां यदमल चरितं यत्पदाम्भोजमाध्वीं
पायं पायं सभायां ममचरसनया यं प्रभुं मानसेन।
स्मारं स्मारं प्रसन्नं श्रुतिशिखरगतं भुक्तिमुक्तिप्रदं यं
दर्शं दर्शं प्रवुद्धोस्म्यतनुवुधदशा कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ३१३

313. யாதொரு பரமேச்வரனுடைய பரிசுத்தமான சரித்திரத்தை காதுகளினல் கேட்டும், யாதொரு பரமேச்வரனுடைய பாதத்தாமரையின் ரஸத்தை எனது நாக்கினுல் ஸபையில் அருந்தியும், வேதத்தின் சிரஸில் உள்ளவரும், பிரஸன்னருமான யாதொரு பரமேச்வரனை தியானம் பண்ணியும், போக மோக்ஷத்தை கொடுப்பவரான யாதொரு பரமேச்வரனை தரிசனம் செய்து ஞான கண்களோடு அறிவுள்ளவனுக ஆனேனே அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

एतत्स्तोत्रं पठन्ति प्रतिदिनमसकृद्येममोमापतेर्वा
गुद्भूतं चित्सभायां विरचित परमानन्दनृत्तस्यशम्भोः।
अग्रेलब्ध्वाऽखिलेष्टानिहतनयकलत्रादिमानात्मयज्ञा
दन्तेकैवल्यसंज्ञं पदमपिमनुजास्संलभन्तां नितान्तम् ॥ ३१४

இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்வதால் உண்டாகும் பலங்களை விளக்குகிறர்.

314. உமாபதியான என்னுடைய வாக்கில் இருந்து உண்டானதும், சித்ஸபையில் பரமானந்த தாண்டவம் செய்கிற

சம்புவான பரமேச்வரனைப்பற்றினதுமான இந்தஸ்தோத்திரத்தை ஒவ்வொரு நாளும் அடிக்கடி எவர்கள் படிக்கிறார்களோ அவர்கள் இப்புவியில் மிகவும் முதலில் பத்தினி, புத்திரன், பொருள் முதலிய ஸகல இஷ்டங்களையும் அடைந்து ஞானத்தோடு கூடினவனாக ஆகி இறுதியில் கைவல்யம் என்று பெயருள்ள பதத்தையும் அடையட்டும்.

उमापतिर्नामवनाश्रमोहं त्रयोदशाधिक्यशतत्रयान्वितम् ।
श्रीकुञ्चिताङ्घ्रिस्तवराजमुक्त्वा साक्षादपश्यं नटनं सभापतेः ॥ ३१५

315. உமாபதி என்று பெயர் உள்ள வனாச்ரமியான நான் முன்னூற்றுபதின்மூன்று எண்களோடு கூடின ஸ்ரீகுஞ்சிதாங்கிரி ஸ்தவராஜம் என்று பெயர் உள்ள ஸ்துதியை சொல்லி ஸபாபதியினுடைய நடனத்தை ஸாக்ஷாத்தாகப் பார்த்தேன்.

இதனால் இதை பாராயணம் செய்து வந்தால் தாண்டவ தரிசனம் கைகூடும் எனக் கருதப்படுகிறது.

॥ इति श्रीमदुमापतिशिवप्रणीतः ॥

॥ श्रीकुञ्चिताङ्घ्रिस्तवः सम्पूर्णः ॥

॥श्री गणेशाय नमः॥

॥श्री कुञ्चिताङ्घ्रिस्तवश्लोकानां अकाराद्यनुक्रमणिका॥